www.onlineuthayan.com ★

பக்கங்கள் : 64

# உதயன்

சுடர் 27
கதிர் 239

வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 07 ஞாயிற்றுக்கிழமை (22/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


## முல்லைத்தீவில் வெடிபொருள் மீட்பு

முல்லைத்தீவு,ஜூலை 22

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் 200 கிலோகிராம் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையொன்றின் போது 200 கிலோ 04↘

# வடக்கு மக்களுக்கு கருத்துரிமை மறுப்பு

### அமெரிக்கத் தூதுவர் பற்றீசியாவிடம் யாழ்.ஆயர் முறையீடு

யாழ்ப்பாணம், ஜூலை 22

தனியாகவோ, கூட்டாகவோ கருத்துகளை வெளியிட முடியாத ஒரு இக்கட்டு நிலையில் வடக்கு மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்கான சுதந்திரமான கருத்துரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் இங்கு ஜனநாயக அரசியல் நிலைநிறுத்தப்படுகிறதா என்ற கேள்வியும் எழுகிறது.

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினிஸிடம் முறையிட்டார் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

இதுவரை காலமும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகப் பணியாற்றிய பற்றீசியா புட்டினிஸ் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு மாற்றலாகிச் செல்கிறார். இதற்கு முன்னதாக அவர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தார். யாழ். ஆயர் இல்லத்தில் 04↘



## புலிக்கொடி விவகாரம் எமக்கு எதுவுமே தெரியாது

### கைவிரிக்கிறார் பிரதிப் பொலிஸ்மா அதிபர்

வலி.வடக்கு ஜூலை 22

நெல்லியடியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது புலிக்கொடியுடன் நடமாடிய நபர்கள் தொடர்பில் இதுவரை யாரும் பொலிஸாரிடம் முறையிடவில்லை. அவ்வாறு ஒரு சம்பவம் இடம்பெற்றதாக யாராவது முறையிட்டால் தாம் அது சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய முடியும். இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரெரா.

யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களுடனான வாரந்த சந்திப்பு நேற்று பொலிஸ் மா அதிபரின் காரியாலயத்தில் நடைபெற்றது. இதில் ஆர்ப்பாட்டத்தின் போது புலிக் கொடியுடன் 04↘

## யாழ். - கொழும்பு பஸ் இயக்கச்சியில் விபத்து

### இருவர் உயிரிழப்பு; 30 பேர் காயம்

கிளிநொச்சி, ஜூலை 22

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று பளை இயக்கச்சிப் பகுதியில் நேற்றிரவு 10 மணியளவில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இதில் சம்பவ இடத்திலேயே இருவர் உயிரிழந்ததுடன் மேலும் 30 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனியார் சொகுசு பஸ்ஸே இயக்கச்சி பகுதியில் சென்றுகொண்டிருந்த போது வளைவு ஒன்றில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டது. 04↘

## ஆஸி. - இலங்கை இடையே முறுகல்

### அகதிகள் விவகாரத்தால்

கொழும்பு,ஜூலை 22

இலங்கையில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு அகதிகள் படையெடுப்பதைத் தடுக்கவில்லை என்று இருநாடுகளும் மாறிமாறிக் குற்றஞ்சாட்டி வருவதால் இருதரப்புக்கும் இடையில் மோதல் போக்கு உருவாகியுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு ஆள்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதில் இலங்கைக் கடற்படை தோல்வியடைந்துள்ளதாக இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் றொபின் முடி, இலங்கைக் கடற்படைத் தளபதியைச் சந்தித்து குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த புதன்கிழமை இலங்கைக் கடற்படைத் தலைமையகத்தில் நடைபெற்ற அவசர சந்திப்பு ஒன்றிலேயே, கடற்படைத் தளபதி 04↘

## தேர்தல் முறைப்பாடுகளை தெரிவிக்கத் தனிப் பிரிவு

கொழும்பு,ஜூலை 22

மாகாண சபைத் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளை தெரிவிப்பதற்காகத் தேர்தல்கள் செயலகத்தில் தனியான பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர தேர்தல் நடைபெறவுள்ள மாவட்டங்களின் மாவட்ட செயலகங்களிலும் நாளை திங்கள்கிழமை முதல் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கான பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் 04↘

## அமைச்சுப் பதவியையும் உதறிவிட்டு வாருங்கள்

### ஹக்கீமிடம் கோருகிறார் முஸம்மில்

கொழும்பு,ஜூலை 22

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில், மீண்டும், முஸ்லிம் மக்களை ஏமாற்றாது, அரசின் அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகி, அனைத்துச் சிறப்புரிமைகளையும் கைவிட்டுத் தேர்தலில் களம் இறங்குமாறு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீமுக்கு கொழும்பு மாநகர முதல்வர் ஏ.ஜே.எம். முஸம்மில் அழைப்பு விடுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கிழக்கில் தனித்துப் போட்டியிடுவது என எடுத்த தீர் 04↘


சிங்கர் அறிமுகப்படுத்தும் அதிசிறந்த உறுதியான மோட்டர் சைக்கிள்கள்

SAFARI



72 CC 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
சிவப்பு, நீலம், கறுப்பு, சில்வர் வர்ணங்களில்

GALAXY 100



100 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்

CAMY 80



80 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
பாதுகாப்பு அலாம் மணி
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்

SUPER CUP



4 Stroke 90cc Air Cooled Engine
Starting System : Electric/ Kick
Detachable Rear Seat
Alloy Wheels
Drum Brakes
Colours: RED/BLACK / GREEN

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சுன்னாகம். மானிப்பாய். சங்கானை, நெல்லியடி. சாவகச்சேரி, கிளிநொச்சி

⇨ தவணைக் கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்

சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

200 நாடுகளுக்கு மிகக்குறைந்த IDD

airtel idd



airtel

Digitized by Noolaham Foundation




நாட்டில் அதிகரித்துச் செல்லும் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் பெரும் ஊர்வலம் ஒன்று நேற்றுச் சனிக்கிழமை காலை நடைபெற்றது. தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஊர்வலம் கொழும்பு குணசிங்கபுரவில் இருந்து பொரளை வரை நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (த)

# தமிழ்க் கைதிகள் விசாரணையை துரிதப்படுத்துவதற்கு 15 நீதிபதிகள்

**நீதி அமைச்சர் ரஹூப் ஹக்கீம் இதற்கான பத்திரங்களை அமைச்சரவையில் சமர்ப்பிப்பார்.**

கொழும்பு, ஜூலை 22

சிறைச்சாலைகளில்தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் சிறைக்கைதிகள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தும் வகையில் மேலும் 15 நீதிவான்களை நியமிக்கும்படி அமைச்சரவைப்பத்திரம் ஒன்று அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதற்கான பத்திரங்களை அமைச்சரவையில் சமர்ப்பிப்பார்.

சிறையில் நீண்டகாலமாக அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளின் வழக்குகளை துரிதப்படுத்தும் வகையில் மேலதிகமாக நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று அரசினால் கூறப்பட்டது. ஆனால் எதுவும் நடைபெறுவதாகத் தெரியவில்லை என்று அமைச்சரிடம் கேட்டபோதே இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார், திருகோணமலை, வவுனியா, ஆகிய மூன்று இடங்களில் விசேட சிறைச்சாலைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலதிகமாக வெலிகடைச் சிறைச்சாலையிலும் ஒரு நீதிமன்றத்தை அமைக்கத் தீர்மானித்துள்ளோம்.

இப்பொழுது மேல் நீதிமன்ற நீதிபதிகள் 75 பேர் மட்டுமே இருக்கின்றனர். இந்தத் தொகை 90 ஆக அதிகரிக்கப்பட வேண்டும். இதற்காக அமைச்சரவைப் பத்திரம் அடுத்தவாரம் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும். அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தபின் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறினார். (த-2)

## 8 போராளிகள் புதனன்று விடுதலை

யாழ்ப்பாணம், ஜூலை 22

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் 8 பேர் எதிர்வரும் புதன்கிழமை விடுதலை செய்யப்படவுள்ளனர் என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொலநறுவை கண்டல்காடு புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 8 பேருமே அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப் படவுள்ளனர்.

கண்டல்காடு முகாமில் கையளிக்கும் நிகழ்வு இடம்பெறும் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (த-4)

# சிங்கள மீனவர் வெளியேறும்வரை எமக்கு விடிவு கிட்டப்போவதில்லை

**கடற்றொழில் சமாசத் தலைவர் விசனம்**

யாழ்ப்பாணம்,ஜூலை 22

மீன்பிடி அமைச்சர் குறிப்பிட்டதைப் போன்று முல்லைத்தீவிலிருந்து சிங்கள மீனவர்கள் வெளியேறினால் மட்டுமே அந்தப் பகுதி மீனவர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்வதாகக் கருதமுடியும் அத்துடன் முல்லைத்தீவுக் கடல் பிராந்தியத்தில் இலங்கையில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி தென்னிலங்கை மீனவர்கள் மீன்பிடிப்பதையும் அவதானிக்க முடிகிறது.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் சென்ற வடமாகாணக் கடற்தொழில் அமைப்பின் தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டக் கடற்தொழில் சங்கங்கள், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ஆகியோரை வடமாகாண கடற்தொழிலாளர் அமைப்பின் பிரதிநிதிகள் கடந்த வாரம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்புக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் மேலும் தெரிவித்ததாவது;

முல்லைத்தீவு மாவட்டத்தில் 22 சங்கங்கள் பதிவு செய்யப்பட்ட போதும் தற்போது 18 சங்கங்கள் வரையிலேயே இயங்கி வருகின்றன. இருப்பினும் சங்கங்களால் தெரிவுசெய்யப்பட்ட சமாசம் இல்லாதது அங்கு குறையாக உள்ளது.

மேலும் நியமனத்தின் மூலம் உறுப்பினர்களைக் கொண்ட சமாசத்தினால் மக்களுக்குச்சிறப்பான சேவையை வழங்க முடியாது. மேலும் அங்கு பாதுகாப்பு பிரிவினரின் கட்டுப்பாட்டுக்குள் அங்குள்ள சமாசங்கள் செயற் படுவதை உணரக்கூடியதாக உள்ளது.

அத்துடன் கடந்த காலங்களில் முல்லைத்தீவு சமாசங்களினால் சேமித்து வைக்கப்பட்டிருந்த பெருமளவான நிதி தற்போதைய சமாசத்தினால் வீணடிக்கப் படுகின்றது.

மேலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சுதந்திரமாக இயங்கக் கூடிய சமாசத்தை உருவாக்க முயற்சி செய்வதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் எம்மிடம் தெரிவித்தார்.

மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்தின முல்லைத்தீவுக்கு வந்த போது 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் அந்தப் பகுதிகளில் மீன்பிடித்தவர்கள் மாத்திரமே தற்போதும் தொழிலில் ஈடுபடலாம் என்று தெரிவித்திருந்தார். இது காலப் போக்கில் நடைமுறைப்படுத்தப்படும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டால் மாத்திரமே முல்லைத்தீவு மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடித் தொழில் செய்வதாக கருதமுடியும்.

மேலும் முல்லைத்தீவில் தங்கியுள்ள தென்னிலங்கை மீனவர்கள் இலங்கையில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளான வெளிச்சம் போட்டு மீன்பிடித்தல், சுருக்கு வலை பாவித்து மீன்பிடித்தல், சிலிண்டர் மூலம் மீன் பிடித்தல் ஆகியவற்றின் மூலம் மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்றனர். இதன் காரணமாக காலம் காலமாக இந்தப் பகுதிகளில் கரைவலையைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார். (த-5)

## தூக்கில் தொங்கிய நிலையில் படையினரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 22

பலாலி இராணுவ முகாமில் பணிபுரிந்த இரு படையினர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றும், நேற்று முன்தினமும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

பலாலி,மயிலிட்டி இராணுவ முகாமில் பணியாற்றும் கண்டியைச் சேர்ந்த பெரேரா கொட்கொட (வயது- 23) என்ற ப்டைச் சிப்பாய் நேற்று தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இதேவேளை நேற்று முன்தினம் பலாலி இராணுவ முகாமில் பணியாற்றிய மடுகல்லைச் சேர்ந்த வியேரட்ண (வயது-47) என்ற சிப்பாய் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இருவரது சடலமும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-5)



யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினிஸ் நேற்று [illegible] தந்தார். தூதுவரும் அவரது குழுவின[illegible] இங்குள்ள களநிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடினர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு வைத்தியர்களை பதிவு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 22

இலங்கையில் பணியாற்றும் வெளிநாட்டு வைத்தியர்கள் சுமார் 300 பேரினதும் விவரங்களைப் பதிவு செய்து ஒழுங்குபடுத்துமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சைக் கோரியுள்ளது.

இலங்கையில் பணியாற்றும் வைத்தியர்கள் அனைவருமே இலங்கை மருத்துவச் சபையில் பதிவுசெய்துள்ளனர். ஆனால் இலங்கையில் பணியாற்றும் வெளிநாட்டு வைத்தியர்கள் அதாவது இந்தியாவைச் சேர்ந்த சுமார் 300 வைத்தியர்களும் இலங்கை மருத்துவச் சபையில் பதிவு செய்யவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அதிகாரிகளின் தரம் பயிற்சி நிலைகள் என்பனபற்றிய உண்மைத் தரவுகள் எவையுமே தெரியாத நிலையிலேயே அவர்கள் இங்கு பணியாற்றுகின்றார்கள். சில வைத்தியர்கள் நிபுணர்கள் என்ற நிலையிலிருந்து இங்கு பணியாற்றுகின்றார்கள். அதன் உண்மைத் தன்மை தெரியவராமல் உள்ளது.

இங்கு வைத்தியராகப் பணியாற்றும் ஒருவர் என்ன நிலையிலிருந்து பணியாற்ற முற்படுகிறாரோ அந்த நிலையில் அல்லது சிறப்புத் துறையில் அவரது தகுதிபற்றி இங்கு அதற்கென உள்ள ஒவ்வொரு பிரிவு நிலை அதிகாரிகளாலும் உறுதிசெய்யப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுவர். எனவே இந்தியாவிலிருந்து வந்துள்ள இந்த 300 வைத்தியர்களின் விவரங்களைப் பதிவு செய்து ஒழுங்கு படுத்துமாறு மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சைக் கோரியுள்ளது. இலங்கைச் சட்டத்தின் சில பலவீனங்களைப் பயன்படுத்தி வெளிநாட்டு வைத்தியர்கள் இங்கு பணியாற்றுகின்றனர் என்று அரச மருத் துவ அதிகாரிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (த-4)

# 4,881,800 லீ. டீசல், 1,618,100 லீ.பெற்றோல் யாழ்.மாவட்டத்தில் மாதாந்தம் விற்பனை

## மண்ணெண்ணெய் நுகர்வு வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்.மாவட்டத்தில் தற்போது மாதாந்தம் சராசரியாக 48 லட்சத்து 81 ஆயிரத்து 800 லீற்றர் டீசலும், 16 லட்சத்து 18 ஆயிரத்து 100 லீற்றர் பெற்றோலும் விற்பனை செய்யப்பட்டு வருவதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.



இதேவேளை மண்ணெண்ணெயின் பாவனை தற்போது யாழ்ப்பாணத்தில் குறைந்து வருவதாகவும், மாதாந்தம் சராசரியாக 10 லட்சத்து 58 ஆயிரத்து 200 லீற்றர் மண்ணெண்ணெய் விற்பனைசெய்யப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

யாழ்.மாவட்டத்தில் தற்போது பெற்றோல், டீசல் ஆகியவற்றின் நுகர்வு வெகுவாக அதிகரித்துச் செல்கிறது. யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துள்ள வாகனப் பாவனையே எரிபொருள் நுகர்வு அதிகரிப்புக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் தற்போது மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்வோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் கார் மற்றும் சொகுசு வாகனங்களின் கொள்வனவும் அதிகரித்துள்ளது. அத்துடன் வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து செல்லும் வாகனங்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது. இதன் காரணமாக எரிபொருள்களின் நுகர்வும் இங்கு அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டு மாதாந்தம் அண்ணளவாக 10 லட்சம் லீற்றர் பெற்றோலும், 40 லட்சம் லீற்றர் டீசலும், 12 லட்சம் லீற்றர் மண்ணெண்ணெயும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டு 13 லட்சம் லீற்றர் பெற்றோலும், 46 லட்சம் லீற்றர் டீசலும், 11 லட்சம் லீற்றர் மண்ணெண்ணெயும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

எனினும் பெற்றோல், டீசல் ஆகியவை இந்த ஆண்டுத் தொடக்கத்தில் அதிகரித்துள்ளன.

பெற்றோல் சுமார் 3 லட்சம் லீற்றர்களாலும், டீசல் 2 லட்சம் லீற்றர்களாலும் அதிகரித்துள்ளன. ஆயினும் மண்ணெண்ணெய் விற்பனை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 50 ஆயிரம் லீற்றர்களால் குறைந் துள்ளது.

கடந்த ஜனவரி முதல் ஜூன் வரையான 6 மாத காலப் பகுதியில் யாழ். மாவட்டத்தில் 97 லட்சத்து 8 ஆயிரத்து 600 லீற்றர் பெற்றோலும், 2கோடி 92 லட்சத்து 90 ஆயிரத்து 800 லீற்றர் டீசலும், 63 லட்சத்து 49 ஆயிரத்து 200 லீற்றர் மண்ணெண்ணெயும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. (து-17)

| மாதம் | பெற்றோல் (லீ) | டீசல்(லீ) | ம.எண்(லீ) |
|---|---|---|---|
| ஜனவரி | 15,18000 | 4491300 | 1329900 |
| பெப்ரவரி | 1501500 | 4959900 | 1148400 |
| மார்ச் | 1650000 | 5263500 | 1118700 |
| ஏப்ரல் | 1587300 | 3999600 | 933900 |
| மே | 1633500 | 4897200 | 927300 |
| ஜூன் | 1818300 | 5679300 | 891000 |
| மொத்தம் | 9708600 | 29290800 | 6349200 |
| சராசரி | 1618100 | 4881800 | 1058200 |

## அல்லைப்பிட்டி விவசாயிகள் விவசாயத்துக்குப் பின்னடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22

அல்லைப்பிட்டியில் இம்முறை விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க விவசாயிகள் பின்னடித்து வருகின்றனர்.

தமது விவசாய நிலங்கள் குடியிருப்புக்களுக்குச் சற்றுத் தூரம் விலகி உள்ளன.

வயல் நிலங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு பயிர்கள் வளரும் சமயங்களில் எல்லைக் கம்பிகளை வெட்டி அவற்றுள் மாடுகளை விட்டு விஷமிகள் பயிர்களை நாசம் செய்கின்றனர்.

கடந்த வருடத்தில் கணிசமான பணத்தைச் செலவிட்டும் ஒரு பயனும் இல்லாமல் போய்விட்டது. விஷமிகளின் இந்தச் செயல்களால் தொடர்ந்தும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியுயாமல் உள்ளது என்று பாதிக்கப்பட்ட விவசாயி ஒருவர் கூறினார். இம்முறை இங்குள்ள பெரும்பாலான விவசாயிகள் தமது தொழிற்பாடுகளை நிறுத்திக் கொள்ள எண்ணியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ம-7)

## கொடிகாமம் சமுர்த்தி வங்கியை நேரத்துடன் திறக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 22

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் கொடிகாமம் சமுர்த்தி வங்கி அலுவலக செயற்பாடுகள் குறித்துப் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். வங்கி அலுவலக நேரம் காலை 8 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரையென குறிப்பிட்டுள்ள போதிலும் தினமும் காலை 9 மணிக்குப் பின்னரே அலுவலகம் திறக்கப்படுகிறது.

இதனால் காலை 8 மணிக்கு முன்னர் வங்கிக்கு வரும் வங்கி அங்கத்தவர்கள் முகாமையாளர் வந்து அலுவலகம் திறக்கும்வரை காத்திருக்க வேண்டியுள்ளது.

காலையில் சந்தையில் பொருள்களை வாங்கிக் கொண்டு வங்கி அலுவலுக்கு வரும் அங்கத்தவர்கள் வங்கியில் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது என விசனப்படுகின்றனர்.

வங்கியின் தேவைகளுக்காக வந்திருக்கும் மக்களுடன் அண்மையில் வங்கிக்கு நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களும் காத்திருக்க வேண்டிய நிலைமையையே காணமுடிகிறது. சமுர்த்தி வங்கியின் தாமத செயற்பாடுகள் குறித்து கவலை தெரிவித்த பொதுமக்கள், இவற்றைச் சீர்செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா எனவும் கேட்டுள்ளனர். (ம)

## பளை இரட்டைக்கேணி அம்பாள் ஆலய மூல விக்கிரகம் உடைப்பு

பளை இரட்டைக்கேணி அம்பாள் ஆலய மூல விக் கிரகம் அடித்து நொறுக்கப் பட்ட சம்பவம் மக்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஆலயக்கதவை உடைத்து உள் நுழைந்த இனந்தெரியாதவர்கள் மூல அறைக்குள் காணப்பட்ட குத்து விளக்கைப் பயன்படுத்தி மூல விக்கிரகத்தை அடித்து நொறுக்கியுள்ளனர்

ஆடி அமாவாசை தினமான மறுநாள் ஆலயத்தில் நடைபெறவுள்ள விசேட அபிஷேக மற்றும் அன்னதான நிகழ்வுகளுக்காக அதிகாலை ஆலயத்துக்கு வந்த பூசகரும் அடியார்களும் ஆலய கதவு உடைக்கப்பட்டிருந்ததைக் கண்டு உள்ளே சென்று பார்த்த போது மூல விக்கிரகமான அம்பாள் சிலையை அடித்து நொறுக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுடன் ஆலய பரிபாலன சபையினர் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு அம்பாள் விக்கிரகத்தைத் தருவித்து அன்றைய தினமே பிரதிஷ்டை செய்தனர். (ம-9)

## வரட்சியால் குளங்கள் வற்றின

கடும் வரட்சி காரணமாக அல்லைப்பிட்டியில் உள்ள ஆறு குளங்களும் முழுமை யாக வரண்டு காணப்படுகின்றன.

கிராமத்தின் மிகப் பெரிய குளமான மண்குழிகுளம் ஆழப்படுத்தப்படாது அணைகள் மட்டுமே போடப்பட்டுள்ளன. அந்தக் குளத்திலும் தண்ணீர் இல்லை. இதனால் கால்நடைகள் நீருக்காக அலைவதையும் காணக் கூடியதாக உள்ளது. அல்லைப்பிட்டியில் உள்ள பெரிய நீர்த்தேக்கம் இது. இதனை சுமார் மூன்று அடிகள் வரை ஆழப்படுத்தினால் கோடை காலத்திலும் நீர்தேங்கி நிற்கக் கூடியதாக இருக்கும். இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மழைக்கு முன்பாக மேற் கொண்டால் விவசாயிகள் நன்மைய டைவதுடன் கால் நடைகள் அதனால் பயன் பெறக்கூடியதாக இருக்கும் எனவும் கூறப்படுகின்றது. (ம-7)

நிகழ்வுகள்

## இன்று

### நிகழ்வு

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும், குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் குட்டி சுட்டி முன்பள்ளி விளையாட்டு விழா பிற்பகல் 2 மணிக்கு சன சமூக நிலைய முன்றிலில் நடை பெறவுள்ளது. சனசமூக நிலை யத் தலைவர் ம.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் எஸ். பி.நாகரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ம-14)

### நிறுவுனர்தினம்

ஆனைக்கோட்டை உயரப் புலம் குணபாலன் வித்தியாலயத்தின் நிறுவுனர் தினமும், பரி சளிப்பு விழாவும் பிற்பகல் 2.15 மணிக்கு நடைபெறவுள் ளன.

சிரேஷ்ட ஆசிரியர் ச.சிவ சுதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராசா கலந்துகொள்வார். (ம-14)

### கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட உயர் தேசிய கணக்கியல், வர்த்தக மற்றும் முகாமைத்துவ பட்டதாரிகளுக்கான நியமனம் தொடர்பான அவசர கலந்துரையாடல் காலை 9 மணிக்கு யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன முன்றிலில் நடைபெறவுள்ளது. (ம-14)

### பொதுக்கூட்டம்

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-6)

### விளையாட்டு விழா

மக்கள் நலன் காக்கும் பிரிவு பாலர் பாடசாலை விளையாட்டு விழா கோப்பாய் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. மக்கள் நலன் காக்கும் பிரிவுத் தலைவர் கோ.சிவசுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் ம.பிரதீபனும், சிறப்பு விருந்தினராக அரச சார்பற்ற நிறுவனங்க ளின் இணையத் தலைவர் சீ.வி.கே.சிவஞானமும், கௌரவ விருந்தினர்களாக ஜே/260 கிராம உத்தியோகஸ்தர் சி.பாலசுந்தரம், ஜே/257 கிராம உத்தி யோகத்தர் எஸ்.உதயகுமார், மக்கள் வங்கி உத்தியோகஸ்தர் எஸ்.பகீரதன் ஆகியோரும் கலந்து கொள்வர் (ம-3)

### நாட்டியமயில் போட்டி

ஈயூ லங்கா போரம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாட்டியமயில் காலிறுதிப் போட்டி இன்று காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நிறுவனத் தலைவர் எம்.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-13)

## தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் மீட்பு

வலி வடக்கு, ஜூலை22

தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் உறவினர்களால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் கண்ணகி நலன்புரி நிலையத்தில் வசிப்பவரும் காங்கேசன் துறை, தையிட்டியைச் சொந்த இடமாகக் கொண்டவருமான கிட்டிணன் ஜீவரத்தினம் என்பவரின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனை மேற்கொள்வதற்காகச் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. சுன்னாகம் பொலிசார் இது சம் [illegible] னர். (ம-31-86)

## அரச மருந்தகக் காணியை மடக்கும் வடக்கு மாகாணசபை

யாழ்ப்பாணம், ஜூலை 22

கைதடியில் அமைந்துள்ள அரச மருந்தகக் காணியை தன்வசமாக்க வடக்கு மாகாண சபை இரகசிய நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று பொது அமைப்புகள் விசனம் தெரிவிக்கின்றன.



குறித்த மருந்தகத்தை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கும் இந்தக் காணி முழுவதையும் அபகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் கூறப்பட்டது.

இந்த அரச மத்திய மருந்தகத்துக்கு ஐம்பது பரப்புக்கு மேற்பட்ட காணி சொந்தமாகவுள்ளது.

தென்மராட்சி மேற்குப் பிரதேசத்தில் வசிக் கும் பல ஆயிரக்கணக்கான மக்க[illegible] நலன் கருதி இந்தக் காணியில் அரச வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை இங்குள்ள பொது அமைப்புக்கள் எடுத்து வருகின்றன.

இந்தவேளையில் வடக்கு மாகாணசபை இக்காணியை பறிக்க முயற்சிப்பது தமக்குப் பெரும் வேதனையளிப்பதாகவும் பலராலும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தக் காணியை மாகாணசபைக்குத் தாரை வார்த்துக் கொடுத்து தாம் நல்லபெயர் எடுப்பதற்கான முயற்சியில் ஒரு சில அரச அதிகாரிகள் செயற்பட்டு வருவதாகவும் விசனம் தெரிவிக்கப் படுகிறது.

சம்பந்தப்பட்டோர் மக்கள் நலன்கருதி இந்த விடயத்தில் கவனம் எடுத்து இங்கு வைத்தியசாலை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பலராலும் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் சட்டங்களை மீறிய 14 சம்பவங்கள்

மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனு ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள நிலையில், 13 சட்ட விரோத ஊர்வலங்கள் உட்பட 14 தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை மகாண சபைக்கான தேர்தல் நடைபெறுகின்ற ஒவ்வொரு மாவட்டத்திலும் சட்டவிரோத பிரசாரங்கள் தொடர்பில் பதிவாகியுள்ளதாக 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

எனினும் தேர்தல் தொடர்பில் குறிப்பிடத்தக்க சம்பவங்கள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை என தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு நிலையத்தின் தேசிய இணைப்பாளர் சட்டத்தரணி ரசாங்க ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார். (த)

# அமைச்சர்கள் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும்

கொழும்பு,ஜூலை 22

அமைச்சுகளில் இடம்பெறும் ஊழல்களைத் தடுப்பதற்காக அமைச்சர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்என அமைச்சர் நவீன் திஸாநாயக்க கூறியுள்ளார்.

பொகவந்தலாவையில் இடம்பெற்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சிங்கப்பூரிலுள்ள அமைச்சர்களின் சம்பளத்தையும் இலங்கை அமைச்சர்களின் சம்பளத்தையும் ஒப்பிட்ட அவர், சிங்கப்பூரில் அமைச்சர்களுக்கு சுமார் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் சம்பளம் வழங்கப்படுவதாகவும் கூறினார்.

இதனால் இலங்கையிலும் அமைச்சர்களின் சம்பளத்தை அதிகரிக்கவேண்டும் என அவர் கோரியுள்ளார். (த)

# துஷ்பிரயோகங்களை தடுக்க நடவடிக்கை

கொழும்பு,ஜூலை 22

நாட்டில் அதிகரித்துள்ள சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க இலங்கை மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சிறுவர் உரிமைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தி வரும், இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, சிறுவர் துஷ்பிரயோகங்களை முழுமையாக ஒழிப்பதற்கான திட்டங்களை துரிதப்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகளவு இடம்பெறும் மாவட்டத்தை இனங்கண்டு அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், பல்வேறு அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் முதற்கட்ட நடவடிக்கைகளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு முன்னெடுக்கவுள்ளது.

அத்துடன் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் மற்றும் சிறுவர்களுக்காக இயங்குகின்ற அமைப்புக்களை இணைத்துக் கொண்டு சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல்களுக்கு எதிராக மக்களைத் தெளிவுபடுத்தவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.(த)

# யாழ். - கொழும்பு பஸ் இயக்கச்சியில் விபத்து

சம்பவம் நடைபெற்றதும் சாரதி பஸ்ஸை விட்டு தப்பிச் சென்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. விபத்துச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொது மருத்துவமனையுடன் தொடர்புகொண்டு கேட்டபோது 2 சடலங்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் மேலும் காயமடைந்த 30 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்தினர்.

சம்பவம் தொடர்பில் பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவர்கள் விவரத்தை அறிவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் நேற்றிரவு அந்த விவரம் கிடைக்கப் பெறவில்லை. (10-16-6)

# கஹவத்தை இரட்டைக் கொலை திட்டமிட்ட செயல்

கொழும்பு,ஜூலை 22

கஹவத்தை, கொட்டகெத்தன தாய் - மகள் இரட்டைக் கொலையை செய்தவர்கள் சடலங்களை எரித்து விட்டதனால் ஏறத்தாழ சகல தடயங்களையும் அழித்து மிக திட்டமிட்டு இந்த கொலையை செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் குழு உட்பட நான்கு பொலிஸ் குழுக்கள் தற்போது விசாரணை செய்து வரு கின்றன. இதுவரையில் இவர்கள் 55 பேரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளனர். விசாரணைக் குழுக்கள் தேடுதல் நடத்திய போது கொல்லப்பட்டவர்களின் வீட்டுக்கு பின்னால் 50 மீற்றர் தூரத்தில் பயன்பாட்டில் இல்லாத காணியொன்றில் பல சாராயப் போத்தல்களையும் மிக்ஸர் பக்கெற்றுக்களையும் கண்டுள்ளனர், இதைவிட வேறு தடயம் எதுவும் கிடைக்கவில்லை. கொல்லப்பட்ட 63 வயது பிரேமாவதியும் அவரது 32 வயது மகளான புஸ்பகுமாரியும் வாழ்ந்து வந்த வீட்டுக்கு 200 மீற்றர் தூரத்தில் அமைந்த பொலிஸ் சவாடியிலிருந்தோர் கடமையை அலட்சியப்படுத்தியுள்ளதாகத் தென்படுகிறது எனவும் இதை சந்தேக நபர்கள் சாதகமாகப் பயன்படுத்தி இந்த கொலைகளை செய்துள்ளனர் எனவும் பிரதேசவாசிகள் கூறியுள்ளனர்.

இந்த பொலிஸ் சாவடியில் கடமையிலிருந்த உப இன்ஸ் பெக்டர் ஒருவர் உட்பட 12 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென விசார ணையை மேற்கொண்டுவரும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் கூறினார். (த)

# ஆஸி.புறப்பட்ட கப்பல் நேற்றும் சிக்கியது

திருமலை,ஜூலை 22

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியா செல்ல முறப்பட்ட 54 பேர் நேற்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 41 தமிழர்கள், முஸ்லிம்கள் ஐவர் மற்றும் சிங்களவர்கள் 7 பேர் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் இருவர் பெண்கள் ஆவர். திருகோணமலை நிலாவெளி பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை, நீர்கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இவர்கள் தற்போது திருகோணமலை கடற்படை முகாமில் வைக்கப்பட்டுள்ளதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது. (த)

# புலிக்கொடி விவகாரம் எமக்கு எதுவுமே தெரியாது

மோட்டார் சைக்கிளில் நடமாடியவர்களை பொலி ஸார் ஏன் கைது செய்யவில்லை என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்:-

நெல்லியடியில் ஆர்ப்பாட்டத்தின் போது புலிக்கொடியுடன் நபர்கள் நடமாடினார்கள் என்பது எமக்குத் தெரியாது. அவ் வாறு ஒரு சம்பவம் இடம்பெற்றது என முறைப்பாடு ஏதும் எமக்கு கிடைக்கவில்லை. அவ்வாறு ஒரு முறைப்பாட்டை செய்தாலோ அந்த நபர்கள் தொடர்பில் விவரங்கள் வழங்கி னாலோ அவர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுக்க முடியும் என்றார்.

சம்பவ தினத்தன்றும் மறுநாளும் இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் படங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளனவே என கேட்டதற்கு , ஊடகங்களில் வெளியான படங்களில் முகங்கள் அடையாளம் தெரியாதுள்ளதுடன் மோட்டார் சைக்கிள் இலக்கங்களும் தெரியவில்லை இத்தகைய நிலையில் எதன் அடிப்படையில் யாரைக் கைது செய்வது என கேள்வி எழுப்பினார் பிரதிப் பொலிஸ்மா அதிபர். (10-86)

# வடக்கு மக்களுக்கு கருத்துரிமை மறுப்பு

நேற்றுக்காலை. ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையைச் சந்தித்து உரையாடினார் அமெரிக்கத் தூதுவர்.

குடநாட்டின் தற்போதைய நிலை குறித்து ஆயரின் கருத்துகளைக் கேட்பதில் அமெரிக்கத் தூதுவர் அதிக அக்கறை காட்டினார்.

தூதுவரிடம் யாழ். ஆயர் சுட்டிக்காட்டிய விடயங்கள் வருமாறு:

போர் நிறைவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆயினும் வடக்கில் தனியாகவோ, கூட்டாகவோ மக்கள் கருத்துக்களை வெளியிட முடியாத நிலை இன்றும் தொடர்கிறது. இந்தநிலையைச் சகித்துக் கொண்டே மக்கள் தமது வாழ்வை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இங்கு ஜனநாயக அரசியல் நடைபெறுகின்றதா என்ற கேள்வியும் அனைவரிடத்திலும் எழுந்துள்ளது.

மக்கள் பொருளாதார ரீதியாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதில் அவர்கள் கடுமையாகப் போராட வேண்டியுள்ளது. எனவே இங்கு பொருளாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் பட்சத்தில் ஏனைய பல பிரச்சினைகளில் இருந்து விலகி வாழக் கூடிய நிலை ஏற்படலாம். அரசியல் ரீதியாகவும் இதில் பல நன்மைகளை அனைவரும் அடையலாம்.

வடக்கில் தனிநபர்கள் அச்சுறுத்தப்படுவது, தனிநபர்களின், அதிகாரிகளின் வாழ்விடங்கள் தாக்கப்படுவது ஆகிய சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே உள்ளன. இவை மக்கள் மனதில் கடும் அச்சநிலையைத் தோற்றுவித்துள்ளன.

இங்கு இராணுவப் பிரசன்னம் பிரச்சினைக்குரிய தொன்றாகவே காணப்படுகின்றது. வீதிகள் முக்கிய இடங்களில் இருந்து படையினர் அகற்றப்பட்டாலும் அவர்களது பிரசன்னம் மக்களுக்கு இடையூறாகவே இருக்கிறது.

வலி.வடக்கில் சில பிரதேசங்கள் உயர்பாதுகாப்பு வலயங்களாகவே உள்ளன. இவை மீள்குடியேற்றத்துக்குத் தடையாக இருக்கின்றன. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாமலேயே உள்ளனர்.

இது தவிர பின்தங்கிய பிரதேசங்களில் கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய மாணவர்களின் கல்வியில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இந்தப் பிரச்சிகைகள் குறித்தும் அதிக அக்கறை செலுத்தப்படவேண்டியது அவசியமானதாகும். - என்று சுட்டிக் காட்டினார். யாழ்.ஆயர் தெரிவித்த விடயங்கள் குறித்து கவனத்தில் கொள்வதாகத் தூதுவர் அங்கு குறிப்பிட்டுள்ளார். (த-4)

# விருப்பு எண்கள் 25 ஆம் திகதி வழங்கப்படும்

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு விருப்பு எண் வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் 25ஆம் திகதி இடம்பெறும் என தேர்தல்கள்செயலகம் தெரிவித்துள்ளது.

தற்போது இது தொடர்பான பரிசீலனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

மாவட்ட அடிப்படையில் விருப்பு எண்கள் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த)

## முல்லைத்தீவில் வெடிபொருள் மீட்பு

கிராம் நிறையுடைய ரி.என்.ரி வெடிபொருள்களைப் படையினர் கைப்பற்றியுள்ளதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வனிகசூரிய தெரிவித்தார். (த)

## தேர்தல் முறைப்பாடுகளை தெரிவிக்கத் தனிப் பிரிவு

அனைத்து வேட்பாளர்களும் தங்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான பிரகடனங்களை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னதாகச் சமர்ப்பிக்க வேண்டுமென உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (த)

# ஆஸி. - இலங்கை இடையே முறுகல்

வைஸ் அட்மிரல் சோமதிலக திசநாயக்கவிடம், அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். அத்துடன் படகுகளில் அகதிகள் ஆஸ்திரேலியா செல்வதை இலங்கைக் கடற்படை தடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில், தமது நடவடிக்கைக்கு ஆஸ்ரேலியா ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று இலங்கைக் கடற்படைத் தளபதி குற்றம் சாட்டியுள்ளார்.

கடற்படைத் தளபதி மேலும் தெரிவித்ததாவது:-

2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர் நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள், சிறுவர்களை ஏற்றிச் சென்ற இழுவைப் படகுகளைத் தடுத்து வைத்துள்ளோம்.கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 400 பேர் தடுக்கப்பட்டுள்ளனர்.

கடற்படைப் புலனாய்வுப் பிரிவும், அதன் சகோதரப் புலனாய்வு அமைப்புகளும் ஆள்கடத்தல்களை முறியடிக்க மேலதிகமாகப் பணியாற்றுகின்றன.ஆனால் துரதிர்ஷ்டவசமாக, எமது முயற்சிகளுக்கு ஆஸ்திரேலியா ஒத்துழைப்பு அளிக்கவில்லை.

நிலைமைகளை அவுஸ்ரேலிய தூதுவருக்கு விளக்கியுள்ளேன். இலங்கைக் கடற்படைக்குப் பின்னால் ஆஸ்திரேலியா இருக்கத் தவறியுள்ளது. பொருளாதார அகதிகளைக் கவரும் முதன்மையான தெரிவாக ஆஸ்திரேலியா இன்னமும் இருந்து வருகிறது. அவர்களின் சட்டங்கள் அதற்கு இடமளிக்கின்றன.

ஒரு படகில் சென்ற பொய்யான அகதிகளை ஆஸ்திரேலியா திருப்பி அனுப்புமேயானால் ஒரே இரவில் நிலைமைகள் மாறும்.

எமது விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவோ அடைக்கலம் தேடியவர்களின் விவரங்களைத் தரவோ ஆஸ்திரேலியா தயாராக இல்லை.தமது காவலில் உள்ள இலங்கைப் படகுகளின் விவரங்களையும் வெளியிட மறுக்கிறது. இலங்கைக்கு அப்பால் 200 கடல்மைல் தொலைவில் இழுவைப் படகு ஒன்று தத்தளித்துக் கொண்டிருப்பதாக அண்மையில் ஆஸ்திரேலியத் தூதுவர் எனக்குத் தகவல் தந்தார்.

அதனைக் கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிய அவர், சரியான இடத்தை கூறவில்லை.- என்றார். (த)

# அமைச்சுப் பதவியையும் உதறிவிட்டு வாருங்கள்

மானம் காரணமாக, அரசுக்கு எதிராக வாக்களிக்கத் தீர்மானத்திருந்த மக்களை ஏமாற்றி, அவர்களின் வாக்குகளைப் பெற்று, மீண்டும் அரசுடன் இணையும் திட்டமிட்ட சூழ்ச்சியில் முஸ்லிம் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாணங்களுக்கான தேர்தலை வலுவான முறையில் எதிர்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. பகுதி, பகுதியாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து, ஐக்கிய தேசியக் கட்சி தனது கடும் எதிர்ப்பை அரசுக்குத் தெரிவித்துள்ள்து. அரச அதிகாரம், அரச சண்டித்தனம் உள்ளிட்ட அனைத்து அரச வளங்களையும் பயன்படுத்திக் கடும் அடக்குமுறையின் கீழ், வாக்குகளை கொள்ளையடிப்பதற்காகவே, அரசு, பகுதி பகுதியாக மாகாண சபைத் தேர்தலை நடத்துகிறது எனவும் முஸம்மில் கூறியுள்ளார்.

இதனால் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை முடிந்தளவில், நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடத்த கூடிய உச்ச அளவிலான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவகாலப் பாதுகாப்புக்கு 600 பொலிஸார் கடமையில் ஈடுபடுவர்

வலி.வடக்கு ஜூலை 22

நல்லூர் கந்தனின் திருவிழாக் காலத்தில் பாதுகாப்புக்கடமைகளில் விசேடமாக அறுநூறு பொலிஸார் ஆலய சுற்றாடலில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

ஆலய உற்சவ காலத்தில் இடம்பெறக்கூடிய திருட்டுக்கள், குற்றச்செல்களை தடுக்கும் நோக்கில் இந்த விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உற்சவ காலத்தில் சிவில் உடையிலும் சீருடையிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரெரா இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்:-

குறிப்பாக பெண்கள் தமது பெறுமதிமிக்க தங்க நகைகளை அணிந்து வருவதை தவிர்த்துக்கொள்வதுடன் தமது பாதுகாப்பைத் தாமே உறுதிப்படுத்தும் வகையில் நடந்துகொள்வது குற்றச் செயல்களைத் தடுக்க வசதியாக இருக்கும் என பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆலய சுற்றாடலிலும் விசேடமாக பொலிஸார் சிவில் உடையில் கடமையாற்றுவதுடன் வீதிகளில் செல்லும் போதும் வரும்போதும் மக்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களைத் தவிர்க்கும் முகமாகவும் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொள்வர் எனவும் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரெரா கேட்டுள்ளார்.

(10-86)

## ஆண்டு நிறைவு விழா

கைதடி நவீல்ட் செவிப்புலன் இழந்தோர் பாடசாலையின் 45ஆவது ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்த பொதுக்கூட்டம் இன்று காலை 8.30 மணிக்கு நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வீ.எஸ்.மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் சி.சத்தியசீலன், வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் பவிக்னேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

UK, Australia, Canada USA and Malaysia
பல்கலைக்கழக அனுமதி & தொழில்வாய்ப்புகள்
சிகரம்
கல்வி - தொழில் வழிகாட்டல் பிரிவு
The University of Wollongong · University of Bradford · UH · INTI International University · Blue Mountains · SEGi University College
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
021 300 80 60 · 0773 616 798

## இறுதிக் கட்டமாக இலங்கைக்கு 415 மில்லியன் டொலர் கடன்

### நாணய நிதியம் இணக்கம்

வொஷிங்டன்,ஜூலை 22

இலங்கைக்கு வழங்கும் 8ஆவதும் இறுதியுமான கடன் தொகையை வழங்க சர்வதேச நாணய நிதியம் இணக்கம் வெளியிட்டுள்ளது. இதன்படி இலங்கைக்கு இறுதிக்கட்டமாக 415 மில்லியன் டொலர்கள் வழங்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் இலங்கைக்கு மொத்தமாக 2.6 பில்லியன் டொலர்கள் கடனாகக் கிடைக்கப்பெற்றுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் மத்திய செயற்குழு வொஷிங் டனில் நேற்றுமுன்தினம் கூடி தமது இறுதித் தீர்மானத்தை அறிவித்தது.

இந்தக் கடனுதவிக்கான அனுமதியை வழங்கிய சர்வதேச நாணய நிதியம் இலங்கை நீண்டகால அபிவிருத்தியைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

(த)

காணி விற்பனைக்கு
A-9 ரோட், கிளிநொச்சி நகரப்பகுதியில், கடைத்தொகுதிக்குரிய காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0771988083

# கண்ணீர் அஞ்சலி



'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளின் சிரேஷ்ட செய்தியாளரான இரா.புத்திரசிகாமணியின் அன்புத் துணைவியாரான

**தவமணிநாச்சி புத்திரசிகாமணி**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளரும், பணியாளர்களும்,
உதயன் நிறுவனம்.

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை நாகலிங்கம்

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது சென்னை கே.கே நகரில் வசித்தவருமான வேலுப்பிள்ளை நாகலிங்கம் கடந்த 18.07.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் , காலஞ்சென்றவர்களான பெரியம்மா ,காணியம்மா , சின்னத்தங்கச்சி, மாணிக்கம், சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சேசமலர் (லீலா,இந்தியா), ராஜேஸ்வரி (இந்தியா), சிவஞானம் (கனடா), சந்திர குமார் (இந்தியா), ஆனந்தராஜா (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தை யும், பத்மநாதன் (இந்தியா), பூபாலசிங்கம், உதயகுமாரி (பட்டு-கனடா), பவானி (இந்தியா), நந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், தர்சினி (லண்டன்), தர்சனா (பிரன்ஸ்), ஜெயந்தனா (பிரன்ஸ்), வதீஸ் (இந்தியா), சந்திரிக்கா (கனடா), ஜெனீஸ்(கனடா ) மயூரி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2012) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு இந்தியாவின் சென்னையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி

தகவல்:
குடும்பத்தினர்

(20733) (3)

ENGLISH COURSES
18th Batch BI Exam
பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் அனைவரும் சித்தி வாழ்த்துகிறோம்




**A1 - UK Settlement Visa** வில் செல்பவர்களுக்கானது
Weekday - 9am - 12noon One Month
Weekend - 3pm - 5pm Two Months
**B1 - UK Student Visa** வில் செல்பவர்களுக்கானது
Weekday - 9am - 12noon One Month
Weekend - 1pm - 3pm Two Months
**B2 - UK Student Visa** வில் செல்பவர்களுக்கானது
**Diploma in English** (3 Months) உங்கள் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கித் தரப்படும்
**IELTS** (2 Months) உங்கள் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கித் தரப்படும்
**Spoken English** (2 Months)
**UK Student Visa** க்களை எமது நிறுவனமூடாக விண்ணப்பிப்பவர்களுக்கு **B1/IELTS** இலவசமாக கற்பிக்கப்படும்
LONDON METROPOLITAN COLLEGE
No:197, Arasady Road, Jaffna.
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
Tel: 021 222 7230, 021 753 8395

யாழ்ப்பாணம், மானிப்பாய், நெல்லியடியில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!
Diploma in Mobile Phone Repairing
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)
(எமது இக் கற்கை நெறியை கற்பதன் மூலம் 100% நீங்கள் Mobile Phone இனை திருத்தி கொடுக்க முடியும்)
சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்புக் கற்கை நெறி !!!
வகுப்பு ஆரம்பம் : வரும் ஞாயிறு, திங்கள் கிழமை காலை 10 மணிக்கு
ஜேர்மன் , சுவிஸ் (எ.எச்) மொழி வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன!!
உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!
By:-S.Selvathashan B.Sc (Hons), M.Sc in ICT
விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

உடன் விற்பனைக்கு
(1) Toyota Hiace - Crewcab
(White Colour)
Dual Purpose Vehicle
WP - GN - xxxx
(2) Toyota - Town ACE
Silver Colour
Dual Purpose Vehicle
253 - xxxx
தொடர்பு : 077 6116054
(சி/1639)(6-14)

## சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்
## பதவி வெற்றிடம் -விற்பனை பிரதிநிதி (சந்தைப்படுத்தல் முகாமையாளர்)

ஜசுபி பழரசத் தொழிற்சாலை, சுன்னாகம் பல.நோ.கூ.சங்கம். எமது தொழிற்சாலைக்கு மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன .

பதவி- விற்பனைப் பிரதிநிதி (சந்தைப்படுத்தல் முகாமையாளர்) 300 : 74

சம்பளத்திட்டம் - ரூ. 9700 80 X 10, 85 X 10 ரூ.11350

விசேட அலவன்ஸ்- ரூ10, 000/=

கல்வித் தகைமைகள்- கூட்டுறவு பணியாளரின் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் லிகிதர்/ விற்பனை உதவியாளர்/ மொத்த நிலைய தொழிலாளி பதவியில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம் . அல்லது கூட்டுறவுப்பணியாளர் சாதாரண தரம்/க.பொ. த சாதாரணப் பரீட்சையில் கணிதம்/வர்த்தக எண்கணிதம்/ எண்கணிதம், தமிழ் பாஷை ஆகிய பாடங்களை உள்ளடக்கியதாக 04 திறமைச்சித்திகளுடன் கூடியதாக 06 பாடங்களில் சித்தியுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஒருவருட அனுபவம்.

மேலதிக தகைமைகள்.
1. சந்தைப்படுத்தல் துறையில் அனுபவம்
2. சந்தைப்படுத்தல் முகாமை தொடர்பான டிப்புளோமா கற்கைநெறி.
3. கணினி அறிவு
4. ஆங்கிலத்தில் பேச, வாசிக்க எழுத தெரிந்திருத்தல்.

பொது நிபந்தனைகள்
1. 18- 45 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. நிர்வாகத்தால் கேட்கப்படும் பிணைகளை செலுத்துதல் வேண்டும்.
3. விண்ணப்ப முடிவுத்திகதி. 31.07.2012
4. விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.
5. விண்ணப்பங்கள் தலைவர், சுன்னாகம் பல.நோ.கூ.சங்கம், காங்கேசன்துறை வீதி, சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சி.குமாரவேல்
தலைவர், சுன்னாகம் பல.நோ.கூ.சங்கம்

(சி/1630) (6-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றுக்கு கணினி திருத்தவேலை (Computer Hardware), கணினி வரை கலை (Graphic Designing) தெரிந்தவர்கள் உடன் தேவை. யாழ்.நகருக்கு அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0788307080

உதயன் விளம்பரத் தொடர்புக்கு adyt@uthayan.com 0215671111


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
செல்வி அலிதா தியாகராசா அவர்களின் அன்புத் தந்தை

### நா. தியாகராஜா

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்*
*யா/அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை.*

(20729) (3.14)

## கண்ணீர் அஞ்சலி



### நாகலிங்கம் தியாகராஜா

கோண்டாவில் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவரும், நல்லூர் சமநல சேவை குழு உறுப்பினராக கடந்த 10 வருடங்களாகச் சேவையாற்றிய நாகலிங்கம் தியாகராசா அவர்களின் பிரிவினால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*கமநல சேவைக்குழு உறுப்பினர்கள்*
*பெரும்பாக நிலைய உத்தியோகத்தர்கள்.*

(20731) (3.14)


## துபாய்க்கு உடனடி வேலைவாய்ப்பு

சுத்திகரிப்பாளர் துறையில் உடன் பயணமாகலாம்.

| POSITIONS | QTY | GROSS SALARY(DHS) | | Total |
|---|---|---|---|---|
| | | Basic | Allowance | Salary |
| Cleaning Workers - Male | 150 | 450 | 408 | 858 |
| Glass Cleaning Workers | 10 | 450 | 608 | 1158 |
| Cleaning Supervisors | 06 | 1500 | 1061 | 2561 |

1 DHS = 36 Rs

**Hotline: 0717 777 666**

அரச அனுமதிக்கட்டணம் ரூபா.69,152/- மட்டுமே.
நேர்முகப்பரீட்சை -இம்மாதம் 23,24,25ம் திகதிகளில் நடைபெறும் உடன் நேரே வரவும்.

**Terms & Conditions**
Free Accommodation, Transport & Medical. Food Allowance included in salary. 2 year contract, working 08 hrs per day, 6 days a week all other terms as per UAE Law.

**Apply: jobs@jobenvoy.com**
AL/ADVT/2260/2/12 (சி/1384)

Jobenvoy.com (Pvt) Ltd
Level 10, Ceylinco House,
69, Janadhipathi Mawatha, Colombo 01.
Tel 011 2388 655 | 011 5861 371 | Fax: 011 2388 656



## வாடகைக்கு

பண்டத்தரிப்பு மாதகல் வீதியில் யூனியனுக்கு முன்பாக நான்கு கடைகள், வியாபார கட்டடத் தொகுதி வாடகைக்கு உண்டு. ஒவ்வொன்றும் 40'x20' அளவுகள் உடையவை.

தொடர்பு -0777562091 (சி/1383) (3.6.14)

**German Swiss** மொழிகள்
தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றது. அடுத்த புதிய வகுப்புக்கள் 23.07.2012 திங்கட்கிழமை ஆரம்பம்.
German Institute
10 Palaly Road Jaffna.
T.P - 0771604823 (20727) (3.14)

## கடை வாடகைக்கு

(நல்லூர் ஆலய திருவிழா காலத்தில் மட்டும்) யாழ்ப்பாணம் நல்லூர் ஆலய பகுதியில் பருத்தித்துறை வீதி, வைமன் வீதி, அரசடி வீதியை இணைக்கும் சந்தியில் மூன்று மாடி உடைய கடை வாடகைக்கு உண்டு. (நவீன காட்சி அறைக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது)

தொடர்பு - 0777747095
0772367447 (சி/1634) (3.14)



## உலகம் முழுவதும் 29 நாடுகளின்
300க்கும் மேற்பட்ட பல்கலைகழக வலைப்பின்னலைக் கொண்டுள்ள

INTI INTERNATIONAL UNIVERSITY
LAUREATE INTERNATIONAL UNIVERSITIES
வழங்கும்
**UK, Australia, Canada, America**
பல்கலைக்கழக கற்கைநெறி அனுமதிகள்

UNIVERSITY OF BRADFORD · University of Hertfordshire · THE UNIVERSITY OF WOLLONGONG AUSTRALIA · BlueMountains




வெளிநாட்டுப் பல்கலைக்கழகக் கல்வியில் நாட்டமிருந்தும் புதிய விதிமுறைகள், கட்டுப்பாடுகளால் தடுமாறுவோருக்கு
முற்றிலும் உத்தரவாதமான புதிய வழிமுறைகள்

பெருந்தொகைப் பணச் செலவு / IELTS / வங்கிப்பணம் / தூதரக நேர்முகத்தேர்வு — **இல்லை**

ஏற்கனவே அனுமதி பெற்று ஒகஸ்டில் செல்லவுள்ள மாணவர்களுடன்.
INTI International University பிரதிநிதி
Tan Huey Kuan ஐச் சந்தித்து அனுமதி பெறுங்கள்

விளக்கக் கருத்தரங்கு
& SPOT ADMISSION (சி/1635)

@ ஞானம்ஸ் ஹொட்டேல். யாழ்ப்பாணம்
on 29-07-2012 ஞாயிற்றுக்கிழமை முற்கல் 10.00 மணி

சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டல் பிரிவு
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
Mail: edusikaram@gmail.com Web: www.sikaram.lk


## மரண அறிவித்தல்



### திருமதி சிவதாசன் புஸ்பராணி

வயாவிளான் முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தற்போது புத்தளம் சுற்பிட்டியில் வசித்தவருமான திருமதி சிவதாசன் புஸ்பராணி நேற்று (21.07.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகன்- தனுஷ்கோடி தம்பதியரின் அன்பு மருமகளும், சிவதாசன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொனிப்பாஸ், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும், சந்திரகாந்தன், விஜிதா, சந்திரகுமார், சந்திரவதனம், கோகிலவாணி, சந்திரசுகரேமி (ஆசிரியர், ஸாஹிரா தேசிய பாடசாலை புத்தளம்), ஆகியோரின் அன்புத் தாயும், குமாரபாமா, ஏபிரகாம் பிறேமரத்தினம், நக்சாயினி, தற்சாயினி (ஆசிரியை, பம்பைமடு தமிழ்கலவன் பாடசாலை), பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமியும், துதிக்காந், டேமி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணியளவில் சந்தை தெற்கு வீதி, சுன்னாகம் எனும் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை தெற்கு வீதி,
சுன்னாகம்.

*தகவல்:*
*குடும்பத்தினர்*

(20732) (3.14)

## மரண அறிவித்தல்

### முத்தையா செல்வராசா



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் அம்மன் கோயிலடி சூராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா செல்வராசா நேற்று (21.07.2012) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மங்களவதியின் அன்புக் கணவரும் சுரேஸ்குமார் (பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்-போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), செல்வகுமார் (செல்வா-ஆங்கில ஆசிரியர்), றூபகுமார் (றூபன்), யமுனா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதர்சினி, குமுதினி ஆகியோரின் அன்பு மாமனும், புஸ்பவதி (இந்தியா), துரைராஜா, ஜெயராஜா, தங்கராஜா, ருக்மணிதேவி (இந்தியா), ஸ்ரீகாந்தன் (வவுனியா), சரோஜினி, சந்திரன், சீதாலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சக்ஷனா, சுவேதனன், சங்கவி, மதுநிஷான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனகிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் கோயிலடி,*
*சூராவத்தை, சுன்னாகம்.* (20728) (3.14)

*தகவல்:*
*குடும்பத்தினர்*


## வர்த்தகப் பெருமக்களே

### வியாபாரத்தை பதிவு செய்தல் "BUSINESS REGISTRATION"

VTL Management Services (PVT) Ltd
NO. 01, Deanston House,
Deanston Place,
colombo 03

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள் (20718) (15-14)

colombo T.P- 072-9994777 /011-7902938 / 011-7208752 Jaffna - 0727685691 / 0772479683


## 1 ஆம், 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 . 07 . 1921 — உதிர்வு 04 . 07 . 2011



1 ஆம் ஆண்டு நினைவு
*அமரர் சரவணை மார்க்கண்டு*

மலர்வு 04 . 07 . 1930 — உதிர்வு 17 . 07 . 2010



2 ஆம் ஆண்டு நினைவு
*அமரர் மார்க்கண்டு இராசம்மா*

பட்டென மறைந்து பரிதவிக்க வைத்தீர் பாரினிலே பரிதவித்து வாடுகின்றோம்
நெஞ்சினிலே நீங்காத நினைவு தந்து நீண்ட தூரம் மறைந்தது ஏனப்பா
இறைவன் பாதம் வணங்கி சாந்தி பெற அனுதினமும் தொழுதிடுவோம்

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (22.07.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். மேற்படி கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு யா/அத்தியடி கணபதி கலாசார மண்டபத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*82/10,3ஆம் ஒழுங்கை,*
*பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(20725) (15-14)

*மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## மரண அறிவித்தல்



### திருமதி து. கமலாதேவி

வேலணை கிழக்கு வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி து.கமலாதேவி (20.07.2012) வெள்ளிக்கிழமை சுவிஸில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனி- தெய்வானை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு- தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற துரைராஜாவின் அன்பு மனைவியும் ரவிக்குமார் (சுவிஸ்), ரவிமோகன் (ஜேர்மன்), சசிகரன் (பிரான்ஸ்), கயல்விழி (சுவிஸ்), சர்மிளா (சுவிஸ்) ஆகி யோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*வேலணை கிழக்கு,*
*வேலணை.* (சி/1626) (15- 14)

தகவல்
மைத்துனர்
கா.தெய்வேந்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு சிறுபான்மையினர் உறவுக்கு வழி செய்யுமா?

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவது என்று முடிவு செய்தமை பல தரப்புகளாலும் வரவேற்கப்படுகிறது.

சப்ரகமுவ மாகாணத்திலும், வடமத்திய மாகாணத்திலும் அரசுடன் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ், கிழக்கு மாகாணத்தில் மரச் சின்னத்தில் தனித்துப் போட்டியிட எடுத்த முடிவு கிழக்கில் தமிழ் - முஸ்லிம் மக்கள் நெருங்கிச் செயலாற்றும் சூழ்நிலையை உருவாக்கும் என எதிர்பார்க்கலாம்.

கிழக்கு மாகாணத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு எவ்வாறானதாக அமையும் என்ற கேள்வி பலராலும் எழுப்பப்பட்டு வந்தது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அரசில் முக்கிய அமைச்சர் பதவி வகிக்கிறார். அமைச்சராக இருந்து கொண்டே முஸ்லிம் மக்களுக்காகக் குரல் கொடுத்துவருகிறார்.

தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரத்தில் தனது அமைச்சர் பதவியைத் துறக்கவும் அவர் தயாராக இருந்தார். அமைச்சராக இருந்துகொண்டு அரசின் நிலைசாராது, முஸ்லிம் மக்களின் உரிமைக்காக அவர் குரல் கொடுத்து வந்ததே, கிழக்குத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கப்போகும் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்ற கேள்வி பல வட்டாரங்களிலும் எழுவதற்குக் காரணமாக இருந்தது.

முஸ்லிம்களுக்கு எதிராக தம்புள்ளையிலும், அநுராதபுரத்திலும், தெஹிவளையிலும், காலியிலும் இடம்பெற்ற சம்பவங்களினால் கொதிப்படைந்து போய் இருந்த பெரும்பாலான முஸ்லிம் மக்கள், முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்து போட்டியிடக்கூடாது, தனித்துப் போட்டியிடவேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்தனர்.

இத்தகைய நிலையில், முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நடைபெற்ற கட்சியின் உயர்மட்டக் கூட்டத்தில் அரசுடன் இணைந்து கிழக்குத் தேர்தலில் போட்டியிடும் முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், அதன் பின்னரான ஆசனப் பங்கீட்டில் ஏற்பட்ட கருத்து முரண்பாடே தனித்துப் போட்டியிடும் நிலைமைக்கு முஸ்லிம் காங்கிரஸைத் தள்ளிவிட்டுள்ளது.

மூவின மக்கள் வாழும் கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரச சார்பு தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், முஸ்லிம் அரசியல் கட்சிகள், அரசுக்கு ஆதரவான - எதிரான பேரினவாதக் கட்சிகள் போட்டியிடுகின்றன.

கிழக்கில் தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கும் காணி, பொலிஸ் மற்றும் குடியேற்றப் பிரச்சினைகள் முஸ்லிம் மக்களுக்கும் உண்டு. அரசுடன் இணைந்து போட்டியிடுவதற்கு காணி, பொலிஸ் பிரச்சினைகளையும் நிபந்தனையாக முன்வைத்த முஸ்லிம் காங்கிரஸ், ஒரு கட்டத்தில் இவற்றிலிருந்து பின்வாங்கி ஆசனப் பங்கீட்டுக்குப் பேரம் பேசியது. அம்பாறை மாவட்டத்தில் ஆறு இடங்களை முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்க அரச தரப்பு மறுத்தபோது தனித்துப் போட்டியிடும் முடிவு எடுக்கப்பட்டது.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் கிழக்கு மாகாணசபையைக் கைப்பற்றுவது ஆளும் தரப்புக்கு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

* வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகக் கோரிக்கையை அர்த்தமற்றதாக்கிவிட முடியும்.
* இனப்பிரச்சினையை வடக்குக்குள் மட்டும் முடக்கிவிட இயலும்.
* சிறுபான்மை மக்களின் ஆதரவு அரசுக்கே உள்ளது என்று சர்வதேசத்துக்குப் பிரசாரம் செய்யமுடியும்.
* இனப்பிரச்சினைக்கான அரசியல் பேச்சுகளில் தமிழர் தரப்பின் பலத்தைக் குறைக்க இயலும்.

இதனால்தான் கிழக்கு மாகாணசபையை வெற்றி பெறுவதற்கு அரசு மிகவும் நுட்பமாகத் திட்டங்களை வகுத்துவந்தது.

கிழக்குத் தேர்தலில் அரச தரப்பு வெல்லுமானால், கடந்த காலங்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு ஓர் அங்கீகாரமாகிவிடும். இதனை மனதில் கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் செயற்படவேண்டியது அவசியம். தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்றவர் ரவூப் ஹக்கீம். தனித்துப் போட்டியிடும் முடிவு தமிழ் - முஸ்லிம் மக்களின் நெருங்கிய ஒத்துழைப்புக்கு வழிவகுக்கவேண்டும். அதனை எதிர்பார்க்க முடியுமா என்பதற்குக் காலம் தான் பதில்சொல்லும். இப்போது, சாதகமாகவோ பாதகமாகவோ நினைக்க முடியாது.

# உயர்கல்வி அமைச்சின் முன்னால் அதிபர், ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

அதிபர், ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு 13 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அதிபர், ஆசிரியர்களை ஒன்றிணைத்துப் பெரியளவில் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று இசுறுபாயவில் உள்ள கல்வி அமைச்சின் முன்பாக நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 9 சங்கங்கள் இணைந்து இந்த எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளன என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கம், அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம், சுதந்திர கல்விச் சேவையாளர் சங்கம், கல்விப் பொது உத்தியோகத்தர்கள் சங்கம், இலங்கை முற்போக்கு ஆசிரியர் சங்கம், தரம்பெற்ற அதிபர்கள் சங்கம், இலங்கை தேசிய அதிபர்கள் சங்கம், அகில இலங்கை அதிபர்கள் சங்கம், தரம் I அதிபர்கள் சங்கம் ஆகிய 9 சங்கங்களும் இணைந்து வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அதிபர், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து இதனை நடத்தவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (த-4)

## பால், தயிருக்கு தட்டுப்பாடு

நவாலி, ஜூலை 22

நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் பால், தயிர் என்பவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்கும் திட்டத்தால் பாடசாலைகளுக்கு இங்குள்ள பால் சங்கங்கள் பாலைப் பெற்று வழங்குகின்றன. இதனால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள பால் சங்கத்தில் முன்னுரிமை அடிப்படையில் அரை லீற்றல் பால் மட்டுமே வழங்கப்படுகிறது. இதனால் தொடர்ந்து பாலை வாங்கிய வாடிக்கையாளர் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-100)

## நலனோம்பு உதவிகள்

பளை, ஜூலை 22

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் நலனோம்பு உதவி கள் வழங்கும் நிகழ்வும் பேரவையால் நடத்தப்பட்ட கணினிப் பயிற்சி நெறியின் இரண்டாம் கட்ட பயனாளிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் பேரவை மண்டபத்தில் இடம்பெற்றன.

பேரவையின் மத்திய குழுவின் தலைவர் ப.அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட நியாப் திட்டப் பணிப்பாளர் க.தெய்வேந்திரமும் சிறப்பு விருந்தினர்களாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக முன்னாள் உதவி அரச அதிபரும், தற்போது சாவகச்சேரி நகரசபைச் செயலாளருமான சு.புத்திசிகாமணி, பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் முன்னாள் செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொண் டனர்.

நிகழ்வில் கணினிப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல், பிரதேசத்தில் வறுமை நிலையில் உள்ள நான்கு குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல், பிரதேச எல்லைக்குள் இயங்கும் 22 முன்பள்ளிகளின் சிறார்களுக்கு சத்துணவு வழங்கல் போன்றவை இடம் பெற்றன. (ம-9)

## வெள்ளைப் பூடு இறக்குமதிக்கு கடந்த ஆண்டு ரூ.243 கோடி செலவு

கொழும்பு, ஜூலை 22

வெள்ளைப்பூடு இறக்குமதி தொடர்பாக இலங்கை கடந்த ஆண்டில் 243 கோடியே 4 லட்சத்துக்கு 51 ஆயிரத்து 462 ரூபாவை செலவிட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரான ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் 2 கோடியே 37 லட்சத்து 55 ஆயிரத்து 656 கிலோ வெள்ளைப்பூடு இந்த நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை 2010 ஆம் ஆண்டில் 35 மெற்றிக் தொன் வெள்ளைப் பூடு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ம-22)

## உயர்தரப் பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

உயர்தரப் பரீட்சை 2012 ஆம் ஆண்டுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாண வலயம், தென்மராட்சி வலயம் மற்றும் தீவக வலயத்தை உள்ளடக்கிய யாழ்ப்பாணம் 1 இற்குரிய உயர்தரப் பரீட்சை 2012 இற்குத் தெரிவு செய்யப்பட்ட பரீட்சை இணைப்பாளர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா தெரிவித்துள்ளார். (ம-14)

## 40 வருடங்களாக திருத்தப்படாத வீதி

யாழ்ப்பாணம், ஜூலை 22

மூளாய் மாவடி வீதியிலுள்ள தபால்பெட்டிச் சந்தியைச் சந்திக்கும் குறுக்கு வீதி 40 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் மிகவும் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

சேதமடைந்துள்ள இந்த வீதியின் ஊடாகப் பயணம் செய்யும் பொதுமக்கள் போக்குவரத்து இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் அடிக்கடி விபத்துக்களும் இடம்பெறுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியை புனரமைப்புச் செய்துதருமாறு உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதும், எந்த வித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

பஸ்தரிப்பிடம், பாடசாலைகள், ஆலயங்கள், வைத்தியசாலை போன்றவற்றுக்குச் செல்ல இந்தக் குறுக்கு வீதி மிகக் கிட்டிய தூரம் என்பதால் அயல் கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் இந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது இந்த வீதி அடையாளமே தெரியாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

எனவே இந்தப் பகுதி மக்களின் போக்குவரத்து இடர்பாட்டை நிவர்த்தி செய்ய வீதியைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14)

# சொத்து இழப்புக்கு விண்ணப்பித்து பத்து வருடங்களாகக் காத்திருப்பு

## அரச உத்தியோகத்தர்கள் கவலை

தென்மராட்சி, ஜூலை 22

போர் வேளையில் ஏற்பட்ட சொத்துக்கள் இழப்புக்கான நஷ்டஈடு கோரி விண்ணப்பித்து பத்து வருடங்களுக்கு மேலாகக் காத்திருக்கிறார்கள் அரச உத்தியோகத்தர்கள்.

கடந்த வருடம் அரச உத்தியோகத்தர்களுடன் மாகாண ஆளுநர் [illegible] போது போர்வேளையில் தமக்கு ஏற்பட்ட சொத்துகளின் இழப்புக்கு நட்டஈடு கோரி பத்து வருடங்களாகியும் கிடைக்கவில்லை என்று சுட்டிக்காட்டி இருந்தனர்.

உத்தியோகத்தர்களின் நட்டஈட்டு விவகாரம் தொடர்பாக தனக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்று கூறிய ஆளுநர் விண்ணப்பித்த அனைவருக்கும் இழப்பீடு கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்று உறுதி கூறினார்.

இவரது கூற்றின் பிரகாரம் இரண்டு மாதங்களின் பின்னர் இழப்பீட்டுக்கு விண்ணப்பித்தவர்களில் பலருக்கு புனர்வாழ்வு அமைச்சினால் சில படிவங்களை மீள அனுப்புமாறு கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன.

கடிதத்தில் கோரப்பட்ட விவரங்கள் பூர்த்தி செய்து மீண்டும் அமைச்சுக்கு அனுப்பி ஒரு வருடமாகியும் இழப்பீட்டுத் தொகை பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னமும் கிடைக்கவில்லை என்று அவர்கள் கவலை தெரிவித்தனர். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாபார நிலையங்களை புனரமைப்பதற்கு இந்திய அரசின் நிதியுதவி

வவுனியா, ஜூலை 22

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் போரினால் சிதைவடைந்த வியாபார நிலையங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு இந்தியாவின் நிதி உதவி கிடைக்கப்பெற்றுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் போரினால் சிதைவடைந்த வர்த்தக நிலையங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு வேண்டிய நிதி உதவிகளுக்காக 2010 ஆம் ஆண்டு இந்திய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. தற்போது கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் மீள் பரிந்துரை செய்யப் பட்டவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த உதவித் தொகைகள் விண்ணப்பதாரிகளின் வங்கிக் கணக்குகளில் இந்திய தூதரகத்தால் நேரடியாக வைப்புச் செய்யப்படவுள்ளன. இதற்கான புதிய விண்ணப்பங்கள் அரசாங்க அதிபரூடாகப் பிரதேச செயலர் மற்றும் கிராம சேவை அலுவலர் மூலம் உரிய விண்ணப்பதாரிகளுக்கு கிடைக்கத்தக்க வகையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிதி உதவி பெறுவதற்கென மீள் பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தமக்குரிய விண்ணப்பப் படிவங்களைத் தத்தமது கிராம சேவையாளர்களிடம் பெற்று முழுமையாகப் பூரணப்படுத்தி எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்பாக ஒப்படைக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தத் திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பாக எவ்வித கவனமும் செலுத்தப்பட மாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-400)

# முட்கொம்பன் தென்னங்காணியில் 120 ஏக்கர் இராணுவத்தினருக்கு

பூநகரி, ஜூலை 22

பூநகரி முட்கொம்பனில் உள்ள தென்னங்காணியில் 120 ஏக்கர் இராணுவத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரி முட்கொம்பனில் முன்னர் விடுதலைப் புலிகளால் பராமரிக்கப்பட்டு வந்த தென்னந்தோட்டமொன்று உள்ளது. தற்பொழுது இந்தத் தென்னந்தோட்டத்தை இராணுவத்தினரே பராமரித்து வருகின்றனர்.

இந்த நிலையில் சின்னப் பல்லவராயன்கட்டுக் கிராமத்தில் உள்ள 52 குடும்பங்கள் வயற்காணிகளிலேயே தமது வீடுகளை அமைத்து வசித்து வருகின்றன. இதனால் மழைக்காலத்தில் இவர்கள் பல்வேறு இடையூறுகளை எதிர்கொண்டு வருகின்றனர். தமக்கு மேட்டுக் காணியில் இடம் ஒதுக்கித் தருமாறு இவர்கள் பல ஆண்டுகளாகக் கோரிக்கை விட்டபோதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த 11 ஆம் திகதி சின்னப்பல்லவராயன்கட்டு பொதுநோக்கு மண்டபத்தில் (பூநகரிப் பிரதேச செயலகத்தில்) பிரதேச செயலர் வசந்தகுமார் தலைமையில் கூட்டமொன்று இடம்பெற்றது. இதில் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சுந்தரமூர்த்தி, கிராமசேவையாளர் ம.பரமேஸ்வரன், இராணுவ அதிகாரி றொசான், பூநகரி காணி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் முட்கொம்பனில் அமைந்துள்ள தென்னங்காணியில் 120 ஏக்கரை இராணுவத்துக்கும் சின்னப்பல்லவராயன் கட்டு கிராமத்தில் நிரந்தரமாகக் குடியிருப்பவர்களுக்குத் தலா ஒரு ஏக்கர் காணியும் வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் செக்காலை வீதியில் இராணுவத்தினர் தோட்டம் செய்து வந்த காணியையும் அவர்களுக்கு வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (க-407)

## புதுக்குடியிருப்புப் பகுதியில் நடமாடும் ஆயுள்வேத சேவை

சண்டிலிப்பாய், ஜூலை 22

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் நடமாடும் ஆயுள்வேத வைத்திய சேவையைப் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை நடத்தவுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில், சபையால் நடத்தப்பட்டு வந்த இரு ஆயுள்வேத வைத்தியசாலைகளில் தற்பொழுது ஒரு வைத்தியசாலை மட்டுமே இயங்கி வருகிறது. இதனால் இந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் ஆங்கில வைத்தியத்தை நாடுவதுடன் ஆயுள்வேத வைத்தியத்துக்காக தூர இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இதனால் நடமாடும் ஆயுள்வேத வைத்தியசேவையை நடத்துவதற்கு முன்வந்துள்ள பிரதேச சபைச் செயலர், இதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளார்.

கடந்த காலங்களில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழுள்ள ஒட்டுசுட்டான் உப அலுவலகத்திலும், ஒலுமடு உப அலுவலகத்திலும் ஆயுள்வேத வைத்தியசாலைகள் இயங்கி வந்தன.

தற்பொழுது ஒட்டுசுட்டான் உப அலுவலகத்தில் மட்டுமே ஆயுள்வேத வைத்தியசாலை இயங்கி வருகிறது. ஒலுமடு உப அலுவலகத்தில் இராணுவம் நிலை கொண்டுள்ளதால் அங்கு இயங்கிவந்த ஆயுள்வேத வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது.

இரு பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் இரு ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் தற்பொழுது ஒரு வைத்தியசாலை மட்டுமே இயங்குவதால் இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள்.

இதேவேளை இரு வைத்தியர்களுக்கு சேவை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட போதிலும் ஒரு வைத்தியரே சேவையாற்றி வருகின்றார்.

இந்த நிலையில் மக்களின் நலன் கருதி நடமாடும் ஆயுள்வேத வைத்திய சேவையை நடத்த முன்வந்துள்ள பிரதேச சபைச் செயலர் அதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளார். (க-115)

### மூடிய கால்வாயால் கழிவகற்றலில் பாதிப்பு

ஹொரவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள பள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள கால்வாய் மூடிய நிலையில் இருப்பதால் கழிவகற்றல் தொழிற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா நகர சபை நிர்வாகத்தினர் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

குறிப்பிட்ட கால்வாயில் ஏராளமான குப்பைகளும் கழிவுப் பொருள்களும் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இதனால் கால்வாயை மூடியுள்ள கொங்கிறீட்டை உடனடியாக அகற்றித் தருமாறு இந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அருகில் உணவகங்களும், பள்ளிவாசலும் இருப்பதனால் ஆயிரக்கணக்கான மக்கள்சுகாதாரப் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டிவருமெனத் தெரிந்து கொண்டதால் இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-402)

## அரச பஸ்களில் திடீர்ச் சோதனை

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்களில் அடிக்கடி ரிக்கற் பரிசோதகர்களின் பரிசோதனை அதிகரித்துக் காணப்படுகின்றது.

அண்மைக்காலமாக இ.போ.சவின் வருமானம் குறைந்து காணப்படுவதற்குப் பயணிகள் பற்றுச் சீட்டுக்கள் பெறாமல் பயணம் செய்வதே காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சேவையில் ஈடுபடும் இ.போ.ச பஸ்களைத் திடீரென மறிக்கும் பரிசோதகர்கள் சோதனையில் ஈடுபடுகின்றனர். மறைந்து நிற்கும் இவர்கள் பஸ் அருகில் வந்ததும் திருடர்களை மடக்கிப் பிடிப்பது போன்று கடுமையான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகிறது.

மேலும் தமது தரிப்பிடங்களில் இறங்க வேண்டிய பயணிகளை வாயிலில் மறித்து ரிக்கெற்றைப் பெற்றுக் கொண்ட பின்னர் இறங்க அனுமதிக்கின்றனர்.

சில நடத்துநர்கள் பயணிகளிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு பற்றுச்சீட்டு வழங்குவதில்லை எனவும் கூறப்படுகின்றது. இதனைத் தவிர்ப்பதற்காகவே இந்தத் திடீர்ப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

பரிசோதனையில் ஈடுபடும் பரிசோதகர்கள் நடத்துநர்களிடம் பற்றுச்சீட்டுப் புத்தகத்தை பறித்தெடுத்து பயணிகளிடம் துருவித் துருவி விசாரணை செய்வதையும் அவதானிக்க முடிகின்றது.

இப் பரிசோதனை நடவடிக்கைகளில் மன்னார், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இ.போ.ச டிப்போக்களின் பரிசோதகர்கள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-410)

### கட்டடிக் கிராமத்தில் மீனவர் ஓய்வு மண்டபம்

வலி.தென்மேற்கு, ஜூலை 22

கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள கட்டடிக்கிராமத்தில் மீள்குடியமர்ந்த மீனவர்களின் நலன் கருதி ஓய்வு மண்டபத்தை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ள ஜி.ஐ. இசற் நிறுவனம் அதற்கான சகல ஒழுங்குகளையும் துரிதமாக மேற்கொண்டுள்ளது

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளைப் பிரதேசத்தில் கட்டடிக் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த மீனவர்களுக்கு ஓய்வு மண்டபம் இல்லாததால் அவர்கள் தொழிலுக்குச் செல்லும் போதும் திரும்பிவரும் போதும் மழைகாலங்களில் மட்டுமல்ல வெயில் காலங்களிலும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர் .

இவர்களின் பரிதாப நிலை குறித்து ஜி.ஐ.இசற் நிறுவனத்துக்கு உரியவர்கள் மூலம் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து, சுமார் 15 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் ஓய்வு மண்டபத்தைக் கட்டிக் கொடுப்பதற்கு மேற்படி நிறுவனம் முன்வந்துள்ளது.

மழை காலத்திற்கு முன்பு கட்டட வேலைகள் பூர்த்தியடைய வேண்டியிருப்பதால் இந்த வேலைத் திட்டத்தை கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பொறுப்பேற்று வேலைகளை ஆரம்பித்துள்ளது. (க-115)

## சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வவுனியாவில் தட்டுப்பாடு

வவுனியாவில் சுகாதாரப் பரிசோதகர்கள் போதியளவு இல்லை என்று சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் மக்களுக்கு வவுனியாவில் நான்கு சுகாதாரப் பரிசோதகர்களே சேவையிலுள்ளனர். முன்னர் ஒன்பது பேர் சேவையில் இருந்தனர். இவர்களில் சிலர் இடமாற்றம் செய்யப்பட்டனர். சிலர் ஓய்வு பெற்றுள்ளனர். இன்னும் ஐந்து சுகாதாரப் பரிசோதகர்களின் பதவிகள் வெற்றிடம் 333மாகவுள்ளன.

பொதுவாக ஆயிரம் பொது மக்களுக்கு ஒரு சுகாதார பரிசோதகர் என்ற ரீதியில் சேவையாற்ற வேண்டும். மாறாக 4 சுகாதாரப் பரிசோதகர் மட்டுமே கடமையில் இருக்கின்றமை வவுனியாவின் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளுக்குத் தடையாக உள்ளது.

நொச்சி மோட்டையில் 38 ஆயிரம் பேருக்கு ஒரு சுகாதார பரிசோதகர் மட்டுமே சேவையாற்றி வருகின்றார்.

நெளுக்குளம், சிதம்பரபுரம், பூவரசம்குளம் ஆகிய மூன்று இடங்களிலும் ஒரு சுகாதார பரிசோதகரே சேவையிலுள்ளார். இந்த ஆளணிப் பற்றாக்குறையை அரசு உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும்தெரிவித்தன. (க-402)

# போரின் வடுக்களாலும் அடக்குமுறைகளாலும் மாணவருக்கு கல்வியில் தளர்வு ஏற்படக் கூடாது

### வவுனியா நகரசபை உப தலைவர் அறிவுரை

மாங்குளம், ஜூலை 22

போரால் கொடூரமான வடுக்களையும் அதன் பின்னர் அடக்குமுறைகளையும் நாம் சந்தித்த போதிலும் மாணவர்களின் கல்வியில் தளர்வு ஏற்பட்டுவிடக் கூடாது. மாறாக மேன்மேலும் அவர்கள் வீறுகொண்டு எழவேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வவுனியா நகரசபையின் உபதலைவரான எம்.எம்.ரதன்.

மாங்குளம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இவ்வாண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பல்கலைக்கழகம் செல்வதே தனது கல்விப் பயணத்தை ஆரம்பிக்கும் ஒரு மாணவனின் உயர் இலட்சியமாக அமையவேண்டும்.

பரீட்சைகள் யாவற்றிலும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையே போட்டிகள் நிறைந்ததும் முக்கியமானதுமான பரீட்சையாகும். இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுப் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும். எமது தாயகத்திலே போரால் அதிக பாதிப்புக்களைச் சந்தித்தது முல்லைத்தீவு மாவட்டமே.

இந்தப் பாடசாலை பல இடப்பெயர்வுகளைச் சந்தித்து [illegible] அடிப்படை வசதிகள் இல்லாது மீளக்குடியமர்ந்த இந்தப் பாடசாலை மாணவர்கள் பல்வேறு இடர்களுக்கு மத்தியிலும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவது வேதனைமிக்கதாக இருந்தாலும் அவர்களின் மன உறுதியும் கல்வியில் சோர்ந்து போகாத நிலையும் எம்மைப் பெருமிதம் கொள்ள வைக்கின்றது.

எத்தனை இடர்கள், சோதனைகள், வேதனைகள், துன்பங்கள், துயரங்கள் ஏற்பட்டாலும் எமது இனத்தின் கல்வி என்றுமே சோடைபோகாது. இதனை 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் எமது மாணவர்கள் நிரூபித்துள்ளனர்.

எனவே எமக்கு எத்தனை இடர்கள் வந்தாலும் கல்வியில் தளர்வு ஏற்படவே கூடாது என்று மேலும் தெரிவித்தார் அவர்.

உயர்தர மாணவர் ஒன்றியத் தலைவரின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்குத் துணுக்காய் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (க-402)

## சுகாதாரச் சீர்கேடுகள்

யாழ்ப்பாணம் - மன்னார் வீதியிலுள்ள நாச்சிக்குடாவில் இயங்கி வரும் தேநீர்க் கடையொன்று சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுவதாக மக்கள் குறை கூறுகின்றனர்.

இந்த வீதியில் பயணிக்கும் பஸ்கள் இந்தத் தேநீர்க் கடைக்கருகில் நிறுத்தப்படுவதால் மக்கள் இந்தக் கடையிலேயே உணவை அருந்த நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

எனவே இந்த தேநீர்க் கடையின் சுகாதார வசதிகள் தொடர்பாக அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனப் பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ரிப்ரொப்பாக' வந்தான் நாகரிக இளைஞன் பணத்தை வசூலித்துக்கொண்டு பறந்தான்

## ஏமாந்தனர் மாதகல் கிழக்கு கோணாவளை மக்கள் வடபகுதியில் இவ்வாறான சம்பவங்கள் தாராளம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வடக்கில் மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் இளைஞர் கூட்டம் இப்போது சர்வ சாதாரணம். பைல், கொப்பிகளுடன் மிகவும் நாகரிகமாக உடையணிந்து வரும் இளைஞர்கள் போரில் கணவன் மார்களை இழந்த பெண்களுக்கு நிதி சேகரிக்கும் தோரணையிலும் அநாதைப் பிள்ளைகளுக்கு உதவுதல், வலுவிழந்தோருக்கு நிதி சேகரிப்பு என்று பல்வேறு காரணங்களைக் கூறி வீடு வீடாகச் சென்று பணத்தை வசூலித்துக்கொண்டு மறைந்து விடுவர். அனேகமாக தனியாக அல்லது இருவர் வருவர். அவர்களின் பேச்சு பவ்வியமாக இருக்கும். இரக்கம் ஏற்படும் வகையில் வரும் இளைஞன் பேசுவான். அவர்கள் பேச்சில் மயங்கி பணத்தைக் கொடுத்து விடுவார்கள். இவ்வாறான சம்பவங்கள் இப்போது நாளாந்தம் நடந்து வருகின்றன.

கடந்த ஒரு சில தினங்களுக்கு முன் மாதகல் கிழக்கு கோணாவளை கிராமத்திலும் ''ரை'' அணிந்து வந்த ஒரு 'ரிப்டொப்' இளைஞன் வெகு சாமர்த்தியமாகப் பேசி பணத்தைச் சுருட்டிக்கொண்டு பறந்து சென்றுவிட்டான். மாதகல் கிழக்கு கோணாவளையில் நடந்த சம்பவம் இது தான்:-

கணவன்மார்களை இழந்த பெண்களுக்கு உதவிகளை வழங்குவதற்கென நிறுவனமொன்றின் சார்பில் வந்ததாக கூறித் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு வந்த இளைஞன் கடற்கரையோரமாக மீளக்குடியமர்ந்த மிகவும் ஏழ்மையான மக்களின் வீடுகளுக்குச் சென்றான். தன்னை நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி என்று அறிமுகம் செய்து கொண்டு தான் சார்ந்துள்ள நிறுவனம் கணவன் மார்களை இழந்த பெண்களுக்கும் மீள் குடியமர்ந்த மக்களுக்கும் பல்வேறு உதவிகளை வழங்கவுள்ளதாகக் கூறி அங்குள்ளவர்களின் விவரங்களையும் பதிவுசெய்து கொண்டான். பின்னர் உதவிகளுக்கான நிதியை வங்கியில் வைப்புச் செய்யும் பொருட்டு கணக்குப் புத்தகங்களையும் திறக்கவுள்ளதாக கூறியுள்ளான். அவனது பேச்சு - நடிப்பை நம்பி விட்டனர் அப்பாவி கிராம மக்கள்.

சிலர் அவனைப் பார்த்து ''வழக்கமாக நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் வாகனங்களிலேயே வருவார்கள் நீங்கள் வந்த வாகனம் எங்கே?'' என்று கேட்டுள்ளார்கள். அதற்கு அந்த இளைஞன் ''நீங்கள் இருக்கின்ற இந்த இடத்துக்கு எல்லாம் வாகனங்களை எடுத்துவர முடியாது. அதனால் வீதியில் நிறுத்திவிட்டு வந்திருக்கிறேன் என்று இடக்காகப் பதில் கூறியுள்ளார்.

அங்குள்ள மக்களும் மேற்கொண்டு கேள்வி கேட்காது உதவி கிடைத்தால் போதும் என்ற எண்ணத்தில் தமது வசதிக்கு ஏற்றவாறு கையில் இருந்த ஆயிரம், ஐந்நூறு என்று பணத்தை இளைஞனிடம் கொடுத்துள்ளனர்.

''விரைவில் வருவேன்'' என்று கூறிச்சென்றவரை இன்னமும் காணாது பணம் கொடுத்த மக்கள் ஏமாற்றத்துடன் காத்திருக்கின்றனர்.

இதேவேளை வாகனத்தை வீதியில் விட்டுவிட்டு வந்ததாகக் கூறிய அந்த இளைஞன் பஸ்ஸில் வந்து இறங்கியதை அங்குள்ள சிலர் கண்டனர் என்று கூறப்படுகின்றது.

(ஒ-க)




கீரிமலையில் மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்துக்கென வலி.வடக்குப் பிரதேச சபை நிதாகத் தண்ணீர் தாங்கி ஒன்றை அமைத்துள்ளது. இதன் அமைப்புப் பணிகள் முடிவடைவதால் விரைவில் இந்தத் தண்ணீர் தாங்கியிலிருந்து குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (த-17)

# நீண்டகாலம் திருத்தப்படாத மதகு



கொழும்புத்துறை, ஜூலை 22

கொழும்புத்துறை வீதியில் 5 ஆம் குறுக்குச் சந்தியை ஊடறுத்து கடலுக்குச் செல்லும் பிரதான வெள்ள வாய்க்காலின் மதகு நீண்டகாலமாக புனரமைக்கப்படாது சிதைவுற்ற நிலையில் காணப்படுகிறது.

போரின் போது தகர்க்கப்பட்ட இந்த மதகு கொழும்புத்துறை வீதிக்கு காப்பெற் இடப்பட்டு 2 ஆண்டுகளாகியும் திருத்தம் செய்யப்படாது ஆபத்து நிறைந்ததாக காணப்படுகிறது. மதகுப் பகுதிக்கு இதுவரை காப்பெற் இடப்படாது பெரும் குழிகள் காணப்படுகிறது.

கொழும்புத்துறை, வசந்தபுரம், மணியந் தோட்டம், உதயபுரம் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்ததையடுத்து இந்த வீதியால் தனியார் போக்குவரத்துச் சேவைகள், மற்றும் வாகனங்கள் அதிகமாக சென்று வருகின்றன.

இந்த மதகு திருத்தப்பட்டாலும் இரு மருங்கிலும் பாதுகாப்பு அணைகள் அமைக்கப்படாதும் உள்ளமை பயணிகளுக்கு விபத்து அச்சமூட்டுவதாக அமைந்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, மழை காலங்களில் நெடுங் குளத்திலிருந்து நிரம்பி வழிந்தோடும் நீர் இந்த மதகினூடாகவே கடலுக்குச் சென்றடைகிறது.

இடிபாடுகளால் கால்வாய் அடைபட்டுள்ள தால் நீர் வடிந்தோடுவதில் தடைகள் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் உரியவர் கள் கவனமெடுத்து விரைந்த இந்த மதகைப் புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-135)

## இலவச மருத்துவ முகாம்

உரும்பிராய் கிழக்கு செல்லப்பா சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் உடலியல் நோய் தொடர்பான பரிசோதனைகளும் மருந்து வழங்கலும் இன்று காலை 8 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை செல்லப்பா வாசிகசாலையில் நடைபெறவுள்ளது. உரும்பிராய் வாழ் புலம்பெயர் மக்களினதும் ஆதரவுடனும் நடைபெறுகின்ற இந்த பரிசோதனை முகாமில் யாழ்.போதனா வைத்திய சாலையின் பிரபல வைத்தியர்கள் கலந்துகொண்டு பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே இந்த மருத்துவ முகாமில் உரும்பிராய் வாழ் மக்கள் அனைவரையும் கலந்துகொண்டு பயன் பெறுமாறு சனசமூக நிலைய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (16)

# மனைவி, பிள்ளைகளை கத்தியுடன் துரத்தினார்

## கணவன் மீது பொலிஸில் முறைப்பாடு

வலி. வடக்கு, ஜூலை 22

கத்தியுடன் மது போதையில் வந்த தந்தையால் விரட்டப்பட்டு 15 வயது மகன் கத்தி வெட்டுக்கு ஆளாகிய சம்பவம் கொக்குவில் மேற்கில் இடம் பெற்றுள்ளது.

வியாழக்கிழமை நண்பகல் கொக்குவில் மேற்கு காளி கோயிலடியில் இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வந்துள்ளதாவது:-

மதுபோதையில் வந்த தந்தை மனைவியையும் பாடசாலையால் வந்த பிள்ளைகள் உட்பட நான்கு பிள்ளைகளையும் கத்தியை கையில் வைத்துக் கொண்டு விரட்டியுள்ளார்.

இந்தவேளையில் வேலைக்குச் சென்று விட்டு சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வந்த 15 வயது மகனை கத்தியால் வெட்ட முற்பட்டதாகவும் அதனைத் தடுக்க முற்பட்ட வேளையில் குறித்த மகன் கத்தி வெட்டுக்கு இலக்காகிக் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குடும்பத்தினர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டனர். காயப்பட்ட சிறுவன் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-86)

# குடிதண்ணீர் பிரச்சினை கோடரி வெட்டில் முடிந்தது

வலி. வடக்கு, ஜூலை 22

முகாமில் குடி தண்ணீர் பெறுவதில் எற்பட்ட இழுபறியால் ஒருவர் கோடரி வெட்டுக்கு ஆளாகிய நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமுக்கு அருகில் உள்ள தனியார் காணியில் வாழும் புனர்வாழ்வு பெற்றுத் திரும்பிய குடும்பத்தினருக்கும் முகாமில் வாழ்பவர்களுக்கும் இடையே நீண்ட நாள்களாக குழாய்க் கிணற்றில் தண்ணீர் பெறுவது தொடர்பாக பிரச்சினை இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில் வியாழக்கிழமை காலையில் முகாமில் உள்ளவர்கள் குடிதண்ணீர் பெறும் மோட்டார் பைப்பை உடைத்துள்ளனர். இதனைக் கேட்கச் சென்றவர்களை தாக்கியதுடன் கோடரியால் தாக்கி காயப்படுத்தியும் உள்ளனர்.

இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ம-86)

# இரத்தச் சோகையுள்ள மாணவருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை 22

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பாடசாலைகளில் இரத்தச் சோகை குறைபாடுடைய மாணவர்களுக்கு விசேட கருத்தரங்கமும், செயற்திட்டமும் நடத்தப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள் இரத்தச் சோகை நோயால் பாதிப்படைவதற்கான காரணம், அதனால் உண்டாகும் தாக்கங்கள், தடுக்கக் கூடிய வழிமுறைகள் தொடர்பாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்களுக்கு கருத்துரைகள் வழங்கப்பட்டன.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்துரைகளை வழங்கினர். (ம-36)

# மருத்துவர் ஜெயக்குமார் வீட்டின் மீதான தாக்குதலுக்கு இந்து மகா சபை கண்டனம்

## யாழ்.ஆஸ்பத்திரி முறைகேடுகள் குறித்து விசாரணைக்கும் வலியுறுத்து

வலி. வடக்கு, ஜூலை22

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரனின் வீட்டின் மீது இனம் தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலை இலங்கை இந்து மகா சபை வன்மையாக கண்டித்துள்ளது.

மருத்துவர் இ.சிவசங்கர் தலைமையில் புதன்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

மருத்துவர் என். ஜெயக்குமாரன் வீட்டில் தாக்குதல் நடத்தப்பட்டமை மிகவும் பாரதூரமானது. இந்தச் சம்பவத்துக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையில் அவர் தனது பணிகளைச் சுருக்கிக் கொண்டுள்ளார்.

இதன் காரணமாக வட மாகாணத்தைச் சேர்ந்த புற்றுநோயாளர்கள் பெரும் பாதிப்புககு ஆளாகி வருகின்றனர்.

இந்த நிலையில் மருத்துவர் ஜெயக்குமாரன் பெரும் எண்ணிக்கையான நோயாளர்களின் நன்மை கருதி தமது வழமையான பணிகளைச் செய்ய முன்வருமாறு இந்தச் சபை கோருகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையில் அண்மையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் பற்றித் திருப்தியான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

யாழ். போதனா வைத்தியசாலை வட மாகாணத்தின் முக்கிய வைத்தியசாலையாக அமைவதால் இந்த வைத்தியசாலை விரைவில் இயல்பு நிலைக்கு திரும்பி மக்களுக்கான பணியை நிறைவாக செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு சுகாதார அமைச்சை இச் சபை கேட்டுக்கொள்கின்றது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தின் பிரதிகள் சுகாதார அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

(ம-86)

# கோயில் உண்டியல் வெற்றுக் காணியில் மீட்பு

வலி.வடக்கு, ஜூலை 22

உடுவில் பகுதியில் உள்ள ஆலயத்திலிருந்து உண்டியலை திருடிச்சென்ற திருடர்கள் அதில் இருந்த பணத்தை எடுத்துவிட்டு நாற்பது ரூபாவுடன் உண்டியலை வெற்றுக் காணியில் கைவிட்டுச்சென்ற சம்பவம் உடுவில் நாகம்மாள் கோயிலடியில் இடம் பெற்றுள்ளது.

வியாழக்கிழமை இரவு இந்த உண்டியல் உடைக்கப்பட்ட நிலையில் அம்பலவாணர் வீதியில் உள்ள தனியார் காணியில் இருந்து பொது மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் சுன்னாகம் பொலிஸாரால் உண்டியல் மீட்கப்பட்டுள்ளது. இந்த உண்டியல் எந்த ஆலயத்தில் இருந்து திருடப்பட்டது என்ற விவரம் தெரியவரவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதியில் சகல வசதிகளுடனும் கூடிய சிறிய வீடு வாடகைக் குத் தேவை. (கச்சேரிக்கு அண்மையில் விரும் பத்தக்கது) தொடர்பு:0771247766 (20511) (2-6-7)

## பணிப்பெண் தேவை

வீட்டு வேலைகள் அனைத்தும் செய் வதற்கு 30 - 40 வயதுக்குட்பட்ட பணிப் பெண் தேவை. தங்குமிட வசதியுண்டு.

**தொடர்பு : 021 720 1103** (20600)(6-7-8)

## இணைய வடிவமைப்பாளர் தேவை (Web Desiner S.E.O)

இணைய வடிவமைப்பு சம்பந்தமான சகல விடயங்களும் (Google S.E.O) தெரிந்தவர்கள் தேவை. முழுநேரமும் வேலை செய்யலாம். ஆங்கில அறிவு முக்கியம்.

**தொடர்பு:- www.tlimo.CA** (20584) (2-6-7)

## மணமகன் தேவை

1973 இல் பிறந்த ஆசிரியராக கடமை புரியும் மணமகளுக்குப் பெற்றோர் பொருத்தமான வரன் தேடுகின்றார்கள்.

தொடர்புகளுக்கு:- 0777279686 (20634) (2-6-7)

## கொள்வனவு செய்யப்படும்

பாவித்த புதிய சொட்டு நீர்ப்பாசன உபகரணங்கள், நீர் இறைக்கும் இயந் திரங்கள் மற்றும் 1½ அங்குல அல் கதீன் பைப் முதலியனவை கொள்வனவு செய்யப்படும்.

தொடர்புகளுக்கு:- 0774430364 (16921) (2-6-7)

## காணி விற்பனைக்கு

கந்தரோடை, பினாக்கை வீதியில் உப்புக்குளத்துக்கு அருகில் 30 பரப்பு வயல்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0773178313, 0776282614 (20630) (2-6-7)

## நீண்டகால வாடகைக்கு

யாழ்.நகருக்கு 300 யாரில் ஆனைப்பந்தி, நாவலர் வீதியில் 5 அறைகள், 3 பெரிய HALLS கொண்ட விசாலமான வீடு, வளவு 1 லொறி, 5 கார்கள் நிறுத்தும் வசதி கொண்டது.NGO's, கம்பனிகள், நிறுவனங் கள், H.OFFICE STAFF QUARTERS, GUEST HOUSE ஆகப் பாவிக்கக் கூடிய நீண்ட வருட வாட கைக்குக் கொடுக்கப்படும். (20503) (2-6-7)

தொடர்பு:- 0772519056

## உடன் விற்பனைக்கு

கார் Nissan N - 16 1.5cc, 2001, Full options low mallage, JS.....

**தொடர்பு:- 0773545211** (20610) (2-6-7)

## காணி விற்பனைக்கு

பொக்கணை வீதி, ஊரெழு மேற்கு பலாலி, வீதியிலிருந்து 100 மீற்றர் தூரத்திலுள்ள "ஒழுங்கைப்புலமும் விரியனையும்" நில.பர 05 குளி 6.35 என்ற காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 0776010884 (20561) (2-6-7)

## வீடு வாடகைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில், சகல வசதிகளும் கூடிய வீடு வாடகைக்கு வழங்கப்படும். NGO, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொ.பே.021 222 2099 (20538) (2-6-7)

## வீடு, வளவு விற்பனைக்கு

வடமராட்சி கட்டை கோவிக்கோவிற்பற்று வல்லிபுரக்குறிச்சி இறையில் "முத்தானவயல்" நெற்பரப்பு 3 குளி 1 ½ விஸ்தீரணமுடைய வீடு, வளவு கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 0777670464 (20515) (2-6-7)

## மணமகள் தேவை (UK Citizan)

இந்து கௌரவ குடும்பம்
1978 கார்த்திகை,
1980 அஸ்வினி
1981 சுவாதி
1982 அத்தம்
ஆகியோர் மணமகளை எதிர்பார்க்கிறார்கள்.
T.P.00447831040046 (20566) (2-6-7)

## இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனை யாகின்றது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.470 மட்டுமே தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம் (18767)

## கடைகள் வாடகைக்கு

ஞானம் ஹொட்டலுக்கு அருகில் மணிக்கூட்டு வீதியில் கடைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 0718052281 (20528) (2-6-7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1981 B.Sc Engineer (Q.S) அனுஷம், செவ்வாய் குற்றமற்ற லக்கின பாவம் 17, அபுதாபியில் வேலை பார்க்கும் மணமகனுக்குப் படித்த அழகிய மணப்பெண் தேவை. Doctor, Engineer, Graduate விரும்பத்தக்கது. தொடர்பு: 021 222 5175 (20533) (2-6-7)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 10½ அடி Freezer Lorry விற்ப னைக்கு உண்டு.

(20562)(5-6-7) **தொடர்பு: 077 287 6422**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்-ஐயனார் கோயில் வீதியில் (Dr.கெங்காதரன் வைத்தியசாலையிலி ருந்து 100யார் தொலைவில்) இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 077 744 8691, 021 321 6389** (20639)(5-6-7)

## வீடு வாடகைக்கு

பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் 10 அறைகளுடன் கூடிய 2 மாடி வீடு வாடகைக்கு உண்டு. அரச நிறுவனங்கள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 021 2219 470, 077 7280 149, 077 7199 240 (20337) (45.6.9)

## வாடகைக்கு

அரியாலையில் கச்சேரியில் இருந்து 1½ km தூரத்தில் மூன்று அறைகளைக் கொண்ட வீடு நிறுவனங்களுக்கும் அரச திணைக்களங்களுக்கும் அல்லது அரச திணைக்கள உத்தியோகத்தர்க ளுக்கும் வாடகைக்கு விடப்படும். (புதிதாகப் புனரமைக்கப்பட்டது)

தொடர்புகளுக்கு:- 0757645643 (20581) (2-6-7)

## வீடு வாடகைக்கு உண்டு

கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (NGO, Company விரும்பத்தக்கது)

தொடர்பு:- (சி/1604) (2-6-7)
0777795243, 0771553136

## கார் வாடகைக்கு



**0770457879, 0777917087** (20637) (2-6-7)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பத்தில் 1974 ஆம் ஆண்டில் பிறந்த, 8 இல் செவ்வாய் கிரகபாவம் 63/¼ , ஆயிலிய நட்சத்திரம் உள்ள அரசசேவையில் பணிபுரியும் பட்டதாரி (BBA, MA) சகோதரிக்கு சகோதரன் தகுந்த மணமகனை தேடுகின்றார்.

(20609) (45.6.7) தொடர்பு: 077 1744 581, + 41 7891 71874

## ஐந்தாம் ஆண்டு நினைவு நாள்



அமரர்
# சரவணமுத்து சதாசிவம்

எங்கள் வாழ்வுக்கு நல்வழி காட்டிய கலங்கரை விளக்கு

தோற்றம்
06 ★ 12 ★ 1922

மறைவு
14 ★ 08 ★ 2007

பார் போற்ற வாழ்ந்திட்ட செம்மல்
பார்ப்பவர் மனதைக்கவரும் அண்ணல்
பண்பினிலே குன்றின் மேல் ஏற்றிய தீபம்
பாசம் பொழிவதில் என்றும் ஒளிரும் தீபம்

அறிவிலே ஞான விளக்கு
ஆற்றலிலே என்றும் அகல் விளக்கு
ஆளுமையில் ஏற்றம் பெற்ற ஒளி விளக்கு
எங்கள் வாழ்வுக்கு நல்வழிகாட்டிய கலங்கரை விளக்கு

சதாசிவம் என்னும் பெயருடையோன் எம் தந்தை
சதா காலமும் சிவன்பாதம் சேர்ந்திட்ட ஐந்தாம் நினைவு நாள் இன்றாகும்.

இல. 305, A.V. றோட்,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
(20547) (45.6.7)

## மீண்டும் குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவையினை யாழில் Rainbow Travels ஆரம்பித்துள்ளது



கடந்த 5 வருடங்களாக யாழில் உன்னதமான சேவையை வழங்கிவந்த Rainbow Travels மீண்டும் குறைந்த பட்ச கட்டணத்தில் சகல நாடுகளுக்குமான ஆகாய கடல்மார்க்கமான துரித பொதிகள் சேவையை வழங்கி வருகின்றது.

குறைந்த பட்ச கட்டணமாக
லண்டனுக்கு 1 kg 1500/= மேலதிக ஒவ்வொரு கிலோவுக்கும் 1000/= மட்டும்
கனடாவுக்கு 1 kg 2600/= மேலதிக ஒவ்வொரு கிலோவுக்கும் 1400/= மட்டும்

முக்கிய குறிப்பு:
5 நாள்களுக்குள் கிடைக்கப் பெறும்.
லண்டன் 1 kg 500/=
கனடா 1 kg 600/=
} இவை பத்து நாள்களில் கிடைக்கப்பெறும்.

மேலதிக விபரங்களுக்கு:-
**Rainbow Travels,**
No.30/2, Third Lane,
Power house Road, Jaffna. (20643) (2-6-7)

## வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள NISSAN குறூகெப் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0774242327, 0718565479 (20660)(6-7-8)

## பணியாளர் தேவை

யாழ்.பளையில் இயங்கும் தனியார் அலுவலகம் ஒன்றுக்கு பக்ஸ், இன்ரநெற், கையாளக்கூடிய பெண் ஒருவர் தேவை. அனுபவம் இல்லாவிடின் பயிற்சி வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 0779684284 (16922) (2-6-7)

## உடனடி வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்துக்கு பார ஊர்தி/சிற்றூர்தி என்பவற்றுக்கான சாரதி பணிநிலை வெற்றிடமாக உள்ளது. கீழ் குறிப்பிடப்படும் தகைமைகள் உள்ளவர்கள் 2012.07.23 ஆம் திகதி காலை 9.00 -12.00 மணிவரையும் கீழ்குறிப்பிடப்படும் முகவரிக்கு நேரில் வரவும்

- கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம்
- வயது 30-50
- சிங்களம் பேச தெரிந்திருக்க வேண்டும்
- வவுனியா, கொழும்பு பிரதான வீதிகளில் வாகனம் செலுத்திய அனுபவத்துடன் 3 வருட சாரதி அனுபவம் இருத்தல் வேண்டும்.
- மாதாந்த சம்பளத்துடன் றிப் அலவன்ஸ் வழங்கப்படும்.

முகாமையாளர்
லக்ஷ்மி என்ஜினியறிங்
இல. 105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
T.P:0215670256



(சி/1589) (6.7.10)

## சுன்னாகத்தில்...

### வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

K.K.S. Road, Chunnakam,
Specialists Consultation Centre

| | |
|---|---|
| பொது மருத்துவம் | : General Medicine |
| சத்திர சிகிச்சை ஆலோசனை | : General Surgery |
| குழந்தை வைத்திய ஆலோசனை | : Paediatrics |

**பதிவுகளுக்கு அழையுங்கள்: 0777466790** (20669)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணப்ப நாள் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22

மத்திய சுகாதார அமைச்சின் தொழிற்பயிற்சிக்கான விண்ணப்ப நாள் நீடிக்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டுக்கான மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் மற்றும் துணை மருத்துவ சேவையில் பயிற்சிக்காகப் பயிலுநர்களை இணைத்துக் கொள்வதற்காக மத்திய சுகாதார அமைச்சின் தொழிற் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

தற்போது அதற்கான விண்ணப்ப நாள் 27.07.2012 ஆக நீடிக்கப்பட்டுள்ளது என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(3)

# சைவ சித்தாந்தக் கொள்கைகளே எங்களை வாழ வைக்கின்றன

## சென்னைப் பேராசிரியர் இரத்தினசபாபதி



சைவசித்தாந்தம் என்பது ஒரு தத்துவக் கொள்கை. அதில் காணப்படும் கூறுகளைத் தெளிவாக உணர்ந்து கொண்டால் அவைதான் எம்மை வாழ்விப்பன என்பதைப் புரிந்துகொள்ள முடியும். சென்னைப் பேராசிரியர் முனைவர் வை.இரத்தின சபாபதி இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் சைவ மாநாட்டு முதல்நாள் நிகழ்வு வெள்ளிக்கிழமை நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது. இன்று ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று நாள்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டின் முதல் நாள் ஆரம்ப உரையை நிகழ்த்திய பேராசிரியர் வை.இரத்தினசபாபதி மேலும் தெரிவித்ததாவது:-

தமிழகத்து வாழ்வியல் சிந்தனையில் வளமான வாக்கியமாக ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற முது மொழி பேசப்படுகிறது. சைவ சித்தாந்தத்தின் அடிப்படை உயிரோட்டமாகவும் இது விளங்குகின்றது. இந்த உண்மையைப் பெரும்பாலானவர்கள் விளங்கிக் கொள்ளாததுதான் மிகப் பெரிய கொடுமை. சைவ சித்தாந்தத்தை தத்துவ நூலாகவும் தருக்க நூலாகவும் போற்றி முடிவுகளை விளங்கிக் கொள்ளுதலும் வாழ்க்கை நெறியாக அமைத்துக் கொள்ளுதலும் அனைவரதும் கடமையாகும்.

நெறி, துறை என்று இரு வகையாகப் பிரிந்து நின்று மக்கள் வாழ்க்கையைத் தெளிவுபடுத்தும் ஒருவகை வாழ்வியல் கொள்கையே சைவசித்தாந்தம் எனப் பேராசிரியர் இரத்தினசபாபதி குறிப்பிட்டார்.

நிகழ்வில் சைவபரிபாலன சபைத் தலைவர் த.சண்முகலிங்கம், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் சைவப்புலவர் மு.திருஞான சம்பந்தம்பிள்ளை உட்படப் பலரும் உரையாற்றினர். (ம-7)

# சமய சந்நிதிகளில்

சங்கானை, ஜூலை 22

சித்தன்கேணி நாக கன்னியம்மாள் ஆலய ஆடிப் பூரத் திருவிழா நாளை திங்கட் கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 10.30 மணிக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அம்பாள் உள்வீதி வலம் வரவுள்ளார். (3-29)

***

யாழ்ப்பாணம், ஜூலை 22

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகி ஆலய, கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய ஆடிப்பூர மஹா சங்காபிஷேகம் நாளை திங்கட் கிழமை நடைபெறவுள்ளது. (3)

***

யாழ்.வண் வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய சதுர்த்தி திருவிழா இன்று மாலை 4.15 மணிக்கு நடைபெறவுள்ளது. மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் வீதி வலம் வரவுள்ளார். (3)

***

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய ஆடிப்பூரத் திருவிழா நாளை திங்கட் கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிமுதல் அம்பாளுக்கு திருமஞ்சன நீராட்டலும் 9 மணிமுதல் ருது சாந்தி விழா நடைபெற்று அம் பாள் வீதிவலம் வரவுள்ளார். (3)

***

யாழ்ப்பாணம், ஜூலை 22

சங்கானை செங் கற்படை மகாதேவப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து எட்டு நாள்கள் நடைபெறவுள்ள திரு விழாவின்போது பகல் உற் சவங்கள் காலை 9 மணிக்கும், மாலை உற்சவங்கள் 6.30 மணிக்கும் நடைபெறவுள்ளன. (3)

***

ஆவரங்கால் மணற்பகுதி ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளன. 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திரு விழாவும் ஓகஸ்ட் முதலாம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் பூங்காவனத் திருவிழாவும் நடைபெற வுள்ளது. (ம-11)

***

அச்சுவேலி, ஜூலை 22

அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகர் ஆலய வருடாந்த திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் 31ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழாவும் ஓகஸ்ட் முதலாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ம-11)

***

காரைநகர், ஜூலை 22

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று ஞாயிற் றுக்கிழமை தேவிவாசல் தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

இவ்வாலய தேவி பெருந் திருவிழா கடந்த சனிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-250)

# மீள் பரீட்சார்த்திகள் பதிவு செய்யவும்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து இந்த வருடம் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்கு இரண்டாவது தடவையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை தமது விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றும் மாணவர்களை யாழ். பொன்னம்பலம் வித்தியாலயத்தில் குறித்த தினத்தில் பதிவுசெய்யு மாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-8)

# கலைஞர் விவரம் சேகரிப்பு

அச்சுவேலி, ஜூலை 22

அச்சுவேலி கலை பண்பாட்டு மன்றம் பிரதேச கலைஞர்கள் மற்றும் துறைசார் விற்பன்னர்களை கௌரவிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களின் விவரங்களைத் திரட்டி வருகின்றது.

பிரதேச கலைஞர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள் தமது சுயவிவரம் மற்றும் படைப்புக்கள் ஆக்கங்களைத் தெரிவித்து விண்ணப்பிக்கலாம் என்று பண்பாட்டு விழா ஏற்பாட்டுக்குழு கூறியுள்ளது.

(ம-11)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

## நாளை

ஆடி 8 திங்கட்கிழமை 23.07.2012
திதி: சதுர்த்தசி மு.ப.08.17 வரை
நட்சத்திரம்: பூரம் பி.ப. 12.24 வரை
சுபநேரம்: 12.02- 01.32 வரை
ராகு காலம்: 07.32- 9.02 வரை



**மேடம்:** முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள்.
தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.



**இடபம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள்.
சொந்தங்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார்.



**மிதுனம்:** சோம்பல் நீங்கி துடிப்புடன் செயற்படத் தொடங்குவீர்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வெளி வட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். திட்டம் நிறைவேறும் நாள்.



**கடகம்:** பல வேலைகளைச் செய்ய வேண்டி வரும். யாருக்கும் பணம், நகை வாங்கித் தருவதில் ஈடுபடாதீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமைதேவைப்படும் நாள்.



**சிங்கம்:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர், நண்பர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.
பழைய பிரச்சினைக்கு சுமூகதீர்வு காண்பது நல்லது. வியாபாரத்தில் வேலையாள்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.



**கன்னி:** எதிலும் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், உறவினர் களால் ஆதாயமும் உண்டு.
அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள் வீர்கள். புகழ், கௌரவம் அதிகரிக்கும்.



**துலாம்:** நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். வியாபாரத்தில் வேலையாள்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.



**விருச்சிகம்:** கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். ஆடை, ஆபரணம் சேரும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும்.
வியா பாரத்தில் புதிய ஒப்பந்தம் கைெயழுத்தாகும். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.



**தனுசு:** எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். கணுக்கால் வலிக்கும். சில விடயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.



**மகரம்:** பிள்ளைகள் உங்கள் பேச்சுக்கு மதிப்பளிப்பார்கள். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் புதிய தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.



**கும்பம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். பிரபலங்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார்.



**மீனம்:** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். பிரார்த்தனைகளை குடும்பத்தினருடன் நிறைவேற்றுவீர்கள்.
நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | | 4 | | 1 | |
| 7 | | | 9 | | | | | 4 |
| | 8 | | | 3 | 2 | | 9 | |
| 5 | 3 | | 4 | 8 | | 9 | | |
| 6 | 7 | | | 1 | | | 4 | 5 |
| | | 8 | | 5 | 9 | | 3 | 1 |
| | 2 | | 8 | 4 | | | 6 | |
| 1 | | | | | 5 | | | 9 |
| | 5 | | 6 | | 7 | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 9 | 4 | 5 | 6 | 3 | 8 | 7 |
| 7 | 8 | 5 | 2 | 3 | 9 | 4 | 1 | 6 |
| 3 | 6 | 4 | 8 | 1 | 7 | 5 | 2 | 9 |
| 2 | 9 | 7 | 5 | 8 | 4 | 1 | 6 | 3 |
| 8 | 4 | 3 | 6 | 2 | 1 | 7 | 9 | 5 |
| 6 | 5 | 1 | 9 | 7 | 3 | 8 | 4 | 2 |
| 5 | 1 | 8 | 3 | 6 | 2 | 9 | 7 | 4 |
| 9 | 7 | 2 | 1 | 4 | 5 | 6 | 3 | 8 |
| 4 | 3 | 6 | 7 | 9 | 8 | 2 | 5 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1−9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1−9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1−9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## German Language Academy

ஜேர்மன் மொழியை இலகுவழியில் கற்போம்

கடந்த பரீட்சையில் அனேக மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.

ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன. goethe institute னால் நடைபெறும் பரீட்சைக்கு ஏற்றவாறு ஓடியோ வீடியோ மூலமாக நவீன முறையில் ஜேர்மன் மொழி கற்பிக்கப்படும்.

பலாலி வீதி,
இல.07, யாழ்ப்பாணம். (20502) (6.7,10)

தொடர்பு: 0779707322

## 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறந்த திகதி : 05.01.1968
ஐங்கரன்தாள் : 10.08.1994
திதி : 22.07.2012

**தம்பிஐயா ரவிச்சந்திரன் (ராசன்)**

அற்புத விளக்கே,
ஆனந்த ஜோதியே
பதினெட்டாண்டென்ன
உயிர் போகும் வரை
மறப்போமா உமதன்பை

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நவேந்திரகிரி, இணுவில். குடும்பத்தினர், (20596) (6.7,10)

## பணியாளர் தேவை

நெல்லியடியில் இயங்கும் Rajanees beauty parlour இற்கு அழகுக் கலைத் துறையில் அனுபவம் உள்ள பெண்கள் உடனடியாகத்தேவை. அத்துடன் Rajanee's Studio வுக்கு Photo shop Designing துறையில் அனுபவம் உள்ள / அற்றவர்கள் உடனடியாகத் தேவை.

தொடர்பு:- 0777388275 (18694) (2-6-7)

## Metro Travels & Tours (PVT) LTD

விசேட விமானக் கட்டணங்கள்



| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | 18300 |
| Colombo-Tiruchirapally-Colombo | 19200 |
| Colombo-Doha | 24000 |
| Colombo-London | 51000 |
| Colombo-Toronto | 84500 |
| Colombo-Singapore-Colombo | 31500 |
| Colombo-kualalumpur -Colombo | 34500 |
| Colombo-Frankfurt | 62500 |
| Colombo-Milan | 60000 |
| Colombo-Rome | 60000 |
| Colombo-Paris | 62500 |
| Colombo-Zurich | 60000 |

**All Taxes included, credit card Accepted with a surcharge & Travel insurance,**
**Above Fares Are Subject to seat Availability**
**Terms & Conditions Apply**

மேலதிக தொடர்புகளுக்கு

(Branch office) No-272/1, Stanley Road, Jaffna.
Tel:-021 222 4647,021 221 9424
Week days 8.30 am to 5.00 pm
Saturday 9.00 am to 1.30 pm
**New Branch office: No-34, New Bus Stand Complex, Vavuniya.** Tel:024 222 6800 / 024 222 6801. (C\1605 (2,6,7)

## வீடு, காணி விற்பனைக்கு



யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் (60A) சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கும் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும், திருச்சிலுவை (Holy Cross) வைத்தியசாலைக்குமிடையில் UNHCR அலுவலகம் பாவனையிலும் தற்போது சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலைய அலுவலகம் இயங்குகின்ற வீடு, கிணறு, குழாய்க்கிணறு மற்றும் பயன்தரு மரங்களுடன் விற்பனைக்குண்டு. வீட்டுக்காணியின் பரப்பளவு 4 பரப்பு ஆகும்.

தொடர்புகளுக்கு: 0772844970, 0773273125 (18692) (2-6-7)

## வாழ்க்கையில் வெற்றி பெற நல்லதொரு தொழில்

சம்பளம் (22,000/=, 30,000/= 45,000/= வரை) நாடளாவிய ரீதியில் பிரதான தொழிற்சாலைகளில் கோடியல், பிஸ்கட், சொக்லேட், ஜாம், சோயா மீற், பால்மா, டயர், கிளவுஸ், வர்ணப்பூச்சு, சவர்க்காரம், சிற், டயில்ஸ், இவ்வாறான 100 இற்கும் மேற்பட்ட உற்பத்திகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர்.

(தரம் - 6 முதல் A/L) 17 வயது முதல் 55 வயதுவரை) உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.

காப்புறுதி + ETF+, வருடாந்த மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும். நண்பர்கள், கணவன், மனைவி இருவரும் ஒரே இடத்தில் வேலை செய்யும் வாய்ப்பும், குழுக்களாகவும் இணைந்துக்கொள்ளப் படவுள்ளார்கள். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள்.

இலங்கை முழுவதும் தொழில் வாய்ப்புகளுக்காக அனைவரும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்

தொடர்புகளுக்கு: 071 3460 295

(16924) (45.6.9)

## நிரந்தர வேலை வாய்ப்பு

துறைமுகம் (தனியார்), தச்சர், வெல்டர், சாரதி, விமானநிலையம் (தனியார்) கிளினிங், கேட்டரிங், பாதுகாப்புப் பிரிவுகளுக்கும் ஆண்கள் மாத்திரம் (18-55) JCB For clift, Exovetar ரோலர் வில் லேடர் ஒப்பரேட்டர் தேவை. உணவு, தங்குமிட வசதி உண்டு. சம்பளம் (25,000/= 55,000/=) மேசன் helpers, வெல்டஸ், பெயின்ரஸ், தச்சர், லேபர்ஸ் என்பவற்றுக்கு நீண்டகால வேலை வாய்ப்புக்கு தேவை. அநுராதபுரம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களுக்கு புனர்நிர்மாண வேலைகளுக்கு குழுக்களாக தொழிலாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள். இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை சம்பளம். ஒவ்வொரு நாளும் செலவுக்கு பணம் எடுக்கலாம். உணவு, தங்குமிட வசதி உண்டு. இலங்கை முழுவதும் தொழில் வாய்ப்புகளுக்கு அனைவரும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

தொடர்புகளுக்கு: 071 3460 295

(16907) (45.6.9)

## காணி விற்பனை

கொக்குவில் பொற்பதி வீதி, உடையார் லேனில் (100m) தொலைவில் உள்ள காணி பரப்பு 5 விற்பனைக்கு உண்டு. பகுதிகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு : 077 3161822, 077 0463841

(20571)(6-7-8)

## பணிப்பெண் தேவை

கொழும்பில் வசிக்கும் உயர்பதவி வகிக்கும் இளம் தம்பதியரின் 3 வயது பிள்ளையைப் பராமரிக்க ஒரு தகைமை உள்ள பெண்தேவை. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி:
0212219332,
0771532496.

Dr. இ.தெய்வேந்திரன்
புதிய யாழ் வைத்தியசாலை,
335, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி,
திருநெல்வேலி.

(20644) (6.7.10)

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 ★ 10 ★ 1939



மறைவு 01 ★ 08 ★ 2003

அமரர்

**சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை**

[ பங்குதாரர் நியூ சோபிதா நகைமாடம் ]

திதி : 22.07.2012

இன்னல் பல கடந்து எம்மை உயர்த்தி சென்ற தந்தையே
ஆண்டொன்பது ஆகியும் எம் அருகே இருப்பது போல் எம்முணர்வு
அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய என்றென்றும்
பிரார்த்திக்கின்றோம்.

திருவேரகம்,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்
நியூ சோபிதா நகைமாடம்,
184, (74/1), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(20251)(6-7-8)

## UNIVERSITY OF JAFFNA
## BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed bids from the qualified contractors for the following work.

| Work / Service Details | Security deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Approximate direct cost of the work (Rs. in Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Rehabilitation and refurbishment of a Seminar Hall, Language and E-Learning Laboratories for Staff Development Centre | 30,000.00 | 750.00 | 3.3 | C8 (Buildings) |

Bid forms may be obtained from the ***Deputy Registrar / Capital Works & Planning Unit University of Jaffna*** upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Counter, University of Jaffna till ***03.08.2012***.

Perfected bid should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna or could be deposited in the bid box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till ***2.30 p.m on 09.08.2012*** and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

P.O Box 57,
Thirunelvely,
Jaffna.
20.07.2012

Registrar
University of Jaffna

(C/1602)(2-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் மாசடைவதைத் தடுக்க இயற்கைக் காற்று வடிகட்டிகள்

## எக்ஸ்போலங்கா வழங்கியது

உலக சூழல் தினத்தையொட்டி எக்ஸ்போலங்கா பிரைட் சுற்றாடல் மாசடைதல் உயர்ந்தமட்டத்தில் காணப்படும் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் அதிகமான இலங்கையருக்கு அண்மையில் 'இயற்கையான காற்று வடிகட்டிகளை' (Natural Air filters) விநியோகித்தது.

அன்றைய தினம், தலைநகரின் பல பாகங்களிலும் ஐந்து எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தமது வாக னங்களுக்கு எரிபொருள் நிரப்பிக் கொள்வதற்காக வரிசையில் காத்துநின்ற வாகன உரிமையாளர்களுக்கு பலா, மா, ஜம்பு, அம்பரல்லா, எலுமிச்சை, கொஹம்ப, சீனி நெல்லி போன்ற மரக்கன்றுகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டதுடன், அவற்றை தமது வீடுகளிலுள்ள தோட்டங்களில் பயிரிடுமாறும் அவர்களிடம் கேட்டுக் கொள்ளப் பட்டது.




ஒரு காற்று வடிகட்டி கருவிக்கு, மரம் ஒன்றினை ஒப்பிட்டு நோக்குவதே இந்த முன்னெடுப்பின் புதுமையான விடயமாகக் காணப்பட்டது.

ஒரு காற்று வடிகட்டி கருவிக்கு, மரம் ஒன்றினை ஒப்பிட்டு நோக்குவதே இந்த முன்னெடுப்பின் புதுமையான விடயமாகக் காணப்பட்டது. வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள காற்று வடிகட்டி கருவிகள் வாயு மாசடைதலைச் சீராக்குவதைப் போன்றே, நாம் வாழும் சுற்றுப்புறச் சூழலைத் தூய்மையாக மாற்றுவதற்கு ஒவ்வொரு மரமும் உதவி புரிகின்றது.

உண்மையில் மரங்கள் பசுமையானவையாகவும் நீண்ட ஆயுட் காலத்தைக் கொண்டவையாகவும் காணப்படுகின்றன. புவி வெப்பமடைதலுக்கு முக்கிய காரணிகளுள் ஒன்றாக காபன் வெளியேற்றம் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மறுபுறத்தில் வெள்ளம் மற்றும் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கும் இது வழிகோலுகின்றது. இப்பூமியில் விட்டுச் செல்கின்ற காபன் படிவுகள் ஆபத்துகளை ஏற்படுத்துகின்றன.

இந்தத் தாக்கத்தைக் குறைக்கும் முயற்சிக்கு இலங்கையர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட ரீதியிலும் குழுவாகவும் எவ்வாறு தமது பங்களிப்பினை வழங்க முடியும் என்ற தகவலை நாம் மக்களிடம் கொண்டு செல்வதே இத்திட்டத்தின் தொடக்கம் என்று சமூக பொறுப்புத் திட்டத்திற்கான தலைமை அதிகாரி வீரசேகர கூறினார். (த)

## த பினான்ஸின் 3 கிளைகள் உதயம்



தனது சேவையை மிக வேகமாக விஸ்தரித்துவரும் தபினான்ஸ் நிறுவனம் மேலும் மூன்று அடகு நிலையங்களைத் திறந்துள்ளது.

ஜூன் மாதம் 14 ஆம் திகதி, இல 140, பிரதான வீதி, அம்பாறை எனும் முகவரியில் அம்பாறைக்கான அடகு நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

ஜூன் மாதம் 18 ஆம் திகதி கிளை, இல 501, பதுளை வீதி, பண்டாரவளை எனும் முகவரியில் இரண்டாவது கிளையைத் திறந்துள்ளது.

ஜூன் மாதம் 22 ஆம் திகதி மூன்றாவது கிளையை இல 195/1, கொழும்பு வீதி, நித்தம்புவ எனும் முகவரியில் திறந்து வைத்தது. இம் மூன்று அடகு நிலையங்களோடு, நாடளாவிய ரீதியில் த பினான்ஸின் அடகு நிலையங்களின் எண்ணிக்கை 39 ஆக அதிகரித்துள்ளது.

எதிர்வரும் மாதங்களில் த பினான்ஸின் அடகுச் சேவை மேலும் விஸ்தரிக்கப்படும் என நிறுவனம் தெரிவித்துள்ளது.

## போலி நாணயத் தாள்களை கண்டுபிடிக்க புதிய இணையம்

இந்தியாவில் அதிகரித்து வரும் போலி நாணயத் தாள்களை ஒழித்துக் கட்டவும், இது குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தவும்,இந்திய றிசெர்வ் வங்கி புதிய இணையத்தளத்தை தொடங்கியுள்ளது.

புதிய இணையத்தளத்தினூடாக. கடந்த 2010-2011-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் புழக்கத்தில் இருந்த 6.74 மில்லியன் போலி நாணயத் தாள்கள் பறிமுதல் செய்யப்பட்ட விவரம் உள்ளிட்டவை இந்த இணையத் தளத்தில் உள்ளன.

ரூ. 10, 50, 100, 500, 1000 ஆகிய நாணயத் தாள்களின் வரிசைப்படி போலி நாணயங்களுக்கும், ஒரிஜினல்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தினை இந்த இணையத்தில் கண்டுபிடிக்க முடியும். (த)

## 20 லட்சம் ஆல்டோ கார்கள் விற்பனை

இந்தியாவில் கார் விற்பனையில் முதலிடத்தில் இருக்கும் மாருதி சுசூகி நிறுவனம் 11 ஆண்டுகள், 9 மாதங்களில் 20 லட்சம் ஆல்டோ கார்களை விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது. இதன் மாருதி 800 கார் தான், 20 லட்சம் கார்கள் விற்பனைச் சாதனையை முதலில் நிகழ்த்தியது.




தற்போது அந்த சாதனையை, அதே நிறுவனத்தின் ஆல்டோ கார் நிகழ்த்தியுள்ளது. இந்தியாவில் ஆல்டோ காரை அறிமுகப் படுத்தி 11 ஆண்டுகள் 9 மாதங்களாகின்றன. இது மாருதி 800 கார் சாதனையை விட அதி விரைவில் நிகழ்த்தியதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. (வ)



மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையின் சாவற்கட்டு கிளையினை இலங்கை வங்கித் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்கா நாடாவை வெட்டி திறந்து வைக்கிறார். அருகில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் க.முரளிதரன், பிரதிப் பொது முகாமையாளர் முதியான்சகே ஆகியோர் உள்ளனர். (த-100)

## 5 கோடி செல்போன்கள் விற்பனை

இந்த ஆண்டு ஜனவரி-மார்ச் காலகட்டத்தில் இந்தியாவில் செல்போன் விற்பனை 5 கோடியைக் கடந்துள்ளது என செல் போன் ஆய்வு நிறுவனம் தெரிவித்திருக்கிறது. இந்தக் காலப்பகுதியில் விற்பனை எண்ணிக்கையில் நோக்கியா நிறுவனம் முதல் இடத்தை தக்க வைத்து சந்தையில் 23 சதவீத இடத்தைப் பிடித்துள்ளது. இரண்டாம் இடத்தில் சம்சுங் செல்போன்கள் 14.1 சதவீத இடத்தைப் பிடித் துள்ளன.

மைக்ரோமாக்ஸ் செல்போன்கள் 5.8 சதவீத விற்பனையுடன் மூன்றாம் இடத்தில் உள்ளன. மொத்த விற்பனையில் ஸ்மார்ட் போன்வகையைச்சேர்ந்த போன்கள் 27 லட்சம் விற்பனையாகி விட்டன.

இந்த வகை போன்களில் சம்சுங் நிறுவனத்தின் போன்கள் 40.4 சதவீத பங்கைப் பெற்றுள்ளன. இரண்டா மிடத்தில் 25.5 சதவீத பங்குடன் நோக்கியா உள்ளது.

மூன்றாமிடத்தில் இருக்கும் ஆர். ஐ.எம். நிறுவனத்தின் பிளாக் பெரி 12.3 சதவீதம் இடம் பிடித்துள்ளது. (த)

## செலான் வங்கி – பைசா இணைவு

உலகளாவிய ரீதியில் பணம் அனுப்பும் நடவடிக்கைகளை இலகுவாக்கும் வகையில், செலான் வங்கி பைசா நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்துக்கொண்டுள்ளது.

உலகளாவிய ரீதியில், இணையத்தளத்தினூடான பணம் அனுப்பும் சேவையில் சுமார் 190 நாட்டு மக்களின் நம்பிக்கையை வென்ற முன்னணி நிறுவனமாக கனடாவைத் தளமாகக் கொண்ட பைசா நிறுவனம் விளங்குகின்றது.

உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வில் உரையாற்றிய செலான் வங்கியின் பொது முகாமையாளரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான கபில ஆரியரத்ன, வெளிநாடுகளில் வாழும் இலங்கையின் புலம்பெயர் சமூகம், இணையத்தினூடாக இலங்கைக்கு பணம் அனுப்ப, பைசாவினுடனான இணைவு வழிவகுப்பதாகவும், அதனால் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

விரைவில் ஆரம்பமாகவிருக்கும் இச்சேவைக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக, பைசாவின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் அல்பி ஏப்ரஹாம் கொழும்பு வந்திருந்தார்.

## ஜீப் கொம்பாஸ் -2012 அறிமுகம்

டீமோ நிறுவனம் 'ஜீப் கொம்பாஸ் -2012' என்ற புதுரக வாகனம் ஒன்றை இலங்கைச் சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தப் புதிய ஜீப் கொம்பாஸ், பெரிய வாகனங்களைத் தவிர்க்க விரும்புகின்றவர்களுக்குப் பொருத்தமானது. வெளிநாட்டுச் சந்தைகளில் சிறந்த பெயர் பெற்ற கொம்பாஸ், தற்போது மெருகூட்டிய புதிய உட்புறத்துடன் வந்துள்ளது.

பெரிய கார் ரகங்களில் கிடைக்கும் வசதிகளுடன் இரண்டு வருட வரைமுறைகளற்ற சக்தி சேமிப்பு உத்தரவாதமும் சிக்கன விலையும் கொண்ட இந்த கொம்பாஸ் கவர்ச்சியுடையது.

ஜீப் கொம்பாஸில் 4 ஸ்பீக்கர்கள், 6 சீடிக்கள் போடக்கூடிய தட்டு, MP3 வசதி, மொபைல் தொலைபேசிகளுக்கான ஒடியோ ஜக், 6.5 அங்குல தொடு திரை ஒலி வசதி போன்ற வசதிகள் உள்ளன. இதில் உள்ள 30 ஜிகா பைட் நினைவகத்தில் ஆயிரக்கணக்கான பாடல்களைச் சேமித்து வைத்து விரும்பியவாறு கேட்க முடியும். படங்கள், வீடியோக்களை இரசிக்க முடியும்.

இந்த வாகனத்தில் கடினமான பயணங்களில் சாரதி வாகனத்தை சிறப்பாகக் கட்டுப்பாட்டுக்குள்



வைத்திருப்பதை கண்காணிக்கும் 'எலக்ரோனிக் ரோல் மிட்டிக்கேசன்' ( Electronic Roll Mitigation -ERM ) எனப்படும் சாதனம் ஸ்ரீயரிங் வீலின் இயக்கத்தையும் வாகனத்தின் வேகத்தையும் கண்காணித்து அதைக் கட்டுப்படுத்த உதவுகின்றது.

இலங்கையில் ஜீப் மற்றும் கிரைஸ்லர் வாகனங்களின் உத்தியோகபூர்வ விநியோகஸ்தராக விளங்கும் டீமோ நிறுவனத்திடமிருந்து ஜீப் கொம்பாஸ்- 2012 ஐப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த வாகனத்தின் பெறுமதி ஒரு கோடி 36 லட்சம் ரூபாவிலிருந்து ஆரம்பிக்கின்றது.


டுப்பிளிகேசன் வீதியில் அமைந்துள்ள டீமோ காட்சியறையில் இவ் வாகனத்தைப் பார்வையிட முடியும். ஜீப் கொம்பாஸ் 2 வருட உத்தர வாதத்தையும் வரையறையற்ற எரிபொருள் சிக்கனத்தையும் வழங்குகிறது. இதைவிட விற்ப னைக்குப் பின்னரான தனித்துவ சேவையாக 24 மணி நேர வீதி விபத்து உதவி சேவையும் வழங்கப்படும். (த)



கொமர்ஷல் வங்கி அச்சுவேலி கிளையில் சிறுவர் சேமிப்பில் (அருணலு) கணக்கு வைத்துள்ள ஆண்டு 5 (2011) புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப்பிடித்த மாணவர்களுக்கு முறையே ரூபா 10000, ரூபா7500, ரூபா 5000 பணப்பரிசிலும், சான்றிதழும் வழங்கும் வைபவம் கடந்த 12 ஆம் திகதி வங்கி மண்டபத்தில் நடைபெற்றது. வங்கி [illegible]ந்தராஜா, வங்கி அதிகாரி பொ.சிவமயூரன் ஆகியோருடன் பரிசு பெற்ற மாணவர்கள். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் ஸ்ரீ வீரம



## தேர்த்திருவிழா சிறப்புமலர் - 22.07.2

### பிரசுர அனுசரணையாளர்கள்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| **சக்தி பியூட்டி பார்** பிடாரி கோயிலடி, கொக்குவில் மேற்கு, | **பரணி கிறீம் ஹவுஸ்** கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். | **ஷண்கபே** 969, கே.கே.எஸ். வீதி, அரசடிப் பிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம். | **A.B.S. Jeevan வெல்டிங் வேக்ஸ்சொப்** பிடாரி கோயிலடி, கொக்குவில் மேற்கு. | **ரூபன்** களஞ்சியம் கேணியடி, கொக்குவில் | **AIR HE NET C** பிடாரி கோயி |
| **வேல் களஞ்சியம்** கே.கே.எஸ். வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம். | **திஷானன் வாகனசேவை** கொக்குவில் மேற்கு, கொக்குவில். தொ.பே. 077 6611 764, 021 4591 218 | **அம்பாள் சைவ உணவகம்** பிடாரி கோயிலடி, கொக்குவில் மேற்கு. | **தயாளினி வீடியோ அன் பான்ஸி ஹவுஸ்** பிடாரி கோயிலடி, கொக்குவில் மேற்கு. | **குகன் களஞ்சியம்** வராகி அம்மன் கோயிலடி, கொக்குவில் மேற்கு. | **துல** |
| **யாழ்ரா ஹோட்டல்** 830, கே.கே.எஸ். வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். | **யாழ்க் கல்லூரி** தரம் 01 முதல் O/L வரை பயிற்றப்பட்ட கல்லூரி ஆசிரியர், சிறப்பான பட்டதாரி ஆசிரியர்கள் பொன்னையா லேன், ஆனைக்கோட்டை. | **செல்வி நகையகம்** 1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | **மகாநதி ஜுவெலறி** 72 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | **வெஸ்றவண் கொமினிக்கேசன்** மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. | **ஆரணி** நகைத்தொழில்க பிடாரி கோயிலடி கொக்குவில் மேற் |
| **கீத்தா றேடர்ஸ்** கட்டடப் பொருள், பெயின்ட் வகைகள் விற்பனையாளர் மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம். | **சிறி அம்பாள் வெல்டிங் வேக்ஸ்** கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி | **நந்தினி வெதுப்பகம்** தரமானதும் சுவையானதுமான பேக்கரித் தயாரிப்புக்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற நாடவேண்டிய இடம். கொக்குவில் மேற்கு கொக்குவில் | **சந்திரா ஸ்ரோர்ஸ்** மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. | **கொழும்பு எசன்ஸ் ஹவுஸ்** 169, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். | **பரஞ்சோத ஸ்ரோர்ஸ்** (தீபன் கடை) ஆனைக்கோட்டை கொக்குவில். |



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ...மாபிடாரி அம்பாள் ஆலய...



## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

எல்லாம் வல்ல ஆதிபராசக்தியாக விளங்குகின்ற அம்பிகை பிடாரி அம்பாள் இன்று தேர் மீது ஆரோகணித்துத் திருவருள் பாலிக்கின்றாள். ம்பிவரும் அடியவரின் கொடிய வினை தீர்க்கும் அன்னையாக ஆனைக்கோட்டைப் பதியிலே எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கும் அம்பாள் இன்று அநியாயங்களையும் அக்கிரமங்களையும் வேரோடு தகர்த்து அழித்திடத் தேரில் புறப்படுகின்றாள்.

''அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாமே! நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு'' என்பதற்கிணங்க இந்த அம்பாளை வழிபடும் அடியவர்கள் அனைவரும் நல்ல வண்ணம் மங்களகரமாக வாழ அம்பாள் அருள்புரிய வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்.

## திருத்தேரில் ஏறி அருளாட்சி செய்யும் வீரமாபிடாரி அம்பிகை



சிவபூமி என அழைக்கப்படும் ஈழவளநாட்டில் மிகவும் ஆதியானதும் எல்லோரதும் மதிப்பு மிக்க யாழ்ப்பாண நன்நகரில் வண்ணை வடமேற்கில் ஆனைக்கோட்டை எனும் பகுதியில் திருக்கோயில் கொண்டிருக்கும் அன்னை வீரமாபிடாரி இன்று ஞாயிற்றுக்கிழமை திருத்தேரில் அருளாட்சி செய்கிறாள். அம்பிகையின் அருட்கடாட்சத்தை நேரில் காண கண்களாயிரம் வேண்டும். முற்பிறவியில் யாம் செய்த பாவங்கள் இவ்வாறான புண்ணிய நாளில்தான் விமோசனம் செய்யப்படுகின்றது.

எனவே நாமும் முப்பிறவியில் செய்த பாவ காரியங்கள். இப்பிறவியில் தெரியாது செய்த பாவங்கள் என நமக்குத் தெரியாது பல உள்ளன. இவற்றை எல்லாம் அம்பிகையின் அருட்கடாட்சத்தால் மறைத்து வீரமாபிடாரியின் திருவருளைப் பெறுவோமாக.

லோகா.சமஸ்தாசுகினோபவந்து, மஹோற்சவபிரதமகுரு, வேதாகம ஞான திவாகரன்
பிரம்மஸ்ரீ பாலமுரளிதரக்குருக்கள்.
(பிரதம குரு, மீசாலை இலந்தைக்கூடல் வீரகத்திப்பிள்ளையார், மீசாலை)

## தல வரலாறு

திருக்கோயில்களால் சிறப்புப் பெற்றது நமது ஈழவளநாடு. இந்த நாட்டைச் சிவாலயங்கள், விஷ்ணு ஆலயங்கள், சக்தி ஆலயங்கள் என்பன பெரிதும் அழகுபடுத்துகின்றன என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் சக்தி ஆலயங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்த புரதான ஆலயமாக யாழ்.நகரை அண்மித்த ஆனைக்கோட்டை, கொக்குவில் பகுதி எல்லையில் வீரமாபிடாரி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது.

பொதுவாகக் கிராமத்தின் எல்லைத் தெய்வமாக விளங்கும் அம்பிகைக்கு பிடாரி என்றும் ஒரு பெயருண்டு. இந்தப் பெயர் கேட்பதற்கு ஒரு மாதிரியாக இருந்தாலும் உண்மையில் இயற்பெயர் பீடைஹாரி என்பதாகும். அதாவது

பீடை - தீவினை அல்லது துன்பங்கள்

ஹாரி - விரட்டுபவள்

அதாவது பீடைகளை-துன்பங்கள், தீவினைகளை நெருங்காமல் விரட்டுபவள் என்ற பெயரே பீடைஹாரி என்று மருவிவிட்டது என்பதுதான் உண்மை.

இந்த ஆலயமூர்த்தி வழிபாடு மிகவும் தொன்மைவாய்ந்ததாகக் காணப்படுகின்றது. கி.பி 1475 இல் சிங்கை பரராசசேகரன் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்தபோது பல ஆலயங்களைப் புனரமைத்தான் என்று அறியமுடிகின்றது. ஆட்சி மாற்றத்தினால் அந்நியர்களான பறங்கியர் தம் மக்களின் மனதை புண்படச் செய்யும் வகையில் யாழ்ப்பாணத்தில் பெரிதும் சிறிதுமாக 500 ஆலயங்களை இடிப்பித்தார்கள் என்றும் அதில் ஒரு ஆலய அம்மன் விக்கிரகத்தைச் சிவன் கோயில் குளத்திலேயே இட்டுச் சென்றனர் என்றும் அறியமுடிகின்றது. இங்கிருந்து வழிபடும் அடியவர் ஒருவரின் கனவில் அம்மன் தோன்றி, தான் இருக்கும் இடத்தை உணர்த்தி அந்த அடியவரும் அம்பிகை உணர்த்திய இடத்தைச் சென்று பார்க்கையில் அம்பிகையின் உருவம் கிடைக்க அவர் அகமகிழ்ந்து அதனை ஒரு மாட்டு வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்து தற்போதுள்ள இடத்தில் வைத்து வழிபட்டார் என்றும் கூறுவர். இதைவிட சங்கிலி அரசன் போர் புரிய முன்னர் இந்த அம்பிகையை வழிபட்டே போருக்குச் செல்வது வழக்கம் என்றும் கர்ண பரம்பரைக் கதைகளால் அறியமுடிகின்றது. காலப் போக்கில் இந்த ஆலயத்தில் பலியிடும் வழக்கம் ஏற்பட்டது.

1975 ஆம் ஆண்டில் இந்த ஊர்ப் பெரியவர்களின் முயற்சியால் பலியிடும் வழக்கம் நிறுத்தப்பட்டு கொட்டிலுடன் கூடிய ஆலயமாக இருந்த ஆலயம் ஆகம விதிக்கமைய கருவறையுடன் கூடிய ஆலயமாக மாற்றப்பட்டது. காலப்போக்கில் அன்பர்கள், அடியவர்கள் அனைவரின் ஒத்துழைப்பு, விடாமுயற்சி என்பவற்றின் காரணமாக உன்னத வளர்ச்சி அடைந்து பெரிய ஆலயமாகத் தேரோடும் ஆலயமாக மாறி தற்போது அழகிய பஞ்சதள இராஜகோபுரத்துடன் காட்சியளிக்கின்றது என்று உணருகையில், இந்த வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை மனம் நிறைந்து பாராட்டாமல் இருக்க இயலாது. இந்த ஆலயத்துக்கு இந்தக் கிராமத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல, அயல் கிராமங்களில் இருந்தும் ஏன் பல்வேறு இடங்களில் இருந்தும் அன்னையைத் தேடி, நாடி, ஓடி வருபவர்கள் ஏராளம் ஏராளம்.

இந்த ஆலயத்தில் நிறைவுக்கு-அன்னதான மண்டபமொன்று அமைக்கப்பட்டு நிறைவு செய்யப்பட வேண்டும். அதுவும் அம்பிகையின் அருட்கடாட்சத்தினால் விரைவிலேயே நிறைவு பெறும் என்ற நம்பிக்கையுடன் அகில உலகுக்கும் நாயகியான அவளின் பாதம் பணிந்து நிறைவுசெய்கின்றோம்.***

### பிடாரித்தாயே தேரேறித் தேசத்தைக் காத்திடம்மா!



கொக்குவில் மேற்கில் பீடைபோக்கிடக்
கொலுவீற்றுக் குவலயம் காத்திட
கொங்கணர் சண்டாளர் சிவமுடையார்
கங்கணங்கள் போக்கிடச் சங்கார நாயகியாய்
தேரினில் சிங்காரச் சிவப்புப்பட்டுடன் சூலமுடன்
மும்மலம் போக்கித் தேசமெல்லாம் புண்ணியம்
மேலோங்கிட சைவமும் தமிழும் வாழ்விக்க
தேரேறிய பிடாரித்தாயே தேசத்தைக் காத்திடம்மா!

செஞ்சொல்செல்வர்
க.நித்தியதசீதரன், இந்துதர்மாசிரியர்.

## தேரேறும் அன்னையின் அருள்



அம்பிகையின் பத்து தின மஹோற்சவத்திலே ஒன்பதாவது தினமான இன்று திருத்தேர் ஆகும். இது அழித்தல் தொழிலை குறிக்கும். அதாவது நான் என்ற அகங்காரம் எனது என்ற மமதை போன்ற ஆணவ குணமுள்ளவர்களது மனதினை அழித்து தூய்மையாக மாற்றுதல் என்பது இந்த திருத்தேர் நாளின் சிறப்பு.

வண்ணை வீரமாபிடாரியின் அருட்பார்வை பட்டால் தூய்மையும், நல்ல சிந்தனையும் நல் எண்ணங்களும் தோன்றி எம் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். எல்லா வளங்களும் கிட்டும். மனச்சஞ்சலங்கள் நீங்கி எம் வாழ்வில் சாந்தி நிலவட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தேவஸ்தான குரு, பிரம்மஸ்ரீ சோ.முரளிதரசர்மா.

## அருளின் உருவே! தேரேறி வருக



உலக இயக்கத்தின் சக்தியாய் நின்று அடியவர் தம் உள்ளத்தில் ஒளியேற்றி, அனைவரையும் வழிப்படுத்தும் வீரமாபிடாரி அம்பாள் தேரேறி வரும் திருநாள் பெருமைமிக்கது. ஆலயத்தில் இருந்து அருள் பாலிக்கும் அன்னை மக்களை நோக்கி வரும் இப் பெருநாள் எம்மைச் சூழ்ந்துள்ள துயர் விலகும் நாளாக, எம்மைப் பிணித்துள்ள 'மலம்' மறையும் ஒளி நாளாக மலர உம் அருள் நோக்கை வேண்டுகிறோம். அனைவரும் ஒன்றுபட்டு தாயே! உங்கள் தாள் பணிந்து வடம்பிடிப்போம். அருள்புரிக.

- அ.குமாரவேல், தலைவர், ஆலய பரிபாலனசபை.

## தேர் பவனி வரும் பிடாரி அம்பிகையே

உலகெங்கும் வாழும் அனைத்து அடியவர்களுக்கும் ஆடித் தேரேறிவரும் பிடாரி அம்பிகையின் அருள் காட்சி கிடைக்க வேண்டுகிறோம். தீய வினைகள் யாவும் நீங்கி அல்லல்பட்டு துன்பப்பட்டு வாடும் மக்களின் குறைகளை நீக்கி இன்ப வாழ்வு கிடைக்கப்பெற்று அம்பாளின் திருவருள் யாவருக்கும் கிடைக்க வேண்டும் என்று பிடாரி தாயவளை வேண்டுகின்றோம்.

தேர்த்திருவிழா உபயகாரர்.

## இந்து இளைஞர் மன்றத்தினரின் ஆசிச்செய்தி

வேண்டுவோர் வேண்டும் வரங்களைக் கொடுக்கும் பிடாரித் தாயே ''ஆடித் தேர் ஏறி'' அடியார்களின் குறைகளை நீக்கி, உலகெல்லாம் வாழும் அடியவர்கள் இன்புற்று ஆனந்தப் பெருவாழ்வு வாழ வேண்டுகின்றோம்.

இந்து இளைஞர் மன்றம், பிடாரி அம்பாள் ஆலயம்.


...7.2012

★★★★★

...AIR HEAVEN NET CAFE
பிடாரி அம்மன் கோயிலடி

துவாரகேஸ்வரன் பூமாலை
பொன்னையா லேன், ஆனைக்கோட்டை.

கோபுரம் சவுண்ட்ஸ்
மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு
ஒலிபெருக்கி சாதன விற்பனையாளர்.

இலங்கை ராசா ஸ்ரோர்ஸ்
V.N.T
67, மேற்கு மார்க்கட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

எரிக் கணேஷ் மூக்குக் கண்ணாடி அகம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
கிளை கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.

பிடாரி களஞ்சியம்
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

...ரணி
...தொழில்கம்
...கோயிலடி,
...வில் மேற்கு.

தெய்வம் ஸ்ரோர்ஸ்
கைவினைப்பொருள்களின் மொத்த/ சில்லறை விற்பனையாளர். இல.84,மேற்கு,மார்க்கட், யாழ்ப்பாணம்.

மணி ஸ்ரோஸ்
பிடாரி கோயிலடி, கொக்குவில் மேற்கு.

ஸ்ரீ வராகி ரெக்ஸ்ரைல்
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

கணேசா களஞ்சியம்
(சந்துரு தேபிலை)
59, முருகமூர்த்தி வீதி, யாழ்ப்பாணம்.

வெஸ்ரா நெல்லிக்கிரஸ்
ஆனைக்கோட்டை.

...சோதி
...ர்ஸ்
...கடை)
...கோட்டை வீதி,
...க்குவில்.

அம்பாள் ஸ்ரோர்ஸ்
பிடாரி கோயிலடி, கொக்குவில் மேற்கு.

பூரணி நகை மாடம்
1/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நீலாம்பரி உணவகம்
...வீதி, யாழ்ப்பாணம்.


பெபிஸ்ரி பியூட்டி
பிடாரி கோயிலடி, கொக்குவில் மேற்கு.

''கல்வியே கண்''
ஏசியன் அக்கடமி
கேணியடி, கொக்குவில் மேற்கு, தரம் 1 முதல் O/L வரை, A/L குழுவகுப்புகள், தனிவகுப்புகள், சிறப்பாக நடைபெறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 74

## கண்நோய் (Conjunctivitis)



**கண்ணின் விழிவெண்படலமானது சிவப்பு நிறமாக மாறும் நிலைமை கண்நோய் எனப்படும். இது பின்வரும் காரணங்களால் ஏற்படலாம்.**

1. நோய்க்கிருமித் தொற்று – பக்ரீறியா
2. ஒவ்வாமை உ+ம்: மகரந்தமணிகள், வைரஸ் தூசி
3. இரசாயன பதார்த்தங்கள் – அமிலம்/ காரம்

கண்நோய்க்குரிய பிரதான காரணம் நோய்க்கிருமித் தொற்றாகும். அதிகளவில் வைரஸ் காரணிகளால் கண் நோய் ஏற்படுகின்றது.

கண்நோயின் பிரதான குணங்குறிகளாவன

1. கண் சிவத்தல்
2. கண்மடல் வீங்குதல்
3. கண் கடித்தல்/ எரிவு
4. கண்ணில் பிறபொருள் உள்ளது போன்ற உணர்ச்சி
5. கண்ணின் சுரப்பிகளால் பார்வை மங்கலடைதல்
6. பிரகாசமான ஒளியைப் பார்க்க முடியாமை / நோவு ஏற்படுதல்

இதைத்தவிர வைரஸ் அல்லது பக்ரீறியாவினால் ஏற்படும் போது கண்நோய் குணங்குறிகளுடன் தொண்டை நோ, காதுநோ, தடிமன், காய்ச்சல் போன்ற அறிகுறிகளும் சேர்ந்து காணப்படலாம். வைரஸினால் ஏற்படும்போது கண்ணிலிருந்து அதிகளவு தண்ணீர் தன்மையான திரவமும், பக்ரீறியாவினால் ஏற்படும் போது தடித்த பீழையும் கண்ணிலிருந்து வெளியேறும். இதன் காரணமாக நித்திரையால் எழும்பும்போது கண்மடல்கள் ஒட்டியவாறு காணப்படும்.

கண்நோயானது பொதுவாக ஆரம்பித்து ஐந்து நாள்களுக்குள் குணமாகிவிடும். ஆயினும் சிலவேளைகளில் கண்நோயானது இரண்டு கிழமை தொடக்கம் மூன்று கிழமை வரை சுட செல்லலாம்.

வைரஸினால் ஏற்படும் கண்நோய்க்கு நோயெதிர்ப்பு மருந்துச் சொட்டுக்கள் பிரயோசனப்படாது. பக்ரீறியாவினால் ஏற்படும் போது மருந்துச் சொட்டுக்களைப் பாவிப்பது, நோய் குணமாகும் நேரத்தை விரைவு படுத்துவதுடன் பிறருக்கு பரவுவதையும் குறைக்கின்றது.

கண்நோய் ஏற்படும் போது குளிர்ந்த நீரால் கண்களைக் கழுவுதல், குளிர்ந்த துணிகளை கண்ணில் வைத்திருத்தல், artificial tear சொட்டுக்களை பாவித்தல் என்பன கண்ணின் நோவைக் குறைக்கும்.

இரசாயனப் பதார்த்தங்கள் கண்ணில்படும்போது சுத்தமான நீரினால் கண்களைக் கழுவ வேண்டும். உடனடியாக வைத்திய உதவியை நாடவேண்டும்.

சாதாரணமாக ஏற்படும் கண்நோய்க்கும் பின்வரும் சந்தர்ப்பங்களில் வைத்திய உதவியை நாட வேண்டும்.

1. கண்ணில் வலி அதிகரித்துக் காணப்படுதல்
2. கண் கடும் சிவப்பு நிறமாயிருத்தல்
3. கண்பார்வை மங்கலடைதல் [பீழையை அகற்றிய பின்பும்]
4. நோயெதிர்ப்பு சக்தி குறைந்தோர்
5. கொப்பளிப்பானுடன் சேர்ந்த கண்நோய்

கண்நோயானது ஒருவரில் இருந்து இன்னொருவருக்கு மிக விரைவாக தொற்றக்கூடியது. இதன் காரணமாக தனிச் சுகாதாரம் பேணுதலே நோய் பரவுவதை தடுக்கும் முறையாகும். அடிக்கடி கண்களினுள் கையை போடுவதைத் தவிர்த்தல், பிறருடன் துவாய், தலையணை, கைக்குட்டை போன்றவற்றைப் பகிர்ந்து கொள்ளுதலைத் தவிர்த்தல். கண்ணைத் துடைக்க பாவிக்கும் துணிகளை தகுந்த முறையில் சுத்தம் செய்தல். பிறருக்குரிய கண்மருந்துகளைப் பாவிப்பதைத் தவிர்த்தல்.

கண்களைத் துடைத்த பின்பும், கண் மருந்தை விட்ட பின்பும் கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவுதல் போன்ற சுகாதார முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

*மருத்துவர் ஜி.ரஜந்தி*
*யாழ்.போதனா வைத்தியசாலை*

## பாரிசவாதம் (Stroke) வருவதைக் குறைக்க

Stroke பாரிசவாதம் என்பது மூளையின் ஒரு குறிப்பிட்ட பாகத்தில் இயக்கம் திடீர் என்று நின்று போதலாகும். மூளைக் குச் செல்லும் இரத்தத்தில் ஏற்ப டும் மாற்றத்தால் இது ஏற்படு கிறது. இதற்கு ''த்ராம் பஸ்'' எனும் மூளைக்கு செல்லும் இரத்த குழாய் சுவர்களில் கட்டிகள் ஏற் பட்டு இதன் மூலம் மூளைக்கு குருதி விநியோகம் தடைப்படுவது மற்றும் ''எம்போலஸ்'' எனும் மூளைக்கு வெளியே உள்ள இரத்தக் குழாய்களில் வெளிப்படும் ''த்ராம்பஸ்'' குருதிக் கட்டிகள் இவை யும் மூளைக்கு செல்லும் குருதிக் குழாய்களில் அடைப்பை ஏற்படுத்து வதன் மூலமும் பாரிச வாதம் ஏற்படுகிறது.

மூளையில் பாதிப்பு ஏற்பட்ட இடம், பாதிப்பின் அளவு இவற்றைப் பொறுத்து நோயாளியின் செயற்திறனில் மாற்றம் காணப்படும். உதாரணமாக மூளையின் வலது புறத்தின் ஒரு பகுதி சேதம் அடைந்து இருப்பின் நோயாளியின் இடது புறம் செயல் இழந்துபோதல், விழுங்குவதில் சிரமம், ஞாப கத்திறனில் பிரச்சினை, பேசுவதில் சிக்கல் போன்ற குணம்குறிகள் காணப்படும். எனவே பாரிசவாதம் வருவதைக் குறைக்க சில ஆலோசனைகள்.

1. உங்கள் இரத்த அழுத்தம், வெல்லத்தின் அளவு குருதியில் மற்றும் குருதியில் கொலஸ்ரோலின் அளவு போன்றவற்றை உங்கள் மருத்துவரிடம் பரிசோதித்து சிகிச்சையும் ஆலோசனையும் பெறுங்கள்.
2. மருத்துவர் கூறியபடி மருந்துகளை உட்கொள்ளுங்கள். நீங்களாக மருந்துகளை மாற்றவோ நிறுத்தவோ எடுக்கும் அளவுகளில் மாற்றங்கள் செய்யவோ முயலவேண்டாம்.
3. புகை பிடிப்பதை நிறுத்துங்கள் அல்லது தவிருங்கள்.
4. ஓய்வு எடுக்கும் பயிற்சிகள் மற்றும் பொழுதுபோக்கினால் உங்கள் மன அழுத்தத்தை குறைத்துக்கொள்ளுங்கள்.
5. குறைந்த கொலஸ்ரோல் கொழுப்புள்ள உணவை சாப்பிடுங்கள்.
6. வாரத்தில் மூன்று முறையாவது உடற்பயிற்சி தொடர்ந்து செய்யுங்கள்.
7. உங்கள் உயரத்திற்கேற்ப உடல் எடையை சீராக வைத்திருங்கள். குண்டான உடல் நிலையை தவிர்ப்பதற்கு முயலுங்கள்.
8. உங்களுக்கு நீரிழிவு நோய் இருப்பின் குருதியில் வெல்லத்தின் அளவை சீரான அளவில் பேணுவதற்கு முயலுங்கள்.
9. உங்கள் குடும்பத்தில் பிறருக்கு ஏற்கனவே ''ஸ்ட்ரோக்'' வந்திருந்தால் மேற்குறிப்பிடப்பட்டவற்றை மிகவும் அவதானமாக கடைப்பி டியுங்கள்.
10. பாரிசவாதத்திற்கான அறி குறிகள் தென்பட்டால் உடனடியாக உங்கள் மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

*ச.சுதாகரன்*
*தாதிய உத்தியோகத்தர்*
*யாழ்.போதனா வைத்தியசாலை*

*உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப் பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய* ***சுகத்தை நோக்கி..., நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.*** *என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

**கேள்வி:- எனது முதலாவது குழந்தை யானது எட்டு மாதத்தில் தண்ணீர் குடம் உடைந்து முதிராக் குழந்தையாகப் பிறந்தது இதனால் குழந்தைக்கு ஏதும் பாதிப்பு நிகழுமா?**

பிரதா உடுவில்

அம்னியோட்டித் திரவமானது தாயி னதும் சிசுவினதும் இழையங்களால் சுரக்கப்படுகின்றது. சூல் வித்தகம், தொப்புள் நாண், போன்றவற்றிலிருந்தும் சிசுவின் உடலில் இருந்தும் (20 கிழமைக்கு முன்) வெளியேறுகின்றது. சிசுவின் சிறுநீரும் (400-1200 மில்லி லீற்றர்) அம்னியோட்டித் திரவம் உருவாகப் பங்களிப்புச் செய்கின்றது.

கர்ப்பப்பையினுள் இருக்கும் சிசு ஒவ் வொரு நாளும் 200 - 500 மில்லி லீற்றர் திரவத் தைக் குடித்து சிறுநீராக வெளியேற்று கின்றது. இத்திரவத்தின் கனவளவு 36-38 கிழமையில் 1000 மில்லி லீற்றராகக் காணப்படும்.

அம்னியோட்டித் திரவமானது காரத்தன் மையான அடர்த்தி குறைந்த (குருதியை விட) நிறமற்ற தன்மையைக் கொண்டது. எனினும் பின்வரும் நிறங்களைக் கொண்டிருப்பின் அசாதாரண நிலையாகும்.

- பச்சை நிறம்-சிசு உயிர்வாழச் சிக் கலான நிலை காணப்படலாம்.
- பொன்நிறம்- குருதி ஒருங்கொட்டின்மை
- மஞ்சள் - அதிக முதிர்வு நிலை
- குருதிச் சிவப்பு- பிரசவத்துக்கு முன்னைய நஞ்சுக் கொடி பிரிதல்
- கடும் மண்நிறம் - கருப்பையினுள் இறப்பு

அம்னியோட்டித் திரவம் பல தொழிற் பாடுகளைக் கொண்டுள்ளது

- கர்ப்ப காலத்தில்

1. அதிர்ச்சிகளிலிருந்தும் சிசுவைப் பாதுகாத்தல்.
2. ஒரு சீரான வெப்ப நிலையைப் பேணல்
3. சிசுவின் அசைவையும் வளர்ச்சியையும் பேணுதல்
4. சிசுவுக்குத் தேவையான நீரை வழங்குதல்

- பிரசவத்தின் போது..

1. கர்ப்பப்பை வாசல் விரிவடைய உதவுதல்
2. கருப்பைச் சுருக்கத்தின் போது குருதி வழங்கலைப் பேணுதல்
3. பிறப்பு வழியிலுள்ள கிருமிகளை அழித்தலும் அகற்றலும்

உங்களுடைய கர்ப்பப்பையினுள் வள ரும் சிசுவைச் சூழ அம்னியோட்டித் திரவம் காணப்படுகின்றது. அம்னியோட்டி மென்சவ் வினுள் காணப்படும் இந்தத் திரவம் மென் சவ்வு கிழிவத[illegible] கர்ப்பப்பை வா[illegible] வெளியேறுகின் றது. இது பொதுவாக பிரசவத்துக்கு சற்று முன்னராக அல்லது பிரசவத்தின் போதே நிகழ்கின்றது எனினும் 2 வீதமான தாய்மாரில் 37 கர்ப்பகால வாரங்களின் முன் நிகழ்வதால் முதிராக் குழந்தைகள் பிரசவிக்கப்படுகின்றன.

2. பன்னீர்க்குடம் உடைந்துள்ளது என எவ்வாறு தெரிந்து கொள்ளலாம்?

பிறப்பு வழியினூடகத் தாரையாகத் திரவம் வெளியேறுதல் அல்லது உள்ளாடை ஈரமாவதன் மூலம்.

3. பன்னீர்க்குடம் உடைந்தால் நான் என்ன செய்ய வேண்டும்?

சுத்தமான pad அணிவதன் மூலம் திரவத்தின் நிறத்தையும் அளவையும் கவனித்தல் மகப்பேற்று விடுதியை நாடுதல் வேண்டும்.

4. மகப்பேற்று விடுதியில் மேற்கொள்ளப் படும் நடவடிக்கைகள் எவை?

- சிசுவின் இதயத்துடிப்பு கண்காணிக்கப் படும்
- கிருமித் தொற்றலைத் தடுக்க மருந்துகள் தரப்படும்
- நாடித்துடிப்பு, குருதி அழுத்தம், உடல் வெப்ப நிலை கண்காணிக்கப்படும்.
- முதிராக் குழந்தையெனின் காற்றுப் பையின் விருத்திகாக ஊசி மருந்துகள் வழங்கப்படும்.
- மீயொலி ஸ்கான் செய்யப்பட்டு குழந்தையின் முதிர்வு கணிப்பிடப்படும்

5. முதிர்வுக் காலத்துக்கு முன்பான பன்னீர்க்குடம் உடைவதால் ஏற்படும் பாதிப்புக்கள் எவை?

- முதிராக்குழந்தை பிரசவிக்கப்படும்
- குழந்தைக்கு கிருமித் தொற்று

முதிராக் குழந்தை 24 வாரங்களுக்கு முன் பிரசவிக்கப்படின் அது உயிர் வாழாது. 24-37 வாரங்களில் பிரசவிப்பின் சிசுவிற்கு மூச்சு விடுவதிலும் உணவு உண்பதிலும் பிரச்சி னைகள் ஏற்படும்.

6. முதிரா நிலைப் பன்னீர்க்குடம் உடைந்ததன் பின்னரான சிகிச்சை எவை?

- நுண்ணுயிர் கொல்லிகள் கிருமித் தொற்று ஏற்படுவதைத் தடுக்கின்றன.
- நுரையீரல் விருத்திக்கான ஊசி மருந்துகள்
- முதிராக் குழந்தை பராமரிப்புள்ள வைத்திய சாலைக்கு மாற்றுதல்

7. எந்தச் சந்தர்ப்பங்களில் கட்டாயம் வைத் தியசாலையை நாட வேண்டும்.

- அதிகரிக்கும் உடல் வெப்பநிலை (37°C அதிகமாக)
- பிறப்பு வழியூடான குருதிப் பெருக்கு
- அம்னியோட்டிக் திரவம் பச்சை நிறமானதாக/ மணமுடையதாக காணப்படல்
- பிரசவவலி
- கர்ப்பப் பைச் சுருக்கம்
- அசாதாரணமான குழந்தையின் அசைவு

8. பிரசவத்துக்குரிய சரியான நேரம் எது?

பொதுவாக 34-37 வாரங்களில்: எனினும் பன்னீர்க்குடம் உடைந்து 48 மணி நேரத்துக்குள் பெரும்பாலான தாய்மார் குழந்தையைப் பிரசவிக்கின்றனர்.

9. முதிரா நிலையில் பன்னீர்க்குடம் உடைதல் எதிர்காலப் பிரசவத்தைப் பாதிக்குமா?

சாதார தாய்மாருடன் ஒப்பிடுகையில் இந்த நிலை மீண்டும் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகவேயுள்ளது.

10. முதிரா நிலைப் பன்னீர்க் குடமுடை தலை எவ்வாறு வெற்றி கொள்ளலாம்?

- மகப்பேற்று நிபுணரின் கவனிப்பினை உரியகாலத்தில் பெறல்
- ஒழுங்கான கர்ப்பிணித் தாய்மாரின் சிகிச்சை நிலையத் தரிசிப்பு

**மருத்துவர் போ.சிவாகரன்,**
**யாழ். போதனா வைத்தியசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
09★ 01★ 1966

உதிர்வு
17★ 07★ 2007

## அமரர் ஜெகதீஸ்வரி மகேஸ்வரன் (யேந்தா)

ஆண்டுகள் ஐந்து கடந்தாலும் உன்
அன்பு முகம் இன்னும் கரையவில்லை
இறையடியில் ஒளிர்விடும் குலவிளக்கே - உன்
கரையிலா ஒளிமுகம் எம் பாசக்கோயிலில் பிரகாசிக்க
உன் உறவுகள் உனக்காகவே எப்போதும்.

"யேந்தா இல்லம்",
கைதடி வடக்கு. (20669) (2-7-6)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

---

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

## SRI LANKAN-GERMAN DEVELOPMENT COOPERATION

## Post of Program Officer - Mullaitivu

The Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) is an international cooperation enterprise for sustainable development with worldwide operations. As a federally owned enterprise, we support the German Government in achieving its objectives in the field of international cooperation for sustainable development. GIZ drives projects that support Sri Lanka's development objectives and works with stakeholders from across the spectrum in the government, public and private sectors.

**Facilitating Initiatives for Social Cohesion and Transformation** (FLICT) programme has been operating in Sri Lanka since 2003. The main focus of the programme is to support the development and implementation of a national policy framework on social integration. The Programme will also work with local government authorities and communities to enhance inclusive citizen participation.

GIZ-FLICT invites applications from dynamic and committed professionals for the position of **Prcgram Officer - Local Governance and Community Integration.**

**Required qualifications, competences/skills and experience**

- First degree in social sciences or related fields. Masters degree in social sciences or related fields is an advantage but not must;
- 3 + years of professional experience with the public sector, local governments, non-Governmental sector or International Organizations; Strong experience in community empowerment and governance in multi-ethnic environments desired;
- Possess excellent writing skills, and be familiar with both quantitative and qualitative reviews;
- Excellent command of English, Sinhala and Tamil.

**Responsibilities:**

The Program Officer will report to the Technical Advisor. She/he will contribute to the overall objective of the FLICT project with special focus on local governance and community integration in the key areas of:

- Project Management and Strategic Planning;
- Knowledge Management, Monitoring and Research;
- Networking and Partnerships

The detailed job description can be obtained from giz-hrsrilanka@giz.de

Qualified applicants must submit an updated CV including
**1) a one page-writing sample that describes how you would develop expertise on social integration, local governance and community integration ,**
**2) email & telephone contacts of two professional referees to** giz-hrsrilanka@giz.de or mail to the Human Resource Unit, GIZ-Colombo, No. 6, Jawatte Avenue, Colombo 5, **before cob 31 July 2012.**

*We thank all applicants but only the short listed candidates will be contacted.*
(சி/1368)(6-7-8)

---

## வீடு வாடகைக்கு

யாழ்.நாவலர் வீதியில் பெருமாள் கோயிலுக்கு அண்மையில் சகல வசதியுடனும் வாகனத் தரிப்பிட வசதியுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. வியாபார நிறுவனங்கள் மற்றும் கல்வி சார் நிறுவனங்களுக்கு உகந்தது.
தொடர்பு:- 075 0496867 (20663.) (2-6-7)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

Pure Breed Great Dane குட்டிகள் (கிறேடன்), Dachshund குட்டிகள் Certificate களுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
(20453)(6-7-8)

## வீடு காணி விற்பனைக்கு

சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதி, கேன் புற்றுநோய் காப்பகத்துக்கு முன்பாக உள்ள 4 ½ பரப்பு வீடு, கடையுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:-
077 7750216, 021 7902846
(20659.) (2-6-7)

## மரக்கன்றுகள் விற்பனை

நல்ல தரமான அதிகமான பயன் தரக்கூடிய Red Lady பப்பாசி, இந்தியன் முருங்கை, ஆனைக் கொய்யா, மாதுளை, கமுகு, தென்னை, கற்றாளை, வல்லாரை, கற்பூரவள்ளி, மலைவேம்பு, பலா, விதைகள் மற்றும் இயற்கை உரங்களான மண்புழு உரம், மக்கு உரம் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளநாடுங்கள்
தொடர்புகளுக்கு:
வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனப் பண்ணை இல்லம்
வட்டு இந்துக்கல்லூரி முன்பாக, சித்தன்கேணி
தொ.பே. 021 3210489, 021 2250189 (20658)(6-7-8)

## வாடகைக்கு

உடுவில் பகுதியில் ஒரு மேல்மாடி வீடு வாடகைக்குவிடப்படும்.
பார்வையிட விரும்புவோர்
23.07.2012/ மாலை 16.20 க்கு
பார்வையிடலாம்
தொடர்பு : 021 224 1700,
077 6623943
(20655)(6-7-8)

## வீடு விற்பனைக்கு

உடுவில் மானிப்பாய் வீதியிலிருந்து 100 யார் அருகில் (உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் ) ஐந்து அறைகள் உட்பட எல்லா வசதிகளும் உள்ள நல்ல சுற்றாடலில் அமைந்த வீடு விற்பனைக்கு.
பார்வையிடல் 22.07.2012 தொடக்கம் - 25.07.2012 வரை
தொடர்பு: 077 8546 124
(20541)(45.6.7)

## காணி விற்பனைக்கு

மல்லாகம் கே.கே.எஸ். வீதியில் 2¼ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
(பழைய சோடாக்கம்பனி ஒழுங்கை)
தொடர்பு : 077 7532994 (கண்ணன்),
077 4819801 (சுந்தரம்)
(20542)(6-7-8)

## குத்தகைக்கு காணி தேவை

யாழ். மாநகர சபை எல்லையில் இருந்து 6 கிலோ மீற்றர் தூரத்துக்குள் நீர், மின்சார வசதியுடன் 5 பரப்புக் காணி தேவை.
தொடர்புகளுக்கு: 0773296407, 0215670350
(திங்கள் - வெள்ளி 8.30 - 5.00 வரை)
(20613) (2-6-7)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1976 இல் பிறந்த பரணி நட்சத்திரம் ராசி மேடம், கிரகபாவம் 92.½ 8 இல் செவ்வாய்க்குற்றம் உடையவருக்குத் தகுந்த மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:-
0773580724, 0770393879 (20537) (2-6-7)

---

## ஒத்துமாறல்

மத்திய அரசாங்கத்தின் நியமனத்தின் கீழ் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் ஒருவர் யாழ். மாவட்டத்திலுள்ள, பிரதேச செயலகம் ஒன்றுக்கு அல்லது வேறு மத்திய அரசாங்க திணைக்களம் ஒன்றுக்கு ஒத்துமாற விரும்புகின்றார். ஒத்துமாற விரும்புபவர்கள் தொடர்புகளுக்கு:- 0779912690, 0779004235
(20673) (2-6-7)

உதயன்
விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# VEHICLE SALE

TOYOTA AXIO 141 YEAR 2010/07
X HID LIMITED PEARL WHITE
WITH TV. DVD REVERSE CAMARA
5COOP LIGHT FULL OPTION
சிறி ரங்கநாதன் ரேடர்ஸ்
190, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
077 6000 173 (சி/1373) (45.07.6)

---

aat SRI LANKA

இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட **கணக்காளராக** நீங்கள் வருவதற்கு நாங்கள் **உத்தரவாதம்**

O/L தகமையுடன் தொழில்த்துறைக் கணக்காளராய் (ACCOUNTANT) வருவதற்கான துரித வழி

- குறுகிய காலத்தில் தொழில்த்துறைக்கு ஏற்ற கல்வி
- குறைந்த பயிற்சிக்கட்டணம்
- சிறந்த அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்
- Job Training

பதிவுகளுக்கான இறுதித் திகதி 31.07.2012

(சி/1619)(6-7-8)

APTECH Computer Education
Mind Vishion College
(Reg No: PV 85546)
Navalar Road, Jaffna

0212219456

## மணமகன் தேவை

யாழ்.நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் ரொறன்ரோவில் நிரந்தர தொழில் புரியும் 1980 இல் பிறந்த 7 இல் செவ்வாயுள்ள அழகிய உயரமான உயர்கல்வி கற்ற தனது சகோதரிக்கு ரொறன்ரோவில் வேலை வாய்ப்புப் பெறக்கூடிய உயர் படிப்புடைய மணமகனைத் தேடுகின்றார். வெளிநாட்டில், உள்நாட்டில் உள்ளவர்களும் தொடர்புகொள்ளலாம்..
தொடர்பு :- விவாக இல 4381, மே/பா - உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
smmarriage@yahoo.com (20449) (2-6-7)

## உயர்தர சைவ றெஸ்ரோரன்றிற்கு வேலையாள்கள் தேவை

சமையல் அறை உதவியாளர், பாத்திரம் சுத்திகரிப்பவர், மேசை சுத்திகரிப்பவர், உணவு பரிமாறுபவர், காசாளர், பழரசம் தயாரிப்பவர். நல்லூர் உற்சவ காலத்துக்கும் தொடர்ந்து வேலை செய்வதற்கும் ஆண், பெண் வேலையாள்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:- 0777661083, 021 222 8294
(20668) (2-6-7)

## மதுரா அழகுக் கலைப்பயிற்சி நிலையம் கோப்பாய்

கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்





பியூட்டிஸியன் டிப்ளோமா கோர்ஸ் தையல், சாறிவேக், கேக் ஐசிங், ஹான்ட்வேர்க் ஆகிய பயிற்சிகள் நடைபெறுகின்றன.
பயிற்சியில் இணைய விரும்புவோர் உடன் தங்கள் பதிவுகளை நேரடியாக மேற்கொள்ளவும்.
பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**பதிவுக்கான இறுதித்திகதி - 24.07.2012**
**அனுமதிக்கட்டணம் - 1000/=**

பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்.
ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.
T.P : 077 9362642 பழைய வீதி, கோப்பாய்.
(20550)(6-7-8)

---



## உங்களின் உடலினை நீங்கள் கட்டுக்கோப்புடன் வைத்துள்ளீர்களா?

மிதமிஞ்சிய உடல் வளர்ச்சி, உடலின் எடை அதிகரித்தல், வயிறு வைத்தல், கெஸ்ரிக் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களினால் நீங்கள் கவலைப் படுகிறீர்களா.......?

இதோ அதற்கான தீர்வு எம்மிடமிருந்து.....




ELECTRONIC TREADMILL

BODY STRIDER

நல்லைக் கந்தன் கொடியேற்றத்தை வரவேற்று அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

விஷேட சலுகையுடன் கூடிய விலைக்கழிவு வழங்கப்படும்.
அத்துடன் நிறுவைத் தராசும் வழங்கப்படும்.



WEIGHT LIFTING BENCH

*யாழ்ப்பாணத்தின் முன்னணி நிறுவனமான*

# யாழகம் [ஸ்போர்ட்ஸ்]

(40 வருட அனுபவத்துடன்)

38, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

021-2225563

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் பஸ்தரிப்பிடத்துக்கு அண்மையில் 30 அடி அகலம் 60 அடி நீளத்தில் 2 மாடிக் கடைக் கட்டடம் உடன் வாடகைக்கு உண்டு.

**தொடர்பு : 0777232535**

(20881) (6.7.10)

## வீடு வாடகைக்கு

70/2, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணத்தில் புத்தம் புதிய வீடு
வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0214823297,
0770778346, 0773200727

(20883) (6.7.10)

## மோட்டர் சைக்கிள் விற்பனைக்கு

90 sri xxxx இலக்கமுடைய ஹொண்டா 200CC ஜப்பான் மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு.
T.P. 0777404926 /
0776145305 (18124) (2-6-7)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் மெயின் றோட்டில் உள்ள ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகில் உள்ள 10 அடி பாதையுடன் அமைந்துள்ள பொழி கல்லு கிணற்றுடனும் பனை, தென்னை உட்பட 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு : 077 6618920**

(20434(6-7-8)

## காணி விற்பனைக்கு

" கொழும்புத்துறை வீதியில் யோகர்சுவாமியார் ஆச்சிரமத்திற்கு அருகில் 3 பரப்பு குடியிருப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : ம. விஜயகுமார்
021 4925597

(20682)(6-7-8)

## நிர்வாக அலுவலர் தேவை (Administrative Officer)

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்திற்கு ஆங்கில அறிவுள்ள நிர்வாக அலுவலர் தேவை. அரச, தனியார் நிறுவனங்களில் கடமை புரிந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பங்கள் 31.07.2012ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(வி/1620)(5-6-7) யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

## மோட்டர் சைக்கிள் விற்பனைக்கு

மிகக்குறைந்த தூரம் ஓடிய CD.200 Road Master மோட்டார் சைக்கிள் ஒறிஜினல் உதிரிப்பாகங்களுடன் மிகவும் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. T.P. 077 740 4926

(20675) (2-6-7)

## விற்பனை

Diolog Unlimited Broad Band package
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-
**0772227793**

(20674) (2-6-7)

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் பொன்னுத்துரை

(முன்னாள் உரிமையாளர் சந்திரவிலாஸ், இருபாலைச் சந்தி)



யாழ்ப்பாணம், புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கு, இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பொன்னுத்துரை கடந்த 17.07.2012 செவ்வாய்க்கிழமை அன்று ரொறன்ரோ, கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், நடராசா-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் திவ்யமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லம், கமலம், பாலசிங்கம், யோகராசா மற்றும் இலங்கையில் வசிக்கும் கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனடாவில் வசிப்பவர்களான சந்திரா, இந்து, ரவி, நாதன், சுசி, கண்ணன், உதயன், கலா ஆகியோரின் அன்புத் தந்தையும், குகன், ஞானி, சுயிதா, சிறிகலா, அற்புதராசா, சர்மிளா, நந்தா, சைலன் ஆகியோரின் அன்பு மாமனும், சஞ்ஜீவ், ராஜீவ்,பவின்,சிபியா, தட்சா, பவிசன்,சியானி, அகீஸ், அருஸ், அஜி, கிளக்சியா, விஸ்வா,மித்திரா, மாதுமை, சனு, பிரிக்தி, கைலாஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2012) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். அன்றைய தினம் பேச்சியம்மன் கோயிலடி, கோப்பாய் தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பேச்சியம்மன் கோயிலடி,
கோப்பாய் தெற்கு. (20705)(5-6-7) தொடர்பு:0014162812120

தகவல்:
குடும்பத்தினர்.

## சாவகச்சேரி பிரதேசசபை

### பணிநிலை வெற்றிடம் தற்காலிகமாக நிரப்புதல்

| பதவி | கல்வித் தகைமை | வெற்றிடம் | வயதெல்லை |
|---|---|---|---|
| சுகாதாரத் தொழிலாளி (ஆண்கள்) | 8ஆம் வகுப்பு சித்தி | 4 | 18-45 |
| சுகாதார கங்காணி (ஆண்கள்) | 8ஆம் வகுப்பு சித்தி | 1 | 18-45 |
| சாரதி (சாரதி அனுமதிப் பத்திரமுடைய ஆண்கள்) | G.C.E.(O/L) சித்தி (கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி) | 1 | 18-45 |

விண்ணப்ப முடிவு திகதி : 27.07.2012
விண்ணப்பம் சுயமாகத்தயாரிக்கப்பட வேண்டும்.
அனுப்பவேண்டிய முகவரி:- சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.
திரு. சிற்றம்பலம் துரைராஜா,
தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.

(வி/1635) (6.7.10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலைய வீதியில் 2 பரப்பு காணி மதிலுடன் துப்பரவாக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உள்ளது. No Brokers வேண்டுவோர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

TP : 071 6208855

## மணமகள் தேவை

BSC (Hon), தனியார் கம்பனியொன்றில் உயர் தொழில் புரியும் 1986ல் பிறந்த மணமகனுக்கு தகுதியான மணமகள் தேவை.

தொலைபேசி இல 0773 229 858
Email : greenheart26@hotmail.com

## Study & Work in UK, Australia & Canada

2012 September Intake.

"இறுதிச்சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்"

Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும். ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.

Colombo T.P:0729994777/0117208752

Jaffna T.P : 0727685691/0772479683

V T L Mangement. 01, Deanston House. Deanston Place. Colombo 03.

## STUDY IN UK

Minimum IELTS 4.00 Required

**OUR SERVICE ABSOLUTELY FREE**

BEFORE THE VISA OR AFTER GETTING VISA
(Lowest Course fee with O/L)

flex Institute
4, IBC Road, Colombo 6.
Call: 0777-761346
www.flexinstitute.lk
(A Subsidiary of Flex Graphic)

FLEX Graphic

## வேலைக்கு ஆள் தேவை

சுகவீமுற்ற ஆண்மகன் ஒருவரை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு ஐம்பது வயதிற்கு மேற்பட்ட ஆண் தேவை. பொறுப்புக்கள் அற்றவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 2991810

(20723)(8-14)

## கடையும், புதுவீடும் வாடகைக்குண்டு

கிளிநொச்சியில் A9 வீதியில் இருந்து டிப்போ சந்தியில் இரத்தினபுரம் வீதியில் 100M தூரத்தில் 40 அடி நீளமுடைய கடையும், முற்றாக Tiles பதித்த புது வீடும் வாடகைக்கு உள்ளது. கடை per Month 9-10 ஆயிரம், வீடு 23 ஆயிரம், இரண்டு வருட வாடகை தேவை. தேவைப்படுபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

TP: 0778105563/0775647310



உ
சிவமயம்

ஆடிப்பூர தினத்தன்று
அமுத சுரபியில் அன்னதானம்
எதிர்வரும்

### ஆடிப்பூர தினமான
### 23.07.2012 திங்கட்கிழமை

நயினாதீவு நாகபூஷணி அம்பாளுக்கு ஆடிப்பூரவிழா (பூர்வகர்மா) சிறப்புடன் நடைபெறவுள்ளது. இத்தினத்தில் வரும் அடியார்கள் அனைவருக்கும் அமுது வழங்குவதற்கான ஏற்பாட்டினை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினர் சிறப்பு ஏற்பாட்டினைச் செய்துள்ளனர் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அன்னதான சபை
பிரதான வீதி, நயினாதீவு - 02,
தொலைபேசி இல. 021 321 3575

(20677) (45-7-6)

## மணமகன் தேவை

* இந்து கௌரவ 1984 பூரட்டாதி 4ம் பாதம் 7ல் செவ்வாய் 52 கிரகபாவமுடைய அரச தொழிலில் உள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை.
* இந்து கௌரவ 1981 திருவாதிரை 1ம் கால் உதயச்செவ்வாய் 35 கிரகபாவமுடைய அரச தொழிலில் உள்ள ஆணுக்கு மணமகள் தேவை.
* இந்து கௌரவ 1986 ரேவதி 45 கிரகபாவம் உள்ள பட்டதாரிப் பெண்ணுக்கு வெளிநாட்டில் மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு - 0779588253

(20722) (3.6.14)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் தியாகராஜா

(விவசாய சம்மேளனத் தலைவர், கோண்டாவில் மேற்கு)



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், சைவப் பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தியாகராஜா நேற்று (21.07.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரையப்பா - சீதாலக்ஷ்மி(சுபத்திரை) தம்பதியரின் அன்பு மருமகனும், விஜமணியின் அன்புக் கணவரும், அனுசா, அஜிதா, (கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்), அம்பிகைதாசன், (குட்டி), வைகுந்தவாசன் (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), அனிதா (யா/அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), கபிதா (முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனம், வடமாகாணம்) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை, பராசக்தி, சந்திரசேகரம்பிள்ளை, சுந்தரலிங்கம், சுப்பிரமணியம் மற்றும் கனகரத்தினம் (கனகலிங்கம்), பேரம்பலம் (அம்பலப்பெருமாள்குளம்), ஆகியோரின் சகோதரனும், சர்வேஸ்வரன், ( யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்), உதயகுமார், லக்ஷ்மி, ரூபி ஆகியோரின் மாமனும், சிவலக்ஷன், தரங்கினி, யதுசா, நிலக்ஷனா, கேசிகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சைவப் பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (20726)(8-14)

தகவல்:
குடும்பத்தினர்.

## துயர் பகிர்கின்றோம்



### குட்டிப்பிள்ளை கிட்ணர்

(முன்னாள் உதவி அரசாங்க அதிபர் நெடுங்கேணி, கோப்பாய்)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் இணைந்து நாமும் துயரத்தில் பங்கு கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சட்டநாதர் சிவனை பிரார்த்திக்கின்றோம்.

செல்லர் வீதி,
நல்லூர். (20724) (3.6.14)

திரு.திருமதி பொ.தம்பிப்பிள்ளை
குடும்பம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
14.04.1922

மறைவு:
03.08.2011



திதி: 22.07.2012 (சதுர்த்தி)

அமரர்

### நாகலிங்கம் சண்முகம்

எம்மை வாழ வழிகாட்டி
இவ் வையகத்தில்
வாழ்வாங்கு வாழ வைத்த
எம் தந்தையே....
நீங்கள் எம்மைப் பிரிந்து
ஓராண்டு சென்றாலும்
எமது இதய நதியில் ஓடமாக
உங்கள் நினைவுகள்
ஓடிக் கொண்டேயிருக்கும்..

12ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு. (20714)(6-7-8)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## திருமதி தவமணிநாச்சி புத்திரசிகாமணி



'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளின் சிரேஷ்ட ஊடகவியலாளர் இரா.புத்திரசிகாமணியின் பாரியாரான திருமதி தவமணிநாச்சி புத்திரசிகாமணி நேற்றுமுன் தினம் (20.07.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் திருமதி பச்சியம்மாள் நாச்சியார் தம்பதியரின் ஏகபுதல்வியும், காலஞ்சென்ற இராமசுவாமி மற்றும் திருமதி இராமாயி தம்பதியரின் அன்பு மருமகளும், தினகரன், கண்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனராஜ், காலஞ்சென்ற ஜெகன்மோகன் மற்றும் திருமதி யசோதரை ஆகியோரின் அன்புத் தாயும், திருமதி குமுதினி, சத்யமூர்த்தி, சசிதரன், வினோஜினி, சதீஸ்வரி, வினோதர்ஷன், வித்யலக்ஷ்னி ஆகியோரின் பெரிய தாயும், திருமதி விஜயலக்ஷ்மி, ச.சரவணபவன், இராஜதிலகன், பிரியதர்ஷனி, தனோஜா, புஸ்பதிலகம், தியானந்தனி ஆகியோரின் அன்பு மாமியும், கிருஷ்ணமூர்த்தி, காலஞ்சென்ற செல்வராஜ் மற்றும் சிவராஜா, திருமதி தனலக்சுமி, புனிதவதி ஆகியோரின் அருமை மைத்துனியும், திருமதி கம்சனா, சங்கீத், கபிஷான், கோகுலன், துவாரகா, லியாஷ்வினி, சகீர்ந்த்ரன், சசுந்த்ரன், சசுந்த்ரைன், தசுந்தரன், நிஷாந்த், லிதுர்ஷன் ஆகியோரின் அருமைப் பாட்டியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டெல்வின் B பிரிவு,
இறக்குவானை.

தகவல்:
இரா.புத்திரசிகாமணி. (கணவர்)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

தங்கி இருந்து வேலை செய்யக் கூடிய 45 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு- 0775017161

(20717) (3.6.14)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் சம்பியன் வீதியில் ஐந்து பரப்புக் காணியில் அமைந்துள்ள பெரிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு -
0772528968

(சி/1627) (14.3)

## பணிப்பெண் தேவை

சுண்டிக்குளியில் குழந்தையைப் பராமரிப்பதற்குப் பணிப்பெண் தேவை.
நாள் ஒன்றுக்கு 500/=

(20730)(8-14) தொடர்பு: 077 6752865

## வாகனம் விற்பனைக்கு

வவுனியாவில் நல்ல நிலையிலுள்ள 9 Sri-XXXX 1300 Model Sky B lue Volkswa gen Original condition, New paint Battery engine in Best condition car விற்பனைக்கு உண்டு.

விலை: 450,000/=
தொடர்பு: 0245676769

## தவறிவிட்டது

WPUR - 0284 இலக்க மோட்டர்ர் சைக்கிளின் இலக்கத்தகடு சாவகச்சேரிக்கும், மிருசுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு : 077 7351148

(சி/9343)(6-7-8)

## செங்கல் விற்பனைக்கு

மொத்தமாகவும்
சில்லறையாகவும் செங்கற்கள்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

பிரணவன் என்ரபிறைசஸ்
முத்திலைச்சந்தி, பருத்தித்துறை வீதி,
நல்லூர் யாழ்ப்பாணம்

T.P : 077 381 8799

(20712)(8-14)

## சமையலுக்குஆள் தேவை

பிரபல Restaurant ஒன்றுக்கு சமைப்பதற்கு ஆள் தேவை.

தொடர்பு: 077 181 5917 (20716)(5-6-7)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

60 நாள்கள் நிரம்பிய அல்சேசன் (ஜேர்மன் செப்பேட்), ஒரு வயது நிரம்பிய ஜேர்மன் செப்பேட், போமேறியன் நாய்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
இல.06, மதவடிலேன், திருநெல்வேலி.
077 101 6407 (20708)(5-6-7)

## தேவை

* ★ Video Editor
* ★ Photo Shop- Graphic Designer
* ★ Video Camera man

தொடர்பு: 0752895716 (20704)(5-6-7)

## பதவி வெற்றிடம்

பல்தேசிய நிறுவனத்துக்கு
**Education Technologies**
கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* Trainee Marketing Executive
* Marketing Executive
* அலுவலக உதவியாளர் (G.C.E. O/L Pass)
* க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி
* 30 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்

நேர்முகப்பரீட்சைகள் 23 July முதல் - 28 July வரை நடைபெறவுள்ளன தகைமை உடையோர் நேரில் வரவும்

Can earn more than R.s 40, 000/= With in 3 months and overseas Trips Education Technologies

N0.100, 2nd Floor, Manipay Road, Jaffna
Contact : Mr.Anthany (077 3434823)

(சி/1621)(8-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சேவாக்கின் பிடியெடுப்புடன் போராடும் குலசேகரா....



ஆட்டநாயகன் ஹோக்லி

# போராடி வென்றது இந்தியா

இந்திய அணி சிறப்பான சகலதுறை ஆட்டத்தின் மூலம் இலங்கை அணியை 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் போராடி வென்றது. இலங்கையின் சார்பில் குமார் சங்ககார அடித்த சதமும் இதனால் வீணானது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான முதலாவது ஒரு நாள் ஆட்டம் நேற்று ஹம்பாந்தோட்டையில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் டோனி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

கம்பீர், சேவாக் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறக்கப்பட்டது. ஆட்டத்தின் இரண்டாவது பந்து பரிமாற்றத்திலேயே சேவாக் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் கொடுக்கப்பட்ட பிடியெடுப்பு வாய்ப்பை டில்ஷான் வீணடித்தார். தொடர்ந்து அடுத்த பந்து பரிமாற்றத்திலேயே அணி 7 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கம்பீரை 3 ஓட்டங்களுடன் இழந்தது. அதன் பின்னர் இணைந்த சேவாக், ஹோக்லி ஜோடி சுமாரான ஆட்டத்தை ஆரம்பத்தில் வெளிப்படுத்தியது. இந்த ஜோடி நிதானமாகவே ஆரம்பத்தில் ஆடியது.

இந்திய அணி 45 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், சேவாக் 24 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பெரேராவின் பந்து வீச்சில் குலசேகரா அபாரமான பிடியெடுப்பு மூலம் சேவாக்கை ஆட்டமிழக்கச் செய்தார். இருப்பினும் குலசேகரா பந்து நிலத்தில் தொட்ட பின்னரே கைக்குள் பிடியெடுத்ததாக தெரிவிக்கப்பட்டு அந்த ஆட்டமிழப்பு ரத்தானது. அத்துடன் குலசேகரா காயம் காரணமாக களத்தை விட்டு வெளியேறினார். தொடர்ந்து அதே பந்து பரிமாற்றத்தில் ஹோக்லி 16 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பெரேராவிடம் கொடுத்த பிடியெடுப்பை அவர் தவறவிட்டார். இது இந்திய அணியின் இரண்டாவது இலக்குக்கு சிறப்பான இணைப்பாட்டத்தை அமைக்க உதவியது.

தொடர்ந்தும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய சேவாக் தனது 38 ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். இது அவர் இந்த ஆண்டில் பெற்றுக் கொள்ளும் முதலாவது அரைச் சதமாக அமைந்தது. தொடர்ந்து ஹோக்லியும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட இந்திய அணியின் ஓட்ட வேகம் அதிகரித்தது. இரண்டாவது இலக்குக்காக 173 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் சேவாக் 97 பந்துகளில் 96 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டானார்'. தொடர்ந்து நுழைந்த ரோகித் சர்மா 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற இந்தியாவின் அதிரடி மெல்ல அடங்கியது.

மறுமுனையில் ஆடிய ஹோக்லி 106 பந்துகளில் தனது 12 ஆவது சதத்தைக் கடந்தார். தொடர்ந்து 106 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அவரது ஆட்டம் முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் இணைந்த ரெய்னா, டோனி ஓட்ட வேட்டை நடத்தினர். இருவரும் ஆளுக்காள் மாறி மாறி அதிரடியில் வெளுத்துக்கட்ட இந்திய அணியின் ஓட்டவேகம் சடுதியாக அதிகரித்தது.

ரெய்னா 44 பந்துகளில் தனது 22 ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். தொடர்ந்து ஆட்டத்தின் இறுதிப் பந்து பரிமாற்றத்தில் ரெய்னா 45 பந்துகளில் 50 ஓட்டங்களுடனும் அடுத்த பந்தில் டோனி 29 பந்துகளில் 35 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். திஸ்ஸர பெரேராவுக்கு 'ஹற்றிக்' வாய்ப்பு கிடைத்தபோதும் மூன்றாவது பந்தை எதிர்கொண்ட இப்ரான் பதான் தடுத்தாட அந்த வாய்ப்பு பறிபோனது. இறுதியில் இந்திய அணி 6 இலக்குகளை மாத்திரம் இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பந்து வீச்சில் திஸ்ஸர பெரேரா 70 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், மத்தியூஸ், குலசேகரா ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 315 என்னும் கடின இலக்கை விரட்ட தரங்க, டில்ஷான் ஜோடி களமிறங்கியது. முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே பந்து அளவுக்கு அதிகமாக 'ஸ்விங்ஸ்' ஆகியது. இதனால் அகலப் பந்துகளாக இலங்கை அணிக்கு உதிரிகள் தாராளமாக வழங்கப்பட்டது. இருந்தும் இரண்டாவது பந்து பரிமாற்றத்தில் அணி 9 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் டில்ஷான் 6 ஓட்டங்களுடன் நடுவரின் தவறான தீர்ப்பால் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.


அதன் பின்னர் இணைந்த சங்ககார, தரங்க ஜோடி நிலைத்து நின்றாடியது. களநிலைமைக்கு ஏற்றவாறு பொறுமையாகத் துடுப்பெடுத்தாடி அணியை வழிநடத்தியது. இரண்டாவது இலக்குக்காக இந்த ஜோடி 77 ஓட்டங்களைப் பகிர்ந்த போது தரங்க 28 ஓட்டங்களுடன் அஸ்வினின் சுழலில் சிக்கினார். தொடர்ந்து நுழைந்த சந்திமால் 13, மஹேல அதிரடியாக ஆட முற்பட்டு 8 பந்துகளில் 12 ஓட்டங்களுடனும், மத்தியூஸ், திரிமன்னே தலா 7 ஓட்டங்களுடனும் பவிலியன் திரும்பினர். இவர்களது சீரான வெளியேற்றத்தால் இலங்கை அணி 191 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை 38.2 பந்துப் பரிமாற்றங்களில் இழந்திருந்தது.

அதன் பின்னர் சங்ககாரவுடன் இணைந்த பெரேரா இலங்கை அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்ல முற்பட்டார். சங்கா ஆரம்பத்தில் அமைதியாக ஆடிய போதும் பின்னர் அதிரடியாக ஆடினார். 125 பந்துகளில் தனது 14 ஆவது சதத்தை சங்கா பூர்த்தி செய்தார். அத்துடன் இந்த வருடம் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரர்கள் வரிசையில் ஆயிரம் ஓட்டங்களைத் தாண்டி முதலிடத்தையும் தக்க வைத்துக் கொண்டார். சங்கா, பெரேரா ஓட்ட வேட்டையில் இந்திய அணி திணறத் தொடங்கியது. பவுண்டரிகள் சகஜமாக எல்லைக் கோட்டை முத்தமிட்டன.

ஆட்டத்தின் இறுதிக்கட்டத்தை எட்ட அதிரடியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் சங்கா வீணாக ஆட்டமிழந்தார். 151 பந்துகளில் 133 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சங்ககார, உமேஸ் யாதவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த ஹேரத் ஓட்டமெதனையும் பெறாமல் 'ரன்அவுட்டானார்'.

மறுபுறம் அதிரடியில் இந்தியாவை கலக்கிக் கொண்டிருந்த பெரேரா அதிரடியாக சிக்ஸர் விளாச முற்பட்டு எல்லைக் கோட்டருகே வைத்து பிடியெடுக்கப்பட்டு ஆட்டமிழந்தார். 28 பந்துகளில் 44 ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழந்தார். இறுதிப் பந்து பரிமாற்றத்தில் எட்ட முடியாத இலக்கான 38 ஓட்டங்கள் காணப்பட்ட நிலையில் மலிங்க துடுப்பெடுத்தாடினார்.

உமேஸ் யாதவின் பந்து வீச்சை புரட்டிப் போட்ட மலிங்க 2 சிக்ஸர்கள், பவுண்டரி விளாச இலங்கை அணி 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றது. மலிங்க 10 பந்துகளில் ஆட்டமிழக்காது 19 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் இப்ரான் பதான், உமேஸ் யாதவ், அஸ்வின் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சதமடித்த ஹோக்லி தெரிவானார். (5)



சதமடித்த சங்கா




பெரேரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் சி.க.கூ. சங்கம் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்.மாவட்டச் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சமாசம் சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு நடத்திய விளையாட்டுப் போட்டியில் யாழ்.மாவட்டத்தில் இணுவில் அபிராமி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் முதலாம் இடத்தை பெற்று வெற்றிக் கிண்ணத்தை தட்டிச் சென்றது.

இந்தப் போட்டியில் இரண்டாம் இடத்தை ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் சிக்கணக் கடன் வழங்கும் கூட்டுறவு சங்கமும் மூன்றாம் இடத்தை மாவை சிக்கணக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கமும் பெற்றுக் கொண்டன.

போட்டியில் வெற்றி பெற்ற சிக்கணக் கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் வீரர்களின் விவரம் வருமாறு;



**100 மீற்றர் ஓட்டம் (18 - 30 வயது**
து.மயூரன் (ஏழாலை மேற்கு ஸ்ரீ.வி.ஜ)
மோ. மோகன்ராஜ் (இணுவில் அபிராமி)
சி.கபில்தேவ் (அல்வாய் வடக்கு நக்கீரன்)

**100 மீற்றர் ஆண்கள் (31 - 40 வயது)**
சி.ஜெயநந்தன் (மாவைக் கந்தன் சி.க.கூ)
செ.செல்வானந்தன் (சங்கானை.ப.நோ.கூ.ச.ஊ )
தி. சசிகரன் (சுன்னாகம் ப.நோ. கூ.ச.ஊ)

**100 மீற்றர் ஆண்கள் (40 வயதுக்கு மேல்)**
*மு.சத்தியசீவம் (மாவைக் கந்தன் சி.க.கூ)
த.முருகதாஸ் (சங்கானை ப.நோ.கூ.ச .ப)
சி.இராசரத்தினம் (ஏழாலை மே.ஸ்ரீ.விநா)

**200 மீற்றர் ஆண்கள் (18 30 வயது)**
மோ.மோகனராஜ்- (இணுவில் அபிராமி சி.க.கூ)
து.மயூரன்(எழாலை மேற்கு ஸ்ரீ.வி. )
சி.கபில்தேவ் (அல்வாய் வடக்கு நக்கீரன்)

**200 மீற்றர் ஆண்கள் (31-40 வயது)**
செ.செல்வாணந்தன் (சங்கானை ப.நோ.கூ.ச.ஊ)
சி.ஜெயநந்தன் (மாவைக் கந்தன் சி.க.கூ )
தி.சசிகரன் (சுன்னாகம் ப.நோ.கூ.ச)

**200 மீற்றர் (40 வயதுக்கு மேல்)**
மு.சத்தியசீவம் (மாவைக் கந்தன் சி.க.கூ.ச)
சி.இராசரத்தினம் ( ஏழாலை ஸ்ரீ முருகன் சி.க.கூ)
த. முருகதாஸ் (சங்கானை ப.நோ.கூ.ஊ)

**100 மீற்றர் பெண்கள் (18 -30 வயது)**
அ.சியாமளா (பண்டத்தரிப்பு மகளிர் சி.க.கூ.)
ப.சுஜேந்தினி (இணுவில் அபிராமி சி.க.கூ)
அ.ஷர்மிளா (பண்டத்தரிப்பு மகளிர்)

**100 மீற்றர் பெண்கள் (31 40 வயது)**
மோ.சுபாஜினி-(இணுவில் அபிராமி சி.க.கூ)
கா.சுஜிதா(செல்வா விநாயகர் சி.க.கூ)
வ.இந்திராணி (சிவகௌரி சி.க.கூ)

**100 மீற்றர் பெண்கள் (40 வயதுக்கு மேல்)**
வி.நகுலேஸ்வரி (நவாலி முருகானந்தா மகளிர்)
செ.கிருஸ்ணவேணி (மறவன் புலோ திருமகள் )
சி.அன்னபூரணம் (மாவைக் கந்தன் சி.க.கூ)

**200 மீற்றர் பெண்கள் (18 -30 வயது )**
ந.துசிதா (அல்வாய் வடக்கு நக்கீரன்)
ப.சுஜேந்தினி (இணுவில் அபிராமி சி.க.கூ)
அ.சியாமளா (பண்டத்தரிப்பு மகளிர்)

**200 மீற்றர் பெண்கள் (31-40 வயது)**
மோ.சுபாஜினி (இணுவில் அபிராமி சி.க.கூ)
ப.சரிதா (அல்வாய் வடக்கு நக்கீரன்)
வ.இந்திராணி (சிவகௌரி சி.க.கூ)

**200 மீற்றர் பெண்கள் (40 வயதுக்கு மேல்)**
கு.ஸ்ரீராஜினி (நீர்வேலி ஸ்ரீ முருகன்)
வி.நகுலேஸ்வரி (நவாலி முருகானந்தா மகளிர்)
சி.அன்னபூரணம் (மாவைக் கந்தன் சி.க.கூ)

**100X4 அஞ்சல் ஆண்கள்**
ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர்
இணுவில் அபிராமி சி.க.கூ
காரைநகர் பிராந்திய சி.க.கூ

**200X4 அஞ்சல் ஆண்கள்**
ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர்,
இணுவில் அபிராமி சி.க.கூ
அல்வாய் வடக்கு நக்கீரன் சி.க.கூ

**100X4 அஞ்சல் பெண்கள்**
இணுவில் அபிராமி சி.க.கூ
அல்வாய் வடக்கு நக்கீரன் சி.க.கூ
ஏழாலை ஸ்ரீ விநாயகர் ஐ.நா.ச

**200X4 அஞ்சல் பெண்கள்**
இணுவில் அபிராமி சி.க.கூ
ஏழாலை ஸ்ரீவிநாயகர் ஐ.நா.ச.
அல்வாய் வடக்கு நக்கீரன் சி.க.கூ.

**கயிறு இழுத்தல் பெண்கள்**
ஏழாலை ஸ்ரீ விநாயகர் ஐ.நா.ச.
நவாலி முருகாணந்தா சி.க.கூ

**கயிறு இழுத்தல் -ஆண்கள்**
சுன்னாகம் ப.நோ.கூ.ச. ஊ.சி.க
சங்கானை ப.நோ.கூ.ச.ஊ.சி.க

**மென்பந்து கிரிக்கெட்**
ஏழாலை ஸ்ரீ விநாயகர் ஐ.நா.ச,
புலோலி ப.நோ.கூ.ச.

(த-17)

## இறுதியாட்டம் இன்றிரவு

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமுக நிலையத்தினரால் நடத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டிக்கு ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் தகுதி பெற்றுள்ளன.

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ், கிளிநொச்சி மாவட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் கரப்பந் தாட்டச் சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டி இன்று இரவு 7.30 மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெறவுள்ளது. இறுதிப் போட் டிக்கு பிரதம விருந்தினராக வடமாகாண தேசிய இளை ஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் விஸ்ரீஸ்காந் தரூபன் கலந்துகொள்ளவுள்ளார்

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் பன்னாலை ஸ்ரீ கணேசா விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. இதில் முதலாவது சுற்றை மிக இலகுவாக 25:14 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் தன தாக்கியது.

எனினும் இரண்டாவது சுற்று சிறிது விறுவிறுப்பானதாக காணப்பட்டது. இதில் பன் னாலை ஸ்ரீ கணேசா அணியினர் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தனர். எனினும் இறுதி நேரத்தில் சிறப்பாக செயற்பட்ட ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் அடுத்தடுத்து புள்ளிகளைப் பெற இரண்டாம் சுற்று 25:23 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஆவரங்கால் மத்தி அணியினர் வசமானது. மூன்றாம் சுற்றையும் 25:12 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் இலகுவாக வென்ற ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற சுற்றுக்கணக்கில் போட்டியில் வெற்றியீட்டியது.

இரண்டாவது போட்டி மிகவும் விறுவிறுப்பானதாக இருந்தது. முதலாவது சுற்றில் இரு அணிகளும் மாறி மாறிப் புள்ளிகளை பெற்று வந்ததால் எந்த அணி வெற்றி பெறும் எனக் கணிக்க முடியாதிருந்தது. சுற்றை வெற்றி கொள்ள ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் 29 புள்ளிகளைப் பெறவேண்டியிருந்தது. நீண்ட நேர இழுபறிக்குப் பின்னர் முதலாம் சுற்று 29:27 என்ற புள்ளிகள்வித்தியாசத்தில் ஆவ ரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி வசமானது. இரண்டாம் சுற்றும் 25:18 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி வசமான்து. தொடர்ந்து மூன்றாம் சுற்றிலும் ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்ககழகம் மூன்றாம் சுற்றையும் 25:23 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் கைப்பற்றிக்கொள்ள 3:0 என்ற சுற்றுக்கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தது. (130)

# வட மாகாண தடகளச் சாதனையாளர்கள்

வட மாகாண தடகளப் போட்டியில் இந்த வருடம் பல புதிய சாதனைகள் வீர வீராங்கனைகளால் நிகழ்த்தப்பட்டுள்ளன. யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இந்த மாதம் 4ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதிவரை நடைபெற்று முடிந்த மாகாண தடகளப் போட்டியிலேயே இதுவரை முறியடிக்கப்படாமல் இருந்த பல சாதனைகளை இந்த வருடம் தகர்த்தெறிந்தனர். சரித்திரம் படைத்த வீர வீராங்கனைகளின் விவரமும், அவர்களின் சாதனைப் பட்டியலும் வருமாறு:



பவித்திரா

19 வயதுப் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் இதுவரை சாதனையாக 2.65 மீற்றர் உயரத்தைக் கடந்தமையே பதிவு செய்யப்பட்டிருந்தது. இதனை முறியடித்த அளவெட்டி அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.பவித்திரா 3.10 மீற்றர் தூரத்தினைக் கடந்துபுதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். இவர் 2011 ஆம் ஆண்டு தேசிய மட்டப்போட்டியில் 3 மீற்றர் உயரத்தினைக் கடந்து சாதனை நிலைநாட்டியிருந்தார். அந்தச் சாதனையை விஞ்சி வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் 3.10 மீற்றர் பாய்ந்துள்ளார்.

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் இதுவரை சிறந்த பெறு பேறாகக் காணப்பட்ட 25.48 மீற்றர் என்ற சாதனையை தகர்த்தெறிந்து வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆர். தர்சிகா இந்த வருடம் இடம்பெற்ற வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் 30.91 மீற்றர் தூரத்துக்கு எறிந்து புதிய சாதனையைத் தன்வசமாக்கியுள்ளார். இவர் குண்டு எறிதல் போட்டியில் 9.80 தூரத்தினை எறிந்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளது



தர்சிகா



ரி. நாகமயில்

17 வயதுப் பிரிவு பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் இதுவரை சிறந்த பெறுபேறாகக் காணப்பட்ட 4.71 மீற்றர் என்ற சாதனையை வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்தைச் சேர்ந்த ரி.நாகமயில் இந்த வருடம் இடம்பெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் 4.74 மீற்றர் தூரத்தைப் பாய்ந்து புதிய சாதனை படைத்துள்ளார்.

21 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் இதுவரை சிறந்த பெறு பேறாக இருந்த 5 நிமிடம் 36.3 செக்கன் என்ற சாதனையை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எம். வினோஜினி 5 நிமிடம் 26.9 செக்கனில் ஓடி முறியடித்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இவர் 5000 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் 21 நிமிடம் 06.4 செக்கனில் குறித்த தூரத்தை ஓடிமுடித்து புதிய சாதனையைப் படைத்துள்ளார்.



வினோஜினி



சு.வேந்திரன்

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் இதுவரை சிறந்த பெறுபேறாகக் காணப்பட்ட 2 நிமிடம் 09.0 செக்கன் என்ற சாதனையே இருந்து வந்தது. இந்த வருடம் நடைபெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் எஸ்.சுவேந்திரன் 2 நிமிடம் 04.8 செக்கனில் குறித்த தூரத்தை ஓடி முடித்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இதேவேளை 200 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் இவர் 24.1 செக்கனில் ஓடி புதிய சாதனைக்குச் சொந்தக்காரராகியுள்ளார்.

21 வயது ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் இதுவரை சிறந்த பெறுபேறாகக் காணப்பட்ட 12.56 மீற்றர் என்ற சாதனையை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியைச் சேர்ந்த ஆர். நிர்மலேந்திரா இம்முறை நடைபெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியின் போது 12.59 மீற்றர் தூரத்தினை எறிந்து முறியடித்து புதிய சாதனை நாட்டினார்.



நிர்மலேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரி மண்டபத்தில் அதிபர் நோயல் விமலேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவனும் மகப்பேற்று வைத்திய நிபுணருமான வைத்தியகலாநிதி சுஜாகரன் மற்றும் திருமதி சுஜாகரன் நிஷாந்தினி ஆகியோர் விருந்தினராகக் கலந்துகொண்டனர். (ம-86)



பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்கும் திட்டத்தின் கீழ் ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலையில் காய்ச்சிய பால் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. (ம-100)



இலங்கையின் முதலாவது சித்த மருத்துவக் கல்லூரியான லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரியின் 2012 ஆம் ஆண்டுக்கான புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு அண்மையில் 2 ஆம் வருட மாணவர்களால் நடத்தப்பட்டது.



கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய உயர்தர மாணவர் மன்ற ஒன்றுகூடல் நடைபெற்றபோது விருந்தினர்களாக கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன், கல்வியியல் துறை தலைவர் கலாநிதி அனுஷியா சத்தியசீலன் ஆகியோரை வித்தியாலய அதிபர் வ.நடராஜா, உயர்தர மாணவர் மன்றத் தலைவர் ஆகியோர் அழைத்து வருகின்றனர். (ம-9)



மது மற்றும் போதைவஸ்து, புகைப்பிடித்தல் எதிர்ப்பு நிகழ்வு அண்மையில் வலி.மேற்குப் பிரதேச செயலகத்தால் சுழிபுரம் பகுதியில் நடத்தப்பட்டது. பனிப்புலம் இடும்பன் ஆலய முன்றிலில் நடைபெற்ற கருத்தரங்கில் பிரதேச செயலர் அ.சோதிநாதன் உரையாற்றுகிறார். (ம-201)




ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற்ற கட்டாயக் கல்வி விழிப் புணர்வுக் கூட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் சத்திய வாணி மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் உரையாற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் பாலஜெயந்தி, உதவி அதிபர், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோர் அமர்ந்துள்ளனர். (ம-100)





சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் முத்தமிழ் விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் விருந்தினர் வரவேற்கப்படுகின்றனர். கலை நிகழ்வு இடம்பெறுகிறது. (ம-86)



[illegible]கானந்தா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவில் வினோத உடைப் போட்டியின் ஒரு காட்சி. விளையாட்டில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகனேசன் பரிசில் வழங்குகிறார். (ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனை

முதலாம் கட்டை, மானிப்பாய் வீதி, உடுவிலில் பிரதான வீதியுடன் இணைத்து 5 ¼ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: சத்தியா, 0757012133, 0771577001 (F/1374) (2-6-7)

## உடனடி வேலைவாய்ப்புகள்

ஆண்கள் - A/C ரெக்னீசியன், வெல்டஸ், கட்டட உதவியாளர்கள் (35,000/=)
பெண்கள் - பணிப்பெண்கள் (40,000/ =)
பொதியிடுபவர்கள், உணவு மருத்துவம், தங்குமிடம் இலவசம். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு:- 077 4193321 (F/1375) (2-6-7)

## மஹோற்சவம்

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்த மாதம் 1ஆம் திகதி, புதன்கிழமையுடன் நிறைவடையவுள்ளது. எதிர்வரும் 31ஆம் திகதி தேர்த்திருவிழா இடம்பெறும். (16)

## தேவை

ஆன்மீக செயற்பாடுகள் மற்றும் மனித நேய உதவிகளை மேற்கொண்டு வரும் யாழ் சின்மயா மிஷன் அதன் சேவையை வடக்கில் விஸ்தரிக்கும் முகமாக கீழே குறிப்பிடப் பட்டுள்ள இடங்களில் இனாமாகவோ குறைந்த சலுகை அடிப்படையில் குறைந்த கட்டணத்திலோ காணி அல்லது வீடு தேவைப் படுகின்றது.

01. பரந்தன் சந்தியில் இருந்து இரணைமடுச் சந்தி வரையான A-9 பாதையில் இருந்து 100 மீற்றர் தூரத்திற்குள்
02. கே.கே.எஸ் வீதியில், கோண்டாவிலுக்கும் நாச்சிமார் கோயிலுக்கும் இடையில்
03. பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்கும் கோண்டாவில் சந்திக்கும் இடையில்.

தொடர்புகளுக்கு: வி.சத்தியநேசன்
0777730708, 0212212400
(20707) (6.7,10)

## வியாபார நிறுவனங்கள் அமைப்பதற்கு பொருத்தமான காணி வாடகைக்கு / குத்தகைக்கு

சாவகச்சேரி மத்திய பகுதியில் A 9 பிரதான வீதி செலான் வங்கி, பிரதேச செயலகம், கூட்டுறவுச் சங்கம் ஆகிய பிரதான ஸ்தாபனங்கள் அடங்கிய எல்லைப் பகுதியில் 5 பரப்பு (13 ஆயிரம் சதுர அடி) காணி குத்தகைக்கு / வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 744 1863, 077 154 2137, 077 548 9773 (20702) (45.6.9)

## வாடகைக்கு உண்டு

வவுனியா 2ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள இல.42,42A இலக்கமுடைய கட்டடத் தொகுதியின் 3ஆம் மாடி வாடகைக்கு உள்ளது. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
(1750 சதுர அடி பரப்பளவு, 5அறை, 1ஹோல்)
தொ.பே.இல. 077 363 8471, 077 058 4925
(சி/20680)(5-6-7)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் உறுப்பினர்களான திருமதி றஞ்சித மலர் ஞானேஸ்வரன், கு. தவராசா ஆகியோரின் அன்புத்தந்தை

### துரையப்பா குணரத்தினம்

(சீமெந்து கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர்)

அவர்கள் (21.07.2012) அன்று காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மாவிட்டபுரம், தெல்லிப்பழை

நிர்வாகத்தவர்கள், அங்கத்தவர்கள்,
மாவைக்கந்தன் சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கம்
(20684)(6-7-8)

## மரண அறிவித்தல்

### நாகமணி குணரத்தினம்

(முன்னாள் இ.போ.ச.நடத்துனர்)

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் இல.81, 8ஆம் வாய்க்கால், உருத்திரபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட நாகமணி குணரத்தினம் 21.07.2012 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ் சென்றவர்களான நாகலிங்கம் - நல்லம்மா தம்பதியரின் அருமை மருமகனும், அன்னலட்சுமியின் ஆருயிர் கணவனும் நளாயினி, குணாளினி, வாகீசன் (கொலண்ட்), கேதீசன் (முகாமைத்துவ உதவியாளர், கரைச்சிப் பிரதேச சபை-கிளிநொச்சி), சுதாஜினி, திவாஜினி (உப தபால திபர்-உருத்திரபுரம்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சிறிகாந்தன், கோபாலகிருஸ்ணன், றோசா, புனிதா, சத்தியசீலன், விஜிந்தனன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் உருத்திரபுரம் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல. 81, 8ஆம் வாய்க்கால்,
உருத்திரபுரம், கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்

## டிப்பர் வாகனம் விற்பனைக்கு

TATA, Li - xxxx தொடரிலக்கமுடைய தனியார் கம்பனியில் குத்தகைக்குப் பாவனையில் உள்ள டிப்பர் வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0773719176 (20549) (2-6-7)

## நாஹா மருத்துவ நிலையம்

கை, கால்களை முடக்கிவிழுத்தும் வாதம், ஆஸ்மா, தீராத புண்கள், சிறுநீரகப் பாதிப்புக்கள், ஈரல் பாதிப்பு நோய்க்கான சாதனை புரியும் மருந்தியல்
நேரம்:- 3pm - 7 pm சனி, ஞாயிறு:- 8 am - 2 pm
T.P. 0773212740
வங்கி முன் லேன், சந்நாவத்தை வைரவர் கோயிலடி (ஜெயபதி வீடு), மாவிட்டபுரம். (20548) (2-6-7)

UK, USA, Canada, Newzealand, Denmark, Japan, Italy, France...
வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கு

## வங்கியில் பணவைப்பு

அரச வங்கியின் மூலமாக ஒரே தினத்தில் சேவை முன் 6மாத காலமும் பின் 3மாத காலமும் FD, CD, BOOK

077 863 4449

UNION SPEED LINE
No.395, Galle Road, Kollupitiya, Colombo - 03
(8/1369)(6-14-8)

## Spot Admission For EUROPE

ஐரோப்பிய நாட்டு பல்கலைக்கழக/கல்லூரிகளின் உயர்கல்வி ஆலோசகர் தற்போது இலங்கையில், நேர்முகப்பரீட்சைகள் நடத்தி ஆலோசனைகள் வழங்குகிறார்கள்.

2012 August, September அனுமதிக்கான Spot Admission இம்மாதம் 28ம், 29ம் திகதிகளில் யாழ் மண்ணில் உதயன் கேட்போர் கூடத்தில், 30ம் திகதியில் இருந்து அடுத்த மாதம் 5ம் திகதி வரை கொழும்பில்



எங்களிடம் மட்டுமே! VISA 100%

விசா கிடைத்தபின்பு பாடநெறிக்கான கட்டணம் ரூ 150 000 மட்டுமே... வருடத்திற்கு US $2900

- MBBS
- Engineering
- Aircraft Flight Operation (Pilot)
- Management
- Hotel & Tourism
- Computing
- Automation
- Marketing
- Banking
- Nursing • Law
- HR • Design

1000's of courses...

- பட்டப்படிப்புடன் பகுதிநேர வேலைவாய்ப்பு
- IELTS அவசியமில்லை
- ஆகக்குறைந்த கல்வித்தகைமை O/L
- Sponsorship தேவையில்லை
- கற்கைநெறியின் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தும் வசதி
- விடுமுறைநாட்களில் விரும்பிய ஐரோப்பிய நாடுகளில் பகுதிநேர வேலைவாய்ப்புகள்
- குறைந்த வாழ்க்கைச் செலவு
- குடும்ப அங்கத்தவர்களுடன் இணைந்து கொள்ளும் வசதி

STUDY/ VISIT/ BUSINESS
• Sweden • New Zealand • Italy
• German • Singapore • UK
• France • Ukraine • Cyprus

072 62 69 956
077 354 64 00
87, பேராதெனிய வீதி, கண்டி.

Rohaka (Pvt) Limited
வெளிநாட்டுப் பட்டப்படிப்பிற்கான ஆலோசகர்கள்
91, 5 வது மாடி, காலி வீதி, பம்பலப்பிட்டிய, கொழும்பு 04 (மயஸ்ரிக் சிட்டி அருகில், சிங்கர் கட்டிடத்தொகுதியில்)
தொலைபேசி. 0112 590 445 www.rohaka-global.com
(இ/1371)(6-14-8)

## உயிரூட்டுகின்றோம்

தொழில்சார் மின்சார உபகரணங்கள், அனைத்தையும் உடனடியாகத் திருத்தி உயிரூட்டிக் கொள்ளவும் புதியனவற்றைக் கொள்வனவு செய்யவும் எங்கள் ஸ்தாபனத்தை நாடுங்கள். நாங்கள் விற்பனை செய்யும் சகல உபகரணங்களுக்குமான உத்தரவாத சேவை உடனடியாக எங்களால் வழங்கப்படும்.



5K, 2 K Diesel Generator




Green House Trading Company,
No.05, Karuwapulam Lane,
Adiyapatham Road, Kokuvil East,
Tel/Fax: 021 2226459, 071 4843432, 071 6805668.
(C/1617)(6-14-8)



## ஆடிப்பூரத்திருவிழாவும் ஸ்ரீ சக்கர உருத்திர விமானப் பிரதிஷ்டையும் கும்பாபிஷேகப் பெருவிழாவும்

அன்புடையீர்!

நிகழும் நந்தன வருடம் ஆடித்திங்கள் 08ஆம் நாள் திங்கட் கிழமை (23 ஜூலை, 2012) அன்று விசுவமடு, (றெட்பானா) மாணிக்கபுரம் பதியில் தான் தோன்றியாகிக் கோயில் கொண்டிருக்கும் அன்னை பெரிய காந்தி ஆலயத்தின் ஆடிப்பூரத்திருவிழா வழமை போல பக்தி பூர்வமாக இடம்பெற அன்னையின் ஆசிகைகூடியுள்ளது.

அன்றைய நாளில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ சக்கர உருத்திர விமானப்பிரதிஸ்டை இடம்பெற உள்ளது.

ஆலயத்தின் அருட்குரு, சாந்தன் ஐயாவின் வழிகாட்டலில் புதிய சந்நிதியில் கோயில் கொண்டிருக்கும் அம்பிகைத் தாயாருக்கு சந்தனக்காப்பிடல் வைபவமும் 22.07.2012 காலை 7.00 மணிமுதல் மாலை 6.00மணிவரை நடைபெற இறையருள் கைகூடியுள்ளது.

எனவே அன்னையின் அடியவர்கள், சைவாபிமானிகள் மற்றும் அன்பர்கள் யாவரும் மேற்கூறிய தினங்களில் ஆலயத்துக்கு வருகை தந்து கிரியைகளிலும் பங்கு பற்றி எம்பெருமானினதும் அன்னையினதும் அருளைப்பெற்று வளம்பல பெற்று இன்புற்றிருக்க வேண்டுகின்றோம்.

ஓம் சக்தி

313, மாணிக்கபுரம்,
றெட்பானா, விசுவமடு.

அருட்குரு சாந்தன் ஐயா
மற்றும்
ஆலய நிர்வாகிகள்.
தொ.பேசி:077-5496321

வழிக்குறிப்பு :- A-9 வீதியில் பரந்தன் சந்தியில் இறங்கி புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு செல்லும் பேருந்துகளில் பயணித்து 12ம் மைல் கல், றெட்பானா சந்தியில் இறங்கி ஆலயத்தை வந்தடையலாம். முச்சக்கர வண்டிச் சாரதிகளிடம் விசாரித்து உதவிபெறமுடியும்.
(20676) (6.7,10)

## சமுதாய முன்னேற்றக் கழகம் பாலர் பகல் விடுதி நீர்வேலி

### மேற்பார்வையாளர் தேவை

சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு மேற்பார்வையாளர் பதவிக்கு பெண் பணியாளர் தேவையாகவுள்ளது.

வேண்டப்படும் தகைமைகள்:

1. க.பொ.த (சா.த) பரீட்சையில் தமிழ், ஆங்கிலம், கணிதம் உட்பட குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி
2. முன்பள்ளி கற்பித்தலுக்கான பயிற்சி நெறிகள் பூர்த்தி செய்த சான்றிதழ்கள்
3. பாலர்களுக்கான கல்வி கற்பித்தல் தொடர்பான முன் அனுபவ சான்றிதழ்கள் (ஆங்கிலம் உட்பட)
4. ஆங்கிலத்தில் உரையாடக்கூடிய தன்மை
5. நவீன கற்பித்தல் செயற்பாடுகளில் அனுபவம்
6. வயதெல்லை 25 - 45 இடைப்பட்டதாக இருத்தல்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். முன் அனுபவம் கற்பித்தலில் சிறப்புத்தன்மை என்பவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பிக்கத் தகுதியுடையோர் எதிர்வரும் 27.07.2012 ஆம் திகதிக்கு முன்பாக தலைவர், பாலர் பகல் விடுதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி என்ற முகவரிக்கு சுயவிபரங்களுடன் (தொலைபேசி இலக்கம் உட்பட) விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் கையளிக்கவும்.

(நீர்வேலி கந்தசுவாமி கோயில் தெற்கு வீதியில் நிலையம் அமைந்துள்ளது)

பாலர்பகல் விடுதி, நீர்வேலி (20706)(6-7-8) தலைவர்

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

### கந்தையா பிறேமராஜா

(கந்தசாமி)

மலர்வு
25★07★1942

உதிர்வு
22★07★2011

ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
உங்கள் நினைவு மறாது

இல. 6,
3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
(20679) (45.6.22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CLTP Unitல் புதிய பிரிவுகள் ஆரம்பம்**
- PHP/ MySQL/ HTML/ JavaScript
- Web Designing
- ADBMS

கற்கைநெறி முடிவில் சுயமாக மென்பொருள் (Software) வடிவமைக்க உங்களால் முடியும்.
BIT, HND Project க்கான ஆலோசனைகள்
**204,Brown Road,Jaffna. 0213201999, 0772517223**

**STUDY IN UK**
உங்கள் **LONDON** செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்
**GCE(O/L)** தகமை போதுமானது
July/August Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்
**நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்**
- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

**HOTLINE : 021 7538395 / 021 2227230 011 7 555511/14**
EXPONET
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk

# இறுதி ஆட்டத்துக்கு கிளிநொச்சி

யாழ்ப்பாணம்,ஜூலை 22

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட மட்டங்களுக்கிடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்துக்கு கிளிநொச்சி மாவட்ட அணி வெற்றிபெற்று இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

நேற்று மாலை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அணியை எதிர்த்து யாழ்.மாவட்ட அணி மோதியது. இதில் 1:0 என்ற கோல் கணக்கில் கிளிநொச்சி மாவட்ட அணி வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றது.

இன்று மாலை 4 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும் இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்ட அணியுடன் கிளிநொச்சி மாவட்ட அணி மோதவுள்ளது. கிளிநொச்சி மாவட்ட அணி முதன்முறையாக இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(த-23)

**A/L Physics**
By:
T.Mohanaraj
B.Sc
கற்பிக்கப்படும்
Medium:
English&Tamil
(25 வருட வினாத்தாள்கள் மீட்கப்படும்)
T.P: 0771797668
(20536) (3.6.7)

**சொட்டு நீர்ப்பாசனம்**
தொழில்சார் நிபுணர்களினால் மிகச்சிறந்த முறையில் தென்னை, பழமரங்கள், வெங்காயம் மற்றும் எவ்விதமான பயிர்களுக்கும் பொருத்தமான உபகரணங்களுடன் சொட்டு நீர்ப்பாசனம், விசிறல் நீர்ப்பாசனம், போன்றவை அமைத்துத் தரப்படும். விற்பனைக்கு பிந்தியசேவை உண்டு.
1 ஏக்கர் - 152000/= (16 பரப்பு)
1/2 ஏக்கர் - 78000/= (8 பரப்பு)
1/4 ஏக்கர் - 40000/= (4 பரப்பு)
பூங்காக்கள், புற்தரைகள், வீட்டுத்தோட்டம் போன்றவற்றிற்கும் விசேட முறையில் அமைத்துத்தரப்படும்.
தொடர்புக்கு:- 0779684284
(16920) (3.6.7)

**IELTS** A1 B1 B2
October/27th Exam in Jaffna Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
K.U Education,No 75,Temple Road,Jaffna www.kugroup.info

**CITY DRIVING SCHOOL**
அரச அனுமதி பெற்ற சாரதி பயிற்றுனர் பாடசாலை ( DS 390 )
உங்களை நம்பிக்கையான சாரதியாக்குவதே எமது பொறுப்பு !
**இன்றே எம்மை நாடுங்கள்...**
HOT LINE
**0777 344 844**




- உங்கள் நம்பிக்கையான சாரதி பயிற்சி நிலையம்
- (Instructor License) உள்ள அனுபவமிக்க பயிற்றுனர்களை கொண்டு பயிற்சியளிக்கப்படும்.
- உங்களுக்கு வசதியான நேரத்தை நீங்களே தெரிவு செய்யலாம்.
- அனைத்து வகையான வாகனங்களையும் இங்கே பயிற்சி பெறலாம்.
- ஆண் / பெண் இருபாலாருக்கும் பயிற்சியளிக்கப்படும்.

**No.05, Vaverset Place, Colombo - 06.**
**Tel : 011 2505672**
(சி/1372)(8-14)

**விடுதலைப் பெருவிழா**
வாருங்கள்... விடுதலை பெறுங்கள்

பாவத்திலிருந்து !
சாபத்திலிருந்து !! தீராத நோயிலிருந்து !!!
பில்லி-சூனியக்கட்டிலிருந்து !!!
பிசாசின் பிடியிலிருந்து !!!
பாவ அடிமைத்தனத்திலிருந்து !!!

**இயேசு விடுதலை கொடுக்கிறார்...**

இடம் : நகரசபை மைதானம், சாவகச்சேரி. (பஸ்நிலையம் பின்பாக)
காலம் : ஜூலை இன்று 22.07.2012
நேரம் : மாலை 4.30 மணி

கடந்த காலங்களில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற விடுதலைப் பெருவிழாக்களில் அநேகர் அற்புத விடுதலை பெற்றார்கள்.
(சி/1579)(8-14)

**பழைய பட்டுப்புடைவை பணமாகிறது!**
**யாழ்ப்பாணம்**
தியாகி அறக்கொடை நிறுவன வளாகம், T.C.T. வணிக வளாகம்.
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
**Tel : 075 675 2415**
22.07.2012 முதல் 28.07.2012 வரை




**பழைய (கிழிந்த) பட்டுப்புடைவைகள் பட்டு வேஷ்டிகள், பட்டுப்பாவாடைகள்,**
பழைய கிழிந்த கூறைப்புடைவைகளும்,எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக் கொண்டு உடனே பணம் தரப்படும்.
பழைய டிஸ்யூ புடவைகள் ரூபா 5000/= க்கு மேல் ரூபா 20,000/= வரை வழங்கப்படும்.
பழைய காலத்து கல்வைத்த நகைகள் லாக்குடி, ஜடபில்லை, பவளம், பவள மாலைகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்
(20546)(8-14)
குறிப்பு : எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது.
இந்த விளம்பரத்தை கொண்டு வந்து பட்டு புடவை கொடுத்தால்வெள்ளிக் கொலுசு (30Tch)ஒன்று இலவசம்
வேலை நேரம் காலை 9.30 மணி முதல் இரவு 6.30 மணி வரை - ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லியடியில் புலிக்கொடி



05



இன்னும் ஓர் ஆடி மாதம் 25



07

சம்பூர்; சாம்பலின் பூமியா?



10

ஒளிவட்டங்களை இழக்கும் பிம்பங்கள்



17

இரு பூதங்களால் விழுங்கப்படும் உலகம்


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் | 22 ஜூலை 2012 | ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள்: இருபத்தெட்டு


■ ஓான்யன்

# சடலங்களும் சாட்சி சொல்லும்



மனிதர்களின் இறப்புக்கு பின்னர் அவர்களது உடலங்கள் எரிக்கப்பட்டோ அல்லது புதைக்கப்பட்டோ அவற்றின் இருப்பின் அடையாளம் தொலைந்து போய்விடும். ஆனாலும் மனிதர்களை விடவும் சடலங்களுக்கு சில சமயங்களில் புனிதத்துவம் அதிகமானது. அது குறித்த சடலத்துக்குரிய மனிதனின் இயல்பையும், ஆற்றலையும், சமூக நிலையையும் பொறுத்தது. அதனால்தான் ஒவ்வொரு சடலங்களும் ஏதோவொரு விதத்தில் தாக்கங்களை உண்டு பண்ணுபவையாக இருக்கின்றன.

★ ★ ★

அதீனா- கிரேக்கர்களின் மதிப்புக்குரிய பெண் தெய்வம். பூலோகத்துக்கும் சொர்க்கத்துக்கும் இடையிலான இணைப்புக் கடவுளாக இவளே கொள்ளப்படுகிறாள். இறப்புக்கு பின்னர் மறு உலகுக்கு அதீனா அரசர்களை அழைத்துச் செல்வாள் என்ற நம்பிக்கையில் பிரமிட்டுக்களை அமைத்து அதனுள் இறந்து போன அரசர்களின் உடலங்களைப் பதப்படுத்தி வைக்கும் மரபு உருவாகியது. அரசர்களின் சடலங்களோடு அவர்களின் அடிமைகளும்,செல்லப்பிராணிகளும் மகாராணி, ஆசை நாயகிகள் போன்றோரும் கொல்லப்பட்டோ அல்லது உயிரோடோ அந்தப் பிரமிட்டுக்குள் வைத்து பூட்டப்படுவர். அத்துடன் அரசனுக்குத் தேவையான பொருள்களும் ஆயுதங்களும் கூடவே ஒரு பெரிய படகும் பிரமிட்டுக்குள் வைக்கப் பட்டிருக்கும்.

அதீனாவின் அழைப்புக் கிடைத்தவுடன் படகில் ஏறி அரசன் தன் பரிவாரங்களோடு மறு உலகுக்கு விரைவான் என்று கிரேக்கர்கள் காலங்காலமாக நம்பினர். அந்த நம்பிக்கை பொய்த்துப் போனதை கடந்த காலங்களில் பிரமிட்டுக்களில் இருந்து மீட்டெடுக்கப்பட்ட மம்மிகள் (பதப்படுத்தப்பட்ட அரசர்களின் சடலங்கள்) வெளிப்படுத்துகின்றன. ஆயினும் வரலாற்றின் வேர்களை அறிவதற்கும், பூமியில் இருந்த ஆதிகால மனிதர்களின் இருப்பு பற்றிய ஆய்வுகளுக்கும் இந்த மம்மிகளே ஆதாரங்கள். இவற்றில் இருந்து செய்யப்படும் ஆய்வுகள் எதிர்கால மனிதனின் இருப்புக்கு உதவிசெய்யக் கூடும். கடந்த காலம் பற்றிய சாட்சி சொல்லிகளாக பிரமிட் சடலங்கள் மாறிவிட்டன.

★ ★ ★

இதேபோல அண்மையில் ஆதி மனிதனின் முழு உருவத்தையும் கொண்ட எலும்புக் கூடு மீட்கப்பட்டுள்ளது. பூமியின் கன்னிமைக் காலத்தில் மனிதர்களின் தோற்றம், நடத்தை, வாழ்வியல் என்பன எப்படி இருந்தன என்பதையும், ஆதி மனிதனின் மரபு அணு எவ்விதம் பரவலடைந்து பின் பிரிகை அடைந்தது என்ற உண்மைகளையும் ஆதி மனிதனின் எலும்புக்கூடு சாட்சியாக மாறி போட்டுடைக்கப் போகிறது.

வெவ்வேறான இடங்களில் மனிதனின் உருவாக்கத்துக்கு முற்பட்ட காலத்துக்கு முன்னரே உயிர் வாழ்ந்ததாகக் கூறப்படும் டைனோசர் போன்ற பேருருக் கொண்ட விலங்குகளின் சடலங்களின் எச்சங்களும் அவ்வப் போது மீட்கப்பட்டிருந்தன. அவற்றின் மரபணுவைப் பிரித்தெடுத்து குளோனிங் முறையில் மீண்டும் அந்த உயிரிகளுக்கு மறு உருவாக்கம் கொடுக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்த இடத்தில் சாட்சி என்ற நிலையை யும் தாண்டி தன் இனத்தின் மீள் உருவாக்கத்துக்கும் சடலங்கள் உதவுகின்றன என்பது நிரூபணமாகிறது.

★ ★ ★

அதிகாரம் தன் எதிராளிகளின் சடலங்களை ஒருபோதும் விட்டு வைப்பதில்லை. தான் புரிந்த குற்றங்களுக்கான ஆதாரங்களாகவோ அல்லது தன் மீதான எதிர்ப்பின் நிரந்தர அடையாளங்களாகவோ அந்தச் சடலங்கள் மாறி விடக் கூடும் என்ற அச்சம் அதற்கு உண்டு.

அண்மையில் கூட சதாம் ஹூசேன், ஒசாமா, கடாபி போன்றோரின் சடலங்கள் கண்காணத இடத்தில் அடக்கம் செய்யப்பட்டமை இதனால்தான். இலங்கையில் தன்னால் கொல்லப்பட்டதாக கூறி, தொலைக்காட்சிகளில் "இது தான் புலிகளின் தலைவர் பிரபாகரனின் சடலம்" என்று காண்பித்த உடலத்தைக்கூட, ரகசியமாக அரசு அழித்திருந்தது. அத்தோடு இறுதிப் போரில் மிகக் கோரமான முறையில் கொல்லப்பட்ட பொது மக்களினதும் , போராளிகளிதும் சடலங்களை எவருக்கும் தெரியாமல் படைகள் அழித்ததுகூட அவை சாட்சியாக மீண்டெழக் கூடாது என்ற முன்னெச்சரிக்கையால்தான்.

★ ★ ★

நிமலரூபன்- அரசியல் கைதிகளில் ஒருவன். தான் ஏன் பிடிபட்டேன்? என்ன குற்றம் செய்தேன்? எப்போது விசாரணை? எப்போது விடுதலை? இப்படி பதில் தெரியாத நிறையக் கேள்விகளோடு வாழ்கின்ற சிறைப் பறவைகளில் அவனும் அடங்கியிருந்தான். வருடக்கணக்கில் வவுனியாச் சிறைச்சாலையே அவனது உலகமாகியிருந்தது.

அந்த உலகில் இருந்து விடுபடும் நாளை அவன் ஒவ்வொரு விடியலிலும் எதிர்பார்த்திருந்தான். காலம் போனதே தவிர விடுதலை கிடைக்கவேயில்லை. இந்த நிலையில் பல்வேறு அகிம்சை ரீதியான போராட்டங்களிலும் சக அரசியல் கைதிகளோடு அவன் முன்னின்று குதித்தான். அவற்றுக்கும் பயனில்லை. கடைசியில் கைதிகள் சிறைக் காவலரை பணயமாகப் பிடித்து தமது விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு அழுத்தம் கொடுத்தனர். கண்ணீர் புகைக் குண்டோடு உள்நுழைந்த படைகளின் ஆயுதங்கள் கைதிகளின் நடவடிக்கையை குருதியில் தோய்த்தெடுத்தன. இரத்த விளாறான உடலங்களோடு அவசர அவசரமாக வாகனங்களில் அடைக்கப்பட்டு மகர சிறைச்சாலைக்கு கைதிகள் அனுப்பப்பட்டனர். அங்கும் கைதிகளுக்கு விடிவில்லை.

யார் மீதெல்லாம் சந்தேகம் இருந்ததோ அவர்களையெல்லாம் பிரித்தெடுத்து தன் வேட்டைப் பற்களை அவர்கள் மீது ஆழப்பதித்தது அதிகாரம். கால் கைகள் முறிக்கப்பட்டு, குருதி பெருக்கெடுத்து ஓடிய நிலையில் அவர்களுக்கான மருத்துவ வசதிகளை மறுத்து வெற்றுத் தரையில் அவர்களை அதிகாரத்தரப்பு வீசியெறிந்திருந்தது. தம்மைக் காப்பாற்றுமாறு கைதிகள் அரசியல்வாதிகள் சிலரிடமும், மதத்தலைவர்களிடமும் தொடர்பு கொண்டு கதறி அழுதனர். அரசியல்வாதிகளும், மதத்தலைவர்களும் உடனடியாக களத்தில் இறங்கியதால் உலகெங்கும் இந்தச் செய்தி பரவியது. சர்வதேசத்தின் கோபப் பார்வைக்கு அஞ்சி தன் கறை படிந்த கரங்களுக்கு அதிகாரம் ஓய்வு கொடுத்தது. சிறைச்சாலை களில் குருதிப் பெருக்குக் கட்டுப்படுத்தப்பட்டது. காயப்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்க்க முடிந்தது. ஆனாலும் நிமலரூபனின் மரணத்தை தடுக்க முடியவில்லை. இன்னொரு கைதி கோமாவில்.

(தொடர்ச்சி 'சூரியகாந்தி' 26ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கோரிக்கைகளில் பத்து வீதத்து முஸ்லிம்களுக்கு வழங்க அர

செவ்வி கண்டவர்
*அனார்க்கவி*

''கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமான விடயங்களை உள்ளடக்கி அரசுடன் ஒப்பந்தமொன்றைச் செய்ய விரும்பினோம். ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு வழங்கப்பட்ட போதிலும் இதில் பத்துவீதமான உத்தரவாதம் தானும் அரசிடமிருந்து கிடைக்கவில்லை'' என்று முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கில் தனித்துப் போட்டியிட முடிவெடுத்ததற்கான காரணத்தைப் போட்டுடைக்கிறார் அதன் பொதுச் செயலாளர் ஹஸன் அலி.

தனித்துப் போட்டியிடும் முடிவை எடுத்த சூட்டோடு கல்முனை வந்த அவரைச் சந்தித்து உதயன் சார்பில் பேசினோம். மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் பேசிய அவர், தமிழ்த் தலைவர்களுக்கும் உருக்கமான வேண்டுகோள் விடுத்தார்.

இனி அவருடனான செவ்வி....



**கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அரசுடன் இணைந்தே போட்டியிடுவதென முடிவெடுத்த சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இறுதிக்கட்டத்தில் தனித்துப் போகக் காரணம் என்ன?**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தனித்துப்போட்டியிடும் முடிவு, சடுதியாக எடுக்கப்பட்டதல்ல. நாம் அரசுடனிருந்தாலும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை வேறாகத்தான் பார்க்கின்றோம்.

கிழக்கு மாகாணம் என்பது வடக்கு-கிழக்கின் ஒருபகுதி. வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம். இந்தக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் இந்தத் தேர்தலை ஏனைய தேர்தலைப் போல் பொதுவானதாகப் பார்க்க முடியாது.

இதனால்தான் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமான விடயங்களை உள்ளடக்கி அரசுடன் ஒப்பந்தமொன்றைச் செய்ய விரும்பினோம். ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு வழங்கப்பட்ட போதிலும் இதில் பத்துவீதமான உத்தரவாதம் தானும் அரசிடமிருந்து கிடைக்கவில்லை.

அரசியல் ரீதியாக இது ஆபத்தான விடயமென நாம் யோசித்தோம். கட்சியிலுள்ள அல்லது உயர்பீடத்திலுள்ளவர்கள் மட்டும் வாக்களித்துத் தெரிவு செய்யும் தேர்தலல்ல இது. எமது மக்களை, அவர்களுடைய மனக்கிடக்கைகளை, எதிர்பார்ப்புக்களைத் திருப்திப்படுத்த வேண்டிய தேவை எமக்கிருக்கின்றது.

கடந்த காலங்களில் நிகழ்ந்த நிகழ்வுகளால் எம்மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். எமது காணிகள் பறிபோயுள்ளன. இக்காணிகளை மீட்டெடுப்பதில் ஏதோ ஒரு வகையான தாமதங்கள் காட்டப்படுகின்றன. நீதிமன்றத் தீர்ப்புகள் மூலம் இத்தகைய காணிகளை உரியவர்களுக்கு வழங்க வேண்டிய நிலையிருந்த போதிலும், நிர்வாக ரீதியாக அவற்றைப் பெற்றுக் கொள்ளமுடியாத தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அமைச்சர்களை நேரில் அழைத்துச் சென்று காணிப் பிரச்சினைகளைக் காட்டியபோது, அவர்கள் வாக்குறுதிகளைத் தந்தனர். ஆனால் அவை நிறைவேற்றப்படவில்லை.

திடீரெனப் பாதுகாப்பு தரப்பினர் வந்து மக்களை அப்புறப் படுத்திவிட்டு அந்த இடங்களில் இராணுவமுகாம் அமைப்பது போன்ற பிரச்சினைகளை எம் மக்கள் நேரடியாக அனுபவிக்கின்றனர்.

இவ்வாறான பிரச்சினைகளிருக்கும்போது அரசுடன் இணைந்து மக்களிடம் சென்று வாக்குக் கேட்டால் அவர்கள் வாக்களிக்கமாட்டார்கள். இதனால் எங்களுடன் சேர்ந்து கட்சியும் அழிந்து போகும்.

அடிமட்டத்திலிருந்து கூட எமக்குப் பெரும் அழுத்தங்கள் வந்தவண்ணமிருந்ததால்தான் அரசுடன் சேர்ந்து போட்டியிடுவதா? என்ற விடயத்தில் நான் தீவிரமான கவனம் செலுத்தினேன்.

இதன் பரிணாம வளர்ச்சியாகத்தான் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட முடிவு செய்தது.

**கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டுத் தேர்தல் அறிவிப்பு வந்த பின்னர் முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சேர்ந்தே தேர்தலில் போட்டியிட வேண்டுமென்ற உணர்வலைகளும், எதிர்பார்ப்பும் இரு சமூகத்தவர்களிடையேயும் ஏற்பட்டன. இது குறித்து உங்கள் கருத்து என்ன?**

ஒரு விடயத்தை திடமாகப் புரிந்து வைத்திருக்கின்றோம். தமிழ்மக்கள் எமது சகோதரர்கள். தமிழ் மக்களுடன்தான் நாங்கள் வாழவேண்டும். பரஸ்பரம் ஒன்றித்தே வாழ்கின்றோம். எனவே அவர்களை வேற்றுக் கண்கொண்டு பார்க்க வேண்டிய அவசியமில்லை .

நம் இனங்களை வழிநடத்திய தலைவர்கள் செய்த தவறுகளால் அதிகாரப் போட்டிகள் காரணமாக ஒரு காலத்தில் நம் சமூகங்களைப் பகைக்க வைத்த வரலாறுகளுமுண்டு. அது இப்பொழுது இல்லை

இந்தத் தேர்தலில் தமிழர்களுக்கு எதிரான ஒரு போக்கை முஸ்லிம்கள் கடைப்பிடிப்பதை நான் வெறுக்கிறேன். நாம் நடுநிலைச் சமூகம். சமூகங்களுக்கு எதிரான முரண்பாடுகளைத் தீர்க்க ஒரு பாலமாகவே இருக்க விரும்புகிறோம். இத்தகைய பின்னணியில் இரு சமூகத்தவர்களது உணர்வலைகளும் நியாயமானவையே.

தமிழர்களுக்குக் கிடைக்கும் உரிமையில் எமக்கான பங்கைத் தர அவர்கள் விரும்புகிறார்கள், இந்தப் பங்கை பற்றிப் பேச முன்வருகின்றனர். இந்த நிலையில் நாம் இலங்கையைப் பிரிப்பவர்களல்லர். பிரிவினை வாதத்தை மிக உறுதியாக எதிர்த்தவர்கள் நாம்.

நாட்டில் எல்லாச் சமூகத்தவர்களும் வாழவேண்டும். அதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் தாயகக் கோட்பாடு ஒன்று இருக்கின்றது. இதை உறுதியாக நம்புகின்றோம். எவரும் வந்து நாட்டின் எப்பாகத்திலும் வாழலாமெனக் கூறுவது வெறும் பம்மாத்தாகும்.

**கிழக்கு மாகாணத் தேர்தலின் பின்னர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு வழங்க வேண்டும், இது கட்டளையல்ல நிபந்தனையாகும் என அமைச்சரவை பேச்சாளரும் , ஊடக அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்திருப்பது உண்மையா?**

அப்படியொரு நிபந்தனையை அரசு விதித்திருப்பதாக நான் கேள்விப்படவில்லை. கட்டளை இட்டதாகவும் நான் அறியவில்லை. மு.கா. ஒரு சுதந்திரமான சிறுபான்மைக் கட்சி. நாம் ஜனநாயக ரீதியான போராட்டத்தையே முன்னெடுக்கின்றோம்.

எமக்கு யாரும் கட்டளையிட முடியாது. எவரும் நிபந்தனை விதிக்க முடியாது. கட்டளையிடுவதும் எமக்கு நிபந்தனை விதிப்பதும் முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களிக்கும் முஸ்லிம் மக்களுக்கு மட்டுமே உள்ள உரிமை. அதற்கு மட்டுமே முஸ்லிம் காங்கிரஸ் அடிபணியும்.

அதற்காக தேர்தலின் பின் அரசுடன் சேர்ந்து போவதை மு.கா. பரிசீலிக்ககாது என்று சொல்ல மாட்டேன். அப்படிப் போனால் அதில் பிழையுமில்லை. ஆனால் சேர்ந்து கொள்வதற்கு அடிப்படையில் ஒரு புரிந்துணர்வு வேண்டும். எவரும் எவருக்கும் கட்டளையிட முடியாது. நிபந்தனை விதிக்கவும் முடியாது.

**முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெற்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கூடுதலான ஆசனங்களைப் பெறும் அதிகூடிய சாத்தியமுண்டு. அவ்வாறெனில் தமிழர்களுடன் இணைந்து உரிமைப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் முஸ்லிம் காங்கிரஸ் பங்களிப்புச் செய்யுமா?**

இது முக்கியமான கேள்வி. நாங்கள் ஒரு நடுநிலைச் சமூகம். இந்த நாட்டில் இனப் பிரச்சினைக்கு வருகின்ற தீர்வையும், அல்லது அதை எட்டுவதற்காகச் செய்யும் நகர்வுகளையும் ஆதரிப்பவர்கள். தமிழர்களுக்கு எதிராகச் சிங்களவர்களைக் கொண்டுபோய் மாட்டி வைப்பதும் அல்லது சிங்களவர்களைக் கொண்டு போய் தமிழர்களிடம் மாட்டி வைப்பதும் எமது நோக்கமல்ல.


நான் நினைக்கிறேன்,

## செவ்வியின் உள்ளே...

- அரசில் இருந்து விலகும் மு.காவின் முடிவு அவசரப்பட்ட, திடீர் முடிவல்ல. அடிமட்டத்திலிருந்து வந்த அழுத்தத்தின் பரிணாம வளர்ச்சி அது.
- தனித்துப் போட்டியிடும் முடிவு வெறும் அதிகாரப் போட்டிக்காக எடுக்கப்பட்டதல்ல. அது முஸ்லிம்களின் நலன் கருதி எடுக்கப்பட்டது.
- தமிழ் மக்கள் எமது சகோதரர்கள். அவர்களுடன்தான் நாம் வாழ வேண்டும். கிழக்குத் தேர்தலில் தமிழர்களுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடிப்பதை நான் வெறுக்கிறேன்.
- யாரும் எங்கும் வாழலாம்தான். அதற்காக தாயகம் என்று ஒன்றில்லை என்பது வெறும் பிதற்றல்.
- மு.காவுக்கு யாரும் நிபந்தனையிட முடியாது; கட்டளையிடவும் முடியாது.
- வடக்கு - கிழக்குத் தான் தமிழ் பேசும் மக்களின் தாயகம்.
- கிழக்குத் தேர்தல் அரசுக்கு சிறுபான்மை இனத்தின் தெளிவானதொரு செய்தியைச் சொல்லும்.
- கிழக்கு முதல்வர் என்பதில் தமிழன், முஸ்லிம் என்ற வேறுபாடெல்லாம் கிடையாது. சிறுபான்மை மக்களின் உரிமைகளை காக்கும் ஒருவர்தான் முதல்வராக வேண்டும். அரசு சொல்வதற்கெல்லாம் தலையாட்டுவதாக இருந்தால், முஸ்லிமாக இருந்தாலும் அப்படிப்பட்ட முதல்வர் வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க்கான உத்தரவாதத்தைக்கூட
# ரசு தயாராக இருக்கவில்லை



கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சிறுபான்மைச் சமூகங்கள் அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொண்டால் அதற்கான அர்த்தத்தை அரசு புரிந்து கொள்ளும் என்று. சிறுபான்மைச் சமூக மக்கள் எதையோ எதிர்பார்க்கிறார்கள். அரசுக்கு எதிராக சிறுபான்மை மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்ற உண்மை அப்போது அரசுக்கு உறைக்கும்.

அவர்களுடைய ஆதங்கத்தைப் புரிந்து கொண்டு அரசே இறங்கி வரவேண்டும். அரசுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் சிறுபான்மை சமூகங்கள் சேர்ந்து அந்த ஒரு செய்தியைச் சொல்லுகின்ற தேர்தலாகத்தான் இது அமையுமென நான் பார்க்கிறேன்.

அந்த வகையில் அரசு கீழிறங்கி வந்து மக்கள் ஆணையை மதிக்க வேண்டும். ஏனெனில் 30 வருட போரில் அழிந்து போனவர்கள் கிழக்கு மக்கள். உடல், உளரீதியாக, எல்லா வகையிலும் பாதிக்கப்பட்ட இந்த மக்கள் விடுதலைக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். அந்தத் தாக்கம்தான் கிழக்கு மாகாண சபையில் மு.கா. தனித்துப் போட்டியிட வேண்டுமென்ற தீர்மானமாகும்.

வெறும் அதிகாரப் போட்டிக்காக எடுக்கப்பட்ட முடிவல்ல இது. மக்கள் நிம்மதியாக வாழ்வதற்குரிய சூழலை ஏற்படுத்துவதற்கான யதார்த்த பூர்வ உள்ளக போராட்டமே முஸ்லிம் காங்கிரஸுக்குள் நடந்தது.

பெரும்பான்மைச் சமூகத்துக்கு ஒரு செய்தியைச் சொல்லும் தேர்தலாக கிழக்கு மாகாண சபைத் தேர்தல் அமையும். எனவே சிறுபான்மைச் சமூகங்கள், இந்தத் தேர்தலை ஒழுங்காகப் பயன்படுத்தி அந்தச் செய்தியைக் காத்திரமாகச் சொல்ல வேண்டுமென்பதில் நான் உடன்படுகின்றேன்.

தமிழர்களும், முஸ்லிம்களும் சேர்ந்து சிங்களவர்களுக்கு எதிராகச் செய்யும் ஒரு போராட்டமல்ல இந்தத் தேர்தல். இரு சமூகமும் சேர்ந்து பெரும்பான்மை சமூகத்துக்கு ஒரு செய்தியைச் சொல்லத்துடிக்கும் போராட்டம் இது. அந்தச் செய்தியை ஒழுங்காகச் சொல்லும் வகையில்தான் கிழக்குத் தேர்தலைப் பார்க்கின்றோம்.

***கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அடுத்த முதலமைச்சரும் நானே என்று கூறிவருகிறார். இந்த நிலையில் முஸ்லிம் முதலமைச்சரென்ற கோஷமும் உள்ளதே.***

முஸ்லிம் முதலமைச்சர், தமிழ் முதலமைச்சர் என்பதை, தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கிடையே, தான் நடத்தும் விளையாட்டாகவே பெரும்பான்மைச் சமூகம் அணுகுகின்றது. இது துரதிர்ஷ்டமான ஒரு நிலை. இந்த நிலைமை எந்தச் சமூகங்களுக்கும் வரக்கூடாது.

இப்படியொரு நிலை வரக்கூடாது என்பதற்காகத்தான் வடகிழக்கில் முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை முன்வைத்தோம். இந்தக் கோரிக்கை சரிப்பட்டு வந்தால், அது வருகின்றபோது முஸ்லிம்கள் தமக்கான முதலமைச்சரைப் பெறுவர். தமிழர்கள் தமிழ் முதலமைச்சரைப் பெறுவர்.

மத்தியிலுள்ள அரசு இரு சமூகங்களுக்குமிடையில் இத்தகைய விபரீத விளையாட்டுப்போட்டிகளை நடத்த முடியாதவாறான திட்டத்தையே நாம் மனதில் வைத்துள்ளோம்.

இம்முறை அப்படியான ஒரு கட்டம் வருமானால் நாம் அதை தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான போட்டியாகப் பார்க்கவும்மாட்டோம், அணுகவும் மாட்டோம்.

எம்மக்களுடைய எதிர்பார்ப்பை பிரதிபலிக்கும் விடயங்களுக்கு நாம் முன்னுரிமை கொடுக்கத்தான் வேண்டும். அதற்காக நாம் அரசுடன் போய்ச் சேர்ந்துகொண்டு, அரசு கொண்டுவரும் எல்லாவற்றுக்கும் - குறிப்பாக சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான சட்டமூலங்களை நிறைவேற்றுவதற்கு - வெறுமனே கை தூக்கும் முதலமைச்சர் எமக்குத் தேவையில்லை. அது முஸ்லிம் முதலமைச்சராக இருந்தாலும் தேவையில்லை.

நாம் விரும்புவதெல்லாம், சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய துணிவுள்ள ஒரு முதலமைச்சரையே! இந்த ரீதியில்தான் கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்குப் பின் முதலமைச்சர் விடயத்தை அணுகுவோம். வெறுமனே முஸ்லிம், தமிழன் என்று அணுகமாட்டோம்.

***கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகளைப் பொறுத்து அரசுடன் இணைவது பற்றி?***

இந்தத் தேர்தலில் முஸ்லிம்கள் அளிக்கும் வாக்குப் பலத்தை வைத்தே அரசுடன் பேசுவோம். அரசுடன் ஏற்கனவே இருக்கிறோமென்பதற்காக உடனே சேர்ந்து கொள்வோமெனக் கருதிவிடக்கூடாது.

இந்தத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு சில விடயங்களை மக்கள் முன் வைக்கப்போகின்றோம். இந்த விடயங்களுக்கு முஸ்லிம் மக்கள் தரும் ஆணைதான் தேர்தல் முடிவாக அமையப் போகிறது. இது புதிய ஆணை, புதிய முடிவு, புதிய எண்ணங்களாக அமையும் இதை மையமாக வைத்தே அடுத்த எமது நகர்வுகள் அமையும்.

நாட்டில் வரப்போகும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னுரிமை கொடுத்து உங்கள் விடயங்களை முன்னெடுங்கள் என்றே தமிழ்த் தலைவர்கள் எம்மிடம் கோருகின்றனர். இது நியாயமானது, நாம் செய்ய வேண்டியதும் அதுவேதான்.

இன்று தேசத்திற்கு மகுடம், அது இதுவென்று எத்தனையோ திட்டங்களை அரசு கொண்டு வருகின்றது. ஆனால் இவையெல்லாவற்றையும்விட முக்கியம் நாட்டின் இனப்பிரச்சினைக்கு

## பிரிவுக்கான காரணத்தை விளக்கி மு.கா. செயலர்
# ஹசன் அலி
## சிறப்புச் செவ்வி

ஒரு நிரந்தரத் தீர்வைக் கொண்டு வருவதுதான்.

இந்தத் தீர்வைக் கொண்டு வருவதற்கு பெரும்பான்மை சிங்கள சமூகமும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அன்றேல் நிலைமை ஆபத்தாகவே முடியும்.

எனவே தான்நான் அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுப்பதை விடுத்து இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்துக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என எம்மவர்களிடம் வலியுறுத்தி வருகின்றேன்.

***இனப்பிரச்சினைக்கான தீர்வொன்று கிடைக்கும்போது முஸ்லிம்களைப் புறந்தள்ளிவிட்டு தீர்வைப் பெறமாட்டோம் எனத் தமிழ்த் தலைவர்கள் கூறிவருகின்றனர். தமிழ்த் தேசியத்துக்கு எதிராக ஒருபோதும் செயற்பட்டதில்லையென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் கூறிவருகின்றனர். இந்நிலையில் தமிழர் தரப்பிலிருந்து எத்தகைய, என்ன நிலைப்பாட்டை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?***

இது மிகவும் முக்கியமான கேள்வி. தமிழ், முஸ்லிம் இரு சமூகங்களுக்கும் இடையிலே உள்ள பலவிதமான சந்தேகங்கள், முரண்பாடுகள் அனைத்துக்கும் பதிலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விவேகமான கேள்வியாகவே இதனைக் கருதுகின்றேன்.

தமிழ்த் தலைவர்களுக்கு முஸ்லிம்களுடைய பிரச்சினைகள் தெரியாமலில்லை. நாம் தமிழ்த் தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், தற்போதைய தலைவர் சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராசா மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருடனும் பேசி வருகின்றோம். எம்முடைய எண்ணங்களை அவர்கள் புரிந்து வைத்திருக்கின்றனர். இந்த வேளையில் நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டதற்காக நன்றி சொல்ல வேண்டும்.

அதாவது, தமிழ்த் தலைவர்களுக்கும் ஒரு கடப்பாடு இருக்கின்றது. முஸ்லிம்களுக்காக, உச்சக்கட்டமாக எந்தவொரு தீர்வை - முஸ்லிம் சமூகம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் - தமிழர்கள் முன்வைக்கக் கருதுகின்றார்கள் என்பதை அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

முஸ்லிம்களுக்கான தீர்வு என்ன என அவர்கள் கருதுகின்றார்கள் என்பதையாவது நாம் புரிந்து கொள்ள விரும்புகின்றோம். எமது கோரிக்கைகள் அவர்களுக்குத் தெரியும். பல இடங்களில் அதனை நாம் தெளிவாகக் கூறியுள்ளோம். அவர்களும் தமது உளக்கிடக்கையை மறைமுகமாகச் சொல்லியுள்ளனர். எமக்கு அவர்கள் மீது நம்பிக்கையுண்டு. எனினும் வெளிப்படையாக எம் கோரிக்கைகள் தொடர்பில் அவர்கள் கருத்துத் தெரிவிக்கவில்லை.

முஸ்லிம்கள் மீதான புலிகளின் அடக்குமுறைகளுக்கு ஓர் அனுதாபம் கூடத் தெரிவிக்க முடியாமல் தமிழ்த் தலைவர்களிருந்ததை நாம் மறக்கவில்லை. எனினும் அதற்காக அவர்களைப் பிழை கூறவும் வரவில்லை.

இன்று அவர்கள் வெளிப்படையாக வெளிவந்து விட்டனர். இந்தப்பொழுது அவர்களது எண்ணக்கிடக்கைகளைச் சொல்லியுள்ளனர். நாமும் பகிர்ந்து கொண்டிருக்கின்றோம். அந்த அளவில்தான் எமது பேச்சுவார்த்தைகளுள்ளன.

முஸ்லிம்களுக்கு எதை விட்டுக்கொடுக்கப் போகிறார்கள் என்பதை விவாதிக்கும் அளவுக்கு எம்மிடையிலான பேச்சு முன்னேறவில்லை. அப்படி இருந்தபோதும் தமிழ்த் தலைவர்கள் இந்தத் தருணத்தில் அதைப் பகிரங்கமாக வெளிப்படுத்தவேண்டும். தீர்வுதொடர்பில் பரஸ்பரம் எமக்கிடையில் புரிந்துணர்வு இருந்தாலும் வார்த்தைகளாக அது இன்னும் வெளிவரவில்லை. அவ்வாறு வெளிவரும் சந்தர்ப்பத்துக்காக இனிமேல் நாம் மௌனமாக இருக்க முடியாது.

அவர்களும் மனம் திறந்து பேச வேண்டும், நாமும் பேச வேண்டும், அவை வார்த்தைகளாக வெளிவந்து மக்கள் மத்தியில் போய்ச் சேர வேண்டும். அதற்கான கட்டம் வந்துள்ளது.

தந்தை செல்வாவையும், மர்ஹூம் அஷ்ரபையும் நினைத்துக் கொண்டே இதனைக் கூறுகின்றேன். அவர்கள் எந்த விடயங்களில் உடன்பட்டார்களென்பது எல்லோருக்கும் தெரியும். அந்த உடன்பாடுகள் தற்சமயம் எழுத்து வடிவில் வெளிவரவேண்டும்.

இந்த உடன்பாடுதான் இந்த மண்ணிலிருக்கும் இரு சிறுபான்மைச் சமூகங்களுக்கும் ஓர் அமைதியான வாழ்வை நீண்டகாலம் நடத்துவதற்கு உதவும்.

## முஸ்லிம்களுக்காக என்ன தீர்வை தமிழர்கள் தரப்போகிறார்கள்?



தமிழ்த் தலைவர்களுக்கும் ஒரு கடப்பாடு இருக்கின்றது. முஸ்லிம்களுக்காக, உச்சக்கட்டமாக எந்தவொரு தீர்வை - முஸ்லிம் சமூகம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் - தமிழர்கள் முன்வைக்கக் கருதுகின்றார்கள் என்பதை அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

முஸ்லிம்களுக்கான தீர்வு என்ன என அவர்கள் கருதுகின்றார்கள் என்பதையாவது நாம் புரிந்து கொள்ள விரும்புகின்றோம். எமது கோரிக்கைகள் அவர்களுக்குத் தெரியும். பல இடங்களில் அதனை நாம் தெளிவாகக் கூறியுள்ளோம். அவர்களும் தமது உளக்கிடக்கையை மறைமுகமாகச் சொல்லியுள்ளனர். எமக்கு அவர்கள் மீது நம்பிக்கையுண்டு. எனினும் வெளிப்படையாக எம் கோரிக்கைகள் தொடர்பில் அவர்கள் கருத்துத் தெரிவிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ அதிரன்

# பிரதமர் யார்?

## சுதந்திரக் கட்சிக்குள் குழப்பம்

இலங்கையில் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் இப்போது சூடுபிடித்துள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் 8 ஆம் திகதி கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தலை அரசு நடத்துகிறது. இந்தத் தேர்தல் அமளிகள் ஒருபுறம் இருக்க மறுபுறத்தே அரசுக்குள் அடுத்த பிரதமர் பதவி யாருக்கு என்ற அதிகாரப் போட்டி வலுத்துள்ளது. இதனால் அரசில் உள்ள சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் ஜனாதிபதியுடன் நேரடியாக முரண்படும் அளவுக்கு இந்த விவகாரம் பெரும் விவாதமாகி இருக்கிறது. இந்த விடயத்தில் ஜனாதிபதி மஹிந்தவும் அடக்கி வாசிப்பதில் ஏதோ உள்நோக்கம் இருப்பதாகவே தென்படுகிறது.

மாகாண சபைகளுக்கான தேர்தல் முடிந்த கையோடு அமைச்சரவையிலும் பெரும் மாற்றத்தைக் கொண்டுவர ஜனாதிபதி மஹிந்த திட்டமிட்டிருக்கிறார். அதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளை அவர் இப்போதே ஆரம்பித்திருக்கிறார். ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அமைச்சரவை மாற்றப் பட்டியலைத் தயாரிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருவதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்களிலிருந்து நம்பகரமாக அறிய முடிந்தது.

தன்னோடு ஒத்துப்போகக் கூடிய - கடுமையாகச் செயற்படக் கூடிய உறுப்பினர்களை உள்ளடக்கி ஓர் அமைச்சரவையை அமைப்பதையே ஜனாதிபதி இலக்காகக் கொண்டுள்ளார். இதனால் ஜனாதிபதி மேற்கொள்ளவுள்ள அமைச்சரவை மாற்றத்தின்போது இப்போது அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் பல பழைய தலைகள் உருளக்கூடும். அவர்களுக்குப் பதிலாக புதிய தலைகள் உருவெடுக்கும். இதில் முக்கியமாக உள்ளடக்கப்படவுள்ளவர் ஜனாதிபதியின் புதல்வரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலத் தலைவராக வளர்க்கப்பட்டு வருபவருமான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ. தனது மகனுக்கு மிக முக்கியமான அமைச்சு ஒன்றை வழங்கி அவரது அரசியல் எதிர்காலத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறார். அதற்காக பல வழிகளிலும் அவர் காய் நகர்த்தல்களையும் மேற்கொண்டு வருகிறார். இந்த அமைச்சரவை மாற்றத்தின்போது நாமல் ராஜபக்ஷவுக்கு கட்டாயம் ஓர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி கிடைக்கும். அதேவேளை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அந்தப் பதவியிலிருந்து தூக்கப்பட்டு பதிலாக வேறு ஒருவருக்கு வெளிவிவகார அமைச்சர் பதவி வழங்கப்படும் எனவும் கூறப்படுகிறது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இன்னொரு முக்கியமான விடயம் உள்ளது. அது இலங்கைப் பிரதமர் பதவி. தற்போது பிரதமர் பதவியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மிக மூத்த உறுப்பினரான டி.எம். ஜயரட்ண அடிக்கடி நோய்வாய்ப்படுகிறார். இதனால் அவரால் தற்போது துடிப்பாகப் பணியாற்ற முடியாத நிலைமை உள்ளது. பிரதமர் பதவி என்பது மிக முக்கிய பொறுப்பு வாய்ந்த பதவியாகும்.

ஆயினும் ஜயரட்ணவினால் இப்போது அவரது பணிகளை சீராக மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது. இதனால் அந்தப் பதவிக்குப் புதியவரை நியமிக்க ஜனாதிபதி திட்டமிட்டிருக்கிறார். இந்தப் பிரதமர் பதவியாலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இப்போது அதிகாரப் போட்டி பெரும் பூதாகரமாகியிருக்கிறது எனக் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சிரேஷ்ட உறுப்பினர்களாக ரட்ண சிறி விக்கிரமநாயக்க, நிமால் ஸ்ரீபாலடி சில்வா, மைத்திரிபால சிறி சேன, ஜோன் செனவிரத்ன ஆகியோர் உள்ளனர். இவர்களுக்கு அடுத்தபடியாக அனுர பிரியதர்ஷன யாப்பா இருக்கிறார்.

மேலுள்ள சிரேஷ்ட உறுப்பினர்களைத் தவிர்த்து அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவுக்குப் பிரதமர் பதவியை வழங்குவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது. எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பைக் கைப்பற்றும் எண்ணத்துடன் அரசியலில் மும்முரமாக ஈடுபட்டு வரும் நாமல் ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலத்துக்கு பாதகத்தை ஏற்படுத்தாத ஒருவரையே பிரதமராக நியமிக்கவேண்டும் என்று ஜனாதிபதி விரும்பியுள்ளார்.

இதனாலேயே அவர் அனுர பிரியதர்ஷன யாப்பாவுக்கு பிரதமர் பதவி வழங்குவது குறித்து ஆராய்ந்து வருவதாக கட்சித் தலைவர்கள் கூறுகின்றன. இந்த விடயம் இப்போது வெளியே கசிந்ததால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பெரும் மோதல் போக்கு உருவெடுத்துள்ளது. ஏற்கனவே சிரேஷ்ட உறுப்பினர்களாக இருக்கும் நிமால் ஸ்ரீபால டி சில்வா, மைத்திரிபால சிறி சேன ஆகியோருக்கு இந்த விடயம் பெரும் எரிச்சலையும் சினத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது.

அரசியலில் தங்களை விட இளையவராக இருக்கும் அனுர பிரியதர்ஷன யாப்பாவுக்கு பிரதமர் பதவியை வழங்க இந்த இருவரும் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். அதிலும் குறிப்பாக அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வாவுக்கு இந்தப் பிரதமர் பதவிக் கனவு மிக நீண்டகாலமாகவே இருந்து வருகிறது. கடந்த அமைச்சரவை மாற்றத்தின்போது அவருக்கே பிரதமர் பதவி வழங்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தபோதும் கடைசி நேரத்தில் அது டி.எம்.ஜயரட்ணவிடம் போய்ச் சேர்ந்தது. இதனால் இந்த முறையாவது ஏமாந்துவிடாமல் பிரதமர் கதிரையில் அமர்ந்துவிட வேண்டும் என்பதில் நிமால் ஸ்ரீபால டி சில்வா குறியாக இருந்துவருகிறார். ஆயினும் இம்முறையும் அவருக்கான வாய்ப்பு கைநழுவிப் போவதாகவே தென்படுகிறது. ஏனெனில் நிமால் ஸ்ரீபால டி சில்வா நாமல் ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலத்தைப் பற்றி அவ்வளவு அக்கறை காட்டி செயற்படுவதில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த தலைமைப் பொறுப்பைக் கைப்பற்றி விட வேண்டும் என்பதையே இலக்காகக் கொண்டு அவர் செயற்பட்டு வருகிறார். இதனால் அவரை பிரதமராக்கினால் நாமல் ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலத்துக்கு ஆப்பு வைக்கப்பட்டுவிடும் என்று பயப்படுகிறார் ஜனாதிபதி. அதனால் தனது பக்கம் சாயக்கூடிய ஒரேயொரு அமைச்சராக அனுர பிரியதர்ஷன யாப்பாவே உள்ளார். இதனாலேயே அவரைப் பிரதமராக்க ஜனாதிபதி விரும்புவதாக தெரிகிறது.

நிச்சயம் அடுத்த அமைச்சரவை மாற்றத்தின்போது பிரதமர் பதவி வேறொருவருக்கு கைமாறும். ஆயினும் இந்த பிரதமர் பதவியால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டு படக்கூடிய நிலையும் உருவாகும் என்று கட்சித் தகவல்கள் மேலும் கூறியுள்ளன. அதற்குக் காரணமும் உண்டு. ஜனாதிபதியால் பிரதமராக பரிந்துரைக்கப்படவுள்ளவரான அனுர பிரியதர்ஷன யாப்பா ஏனைய சிரேஷ்ட உறுப்பினர்களின் கருத்துக்களை கேளாமல் நேரடியாகவே ஜனாதிபதியின் கட்டளைகளுக்கு பணிந்து செயற்பட்டு வருபவர். இதனால் கட்சியிலுள்ள மூத்த உறுப்பினர்கள் அவருடன் அவ்வளவு நெருக்கமாக இல்லை. ஒருவேளை அவர் பிரதமராக நியமிக்கப்பட்டால் கூட கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அவரது சொற்கேளாமல் நடக்கக் கூடிய சூழ்நிலையும் ஏற்படும் என்று இப்போதே எச்சரிக்கப் பட்டுள்ளது.

இதனால் பிரதமர் பதவி பெரும் சிக்கலுக்குள்ளாகும் விடயமாக மாறியிருக்கிறது. ஜனாதிபதி மஹிந்த இதனை எப்படிச் சமாளித்து பிரதமர் கதிரையில் யாரை இருத்தப் போகிறார் என்பதே அடுத்துள்ள எதிர்பார்ப்பு.



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சிரேஷ்ட உறுப்பினர்களாக ரட்ண சிறி விக்கிரமநாயக்க, நிமால் ஸ்ரீபாலடி சில்வா, மைத்திரி பால சிறி சேன, ஜோன் செனவிரத்ன ஆகியோர் உள்ளனர். இவர்களுக்கு அடுத்தபடியாக அனுர பிரியதர்ஷன யாப்பா இருக்கிறார்.

தனது பக்கம் சாயக்கூடிய ஒரேயொரு அமைச்சராக அனுர பிரியதர்ஷன யாப்பாவே உள்ளார். இதனாலேயே அவரைப் பிரதமராக்க ஜனாதிபதி விரும்புவதாக தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடியில் புலிக்கொடி

## புலனாய்வாளரின் செயலால் உள்ளூர மகிழ்ந்தனர் மக்கள்



விகேஸம்

“விடுதலைப்புலிகள் கடந்த 2009 மே மாதம் 19 இல் தோற்கடிக்கப்பட்டுவிட்டனர். இனி விடுதலைப்புலிகளால் நாட்டுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. மக்கள் அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழமுடியும்'' என்று அறிவித்தது இலங்கை அரசு.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட பின்னர் பலருக்கு உழைப்பு, பிழைப்பு அற்றுப் போய்விட்டது. காட்டிக் கொடுப்புக்கள், துரோகத்தனங்கள் என்பவற்றுக்காக விலை மதிக்க முடியாத சம்பளம் பெற்ற சிலர் இன்று கைகடிக்கக் காத்திருக்க வேண்டியவர்களாகி விட்டனர். அவர்களுக்கான துணைப்படை, ஒட்டுப்படைக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுவிட்டன.

இவர்கள் பிழைப்பு நடத்துவதற்கு நாட்டில் அமைதியோ சமாதானமோ தொடர்வது பொருத்தமற்றது. அவர்களுக்கு எங்கோ ஒரு மூலையில் குழப்பம் நிகழ வேண்டும். யாருக்காவது நெருக்கடி கொடுக்க வேண்டும் இதன் மூலம்தான் அவர்களால் தமது வயிற்றை நிரப்ப முடியும்.

இது இலங்கை அரசும் அவர்களும் சேர்ந்து வகுத்த கோட்பாடு. தொட்டிலில் இருந்து இவர்களுக்கு ஊட்டப்பட்ட துரோகத்தனம், புலிகள் இல்லை என்றால் மட்டும் போய்விடுமா என்ன?

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களை நிம்மதியாக வாழ விடுவதன் மூலம் அவர்கள் பொருளாதார ரீதியாகத் தமது கட்டுமானங்களை வளப்படுத்துவதோடு சமூக ரீதியான சிந்தனைகளிலும் ஆர்வம் கொள்வர். இதனால் விடுதலை பற்றிய, உரிமைகள் பற்றிய எண்ணப்பாங்குகள் இவர்கள் மத்தியில் மீண்டும் துளிர்விட்டு மீண்டும் ஓர் இன விடுதலைப் போராட்டத்துக்குத் தயாராகிவிடுவார்களோ என்ற அச்சமும் கேள்வியும் சிங்களத் தரப்பில் தொடர்ந்தும் இருந்து வருகிறது.

இதுவே வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இலங்கை அரசு எல்லாக் கட்டமைப்புகளிலும் உள்நுழைந்து கொள்ளவும் மாற்றம் செய்து கொள்ளவும் நெருக்கடி கொடுக்கவும் காரணமாக அமைகிறது.

**புலிக்கொடியை ஏந்துவது புலிகளா?**

யாழ். குடாநாட்டில் நடைபெற்று முடிந்த இரண்டு மக்கள் போராட்டங்களில் புலிக்கொடி ஓர் உள்ளீடாக நுழைந்துள்ளது. ஆனால் 2009ற்குப் பின்னர் இதுவரையில் நடந்த எந்தவொரு போராட்டத்திலும் போராட்டக்காரர்கள் தனி ஈழம் கோரியோ, விடுதலைப் புலிகளை மீண்டும் கட்டியெழுப்பக் கோரியோ குரல் கொடுக்கவில்லை. அவர்களுக்கு அந்த ஆசைகள் உள்ளூர இருந்தாலும் பகிரங்கமாக அவர்கள் அதனை ஒருபோதும் வெளிக்காட்டிக் கொண்டதில்லை. பதிலாக தமது நிலங்களில் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழவேண்டும் என்றே தமக்குரிய உரிமைகளைக் கேட்டு தமிழ் மக்கள் போராடுகின்றனர்.

இப்படிப் போராட முயல்பவர்களையும் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்துபவர்களையும் புலிகள் என்று முத்திரை குத்துவதற்காகவே அண்மைய நாள்களில் யாழ். குடாநாட்டில் புலிக் கொடிகள் பறந்தன.

கடந்த வாரம் நெல்லியடியில் தமிழ்த் தேசிய முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தின்போது புலிக்கொடி மீண்டும் ஒரு தடவை பறந்தது. மர்ம நபர்கள் மோட்டார் சைக்கிளில் புலிக் கொடி ஏந்தியவாறு வட்டமிட்டனர். இவர்கள் கறுப்புக் கண்ணாடிகளால் மறைக்கப்பட்ட, கறுப்பு உடைகளைத் தரித்திருந்தனர். அரைக்காற் சட்டையை ஒருவர் அணிந்திருந்தார்.

இவர்களது மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகட்டில் NP HX-2680 என்ற இலக்கம் பொறிக்கப்பட்டிருந்தது.

இந்த இலக்கம் இலங்கையில் எந்தப் பாகத்திலும் பாவனையில் இருந்தாலும் அதன் உரிமையாளர் யார் என்பதை பதிவுகளில் இருந்து பொலிஸாரால் இலகுவாகக் கண்டறிய முடியும். ஆனால், பொலிஸாரிடம் இவர்கள் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டு மோட்டார் சைக்கிள் எண் வழங்கப்பட்டு நான்கு நாள்கள் கடந்த போதும் இதுவரை பொலிஸார் அதன் மீது நடவடிக்கை எடுத்து மோட்டார் சைக்கிள் உரிமையாளரைக்கூடக் கைது செய்யவில்லை.

இது தொடர்பாக தமிழ்த் தேசிய முன்னணியின் சட்டத்தரணிகளால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விரைவில் அந்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் யார் என்ற விவரம் வெளிவந்தேயாக வேண்டும். ஆனால், அப்போது அது திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் என்று பொலிஸார் அறிக்கை சமர்ப்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**பொலிஸாரின் வேண்டுகை**

நெல்லியடியில் மக்கள் போராட்டம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிலையில் அது நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் என்றும், அசம்பாவிதங்களை உருவாக்கும் என்றும் பருத்தித்துறை நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தொடர்ந்திருந்தனர். ஆனால் அந்த மனு நிராகரிக்கப்பட்டு போராட்டத்துக்கு பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸாருக்குப் பணிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் போராட்ட தினத்தன்று நெல்லியடியில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். அங்கு அவர்களின் வேலை, போராட்டக்காரர்களுக்குப் பாதுகாப்பளித்து அங்கு யாராவது குழப்பம் விளைவிக்க முற்பட்டால் அவர்களைத் தடுத்து நிறுத்துவதே.

ஆனால் எந்தப் பதற்றமும் இன்றி, மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள், பொலிஸாருக்கு முன்பாகவே புலிக் கொடியை எடுத்து விரித்து உயர்த்திப் பிடித்தார்கள். மிக லாவகமாக மோட்டார் சைக்கிளில் இரண்டு மூன்று தடவை போராட்டக்காரர்களைச் சுற்றிய மர்ம நபர்கள் புலிக் கொடியை ஏந்தியவாறே அங்கிருந்து ஓடி மறைந்தனர்.

அவர்களைத் தடுத்து நிறுத்தவோ கைது செய்யவோ, இல்லை இடைஞ்சல் தானும் செய்யவோ அங்கிருந்த ஒரு பொலிஸார் கூட முயற்சிக்கவில்லை. கைகட்டி வேடிக்கை மட்டுமே பார்த்தனர். அவர்களால் ஏன் இந்த நபர்களைக் கைது செய்யமுடியவில்லை?

**கிறிஸ் பூத சம்பவங்கள்**

யாழ்ப்பாணத்தில் கிறிஸ் பூத சர்ச்சை எழுந்திருந்தபோது மக்கள் வீடுகளுக்குள் நுழையும் கிறிஸ் பூதங்களை பிடிக்க முற்பட்ட சமயத்தில் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் கடுமையாகத் தாக்கப்பட்டனர். காரணம் ‘பொது மக்கள் சட்டத்தை கையில் எடுக்கக் கூடாது' என்பதே.

அப்படி இருக்கையில் சட்டத்தை மதிக்காது புலிக்கொடியை ஏந்திய மர்ம நபர்களைப் பிடிக்காது பொலிஸார் பார்த்துக் கொண்டிருந்தது எதற்காக?

போர் முடிந்த பின்னர் யாழ்ப்பாணத்தில் புலிக்கொடி காட்டப்பட்ட இரண்டாவது சம்பவம் இது. இதற்கு முன்னர் மே முதலாம் திகதி தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டபோது ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய பேரணியின் கடைசிப் பகுதியில் முதல் தடவையாக புலிக்கொடி காட்டப்பட்டது.

அப்போது புலிக் கொடி காட்டியவர்களையும் இன்று வரைக்கும் பொலிஸார் கைது செய்யவில்லை. அரச சார்பு ஊடகம் ஒன்றைச் சேர்ந்தவர்களே அந்தப் புலிக்கொடியைத் தூக்கிக் காட்டினார்கள் என்று அப்போது தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்த மே தினப் பேரணி ஐக்கிய தேசியக் கட்சியாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாலும் இணைந்து நடத்தப்பட்டது.

நெல்லியடி ஆர்ப்பாட்டமோ தமிழ்த் தேசிய முன்னணியால் நடத்தப்பட்டது. வவுனியா சிறைச்சாலையில் இராணுவ சிறப்பு அதிரடிப் படையினராலும் பொலிஸாராலும் கடுமையாகத் தாக்கப்பட்டு உயிரிழந்த நிமலரூபனின் படுகொலையைக் கண்டித்தும், வடக்கில் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவதைக் கண்டித்துமே நெல்லியடியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தை முன்னரே தடுக்கும் முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன. தவிர யாழ்ப்பாணத்தில் இருந்து வடமராட்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் வல்லைப் பகுதியில் இராணுவத்தினரால் மறிக்கப்பட்டு பயணிகள் அனைவரும் அச்சுறுத்தப்பட்டனர். அதன் பின்னரே போராட்டத்தில் புலிக் கொடி காட்டப்பட்டது.

இந்த இரு சந்தர்ப்பங்களின் போதும் புலிகளின் ஆதரவாளர்களால் புலிக்கொடிகள் காட்டப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் உள்ள புலிகள் ஆதரவுச் சக்திகளும் அதனை உறுதிப்படுத்தியுள்ளன. ஆகவே இது தமிழர்களுக்கு எதிரான சக்திகளால் உயர்த்திப் பிடிக்கப்பட்ட புலிகள் கொடிகள் என்பதில் சந்தேகமில்லை.

தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் அனைவருமே புலிகள் என்று அரச தரப்பும் இராணுவமும் கருதுவதன் வெளிப்பாடே இந்தப் புலிக் கொடிகளின் பறப்பு என்று அடித்துக் கூறலாம்.

(26 பக்கம் பார்க்க)

## பொலிஸாருக்கு எதுவுமே தெரியாதாம்




நெல்லியடிப் போராட்டத்தின் போது புலிக் கொடியுடன் நடமாடியவர்கள் பற்றி எமக்கு எதுவுமே தெரியாது. அப்படி ஒரு சம்பவம் நடைபெற்றதாக இதுவரை எங்களுக்கு எந்தவகையான முறைப்பாடும் கிடைக்கவில்லை. அப்படி ஒரு முறைப்பாடும் அந்த நபர்கள் தொடர்பான தகவல்களும் கிடைக்கப்பெறுமிடத்து உரிய நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்டவர்களை கைது செய்வோம். இது நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களுடனான வாராந்த சந்திப்பின்போது யாழ்.மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்த கருத்து.

நெல்லியடியில் போராட்டத்துக்கு பாதுகாப்பு வழங்கவென நூற்றுக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். அவர்களின் கடமைப் போராட்டத்தில் அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெற்றால் அதனைக் கட்டுப்படுத்தவது. அத்தனை பொலிஸாரும் பார்த்திருக்கவே புலிக்கொடி வீதியில் பறந்து சென்றது.


இந்த நிலையில் புலிக்கொடி பறந்த விடயம் தமக்கு தெரியாது என்றும், அது பற்றி எமக்கு எந்த வித தகவல்களும் கிடைக்கவில்லை எனவும் யாழ்.மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி கூறியிருப்பது பொலிஸாரின் கடமையுணர்வை வெளிப்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ரம்யன்

# கிரிக்கெற் உலகில் இவர்கள்





கிரிக்கெட் உலகில் சகல துறை வீரர்களாக கணிப்படும் வீரர்களில் இவரும் ஒருவர். துடுப்பாட்டம், பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு எல்லாவற்றிலும் சிறப்பான சாதனைகளைப் புரிந்தவர்.

அசை போட ஒரு விடயம் 37

சேர். டொனால்ட் பிராட்மன் என்றால் கிரிக்கெட் உலகில் அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். கிரிக்கெட் விளையாடப்படும் நாடுகளில் மட்டுமல்ல கிரிக்கெட் விளையாடப்படாத நாடுகளிலும் அவரைப் பற்றி அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள்.

ஆஸ்திரேலியரான அவர் மாபெரும் கிரிக்கெட் ஜாம்பவானாகக் கருதப்படுகின்றார். கிரிக்கெட் விளையாட்டுத் துறைக்கு அவர் செய்துள்ள பணிகளுக்காக 1949 ஆம் ஆண்டில் அவருக்கு 'நைட்' பட்டம் வழங்கப்பட்டது.

கிரிக்கெட் பயிற்சியில் அவர் தமது இளமைக் காலத்தில் தாமே உருவாக்கிக் கொண்ட ஒரு பயிற்சி முறையைப் பின்பற்றினார் என்று கூறப்படுகின்றது. கிரிக்கெட் மட்டை (துடுப்பு)க்காக ஒரு விக்கற் தடியையும் கிரிக்கெட் பந்துக்காக ஒரு பேஸ் போலையும் பயன்படுத்திக் கொண்ட அவர் நீர்த்தாங்கியொன்றை வளைந்த செங்கல் மதில் ஒன்றின் மீது ஏற்றிவைத்துவிட்டு பந்தை அந்த மதிலை நோக்கி அடிப்பாராம். பந்து மிக வேகமாக பல்வேறு கோணங்களில் திரும்பிவரும் போது அதனை மீண்டும் மீண்டும் அடிக்க முயன்று பயிற்சி எடுப்பாராம். இந்தப் பயிற்சியானது பந்தின் வேகத்தையும் அது வரும் வேகத்தையும் கணித்துக் கொள்ள உதவியதுடன் மிகத்திறமாகத் தன் விளையாட்டை உயர்த்திக் கொள்ளவும் உதவியது. ஆரம்ப காலத்தில் ஆஸ்திரேலியாவில் பவ்ரோல் பொதுப் பாடசாலைக்கும் மிட்டகொங்க உயர் பாடசாலைக்குமிடையில் நடந்த கிரிக்கெட் போட்டியில் தமது 12 வயதில் தமது முதலாவது சதத்தை அடித்தார்.

1920 ஆம் ஆண்டு சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நடந்த ஒரு கிரிக்கெட் போட்டியைப் பார்க்கத் தமது தந்தையாருடன் சென்றிருந்தார். அந்தப் போட்டியில் சார்லி மென்கர்ட்னி 170 ஓட்டங்கள் பெற்றதைப் பார்த்துவிட்டுத் தந்தையிடம் சொன்னாராம் "இந்த மைதானத்தில் ஆடும் வரைக்கும் நான் மகிழ்ச்சியுடன் இருக்கப் போவதில்லை" என்று. மிக விரைவிலேயே நியுசவுத் வேல்ஸ் கிரிக்கெட் சங்கத்திலிருந்து வந்த அழைப்பையடுத்து சிட்னி மைதானத்தில் பயிற்சிகளை ஆரம்பித்தார். அந்த சங்கத்திலும் சேர்ந்து கொண்டு சென்.ஜோர்ஜ் பாடசாலைக்காக விளையாடினார்.

பின்னர் தாய்நாட்டு தேசிய அணியில் சேர்க்கப்பட்டு உள்நாட்டில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டிகளில் விளையாடினார். அவர் ஆடிய எட்டு இன்னிங்ஸில் 468 ஓட்டங்களைப் பெற்றார். இதில் இரண்டு சதங்களும் இரண்டு அரைச் சதங்களும் அடங்கும். அவர் காலத்தில் மிக அதிக சாதனைகளை நிகழ்த்திய வீரராக அவர் விளங்கினார். ஆனால் பின்னர் அவைகளில் பலவும் முறியடிக்கப்பட்டன. அவர் விளையாடத் தொடங்கினால் சராசரியாக 99-94 ஓட்டங்களை எடுப்பாராம் (அதாவது ஆடத்தொடங்கினால் 99 ஓட்டங்களைப் பெரும்பாலும் எடுத்து விடுவாராம்) இம்மாதிரி சாதனை புரிந்த வீரர்கள் எவருமே இதுவரை இல்லை.

**சேர் கார்பீல்ட் சோபர்ஸ்**

சேர் சோபேர்ஸின் சாதனைகளில் முக்கியமானது ஒரு ஓவரில் ஆறு சிக்ஸர்களை அடித்ததாகும். இந்தச் சாதனையை வேறு ஒரு சிலரே நிகழ்தியிருக்கிறார்கள்.

சேர் கார்பீல்ட் சென்ட ஆப்ரன் சோபேர்ஸ் கிரிக்கெட் உலகின் - சரித்திர புருஷர்களில் ஒருவராகக் கணிக்கப்படுகிறார்.

மேற்கிந்திய அணிக்கு கப்டனாக இருந்துள்ளார். கிரிக்கெட் உலகில் சகல துறை வீரர்களாக கணிக்கப்படும் வீரர்களில் இவரும் ஒருவர். துடுப்பாட்டம், பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு எல்லாவற்றிலும் சிறப்பான சாதனைகளைப் புரிந்தவர். 1975 ஆம் ஆண்டு எலிசபெத் மகாராணியால் இவருக்கு நைட் (சேர்) பட்டம் வழங்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு திருமணம் முடித்துக் கொண்டதின் பேரில் பார்படோஸ் ஆஸ்திரேலிய நாடுகளின் இரட்டைக் குடிமகன் அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டார்.

---

■ தென்னவன்

# அத்திபாரம் பலமாக்கப்படவேண்டும்

யாழ்.மாவட்டத்தில் போசாக்கின்மையால் பெரும் எண்ணிக்கையான குழந்தைகள் பாதிக்கப்படுவதாக யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களமும் யுனிசெப் நிறுவனமும் அடிக்கடி அறிக்கைகள் வெளியிட்டு வருகின்றன. அறிக்கைகளை படித்து விட்டு வாளாவிருப்பது எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் இழைக்கும் பெரும் துரோகமாகும்.

சிறுவயதில் ஊட்டும் போசாக்கால் எதிர்காலத்தில் சுகதேகியான ஒருவரை காணமுடியும். உலகநாடுகள் சிலவற்றுடன் ஒப்பிடுகையில் எமது பிரதேசம் சிறுவர்களுக்கு போஷாக்குள்ள உணவுகளை வழங்கக் கூடிய வளங்கள் உள்ள போதிலும் ஒன்று தொடக்கம் 12 வயது வரையான சிறுவர்களில் 25 இற்கு மேற்பட்டவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் அறிக்கை அதிர்ச்சி தாராத விடயமாக அமைந்துவிடாது.

சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்படுவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அது என்ன எனக் கண்டறிந்து அவற்றை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது எமது தலையாய கடமை. போசாக்கின்மை ஏற்படக்கூடிய காரணங்களை எம்மால் இலகுவாகக் கண்டறிய முடியும். அதனைப் போக்க சிறந்த ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதால் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும்.

சிறுவர்களுக்குப் போசாக்குக் குறைபாடு ஏற்படுவதற்குக் காரணம் குடும்பத்தின் வறுமை, போதிய இடைவெளி இல்லாத பிரசவங்கள், குழந்தைகளுக்கு போசாக்கு உணவு ஊட்டுவது தொடர்பாக தாய்க்கு உள்ள அறிவு போதாமை போன்றவை என்கிறது மருத்துவவட்டாரம். இவற்றைவிட வறுமை இன்று எத்தனையோ குழந்தைகளை வாட்டுகின்றது. இந்த வறுமையின் பிடியில் இருந்து மீண்டெழுந்து தன் குழந்தைக்கு ஒரு பிடி உணவைக்கூட ஊட்ட முடியாத நிலையில் இன்று எத்தனையோ தாய்மார் வேதனையுடன் வாடிப்போயுள்ளனர்.

இதுமட்டுமன்றிக் குடும்பத் தலைவருக்குப் போதிய உழைப்பு இல்லாததால் வருமானமின்றி வாழ்வது. நிரந்தர உழைப்பு இருந்த போதிலும் அதனைத் தனது தேவைக்கு மட்டும் பயன்படுத்தும் குடும்பத் தலைவர்கள் வறுமை நிலையில் உள்ள குடும்பங்களில் அடிக்கடி இடம்பெறும் பிரசவங்கள், பிரசவத்துக்கு முன்னர் தாய் போதிய போசாக்கு உணவுகள் உண்ணாமை, பிள்ளைகளுக்கு ஊட்டச்சத்துள்ள உணவு வகைகள் எந்தெந்த வேளையில் வழங்க வேண்டுமென்று தாய்க்குப் போதிய அறிவு இல்லாமை, போன்றவற்றால் குழந்தைகளுக்கு போசாக்கு குறைவு ஏற்படுகிறது.

குழந்தைகளுக்கு விலை அதிகரித்த பால்மா சத்துணவு போன்றவை வழங்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. நம் நாட்டில் நமது பிரதேசத்தில் விளைந்த பயிர் வகைகளில் அனைத்தும் குழந்தைகளுக்கு நிறைந்த போசாக்கு வழங்கக் கூடியவை. எமது பிரதேசத்தில் மிக மலிவாக உள்ள பால், முட்டை, காய்கறி வகைகள், கீரை வகைகள், பழவகைகள், சிறிய மீன் வகைகள் தானிய வகைகள் போன்றவை போசாக்கு நிறைந்தவை தான். எமது காணிகளில் தேவையான பயிர் வகைகளை வளர்த்து குழந்தைகளுக்கு உணவாகக் கொடுக்கலாம்.

சுகாதார திணைக்களத்தால் இலவசமாக ஐந்து வயது வரையான போசாக்கு குறைந்த பிள்ளைகளுக்கு சத்துணவு மா வகைகளும் வழங்கப்படுகின்றது. இந்த சத்துணவு மா வகைகள் ஒழுங்காக போசாக்கு குறைந்த குழந்தைகளுக்கு வழங்கப்படுமானால் தேவையான போஷாக்கைகுழந்தைபெற்றுக்கொள்ளும்.

போசாக்கு குறைந்த பிள்ளைகளுக்கு சத்துணவு வழங்குவதற்கான மாதாந்தம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஊடாக அந்தந்த கிராமங்களில் குழந்தைகள் சிகிச்சை நிலையம் நடத்தப்படுகிறது. அங்கு மாசில் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை நிறுத்து விட்டு நிறை குறைந்த பிள்ளைகளுக்கு சத்துணவு மா (திரிபோஷா, கோன்சோயா) அந்தந்த குடும்பநல சேவையாளர்களால் வழங்கப்படுகிறது.

போசாக்கு இல்லாத குழந்தைகளைப் பரிசோதித்து அவர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்து மருந்துகள் வழங்க வேண்டிய பொறுப்பு அந்தந்த சுகாதார வைத்திய அதிகாரிகளின் கடமையாகும்.

ஒவ்வொரு குடும்ப நல சேவையாளர் பிரிவிலும் நடத்தப்படும் தாய் சேய் சிகிச்சைப் பிரிவுகளுக்கும் சென்று பரிசோதனை நடத்த வேண்டியது சுகாதார வைத்திய அதிகாரியின் பொறுப்பாகும். யாழ்.மாவட்டத்தின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் பெரும்பாலும் பதில் கடமையாற்றுபவர்களே உள்ளனர். இவர்கள் அந்தந்த அலுவலகப் பணிகளை மட்டும் கவனித்து வருகின்றனர்.

கிராமப் புறங்களிலேயே சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்படுவதால் அங்கு நடத்தப்படும் தாய், சேய் சிகிச்சை நிலையங்களுக்கு வைத்திய அதிகாரி சென்று குழந்தைகளைப் பார்வையிட்டு போசாக்கின்மையால் பாதிக்கப்படும் குழந்தைகளில் அவசியமெனக் கருதும் சிறுவர்களை அந்தந்தப் பிரதேசத்தில் இயங்கும் ஆதார வைத்தியசாலைகளுக்கு சிகிச்சை பெற அனுப்பவேண்டும். ஏனெனில் இந்த வைத்தியசாலைகளுக்கு வாரத்தில் ஏழு நாள்களும் குழந்தைகள் வைத்திய நிபுணர்கள் சிகிச்சையளித்து வருகின்றனர். ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வரும் போசாக்குக் குறைந்த பிள்ளைகளை வைத்திய நிபுணரிடம் அனுப்பி சிகிச்சை பெற சட்டமயப்படுத்தப்பட வேண்டும். வைத்தியசாலைகளில் நடத்தப்படும் குழந்தைகள் கிளினிக்குகளுக்கு வரும் ஒன்று தொடக்கம் 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்களை வைத்தியசாலை விடுதியில் தங்க வைத்து உரிய சிகிச்சைகளையும் தரமான உணவுகளையும் வழங்கி போசாக்கு குறைபாட்டிலிருந்து விடுவிக்க முடியும்.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் போன்ற இடங்களில் உள்ள ஆதார வைத்தியசாலைகளில் இயங்கும் சிறுவர் விடுதிகளின் நலன்களில் சுகாதாரத் திணைக்களத்தினர் கூடிய அக்கறை செலுத்தவேண்டும். ஒவ்வொரு ஆதார வைத்தியசாலையிலும் குழந்தைகள் வைத்திய நிபுணர் அவசியம் நியமிக்கப்படல் வேண்டும்.

ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் போசாக்கின்மையான நிலையில் காணப்படும் குழந்தைகளை இந்த குழந்தை வைத்திய நிபுணரிடம் பரிசோதனைக்கு அனுப்பப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தல் அனைத்து சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் குடும்ப நல சேவையாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

போசாக்கின்மையால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு சத்துணவு மா வகைகளான திரிபோஷா, கோன்சோயா போன்றவை உரிய முறையில் வழங்கப்படுகிறதா எனவும் கண்காணிக்க வேண்டியது அவசியம்.



குழந்தைகளுக்கு விலை அதிகரித்த பால்மா சத்துணவு போன்றவை வழங்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. நம் நாட்டில் நமது பிரதேசத்தில் விளைந்த பயிர் வகைகளில் அனைத்தும் குழந்தைகளுக்கு நிறைந்த போசாக்கு வழங்கக் கூடியவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ கல்பனா

# சம்பூர்; சாம்பலின் பூமியா?




**நிவாரணம் இன்றி பட்டினியால் வாடும் தங்களைச் சொந்த இடத்திலாவது குடியமர்த்துங்கள் என்று அவர்கள் கண்ணீர் மல்க கேட்கின்றனர். இந்த மக்களின் அழு குரலுக்குக் கூட அரசு அடிபணியவில்லை.**

"சோதனைமேல் சோதனை போதுமடாசாமி..." தமிழனாகப் பிறந்துவிட்டால் இதுதான் நியதி என்றுகூறும் அளவுக்கு தமிழ் மக்கள் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பல்வேறு இன்னல்களைத் தொடர்ச்சியாக அனுபவித்து வருகின்றனர். போரால் இடம்பெயர்ந்த மக்கள் தற்போது மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் சென்று ஓரளவுக்கு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புகின்றனர். ஆனால் கிழக்கு மாகாணம், சம்பூர் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் ஆறு ஆண்டுகளைக் கடந்தும் இதுவரை அகதி முகாம்களிலேயே சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டு முடங்கிக் கிடக்கின்றனர். சொந்த இடத்தில் வாழ்ந்தபோது எத்தனையோ சுக போகங்களை அனுபவித்து வந்த சம்பூர் மக்கள் இன்று எவ்வித அடிப்படைவசதிகளும் இன்றி தகரக்கொட்டில்களுக்குள்ளும், தறப்பாள் கொட்டகைகளின் கீழும், மரங்களின் கீழும் தமது வாழ்வைக் கழிக்கின்றனர்.

சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கு வழங்கப்பட்ட உலர் உணவு நிவாரணத்தைக் கூட அரசு திட்டமிட்டு நிறுத்தியுள்ளது. இந்த மக்களின் நிலத்தைப் பறித்த அரசு அவர்களின் உயிரையும் காவு கொள்வதற்கு எத்தனிக்கின்றது. அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கி வந்த உதவிகளையும் மஹிந்த அரசு நிறுத்தியுள்ளது. எவ்வித தொழில் வாய்ப்புகளும் இன்றி அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்ல முடியாது வேதனையில் தவிக்கின்றனர் சம்பூர் மக்கள். இவர்களுக்கு வழங்கப்பட்ட உலர் உணவு நிவாரணத்தை மீண்டும் வழங்குமாறு கோரி எத்தனையோ தடவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்தும் அரசு அதனை கவனத்தில் கொள்ளவில்லை. நிவாரணம் இன்றி பட்டினியால் வாடும் தங்களைச் சொந்த இடத்திலாவது குடியமர்த்துங்கள் என்று அவர்கள் கண்ணீர் மல்க கேட்கின்றனர். இந்த மக்களின் அழு குரலுக்குக் கூட அரசு அடிபணியவில்லை. இயற்கை எழில் கொஞ்சும் சம்பூர் பிரதேசத்தில் விவசாயம் செய்தும் மீன்பிடித்தும் வாழ்ந்த மக்கள் இன்று உண்ண உணவுகூட இன்றி நடுத்தெருவில் நிற்கின்றனர்.

சம்பூர் மக்கள் தங்களது துன்ப,துயரங்களைக் கூறி வழிபடுகின்ற ஆலயத்தைக்கூட சென்று வழிபடமுடியாத அளவுக்கு அரசு தடை விதித்துள்ளது. கிழக்கில் மூலை முடுக்கெல்லாம் பௌத்த விகாரைகளை அமைக்கும் அரசு சம்பூரில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பத்திரகாளி அம்மன் கோயிலுக்கு சென்று வழிபடுவதற்கு தடை விதித்துள்ளது. இந்த ஆலயம் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் இல்லாதபோதும் மக்கள் சென்று வழிபடுவதற்கு அனுமதி வழங்காமை தமிழ் மக்களுக்குச் செய்யும் மறைமுக அச்சுறுத்தலாகும். சம்பூர் மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளில் நலன்புரிநிலையங்களிலுள்ள மாணவர்கள் கல்வி கற்கின்றபோதும் ஒருவேளை உணவுக்குக்கூட வழியில்லாது கஷ்டப்படும் ஒரு சூழலில் எவ்வாறு அவர்களால் கற்றல் செயல்பாட்டில் ஈடுபடமுடியும். சில மாணவர்கள் உணவு உட்கொள்ளாது கற்றலில் ஈடுபடுவதால் பாடசாலைகளில் மயங்கி விழும் பரிதாபச் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. ஆயிரம் பாடசாலைத் திட்டம், பிள்ளைநேயப் பாடசாலை என்று பல அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டுவரும் அரசு, சம்பூரில் இருந்த பாடசாலையை அழித்து கல்விக்குப் பெருமை சேர்க்கிறது. இவ்வாறு தமிழ் மாணவர்களின் கல்வியை மழுங்கடிக்கப் பார்க்கிறது. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்கிறார்கள் சான்றோர்கள். ஆனால் இருக்கின்ற கோயிலையும் இடித்து தரைமட்டமாக்கி தமிழினத்தின் அடையாளத்தை இல்லாதொழிப்பதுதான் இலங்கை அரசின் பகுத்தறிவுக்கொள்கை.

சம்பூர் மக்கள் வசிக்கும் நலன்புரி நிலையங்களின் [illegible] எந்தநேரமும் சரிந்துவிழக்கூடிய அபாயத்தில் கா[illegible] இத்தகை

(21ஆம் பக்கம் பார்க்க... )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

நெடுந் தொடர் 9

■ பா.உண்மை

தோமஸ் லிங்கனின் பண்ணை மிகச் சிறியது. ஆபிரஹாம், தந்தையுடன் அந்தப் பண்ணையில் வேலை பார்ப்பான். வேலை இல்லாத நாள்களில் அருகிலுள்ள வேறு பண்ணைகளுக்கு ஆபிரஹாமைக் கூலி வேலைக்கு அனுப்புவார் தோமஸ். வேலை பாக்கும்போதுகூட இடையிடையே புத்தகம் படித்துக் கொண்டிருப்பான் ஆபிரஹாம்.

படிப்பதோடு நிற்காமல் இடையிடையே உடன் வேலை பார்ப்பவர்களுக்கு கதைகளும் சொல்வான். வேடிக்கையாகப் பேசுவான். இதெல்லாம் தோமஸுக்குக் கொஞ்சமும் பிடிக்காது. ஒரு மனிதன் எழுதவும் படிக்கவும் தெரிந்து கொண்டால் போதாதா? மேற்கொண்டு படித்துக் கொண்டே இருக்க வேண்டுமா? என்று கோபப் படுவார்.

ஒரு நாள் பக்கத்திலிருந்த ஒரு வயலுக்குக் கூலி வேலைக்குப் போனான் ஆபிரஹாம். அங்கு சில மரங்களை வெட்ட வேண்டியிருந்தது. கொஞ்ச நேரம் வேலை பார்த்தான். பிறகு, கோடாலியைக் கீழே போட்டு விட்டு ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்துவிட்டான். அந்த நிலத்தின் உரிமையாளர் வந்தார். ஆபிரஹாம் வேலை பார்க்காமல் புத்தகம் படித்துக் கொண்டிருப்பதை பார்த்தார்.

"வேலையை விட்டுட்டு அங்க என்ன கிழிக்கிறாய்" என்று சினந்தார் உரிமையாளர்.

ஆபிரஹாம் அமைதியாக "சட்டம் படிக்கிறேன்" என்றான்.

இதைக் கேட்டதும், உரிமையாளருக்கு ஆச்சரியத்தை அடக்க முடியவில்லை. இருந்தாலும் வேலை கொடுத்தவர் ஆயிற்றே! அடங்க மாட்டாமல் கேட்டார்.

"உன் அப்பா தோமஸ் லிங்கன் எவ்வளவு கடுமையான உழைப்பாளி தெரியுமா? அவர் மகனா நீ? வேலையை விட்டுட்டு சோம்பேறி மாதிரி புத்தகம் வாசிக்கிறியே! எப்படி வேலை செய்யிறது என்று அப்பா உனக்கு சொல்லிக் கொடுக்கவே இல்லையா?" என்றார்.

"வேலை செய்யிறது எப்படி என்று அப்பா சொல்லிக் குடுத்திருக்கிறார். ஆனால் வேலையை நேசிக்கச் சொல்லிக் குடுக்கவேயில்லை" என்று ஆபிரஹாமிடமிருந்து திடமாக வந்தது பதில்.

தோமஸ் லிங்கனுக்கு ஆபிரஹாமின் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் கொஞ்சமும் பிடிக்காது. அடிக்கடி கண்டித்துக் கொண்டே இருப்பார் . ஒரு முறை ஓங்கி அறைந்துகூட இருக்கிறார். அறையை வாங்கிக் கொண்டு ஆபிரஹாம் அழுதானே தவிர, திருந்தியதெல்லாம் கிடையாது. எப்போதும் போல தன் வேலைகளைச் செய்து கொண்டே இருந்தான்.

ஆபிரஹாம் லிங்கன் அவ்வப்போது தன் சகோதர சகோதரிகளையும் ஊர்ச் சிறுவர்களையும் கூட்டி வைத்துக் கொண்டு, தனக்குத் தெரிந்த வேடிக்கை கதைகள் சொல்வான். புதிர் போடுவான். தான் படித்த புத்தகங்களில் இருந்து மிக முக்கியமான பகுதிகளை அவர்களுக்கு வாசித்துக் காட்டுவான். அல்லது மேடையில் முழங்குவது போல ஒரு சிற்றுரை ஆற்றுவான்.

ஆபிரஹாமை பார்த்தால், சரித்திரத்தில், புகழ் மிக்க தலைவர்களில் ஒருவனாக இந்தச் சின்னப் பையன் இடம்பெறப்போகிறான் என்று அப்போதைக்கு யாராலும் சத்தியமாகக் கற்பனைகூடச் செய்திருக்கமுடியாது. அணில் தோல் அல்லது தேவாங்கின் தோலால் செய்யப்பட்ட மிகச் சாதாரணமான தொப்பியை த் தலையில் அணிந்திருப்பான்.

துணியால் செய்த கால்சாட்டைகளுக்குப் பதிலாக, மான் தோலால் தயாரிக்கப்பட்ட கால்சட்டையை அணித்திருப்பான். அந்தக் கால்சட்டைகூட மிகவும் குட்டையாக இருக்கும். கோடை காலத்தில் கைத்தறி துணியில் தயாரித்த சட்டையையும் அணிந்திருப்பான். அவனுடைய சப்பாத்துக்கள் முரட்டுத்தனமான மாட்டுத் தோலால் செய்யப்பட்டவை. ஞாயிற்றுக்கிழமைகளிலும் குளிர்காலத்தில் மட்டுமே அவன் சப்பாத்துக்களை அணிவான்.

ஆபிரஹாமின் குடும்பம் மிகக் குறைந்த வருமானத்தில், ஏழ்மையான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தது. சோள மாவில் செய்த ரொட்டியைத்தான் அவர்கள் சாப்பிட்டார்கள். எப்போதாவது வேட்டையாடிக் கிடைக்கும் மான், முயல் போன்ற மிருகங்கள்தான் அவர்களது இறைச்சி. மரத்தாலும் மண்ணாலும் செய்யப்பட்ட பாத்திரங்கள்தான் அந்த வீட்டில் இருந்தன. அந்தக் காலத்தில் புகழ்பெற்றிருந்த மண்ணெண்ணெய் குக்கர் கூடக் கிடையாது. விறகு அடுப்புத்தான்.

சில சமயங்கள் தன் மாலை நேரத்தைக் கழிப்பதற்காக அருகில் இருந்த ஜெண்ட்ரி வில்லி என்ற கிராமத்துக்குப் போவான் ஆபிரஹாம். அந்தக் கிராமத்து மக்கள் அவன் சொல்லும் வேடிக்கை கதைகளையும் நகைச்சுவைகளையும் சுற்றி நின்று ரசித்துக் கேட்பார்கள். இவ்வளவு சின்ன வயதில் இந்தப் பையனுக்குள் இவ்வளவு சங்கதிகளா என்று வியந்து போவார்கள். படிப்பதோடு நின்று விடவில்லை ஆபிரஹாம். தனக்கு தோன்றியதை எழுதியும் பார்ப்பான். மிகச்சிறிய வயதிலேயே, சின்னச்சின்ன வாக்கியங்களைக் கொண்டு, கட்டுரைகளை எழுதினான்.

சிறுவர்கள் ஆமைகளைப் பிடித்து அவற்றின் மேல் நெருப்பைக் கொளுத்திப் போட்டு விளையாடுவார்கள். அதைப் பார்க்கும் போதெல்லாம் ஆபிரஹாம் வருத்தப் படுவான். இந்தக் கொடுமையைப் பற்றி, விலங்குகளுக்கு நேரும் அவலங்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதினான். அப்போது ஆபிரஹாம் லிங்கனுக்கு 16 வயது.

★

நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் வாதாடுவதை நேரில் கேட்க வேண்டும் என்ற ஆசை ஆபிரஹாமுக்கு நீண்ட நாள்களாவே இருந்தது. பூன்வில்லி என்ற ஊரில்தான் நீதிமன்றம் இருந்தது. பூன்வில்லிக்குப் போக 16 மைல் பயணம் செய்ய வேண்டும். அப்போது பூன்வில்லியில் ஒரு கொலை வழக்கு விசாரணைக்கு வரஇருந்தது என்றும் அதில் புகழ் பெற்ற வழக்கறிஞர் ஒருவர் வாதாடப் போகிறார் என்றும் கேள்விப்பட்டான் ஆபிரஹாம். 16 மைல் தூரம் நடந்தே பூன்வில்லிக்குப் போனான்.

# வெற்றி பெறலாம் வாங்க!



9

## மகிழ்ச்சி

வெற்றி எந்த அளவுக்கு நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது என்பதை வைத்தே நம்மில் பலர் வெற்றியை அளவிடுகிறோம். உதாரணமாக, நீங்கள் நீச்சல் கற்றுக் கொள்ள விரும்பி, அதனைக் கற்றுக்கொண்டீர்கள் என்றால் அது உங்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும். விடுமுறையின்போது கடற்கரை மணல் வெளியில் ஓடி ஆடி விளையாடி, பின் தெளிந்த கடல் நீரில் குதித்து விளையாடி விடுமுறைக்கொண்டாட்டத்தை மேலும் மகிழ்ச்சியுடையதாக ஆக்குவோம் என்று கற்பனை செய்து வைத்திருந்தீர்கள் என்றால் விடுமுறை வந்தவுடனே உங்களுடைய கனவு உயிர் பெற்று எழுந்துவிடும். நீங்களும் மிகவும் மகிழ்ச்சியடைவீர்கள்.

வாழ்க்கையில் சந்திக்கும் பல புதிய விஷயங்களை வெகு விரைவாகவே வழக்கமான ஒன்றாக மாற்றிக்கொண்டு பின் அதைச் சாதாரணமான விஷயமாக எடுத்துக்கொள்கிறோம். உதாரணமாக நீச்சல் கற்றுக்கொள்வதை எடுத்துக் கொள்வோம். பல விடுமுறை நாள்களில் நீங்கள் தொடர்ந்து நீச்சல் குளத்துக்குப் போக ஆரம்பித்து விட்ட பின் அது வழக்கமான விஷயமாக மாறி விடுகிறது. முன்பு எது கனவாக இருந்ததோ இப்போது அது ஒரு சாதாரண வேலையாகி விட்டது. உங்களுக்கும் அதிலிருந்த மகிழ்ச்சி போய்விடும்.

உங்கள் இலக்கை நோக்கி நீங்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். ஆனால் அந்த மகிழ்ச்சி தொடர்ந்து நீடித்திருக்கும் என்று எதிர்பார்க்கக் கூடாது. அதனால்தான் ஒரேயடியாக இல்லாமல் உங்கள் கடைசி இலக்கில் வெற்றியை அடைய முதலில் இருந்து சிறு சிறு இலக்குகளை அமைத்து அவற்றில் வெற்றி பெற்றுக் கொண்டே செல்ல வேண்டும். அதுதான் மகிழ்ச்சியான வெற்றிக்கு வழிசமைக்கும்.

நீங்கள் நல்ல மனநிலையில் இருக்கும் போது சிறிய அதேசமயம் முக்கியமான மாற்றங்களைச் செய்வதென்பது சாத்தியமாகும்.

அனைவரையும் மகிழ்ச்சியடையச் செய்யும் 10 விஷயங்கள் உண்டு

**புத்துணர்ச்சியுடன் எழுந்திருங்கள்:** விழித்திருக்கும்போது நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமானால், படுக்கையில் போதுமான நேரம் நீங்கள் தூங்கியிருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

**நேசிப்பவரைக் கண்டறியுங்கள்:** சில பேர் ஆளற்ற தீவில் தனியாக வருடக் கணக்கில் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். உண்மையில் நிறையப் பேர் தப்பிப்பதற்காகவே எப்பொழுதும் அலுவல்கள் மிகுந்தவராகத் தங்களைக் காண்பித்துக் கொள்வார்கள். உங்களை நேசிப்பதற்கு ஒருவர் இருப்பது உங்களின் மகிழ்ச்சியை அதிகப்படுத்தும்.

> உங்கள் இலக்கை நோக்கி நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். மகிழ்ச்சி இல்லாமல் வெற்றி இல்லை.

**உடல் தகுதியுடன் இருங்கள்:** நல்ல உடல் தகுதியுடன் இருக்கும்போதுதான் மனித உடம்பு குறிப்பாக மூளை சிறப்பாகச் செயல்படுகிறது. அதற்காக நீங்கள் உடற்பயிற்சிக் கூடத்தில் உடன் சேர வேண்டும்என்பதில்லை. சுறுசுறுப்பாக இருங்கள். எந்தெந்த முறையில் உடற்பயிற்சி செய்தால் உங்களுக்கு மிகவும் பிடிக்குமோ, அப்படியே செய்யுங்கள்.

**இலக்குகளைக் கொண்டிருங்கள்:** மிகவும் அடிப்படையான இலக்குகளை நிர்ணயித்துக் கொள்வதுகூட, அதை அடைவதில் உங்கள் கவனத்தைக் குவியச் செய்யும். நிறையச் சிறு இலக்குகளைக் கொண்டிருங்கள். ஒவ்வொன்றை அடையும் போதும் அதைக் கொண்டாடுங்கள்.

**கூட்டைக் கட்டுங்கள்:** நாம் செல்லமாய் வளர்க்கும் விலங்குகள் எவ்வாறு தனக்கான இடத்தை அமைக்கின்றன என்று பார்த்திருக்கிறீர்களா? அந்த இடத்தில் தான் அவைகள் பாதுகாப்பாகவும் கதகதப்பாகவும் உணர்கின்றன. அதுபோன்று உங்களுக்கெனத் தனியிடம் அமையுங்கள். அது வீடாகவும் இருக்கலாம், உங்களின் படுக்கையறை அல்லது விளையாடும் மேசை என்று எதுவாகவும் இருக்கலாம். நீங்கள் தளர்வாக, ஆசுவாசமாக இருக்கும் ஏதாவது ஓர் இடத்தைக் கொண்டிருங்கள்.

**வேலைகளைக் கட்டுக்குள் வைத்திருங்கள்:** சில சமயங்களில் ஏகப்பட்ட வேலைகளை எளிதாக எடுத்துக் கொள்வீர்கள். கொஞ்ச நாள் கழித்துப் பார்த்தால் நீங்கள் வேலைகளால் குழப்பப்பட்டு இருப்பீர்கள். நான் சோம்பேறித்தனத்துக்கு ஆதரவாகப் பேசவரவில்லை. ஆனால் அதிக வேலைச் சுமையை ஒரேநேரத்தில் கொண்டிருப்பது ஆரோக்கியமானது அல்ல.


**விருதுக்குத் திட்டமிடுங்கள்:** உங்களுக்கு யாரும் 'ட்ரீட்' கொடுக்காவிட்டால் உங்களுக்கு நீங்களே 'டீரீட்' கொடுங்கள் ஒவ்வொரு விருந்தையும் குறிப்பிட்ட சாதனைக்கான பரிசு போல அமைத்துக் கொள்ளுங்கள். பெரிய விருந்தோ சிறிய விருந்தோ இரண்டும் முக்கியமானதுதான்.

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

**பரிசுகள் கொடுங்கள்:** பிறரைச் சந்தோசமாக வைத்துக் கொள்வது உங்களைச் சந்தோஷமாக வைத்துக் கொள்வதற்கான ஒரு சிறந்த வழி. பெருந்தன்மையான நண்பனாக இருங்கள். வாழ்க்கை உங்களுக்கு வட்டியும் முதலுமாகத் திருப்பிக்கொடுக்கும்

**சகிப்புத் தன்மையுடன் இருங்கள்:** மற்றவர்கள் எப்பொழுதும் தங்களின் பதற்றங்களை உங்களிடம் திணிக்க நினைப்பார்கள். அவர்கள் உங்களின் நேசத்துக்குரிய இல்லை பட்சத்தில் அனுதாபத்தை மட்டும் தெரிவியுங்கள். அவர்களின் சோகம் உங்களைத் தொற்றிக்கொள்ளாமலிருக்க முயற்சி செய்யுங்கள்.

**விளையாடுங்கள்:** நாம் குழந்தையாக இருப்பதை நிறுத்தியதும்போது, விளையாடுவதையும் மறந்து போகிறோம். விளையாட வேண்டும், குறிப்பாக உங்கள் வாழ்க்கைத் துணைவருடன் அது உங்கள் பிரச்சினைகளை மறந்து போகச் செய்யும்.



# விரிசலடையும் உறவு

யமுனா

இந்தியாவில் தமிழ்நாட்டு மீனவர்களது தொழில் விவகாரம் ஒரு முக்கிய பிரச்சினையாக ஆகியுள்ளது. அதாவது, தமிழக மீனவர்கள் தமது கடல் எல்லை தாண்டி மீன்பிடிக்கச் செல்வதால் அடிக்கடி பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க நேர்ந்து வருகிறது. குறிப்பாக இவர்கள் கச்சதீவுப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிக்கும்போது இலங்கை மீனவர்களால் விரட்டியடிக்கப்படும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் தமது தொழிலில் ஈடுபடும் வேளை தமிழ்நாட்டு மீனவர்கள் இடைமறிக்கப்பட்டு இலங்கைக் கடற்படையால் பல தடவைகள் கைது செய்யப்பட்டனர். குறிப்பிட்ட இந்தப் பிரச்சினை நீண்டகாலமாக தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக அதாவது இந்திய -இலங்கை உயர்மட்ட அரசியல் முக்கிய தலைவர்களும் பலதடவைகள் கூடிப் பேச்சு நடத்தி உள்ளனர். எனினும் அத்தகைய பேச்சுக்களால் உருப்படியான எந்தவித பலனும் கிடைக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதனால் இந்த மீனவர் விவகாரம், இந்தியாவுக்கு ஒரு நிரந்தரத் தலையிடியாகத் தொடர்ந்து வருகின்றது.

இது ஒருபுறமிருக்க, இந்தவாரம் சர்வதேச கடற் பரப்பில் வைத்து தமிழக மீனவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட துயரச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. அந்த வகையில் இந்த விவகாரம் இந்திய அரசுக்கு புதிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகக் கருதமுடிகிறது.

அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்காக ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் துபாய் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அந்தவேளையில் பஹ்ரைனில் முகாமிட்டுள்ள அமெரிக்க கடற்படையின் 5 ஆவது படைப்பிரிவுக்காக எரிபொருள் ஏற்றிக்கொண்டு 'யு.எஸ்.என். எஸ். ரப்பாஹன்னோக்' என்ற கப்பல் துபாயின் ஜபேல் அலி துறைமுகத்துக்கருகில் பயணித்துக் கொண்டிருந்தது.

தமிழக மீனவர்களின் மீன்பிடிப்படகு, குறிப்பிட்ட அந்த அமெரிக்கக் கப்பலின் அருகே சென்றபோது, அந்தக் கப்பலில் இருந்த கடற்படையினர் கண்மூடித்தனமாக இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இதனால் சேகர் என்ற தமிழக மீனவர் உயிரிழந்தார். முனிராஜ், முத்துக் கண்ணன், முருகன் ஆகிய மூன்று மீனவர்கள் படுகாயமடைந்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு துபாயில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் விரைந்து சென்றனர். அத்துடன் காயமுற்ற தமிழக மீனவர்களையும் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர். அதுமட்டுமன்றி குறிப்பிட்ட தமிழக மீனவரைச் சுட்டுக்கொன்ற அமெரிக்கக் கடற்படையினர் மீது வழக்குப்பதிவு செய்யுமாறு ஐக்கிய அரபு எமிரேட் அரசிடம் இந்தியத்தூதரக அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

குறிப்பிட்ட இந்தச் சம்பவம் தொடர்பாக பூரண அறிக்கையொன்றைத் தருமாறு மத்திய அரசு, துபாயில் உள்ள இந்தியத் தூதரக உயர் அதிகாரியைக் கோரியுள்ளது. மேலும் துபாயில்உள்ள இந்தியத்தூதரைத் தொடர்புகொண்ட இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா உயிரிழந்த மீனவர் சேகரின் உடலை தமிழ் நாட்டுக்குக் கொண்டு வரவும், காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை மேற்கொள்ளவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இவற்றுக்கு மத்தியில் சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் இந்தச் சம்பவத்துக்கு இரங்கல் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்க தொன்றாகும். இந்தச் சம்பவம் தொடர்பாக இந்தியாவும், ஐக்கிய அரபு எமிரேட்ஸும் இணைந்து விசாரணை நடத்தவேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கை தி.மு.க. எம்.பிக்கள் வலியுறுத்தியுள்ளனர். அதுமட்டுமல்லாமல் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த மீனவர் மற்றும் படுகாயமடைந்தோருக்கு உரிய இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுத் தருமாறும் வலியுறுத்தியுள்ளனர்.

அண்மைக் காலத்தில் இதேபோன்றதொரு சம்பவம் இடம்பெற்றமை எம்மில் பலரும் அறிந்த விடயம். கேரளாவின், 'கொல்லம்' கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இத்தாலியக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இரு மீனவர்கள் உயிரிழந்தனர். அதன் தொடர்ச்சியாக,குறிப்பிட்ட இத்தாலியக் கடற்படையினர் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். எனவே, இந்தச் சம்பவத்தை முன்னுதாரணமாகக் கொண்டு அண்மைய சம்பவம் தொடர்பாக அமெரிக்கக் கடற்படையினர் மீதும் வழக்குப் பதிவு செய்ய இந்தியத் தூதரக அதிகாரிகள் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் மீனவர் விவகாரம் காரணமாக இந்திய மத்திய அரசு தொடர்ச்சியாக அடிக்கடி சிக்கலில் மாட்டிக்கொண்டு திணற நேர்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கணம் திரும்பி பார்ப்போமா?

தானா

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவில. சங்ககாலப் புலவர் கனியன் பூங்குன்றனாரின் வாக்கு இது.

தமிழ் மொழியின் சிறப்புக்கும் இருப்புக்கும் அந்த மொழிசார் பண்பாட்டுப் பழக்கங்களும், கலாசார விழுமியங்களுமே மெருகூட்டுவன என்பது எம் மத்தியில் நிலவும் நம்பிக்கை. யதார்த்தமும் அதுவே.

உலகில் எந்தவொரு இனமும், உலக இயக்கத்துடன் ஒத்தியங்க வேண்டியது இன்று தவிர்க்க இயலாத ஒன்றாகிவிட்டுள்ளது. அந்த அளவுக்கு இந்த நூற்றாண்டின் அதீத விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றம், பரந்த உலகைக் குறுக்கி, நெருக்கமாக்கி வைத்துள்ளமை கண்கூடு. இத்தகு சூழலில் எமது தமிழினம் தனித்துவமும் கட்டுக்கோப்பான பண்பாட்டுப் பழக்கவழக்கங்களும் கொண்டதோர் இனம் என வெறுமனே பெருமை பேசிக்கொள்வதால் மட்டும் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை. அதன் மூலம் எமக்கான பொறுப்பை மட்டுப்படுத்திக் கொள்ள இயலாது. மாறாக, எமது இரத்தத்தில் ஊறிப்போயுள்ள அந்த இன உணர்வுகளை முடியுமான வரையில் கட்டிக் காப்பாற்றிப் பேணிச் செயற்பட்டால் மாத்திரமே, தமிழ் இனத்தின் பாதுகாப்பையும் இருப்பையும் நிலை நிறுத்த இயலும்.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்ற முதுமொழி, தமிழர்களின் பண்பாட்டு நடைமுறைகளுக்கு உரம் சேர்க்கும் ஒன்று. ஈழத்தமிழ் இனத்தவர்கள் மத்தியில், குறிப்பாக இந்து மதத்தவர் மத்தியில் திருமண பந்தம் என்பது புனிதமானதாகக் கொள்ளப்படுமொன்று. ஒருவனுக்கு ஒருத்தி என்ற அடிப்படைக் கோட்பாட்டை ஆண்டாண்டுகாலமாய் நடைமுறையில் மதித்தொழுகி, இனத்துக்கே பெருமை சேர்த்தவர்கள் நாம். இதனாற்றான் நினைத்தபடி வாழ்வதல்ல வாழ்க்கை; நேர்ந்தவிதம் வாழ்வதுதான் வாழ்க்கை என்ற நியதித் தத்துவப்படி இந்துக்கள் மத்தியில் திருமண பந்தத்துக்கு வரைவிலக்கணம் அமைந்தது.

ஆயினும் உலக வாழ்க்கை ஓட்டத்துக்கேற்ப நம்மையும் மாற்றிக்கொண்டாக வேண்டிய இன்றைய சூழ்நிலையில் நாம் புனிதமானதெனக் கருதும் திருமண பந்த உறவின் கட்டுப்பாடுகளையும் நாமாகத் தளர்த்தி வாழப் பழகிக் கொண்டுள்ளோம்.

தனிமனித உரிமைகள் என நமக்கு நாமே வகுத்துக்கொண்ட சுதந்திரத்தை எமது குடும்ப வாழ்க்கையிலும் புகுத்திக்கொண்டு மன உணர்வுகளுக்கான கட்டுப்பாட்டு வரம்பைத் தளர்த்திக் கொண்டு எப்படியும் வாழலாம் என எண்ணத் தலைப்பட்டதன் காரணமாகவே காலாதிகாலமாக நாம் கட்டிக்காத்து வந்த குடும்ப வாழ்க்கை விதிமுறைகளை, கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து, மீறிச்செயற்பட்டு எமது இனத்தின் தனித்துவப் பண்புகளைத் தொலைக்க முயல்கிறோம். குறைகூறிச் சுட்டிக்காட்டப்பட்டால் தனிமனித சுதந்திரத்தை சிலாகித்துக்கூறி எம்மை நியாயப்படுத்திக் கொள்கிறோம்.

'கிட்டாதாயின் வெட்டென மற' என்ற முதியோர் வாக்கை முன்னிறுத்தி ஒரு கணவன் மனைவிக்கிடையே நிலவும் புரிந்துணர்வின்மை காரணமான ஒத்துப்போகாத தன்மையை, மனவிரிசலை நேர்சீர் செய்து கொள்வதற்குப் பதிலாக சட்டப்படி பிரிந்து வாழும் வாய்ப்பை எமது சமூகம் நினைவுபடுத்தி வைக்கிறது.

எனது பிள்ளைகளும், உனது பிள்ளைகளும், எங்கள் பிள்ளைகளுடன் விளையாடுகிறார்கள். (My Children and your Children are Playing with our Children) என ஆங்கிலேய குடும்பத் தலைவனொருவன் தனது இரண்டாவது மனைவிக்குக் கூறுவதாக ஒரு பரிகாசக் கதையொன்று உண்டு. தனது முதல் மனைவி மூலம் பிறந்த பிள்ளைகளும், தனது தற்போதைய இரண்டாவது மனைவியின் முந்திய திருமணத்தின் மூலம் பிறந்த பிள்ளைகளும், இவ்விருவருக்கும் இடையிலான தற்போதைய திருமண பந்தம் மூலம் பிறந்த பிள்ளைகளுடன் கூடி விளையாடுகிறார்கள் என்பது கதை. அந்த அளவுக்கு மேற்குலகத்தவர்கள் மத்தியில் திருமணம், மணவிலக்கு என்பவை சர்வசாதாரணம் என்பதைக் கேலி செய்யும் வகையிலான சொற்றொடர் அது.

கணவன், மனைவி, பிள்ளைகள் என்ற கட்டுக்கோப்புடன் பரஸ்பரம் ஒருவர்மீதொருவர் அன்பு காட்டி, பாசப் பிணைப்புடன், ஒரு பற்றுப் பாசம் மிக்க குடும்பமாக, கஷ்டம், துன்பம், மகிழ்ச்சி, சோகம் என்ற மனித உணர்வுகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து வாழும் உன்னத வாழ்க்கை முறையை நாம் அன்று தொட்டு கடைக்கொண்டு வந்ததால் தான் கட்டுக்கோப்பான குடும்ப வாழ்க்கை முறைக்கு எம்மால் உதாரணம் காட்ட முடிந்தது. உலகத்து ஏனைய இனங்கள் மத்தியில் எமது குடும்ப வாழ்க்கை முறை விதந்து பாராட்டப்பட்ட, பாராட்டப்படுமொன்றாக நிலைபெற்றது.

ஒரு பெண்ணுக்கு அமைய வேண்டிய முக்கிய குணவியல்புகளில் முதலிடம் வகிப்பது பொறுமை என்பது தமிழ்ப் பண்பாட்டு நடைமுறை. தாம் வகிக்கும் குடும்பத் தலைவன் பாத்திரத்துக்கு ஊறுநேராது, குடும்பப் பொறுப்பை ஏற்று குடும்பத்தை நேர்சீரான பாதையில் வழிநடத்திச் சிறப்பிக்கும் பொறுப்பை அந்தக் கணவன் ஏற்றாக வேண்டுமென்பதும் தமிழ்ப் பண்பாடு வலியுறுத்தும் அம்சமொன்றே. இத்தகு பண்புகளை முறைப்படி பேணி வாழ்ந்ததால் தான் தமிழ்ப் பண்பாடு அன்று சிறப்புப் பெற்றது; பலராலும் விதந்து பேசப்பட்டது.

ஆனால் உலக மயமாதலின் விளைவால் நாம் இன்று இத்தகைய வாழ்க்கை நடைமுறைகளினின்றும் விலகிப் பிறழ்ந்து வாழத் தலைப்பட்டுள்ளோம். கணவன், மனைவி, பிள்ளைகள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் வளர்ந்து, ஒருவருக்கு மற்றவர் உரிய மரியாதை, கௌரவம் வழங்கும் நற்பண்புகள் கைவிடப்பட்டு, அன்பு, பாசம், புரிந்துணர்வு அற்றுப்போய் விட்டுக் கொடுக்க முன்வராத்தன்மை, ஈகோ என்ற அகங்கார கர்வத்தன்மை குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் தலையெடுக்க நேர்ந்தமையால் நாளாவட்டத்தில் மனப்பிறழ்வு உச்சமடைந்து ஆரோக்கியமற்ற உளநலம் குன்றிய குடும்பங்களாக இன்று பல குடும்பங்கள் உருமாற நேர்ந்துள்ளது.

மூன்று தசாப்த காலப் போர்ச் சூழல் எமது தமிழ்ச் சமுதாயத்தை, அதன் சிந்தனையை, நடைமுறை வாழ்க்கையைச் சீரழித்து விட்டுள்ளது என்று பற்பல தரப்புக்களிலிருந்தும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதுவும் ஒரு அளவுக்கு எமது வாழ்வியலில் மாற்றத்தை ஏற்படுத்தியமையை ஏற்றுத்தானாக வேண்டும்.

ஆனால் எமது அன்றைய வாழ்வியல் கட்டுக் கோப்புக்கள் இந்த அளவுக்குத் தலைகீழ் மாற்றம் கண்டமைக்கு வெறுமனே போர்ச் சூழலின் பாதிப்பைக் காரணமாக்கிவிட இயலாது.

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பது கருத்தோடமைந்த சினிமாப் பாடல் வரி. நாம் எமது வாழ்க்கையைத் திட்டமிட்டு அமைத்து, நெறிமுறைக்கமைய முன்னெடுக்க ஊக்கமும் ஆர்வமும் காட்டிச் செயற்பட முயன்றால் இன்றைய ஊனமுற்ற நிலையிலுள்ள எமது தமிழ்ச் சமுதாயம் நிச்சயமாக தன் நலிவு நிலையினின்றும் விடுபட வாய்ப்பமையும்.

அந்த வகையில் இயந்திரமயமாகிப் போய்விட்ட எமது குடும்ப வாழ்க்கை நடைமுறையை இயன்ற வரையில் பற்று, பாசம் அக்கறை கொண்ட குடும்பத்து உறுப்பினர் என்ற நிலைக்கு எம்மை நாமே மாற்றிச் சீர்செய்து கொள்வோமானால் எமது இன்றைய இந்தக் குடும்ப உறவுப் பின்னடைவு நிலையும் பிரச்சினைகளும் ஓரளவு தணிந்து ஆரோக்கியமான குடும்ப சூழல் உருவாக வழி பிறக்கும். இது குறித்து ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்போமா?

# பாதிக்கப்படுவது மக்களே

மருத்துவர் சி.எஸ்.யமுனானந்தா

வேலை நிறுத்தப் போராட்டம் இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன்னர் இருந்தே நடைமுறையில் உள்ளது.

பிரெஞ்சு நாட்டில் கைத்தொழில் ஊதியப் புரட்சியின் போது தொழிலாளர்கள் போதிய ஊதியமின்றி அடிமைகள் போல் நடத்தப்பட்ட போது மேற்கொள்ளப்பட்டது.

தொழிற்சங்கம் மூலம் தொழிலாளர் தமது உரிமைகளை பெறுவதற்கு இது ஒரு கருவியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

முன்னைய காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளால் முதலாளிமார்களே பாதிக்கப்பட்டனர். ஆனால் இன்றைய காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையால் பாதிக்கப்படுவது பொதுமக்களே.

முன்னைய காலத்தில் தகவல் தொடர்பாடல் மிகவும் குறைவான சூழல். ஆனால் இன்று எந்தப் பிரச்சினையையும் நேரடியாகவோ தொடர்பு சாதனங்கள் வாயிலாகவோ உரியவர்களுக்கும் தெரிவிக்கலாம்.

இலங்கையில் தொடர்ச்சியாக வேலை நிறுத்தம் நடைபெறும் இடங்கள் பல்கலைக்கழகங்களும், சுகாதார சேவைகள் பகுதியும் தான். துரதிர்ஷ்டவசமாக மிகவும் கற்றவர்கள் உள்ள பகுதியில் வேலை நிறுத்தம் ஒரு வேலையாகத் தொடர்வதுதான் வேதனை.

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் சம்பள அதிகரிப்பை எதிர்பார்த்து வேலை நிறுத்தத்தில் உள்ளனர். ஒரு நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டிய, திட்டங்களை உருவாக்க வேண்டியவர்கள் வேலையில்லாத வேலை செய்வது வேதனைக்குரியது.

உண்மையில் இலங்கை அரசு பெரியளவில் பணவீக்கத்தில் உள்ளது. இதற்குக் காரணம் இலங்கை ஒரு நாடு ஒருமக்கள் என்ற வேலைத் திட்டத்தின் கீழ் சிங்கள மயமாதலை இலங்கையின் வடக்குக் கிழக்கில் மேற்கொள்கின்றது.

தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை சிங்கள அரசிடம் இல்லை. இதனால் மனிதாபிமானப் பணிகளுக்கான நிதி உதவிகள் இல்லாது போகின்றன. இவற்றைப் பல்கலைக்கழக பேராசிரியர்கள் அரசுக்கு எடுத்துரைத்து நாட்டை உண்மையான அபிவிருத்திக்கு இட்டுச் செல்ல வேண்டும். மாறாகப் பூனை தூங்கினால் உலகம் இருண்டதாகிவிடும் என்ற நிலையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது உண்மையான பொருளாதாரச் சுமையை நீக்காது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் போருக்குப் பின்னரான அபிவிருத்தி, நல்லிணக்கம் என்ற சொற்பதங்களில் ஆய்வு மகாநாடு நடைபெறவுள்ளது. இது யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கணக்காண லக்ஸ்மன் கதிர்காமர்கள் செயற்படுகின்றனர் என்பதை கோடிட்டுக் காட்டுகின்றது. ஏனெனில் லக்ஷ்மன் கதிர்காமரது சிறந்த கல்விப்புலமை, நவாலிப்படுகொலைகளை மூடிமறைக்கவும் 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வில் அகதிகள் என்ற வார்த்தைக்கு பதில் உள்ளக இடப்பெயர்வு என்ற வார்த்தையை உபயோகிக்கவும் அதனால் தமிழ் மக்களுக்கான மனிதாபிமான சர்வதேச உதவிகள் தடைப்படவும் ஏதுவாயின.

அவ்வாறே இன்றும் எமது கல்வியியலாளர்கள் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழினப்படுகொலை பற்றி வரைவிலக்கணப்படுத்தவோ, ஆய்வு செய்யவோ முற்படவில்லை.

கடந்த வருடம் நடைபெற்ற மகாநாட்டிலும் Reconciliation என்ற சொல் பாவிக்கப்பட்டது. இந்த வருடம் Post War development என்ற சொல் மூலம் ஏதோ ஒரு பெரிய போரை தமிழ் மக்கள் நடத்தினார்கள் என்ற தோற்றத்தை உருவாக்க முனைகின்றனர்.

மாறாக Coping with on going Genocide என்ற சொல்லாடலே பயன்படுத்தி இருக்க வேண்டும். ஏனெனில் இந்த மாநாடுகளில் தமிழ் மக்களது உண்மையான சமூக உளப் பிரச்சினைகளுக்கோ, அரசியல் பிரச்சினைகளுக்கோ எந்தவொரு கருத்தும் தெரிவிக்கப்படுவதில்லை. மாறாக உலகத்தை ஏமாற்றும் நாடகத்தையே சிறப்பாக அரங்கேற்றுவர்.

அடுத்ததாக மருத்துவர்களது வேலை நிறுத்தப் போராட்டம் எந்த நேரமும் ஆரம்பிக்கலாம் என்று நோயாளிகள் பயந்த வண்ணம் உள்ளனர். யாழ்ப்பாண, வடமாகாண மருத்துவ சங்கத்தின் அங்கத்தவர்களே 2009 ஆம் ஆண்டு தமிழினப் படுகொலைகளுக்கு உரிய முதற் கட்டச் சாட்சிகள். ஆனால் இது தொடர்பாக தொழிற்சங்க ரீதியில் கண்டன அறிக்கையை வெளியிட்டதாகத் தெரியவில்லை. இதனை வெளியிடாது வைப்பதற்கு ஏற்றால் போலவே வைத்திய நிர்வாக அதிகாரிகளை வடமாகாணத்திற்கு அரசு நியமித்தது. அவர்களுக்கு அந்தக் கடமைக்காக வழங்கும் சலுகையே அவர்கள் புரியும் ஊழல்களைக் கண்டு கொள்ளாது விடுவது, எமது மக்களிடையே பல கறள்பிடித்த இரும்புத் துண்டுகள், குண்டு வீச்சுகளால் மறைந்து உள்ள போதும் அதற்காக நீதி கேட்டு எழாத மருத்துவச் சமூகம், சில இரும்புத் துண்டுகளுக்காகக் கிளர்ந்து எழுந்தமை வைத்தியசாலை குழு நிர்வாக மோதலின் தாக்கமே.

அவற்றை நிர்வாக நிலையிலேயே தீர்த்து பொது வேலை நிறுத்தத்துக்கு நாகரிகமான உலகில் பயணிப்பது தவறானது. உண்மையில் எமக்கு இழைக்கப்பட்ட அநீதி ஓரிடத்தில் உள்ளது. எமது விரக்தி வேறு இடத்தில் உள்ளது. எமது போராட்டம் வேறு நிலையில் உள்ளது. ஆனால் பாதிக்கப்படுவது மக்களும், நாட்டின் பொருளாதாரமுமே. எனவே நாம் முந்தைய மந்தைகளாக சிந்தை கொள்ளாதிருக்கும் விந்தைதனை விளங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதில் தேனாகிய இசை

திருமதி பகீரதி கணேசதுரை (மகாஜன கல்லூரி)

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் சங்கீதரத்தினம் க.ப.சின்னராசாவின் மாணவரான பா.ஞானவேலின் மிருதங்க அரங்கேற்றம் அண்மையில் மண்டபம் நிறைந்த கலா ரசிர்களின் முன்னிலையில் ஈழத்தின் அதிசிறந்த இளம் கலைஞர்களான த.றொபேட், அ.ஜெயராமன், நா.மாதவன், நா.சிவசுந்தர், சி.செந்தூரன் ஆகியோரின் இசை அரங்க அனுசரணையில் கனகச் சிதமாகவும் கிடைத்தற்கரிய இசைவிருந்தாகவும் இனிதாக இடம்பெற்றது. இறை வணக்கம், மங்கல விளக்கேற்றல், குருவணக்கம், தலைமையுரை, வரவேற்புரை போன்ற சம்பிரதாயங்கள் அனைத்தும் சிறப்பாக நடைபெற்றுக் குறித்த நேரத்திற்கே இசையரங்கு ஆரம்பமானது. முதலாவது உருப்படியாக வலஜி இராகத்தில் அமைந்த லால்குடி ஜெயராமனின் தானவர்ணமானது சதுஸ்ர, திஸ்ர நடைகளில் மிகச் சிறப்பாக இசைக்கப்பட்டது. இப்பாடலுடன் களைகட்டிய இவ்விசையரங்கில் ஹம்சத்வனி, சாவேரி, கன்னட போன்ற இராகங்களில் அமைந்த இசைப் பாடல்கள் இனிமையாக அமைந்தன. இவற்றுள் ஹம்சத்வனிப் பாடலிற்கான கணக்குக் கோர்வைகள் எடுப்பை அனுசரித்து அமைக்கப்பட்டிருந்தமையும் சபேசன் சேவடி என்னும் பாடல் ரூபக தாளத்தில் அதீத எடுப்பில் பாடப்பட்டமையும் ரசிகர்களின் உற்சாகத்தை அதிகரிக்கச் செய்தன.



இதன்பின் மத்தியமாவதி இராக ஆலாபனையைத் தொடர்ந்து அனுபல்லவியில் தொடங்கி அவையோரை ஆவல் கொள்ள வைத்து ஆடாது அசங்காது வா கண்ணா எனப் பாடப்பட்ட பாடல் இந்த அரங்கேற்றத்தின் பிரதான பகுதியாக அமைந்தது. வினோதமான கற்பனாசுர அமைப்புக்கள், அற்புதமான கணக்குகள், நெருடலான சுரக் குறைப்புக்கள், மகுடம் போல் அழகு செய்த முத்தாய்ப்பு என்பன சுருதி, லய சுத்தமாகவும் எந்த விதமான சறுக்கல்கள் இல்லாமலும் நிதானமாகவும் தெளிவாகவும் அனாயாசமாகவும் இசைக்கப்பட்டமை உண்மையில் பாராட்டப்படவேண்டியதே.

இதனைத் தொடர்ந்து அமைந்த லயக் கலைஞர்களின் தனியாவர்த்தனம் அன்றைய நிகழ்வின் உச்சமாக அமைந்து. சதுஸ்ர நடையில் தொடங்கி, திஸ்ரமாகவும் சங்கீர்ணமாகவும் வாசித்துச் சபையோரின் பலத்த கரகோஷத்தைப் பெற்றுக்கொண்டார். அரங்கேற்ற நாயகனான பா.ஞானவேல். சங்கீர்ண, மிஸ்ர, கண்ட, திஸ்ர நடைக்ளில் இறங்கு வரிசையில் அமைந்த லயக் கோர்வைகள் கடம், கஞ்சிரா, முகர்சிங் போன்ற கருவிகளில் பரிமாறல் முறையில் வாசிக்கப்பட்டு வழமைபோல் அல்லாத தனித்துவமான, புதுமையான தனியாவர்த்தனமாக இவ்விசைப் பகுதி நிறைவு கண்டது. இந்த லய வின்யாசப் பகுதியை உருவாக்கி நெறிப்படுத்திய மிருதங்க ஆசான் க.ப.சின்னராசாவைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை எனலாம்.

இதன்பின் இரவிச்சந்திரிக்கா இராகத்தில் மாகேலரா என்னும் தியாகராயர் கீர்த்தனையும் ஹேமவதியில் புதுமையான இராகம் தானம் பல்லவியும் இடம்பெற்றது. திஸ்ர ஜாதி அடதாளத்தில் க.ப.சின்னராசாவால் இயற்றப்பட்ட இந்தப் பல்லவியானது நான்கு மாத்திரைகள் கழித்துத் தொடக்கப்பட்டதுடன் சதுஸ்ர, திஸ்ர நடைகள் கலந்ததாகவும் மிக நுட்பமாக அமைக்கப்பட்டிருந்தது. எனினும் மேடையில் அமர்ந்திருந்த அத்தனை இசை இளவல்களும் இந்தப் பல்லவியை எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் திரிகாலப்படுத்தி திஸ்ரமாகவும் இராகமாலிகைக் கற்பனாசுரங்கள் அலை மோத அற்புதமாக இசைத்தனர். கரணம் தப்பினால் மரணம் என்னும் நிலையைப் போன்ற அதி நுட்பமான இப்பல்லவியானது பாடகர் தவநாதன் றொபேட்டினால் அட்சரம் பிசகாமல் பாடப்பட்டமையை மூத்த கலைஞர்கள் பலரும் மனமுவந்து பாராட்டத் தவறவில்லை.

கனதியான முறையில் நிகழ்ந்து கொண்டிருந்த இவ்வரங்கேற்றத்தில் இராகமாலிகைக் கீர்த்தனையுடன் சிந்துபைரவியில் ஓர் முருகன் பாடலுடனும் பிரியதர்சினி என்னும் அபூர்வ இராகத்தில் புதியதோர் தில்லானாவின் நர்த்தனத்துடனும் சந்த தாளத்தில் அமைந்த அருணகிரிநாதர் திருப்புகழும் இடம் பெற்று அரங்கேற்றம் இனிதே நிறைவுற்றது.

அரங்கில் இசைக்கப்பட்ட அத்தனை உருப்படிகளிற்கும் முதிர்ச்சி கண்ட வித்துவானைப்போல் இனிமையுடனும் இரசனையுடனும் சிறிதளவேனும் சோர்வில்லாமலும் மிருதங்கத்தில் நாதமழை பொழிந்த ஞானவேல் எதிர்காலத்தில் இசைத்துறையில் பட்டொழி வீசிப் பிரகாசிப்பார் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

முப்பத்தைந்தாவது மாணவராக அரங்கேற்றம் கண்ட இவரை உருவாக்கிய குருவான க.ப.சின்னராசா ஈழத்தின் மிருதங்கக் கலை வரலாற்றில் பெரும் சாதனையாளராகவும் படைப்பாளியாகவும் தன்னடக்கம் கொண்ட கலைஞராகவும் கடந்த ஐம்பது ஆண்டுகளிற்கும் மேலாகப் பணியாற்றி வருபவர். இவரது நீண்ட கால அனுபவ முதிர்ச்சியும் ஆசிரியத் திறனும் ஞானவேலில் மட்டுமல்லாமல் அன்றைய அரங்கைச் சிறப்புச் செய்த மாதவன், சிவசுந்தா செந்தூரன் போன்ற இவரது மாணவக் கலைஞர்களின் விரல்களிலும் பட்டவர்த்தனமாகத் தெரிந்தது.

கலைத்துறையின் வல்லவர்களான சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை, கலாகீர்த்தி.சாந்தினி சிவநேசன், முதுகலைமாணி கு.சிவஞானசுந்தரம் போன்றோர் விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தமையும் இசையாளரான கலாவித்தகர் சி.சிவஞானராசா தலைமை வகித்ததும் விருந்தினர்களது சுருக்கமான உரைகளும் அன்றைய நிகழ்வை மேலும் சிறப்புச் செய்தன எனலாம்.

விண்ணதிர ஓங்கி ஒலித்த சபையோரின் கரகோஷத்தின் மத்தியில் நடைபெற்ற இந்த மிருதங்க அரங்கேற்றமானது கோலாகலமான ஆடம்பர விழா போன்று இல்லாமல் உண்மையான கலை நிகழ்வாக வடிவமைக்கப்பட்டு நடத்தப்பட்டமை எதிர்கால அரங்கேற்றங்களுக்கான சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும். எந்த விதமான குறைபாடுகளும் இன்றிப் பயபக்தியுடனும் கலைப் பாரம்பரியத்துடனும் நடாத்தப்பட்ட இந்த நிகழ்வு மிருதங்க அரங்கேற்றத்தின் இலக்கணமாக ஈழத்தின் கலைவரலாற்றில் இடம் பிடித்துள்ளது என்றால் அது மிகையாகா.


# ஒளிவட்டங்களை இழக்கும் விம்பங்கள்

படம் ஆரம்பித்தது முதல் இறுதி வரை பார்வையாளன் தனது காதுகளில் மீற்றர் கணக்கில் சுற்றப்படும் பூவை தாங்கித்தான் ஆக வேண்டும்.

ஆதங்கன்

பொதுப்புத்தியை அவமதிக்கும் வணிக சினிமா தன்னுடைய வன்முறைப் பாய்ச்சல் மூலம் அதிக பொருள் ஈட்டலாம் என்ற சூத்திரத்தை கடந்த சில வருடங்களாக தன்னுடன் பிணைத்து வைத்திருந்தது.

ரஜினி, கமல், அஜித், விஜய், சூர்யா என்று தமிழ் சினிமாவின் ஆதிக்க விம்பங்களாக தம்மை நிலைநிறுத்திக் கொண்ட நடிகர்கள் தமது படங்களில் வன்முறை சார் கதைக் களங்களையே தேர்ந்தெடுத்து வருகின்றனர். எப்போதும் தோல்வியையே அறியாத நாயகன் தனக்கு எதிரான எல்லோரையும் ரத்த வெள்ளத்தில் நீந்த வைப்பதன் மூலம் பார்வையாளர்களின் விசில் ஒலியையும், அவர்களின் மடியில் இருக்கும் பணத்தையும் பெறமுடியும் என்று இந்த நடிக விம்பங்களும், அவர்களுக்குப் பின்னால் இருக்கும் வணிக சினிமா உலகக் கவட்டத்தினரும் நம்பினார்கள்.






அவர்களின் நம்பிக்கைகளை பொய்யாக்கதா வண்ணம் வன்முறையில் தோய்த்தெடுத்த தமிழ் சினிமாக்கள் திரைகளை ஆக்கிரமிக்கத் தொடங்கின. இதனால் தான் அநேக இயக்குநர்கள் நிழல் உலக மனிதர்களைப் பற்றிய சினிமாக்களை படமாக்கத் தொடங்கினர். அத்திபூத்தால் போல் ஒரு சில நிழல் உலக நாயகர்கள் பற்றிய படங்கள் வணிக சினிமாவின் சூத்திரத்தை மீறி யதார்த்தத் தளத்திலும் பயணித்ததுண்டு. ஆரண்ய கண்டம் இதற்கு மிகச் சிறந்த உதாரணம். வழமையான சினிமா நடைமுறைகளை தூக்கி எறிந்து விட்டு துணிச்சலோடு சில யதார்த்த விடயங்களை [illegible]

ஆனாலும் தமக்குப் பின்னால் ஒளி வட்டங்கள் முளைத்திருப்பதாக எண்ணிக் கொள்ளும் நடிக விம்பங்கள் தமது புகழ் பாடுவதற்கும் அல்லது தம்மை சினிமா உலகின் உச்ச நட்சத்திர அந்தஸ்த்துக்கு கொண்டு செல்வதற்கும் வெண்ணிறத் திரையெங்கும் குருதியைக் கொப்பளிக்க வைக்கும் வன்முறை கலந்த வணிக சினிமாவே சரியான வழி என்று அதன்படி பயணிக்கிறார்கள். தொடர்ச்சியாக வெற்றிகள் கிடைக்கும்போது தமது பயணம் சரியான திசையிலேயே செல்வதாக எண்ணிக்கொள்கிறார்கள்.

எப்போதும் வணிக சினிமாவின் மாயைக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் பாமர ரசிகன், தன் வட்டத்தை விட்டு சற்று வெளியே வந்து உண்மையை உணரும் போது நடிக விம்பங்களின் வணிக வெற்றி என்ற வன்முறை சார் சூத்திரக் கோட்டை ஒரே நொடியில் தகர்ந்துவிடுகிறது.

தமிழ் சினிமாவின் 'அல்டிமேட் ஸ்ராக' தனக்குத் தானே முடிசூடிக் கொண்ட அஜித்குமார் இவ்வாறுதான் தன்னுடைய வன்முறைக்கோட்டை தகர்ந்து போய் மீண்டும் ஆரம்பப் புள்ளிக்கே தள்ளப்பட்டிருக்கிறார். 'மங்காத்தா' என்ற தன்னுடைய 50ஆவது படத்தில் துணிச்சலாக எதிர்மறை நாயகனாக நடித்து வசூலை அள்ளியிருந்தவர் அவர். வழக்கமான சராசரிக் கதை ஒன்றை வித்தியாசமான தளத்தில் வெங்கட்பிரபு அதில் சொல்லியிருந்தார். எனினும் அந்தப் படத்தில் கூட பாமர ரசிகர்களுக்கு எளிதில் புரியவில்லை என்ற குறை உண்டு. மங்காத்தாவில் அஜித்குமார் தன்னுடைய எதிரிகளை கொல்கின்ற ஒவ்வொரு காட்சியிலும் திரையரங்குகள் கரவொலியால் அதிர்ந்ததாக தமிழகப் பத்திரிகைகள் தாயம் போட்டிருந்தன.

[21 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனும் இரங்குவதில்லை




எஸ்.எஸ்.லக்ஷ்மி,
பருத்தித்துறை.

நீதிமன்ற வளவுக்குள் ஒரே மக்கள் கூட்டம். வழக்காடுபவர்கள், சட்டவல்லுநர்கள், வழக்கைப்பார்க்க வருபவர்கள், இப்படிப்பட்ட கூட்டத்தினுள் ரம்யாவும் தாயும் நின்றிருந்தார்கள். ரம்யா எந்த உணர்வையும் காட்டாமலே நின்றிருந்தாள். ஆனால் அவளுடைய தாயாரோ சோகமே உருவாக நின்றுகொண்டிருந்தாள்.

''ஏன்டி நான் சொல்றதைக் கேட்கிறாயில்லை ஒரு அப்புக்காத்தை ஒழுங்கு செய்வோம் எண்டு படிச்சுப் படிச்சுச் சொன்னேன் நீ கேட்டியா? இது உன்னுடைய வாழ்க்கைப் பிரச்சனையடி....''

''இஞ்சை பாருங்கோ அப்புக்காத்து சொல்லிறதைக் கேட்டு அவர் ஒத்துக் கொள்ளப் போகின்றாரா? எனக்கெதிராக கிளம்பினவர் , என்டை அட்வகேட் நியாயம் கதைத்தால் பேசாமல் இருப்பாரா? இல்லாததையும் பொல்லாததையும் கூறி என்னை அசிங்கப் படுத்துவார்...'' என்றாள் ரம்யா..

''வழக்கெண்டு வந்துவிட்டால் அசிங்கத்தைப் பற்றி கவலைப்படக்கூடாது இப்படி நைணிட்டி பார்த்தால் நாங்கள் நியாயமாக வேணும் வாழ முடியாமல் போய்விடுவோம்...'' என்று கூறிக்கொண்டே போனாள்.

''அம்மா இந்தக்கதையை விடு...''என்று குறுக்கிட்டுக் கூறியவள் அப்பால் சற்று நகர்ந்து நின்றாள்.

தாயின் முகத்தை பார்க்க அவளுக்கு பரிதாபமாக இருந்தது. ஒண்ணே ஒண்ணு! கண்ணே கண்ணு!! என்று பெற்றெடுத்த ஒரே மகள் இவள். தகப்பனும் தாயும் செல்லமாக வளர்த்து வந்தார்கள். தகப்பன் மாரடைப்பினால் திடீரென்று இறந்த பின்பும் தாய் இவளைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்து அணைத்து வளர்த்து வந்தாள். பணத்தினால் அவள் கஷ்டப்பட்டாலும் ரம்யாவுக்கு அந்த கஷ்டம் எதுவும் தெரியாமல் வளர்ந்து விட்டாள். அது தான் சொந்தத்துக்குள்ளே, சீதனம் வேண்டாம் என்று ஒரு வெளிநாட்டு சம்பந்தம் தேடி வந்த பொழுதும் தன் பிள்ளை பணத்துக்கு மேல் பணமாக வாழுவாள் என்ற எண்ணத்தில் உடனேயே அந்தச் சம்பந்தத்திற்கு சம்மதம் தெரிவித்துவிட்டாள்.

கலியாணமும் மண்டபத்தில் கோலாகலமாக நடந்தது. இரண்டு கிழமைகள் சந்தோஷமாக மாப்பிளையும் பொம்பிளையும் கடற்கரை, ஆலயம், என்று பற்பல இடங்களுக்கு சுற்றித்திரிந்தார்கள். இரண்டு கிழமை எப்படி இவ்வளவு விரைவில் பறந்தன.

''ரம்மி நாள் போனதே தெரியேலை. உன்னை விட்டுப் பிரிந்து போறது எவ்வளவு கஷ்டமாயிருக்குது'' என்றான் தொண்டை கம்மியது.''அத்தான் என்னாலும் உங்களை விட்டுப் பிரியேலாது...'' என்று கூறியபடி அவனுடைய மார்பில் தன்னுடைய முகத்தை புதைத்தபடி விம்மினாள்.

''இஞ்சை பார் '' என்று கூறியபடி கன்னத்தில் வடித்திருந்த கண்ணீரை தன் கைவிரலினால் துடைத்தவன் ,அவளுடைய தலைமயிரை கோதிய படியே ! ''கவலைப்படாதே, லண்டனில் இறங்கினவுடனேயே உன்னை கூப்பிடுவதற்கு வேண்டிய வேலையைப் பாப்பன்..''

''அப்ப என்னைக் கூப்பிட கனகாலம் எடுக்குமோ ''

''இல்லை குஞ்சு . மிஞ்சி மிஞ்சி போனால் இரண்டு கிழமைக்குள் கூப்பிட்டுடுவன். நாளைக்கு நானும் நீயும் அம்மாவும் கொழும்புக்குப் போறோம் . அங்கே என்னுடைய பிரண்டிட்டை எல்லாம் சொல்லிப் போட்டன். அவன் பாஸ்போட் அலுவல் பார்க்கிறதாக சொல்லியிருக்கிறான். உனக்கு பாஸ்போட்டை எடுத்துத் தந்திட்டு இரண்டு நாளில் பிளைட் ஏறிடுவேன். அதன் பின்பு நீயும் அம்மாவும் இங்கே வந்திடுங்கோ நாம் டெலிபோனில் அடிக்கடி கதைத்துக் கொள்ளலாம். என்ன அடிக்கடி நீ கொழும்பு வரவேண்டியிருக்கும்.

அந்தக் கவலை எனக்கு இல்லை. எங்க மாமா குடும்பத்தோடை கொழும்பிலை தானே இருக்கிறார். அவற்ற வீட்டில் நான் இருக்கலாம்.

''ஓ! அப்படியா !! அதுக்காக நான் பிளைட் ஏறினாப் போலை அப்படியே மாமா வீட்டிலை தண்டோரா போட்டிடாதே?'' என்றான் சற்று கிண்டலாக

சும்மா போங்கோ...செல்லமாக சிணுங்கினாள்.

அப்பப்பா சிணுங்கும் போது என்ன அழகு ..''

குழிவிடும் கன்னங்கள் அப்படியே விழுங்கிடலாம் போலே இருக்கிறது '' என்று கூறியபடி அவளை இறுக அணைத்தபடி கட்டிலில் சாய்ந்தான்.

அதே நேரம் மின்சாரசபையினரும் மின்சாரத்தை நிறுத்திவிட்டார்கள்

''என்ன இப்ப லைற் ஓஃப் ஆகிட்டுது ...''

''எங்கடை மின்சாரசபை நேரகாலம் பார்த்து மின்சாரத்தை ஓஃப் செய்வார்கள் ..'' என்று கூறியபடிஅவனுடையஅணைப்பில்சசங்கண்டாள் .

இருவரும் அவனுடைய தாயும் தகப்பனும் தனியார் பேருந்தில் கொழும்பு சென்று அங்கு பாஸ்போட் எடுத்து இவளிடம் கொடுத்து விட்டு அவன் பிளைட் ஏறி வெளிநாடு பறந்து விட்டான். நாள்கள் உருண்டோடி மாதங்களும் பறந்தோடி. பன்னிரண்டு மாதங்கள் கடந்து விட்டன ஒவ்வொரு முறையும் கதைக்கும் பொழுதும் தன்னைக் கூப்பிடும்படி கண்ணீர் ததும்பக் கூறுவாள். மாமியாரிடம் போயும் இதையே பேசினாள். ஒருநாள்... ''இஞ்சை பாருங்கோ பிள்ளை காணி உறுதியிருக்கு, இதுக்கு என்னை பவர் அட்ரோனியாக ஆக்கினீர்களானால் நாளைக்கே போகமுடியும்..''

மாமியாரின் பேச்சைக் கேட்டதும் அவளுடைய மனம் குதூகலித்தது எவ்வித மறுப்புமின்றி சட்டத்தரணி காட்டிய ஆவணங்களில் எல்லாம் கையெழுத்துப் போட்டாகி விட்டது.

கையெழுத்துப்போட்டு இரண்டு மாதங்கள் உருண்டோடி விட்டன .அதன் பின் தான் அவள் கையொப்பம் இட்ட விஷயத்தை தாயிடம் கூறினாள். நடந்து முடிந்து விட்டதைப் பற்றி கதைத்து ரம்யாவின் மனதை வேதனைப்படுத்த விரும்பாத தாய் எதுவுமே பேசாமல் ஆறுதலான வார்த்தைகளைக் கூறி அவளைத் தேற்றி வந்தாள்.

''ரம்யா உன்னட வாய்குள் கொழுக்கட்டையா இருக்குது? என்று தாய் அவளை அதட்டிக் கேட்ட பின்பு தான் அவள் கடந்த கால நினைவுகளில் இருந்து (?) மீண்டு வந்தாள்.

''என்னை என்ன சொல்லச் சொல்றாய்...?''சற்று எரிச்சலுடன் கேட்டாள் ரம்யா .

''என்ன சொல்லிப்போட்டு வந்தனீ எதற்காக டைவோர்ஸிக்கு ஓம் என்று சொன்னனீ ?'' ஆத்திரத்துடன் அவள் இரைந்தாள்

லண்டனிலிருந்த பொழுது எனக்கு முன்பாக வரவேற்பறையில் அவரும் அவருடைய ஆருயிர்க் காதலியும் போட்ட கும்மாளத்தைச் சொல்லச் சொல்றியா! அல்லது படுக்கை அறைக்குள் நுழைந்து கொண்டு கட்டில் சிரிக்கின்றதே ! தொட்டில் எப்போதம்மா என்று பேசிக் கொட்டமடித்ததைப் பற்றிச் சொல்லச் சொல்றியா ? இதைப் பற்றி அவரிடமே போய் கோபத்துடன் கேட்டதற்கு சிகரெட் ஆலேயே என் உடல் மீது சுட்டுச் சுட்டு அடித்துத் துன்புறுத்தியதைச் சொல்லச் சொல்றியா ? அல்லது இருவருக்கு வாய்க்கு ருசியாக சமைத்துப் போட்டிட்டு மிஞ்சியதை மட்டும் சாப்பிட்டிட்டு அந்த நரகலோகத்தில் வருந்தியதைச் சொல்லச் சொல்றீயா ? அல்லது உன்ரை விசா முடிந்துவிட்டது இதற்கு மேல் நீ இங்கு இருக்க முடியாது. ஆனால் உன்னை அவ்வளவு விரைவில் இலங்கைக்கு அனுப்புவதற்கு என்னிடம் காசு இல்லை உன்ரை நகைகளைத் தந்திட்டால் அதை அடகு வைத்து அந்தப்பணத்தில் உன்னை அனுப்ப முடியும் ...'' என்று கூறியதைச் சொல்லவா என்று கூறியவாறு அன்று நடந்த சம்பவத்துக்குள் அவளின் எண்ணம் பறந்தது

இஞ்சை பாருங்க! அம்மா தந்த நகைகளை நான் தரமாட்டேன். தாலிக் கொடியை தந்திடுறன் ... உந்த தாலிக் கொடியை உன்னிடம் இருந்து பிடுங்குவதற்கு உன் அனுமதி தேவையில்லை ...'' என்று அவர் கூற அதற்கு அவரின் அருகிலே நின்ற அவள் ,

''என்ன மிஸ்டர் இவ கூட இப்படி பணிந்து பணிந்து கெஞ்சிக் கொண்டிருக்கிறீர்கள் எல்லாவற்றையும் பிடுங்கிக் ... '' அவள் கூறி முடிக்க முன் குறுக்கிட்டு, ''ஹலோ உங்களைப் போல நானில்லை. இந்தத் தாலிக் கொடிக்குரிய செலவும் நாங்கள் தான் மாப்பிளை வீட்டாருக்கு அதாவது இவற்றை அப்பாட்டை கொடுத்துத் தான் இது செய்தது '' என்றதும் அவள் குறுக்கிட்டு ''என்ன பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்? இப்படிப்பட்ட கொழுத்த வாய்க்காரியை .....'' அவள் கூறி முடிக்க முன்னர்

''இஞ்சைபார் ! உன்னைப் போல அடுத்தவன் புருஷனை கைக்கொள்கிறவள் இல்லை [illegible] சடங்கு சம்பிரதாயப்படி வந்தவள் '' என்று ரம்யா கூறி முடிக்க முன்னர் அவனுடைய கரம் ரம்யாவின் கன்னத்தைப் பதம் பார்த்தது.

''இதை என்ன உன்ர ஊரைப் போல பட்டிக்காடு என்று நினைத்தியோ? சும்மா கத்திக் கொண்டிருக்காதே. இப்படிக் குரலை உயர்த்திப் பேசினியோ உன்னைப் பொலிஸ் தான் பிடித்துக் கொண்டு போகும். உன்னை இங்கே நான் கூப்பிட விரும்பியிருந்தால் பயணத்துக்குரிய செலவை நானல்லோ ஏற்றிருக்க வேணும். நீங்கள் உங்கட பணத்தைச் செலவழிச்சு வந்திட்டு கதையைப் பாரன் கதையை. கொம்மா தந்த நகைகளைக் கொண்டு போய்போட்டு அழகு பார் உன்ர தாலிக் கொடிக்குரிய பணத்தில டிக்கெட் எடுத்து அனுப்பப் போறன். கையில் உனக்குத் தருவதற்கு என்னிடம் பணம் இல்லை. இரண்டு, மூன்று நாள்களுக்குள் டிக்கெற் வந்துவிடும். அதோடை நீ போய் பிளைட்டில் ஏறிடனும். இல்லை நீ அடம்பிடிச்சால் பெட்டிக்குள்ள உன்ர 'பொடியை' போட்டு அனுப்ப வேண்டி வரும்.

இவற்றை எண்ணியபோதே கண்களில் நீர் நிரம்பியது ரம்மியாவுக்கு.

ஏன்டி அழுகிறாய். அம்மா இதுவரை ஒருநாள் கூட கோபிச்சுப் பேசேல்ல. இன்டைக்கு பேசிட்டன் என்று கூறியபடி அவள் விம்மல் பொருமலுடன் அழுதாள்.

இதுவரை நேரமும் கடந்த கால கசப்பான உணர்வால் கண்ணீர்விட்டுச் சிந்தித்துக் கொண்டிந்தவளுக்கு தாயின் விம்மல் அழுகை குரல் கேட்டதும் ''அம்மா அழாதே அம்மா... நான் என்ன செய்யிறது. இவர் எப்படிப் பட்டவர்? லண்டனுக்குப் போய் எவ்வளவு வேதனைப்பட்டேன் என்பது உங்களுக்குத் தெரியாது. பட்டதுபோதும் இவராலே.. இவரோட வாழ்வதற்கு என்னிடம் மனத்தெம்பு இல்லையம்மா? மனிதராக இருந்தால் வாழலாம். ஏன் மிருகமாக இருந்தால் கூட ஒரு படி அனுசரித்து வாழ்ந்திடுவேன். ஆனால் இவன் ஒரு அரக்ககுணம் கொண்டவன்.

என்னையே அந்தச் சண்டாளிக்கு சமைச்சுப் போடச் சொன்னவன்தானே. அங்கேயிருந்து தாலியை அவனட்டை தாரை வார்த்துக் கொடுத்த மாதிரி கொடுத்திட்டு வந்திட்டன். என்ரை நிலையை அவரின் அம்மாட்ட சொன்ன போது அவ என்ன சொன்னா தெரியுமா? ''உன்ர திமிர் குணத்தால் விட்டுட்டு வந்திட்டு இப்ப கண்ணீர்விட்டு அழுவதில் என்ன பிரயோசனம்? என்று என்னை வேதனைப்படுத்தும் நோக்கத்தோடு கேட்டா?'' அந்த பிசாசின் குணம்தான் எனக்குத் தெரியுமே. உன்டை தாலிக்கொடியை அவர்தான் பறிச்சிட்டு அனுப்பினார் என்டால் இந்தச் சண்டாள மூளி உன்ர காணியை அப்பி இருக்கிறாளே; உவள் நல்லாயிருப்பாளா?..'' வேதனையுடன் கத்தினாள் அம்மா .

''அம்மா கத்தாதையுங்கோ. எங்களைப் போல எல்லோரும் உவைக்கு பல்லுக்குப் பதமாக இருக்க மாட்டினம். அதுதான் டைவோர்ஸுக்குச் சம்மதித்தேன். உவ மோனுக்கு பேசின பொம்பிளை மட்டுமல்ல, அந்தக் குடும்பமே வாய்க்காரக் குடும்பம் மட்டுமல்ல, தருணத்தில் கை நீட்டவும் தயங்க மாட்டார்கள்'' என்றாள் ரம்யா.

''இஞ்சைபார் அவர்கள் துன்பம் அனுபவிக்கட்டும் என்று டைவோர்ஸுக்கு சம்மதித்து விட்டாய். இப்ப உன்ர வாழ்க்கை இருட்டிட்டுதே... என்றபோது பெற்ற அன்னையின் தொண்டையும் கம்மியது.

''அம்மா நானாக இந்த வாழ்க்கையை தேர்ந்தெடுக்கவில்லை. நீங்கள் கட்டி வைத்தீர்கள். நானும் எங்கள் வீட்டுக் கஷ்டத்தை நினைத்துத்தான் எவ்வளவோ பொறுத்துப் போனேன். எனக்கு அளந்தது இவ்வளவுதான் எண்டு யோசித்துத்தான் அங்கே ஒரு வேலைக் காரியாக அந்த ஆட்டக்காரிக்கும் சேர்த்துச் சமைத்துப் போட்டன். இதற்கு மேலும் என்னாலை முடியல்ல அம்மா. அதுதான் அங்கேயிருந்து வந்துவிட்டன். இது பிழையா அம்மா..." என்று கூறியபடி கேவி கேவி அழுதாள்.

''அழாதே குஞ்சு. நீ செய்தது சரி. நீ எனக்கு பாரமில்லை. ஆண்டவன் எல்லாம் பார்த்துக்கொண்டிருப்பான்'' என்று ஆறுதல் கூறிய தாயால் தன்னைத்தான் ஆறுதல்படுத்த முடியவில்லை. ''எங்களைப் போன்றவர்களைப் பார்த்துக் கடவுளும் இரங்குவதில்லை என்று சொன்ன ரம்யா வாழ்தலின் வலிமையை பெற்றவளாக உறுதியான தீர்மானத்தோடு தாயைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடி மறைந்துவிட்டது பக்தி கலந்த ஒற்றுமை

எஸ்.எம்.கோபாலரத்தினம்




நவாலி இராமசாமிக் குருக்கள் கோயில் பிரதம குருக்களாக இருந்தபோது நெற்றியின் நடுவே மூக்கிலிருந்து உச்சி வகிடுவரை 'கோபி' என்ற நாமத்தின் நடுவேயுள்ள செந்தூரக்கோடு இழுத்திருப்பார். அவருக்குப் பின் பிரதம குருவாகப் பணியாற்றிய நவாலி சாமி விசுவநாதக் குருக்களும் திருவிழாக் காலத்தில் 'கோபி' இழுத்திருப்பார். இப்போதுள்ள பிரதம குருக்களும் கோபி இழுப்பதுண்டு. பெருமாள் கோயிலில் இப்போது நாமக்கட்டியே இல்லை.

இன்று பெருமாள் கோயிலிலுள்ள சுவாமிகாவும் வாகனங்களிலும் கோபுரங்களிலுள்ள பொம்மைகளிலும்தான் நாமம் தரித்திருப்பதைக் காணமுடியும். கோயிலின் வாசலில் கதவுடனுள்ள சுவரின் துவாரத்தில் திருநீறு வைக்கப்பட்டிருக்கிறது. கோயிலுக்கு வருபவர்கள் திருநீறு அணிந்துகொள்ள இது வசதியாக உள்ளது. கோயிலினுள்ளே மால்மருகன் வேல் முருகனுக்கும் ஒரு சந்நிதி இல்லை. நல்லூரில் சந்தானகோபாலுக்கு அழகான ஒரு சந்நிதி இருக்கிறது.

பத்மசாலிச் செட்டிப்பிள்ளைகள் பரம்பரை என்று உரிமை கொண்டாடும் சேணியச் செட்டிமார் இப்பொழுது தங்கள் பெயருடன் ஒட்டி வைத்துக் கொண்டுள்ள செட்டியார் என்ற வார்த்தையைக் கூட நாளாந்த வாழ்க்கையில் பயன்படுத்துவதில்லை. கோயில் திருவிழாக்களில் பிரதம குருக்கள் ஆசீர்வாதம் வழங்கும்போதும் கட்டியம் சொல்லும் போதும் கோயில் எஜமானார்கள் என்று குறிப்பிடும் போது மட்டும் அறங்காவலர் என்ற நிர்வாகிகளின் பெயரோடு சேர்த்து செட்டியார் என்றும் சொல்லப்படுவதுதான் அந்தப் பரம்பரையை நினைவூட்டும் அடையாளமாக இருக்கிறது.

தொழில்சார்ந்து அமைந்த குடியிருப்புக்கள் தொழிலின் பெயரால் ஒரு சமூகமாக அமைவதும் அதுவே சாதி அடையாளமாக அமைந்துவிடுவதும் வழக்கம். பத்மசாலிச் செட்டிப் பிள்ளைகள் பரம்பரையும் சேணியச் செட்டிமார் என்ற பெயரில் யாழ்ப்பாண நகரில் ஒரு முக்கிய சமுதாயமாக விளங்கினர். இன்று இந்தப் பரம்பரை மிகச் சொற்பமே வாழ்கிறது.

யாழ்ப்பாண நகரில் ஒரு முக்கிய சமுதாயமதாக விளங்கிய இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தோரும் பிற சமுதாயத்தினரும் நட்புறவும் நல்லுறவும் கொண்டு வாழ்ந்தனர். இவர்கள் நெசவுத் தொழிலிலும் சிறந்து விளங்கி பெயர்பெற்றனர். புடைவைக் கடைகள் மட்டுமல்ல புடைவை ஏற்றுமதி, இறக்குமதியிலும் முன்னிலை வகித்தனர்.

யாழ்ப்பாணத்தில் மூன்று, நான்கு பேர்தான் அந்தக் காலத்தில் சொந்தமாக மோட்டார் கார் வைத்திருந்தனர். இவர்களில் சி.எஸ்.குப்புசாமிச் செட்டியாரும் ஒருவர். மகாத்மா காந்தி யாழ்ப்பாணம் வந்திருந்தபோது இவரது வீட்டுக்கும் அழைத்து வரப்பட்டிருந்தாரென்றால் குப்புசாமிச் செட்டியார் எத்தகைய மதிப்புடன் வாழ்ந்தார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இவரின் மைத்துனர்தான் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன், வைத்தீஸ்வரா கல்லூரியின் மும்மூர்த்திகள் என்று யாழ்ப்பாணக் கல்வி உலகத்தால் அழைக்கப்பட்டவர்களில் மூன்றாவதாக விளங்கிய துரையப்பாச் செட்டியார் சீனிவாசகம். சீனிவாசக மாஸ்ரர் தலைவராக அல்லது செயலாளராகச் செயற்படாத கூட்டுறவு அமைப்பு இருக்க முடியாது. வடமாகாண ஆசிரியர் சங்கம், ஆசிரியர் சங்கத்தின் பரீட்சைச் செயலாளர், யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்க செயலாளர், நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் இப்படிப் பல கூட்டுறவுச் சங்கங்களில் மட்டுமல்ல வேறு பல பொது அமைப்புக்களிலும் பொறுப்பான பதவிகளிலிருந்து பணியாற்றி கூட்டுறவாளன் என்று பெயர் பெற்றவர்.

யாழ்ப்பாணத்தில் சில வருடங்கள் ஆண்டுதோறும் சிறந்த இசைவிழாக்களை நடத்தி பெயர் பெற்ற ஸ்ரீரசிகரஞ்ஜன சபாவின் ஆரம்பம் முதல் சில ஆண்டுகள் சபா பிரியும் வரை தலைவராகவும் இருந்து செயலாற்றியவர். கூட்டுறவு சமாஜத்தின் ஐக்கிய தீபம் சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றிய சீனிவாசக மாஸ்ரர், ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தின் பொது முகாமையாளராகவும் பணிப்பாளராகவும் பணியாற்றினார். உதவிப் பரீட்சை ஆணையாளராகப் பணியாற்றிய கல்விமான் வே.சதாசிவம், குப்புசாமிச் செட்டியாரின் ஒரே மகளை மணந்தார்.

து.சீனிவாசகம் அவர்களைப் போலவே சி.பொ.செல்லையா, ஐயன்னாச் செட்டியார், வெ.நா.செல்லையா, கோ.கிருஷ்ணசாமி, சி.சி.குமாரசாமி, க.பழனிச்சாமிச் செட்டியார், நா.இராசநாயகம் முதலிய மற்றும் சிலரும் யாழ்ப்பாணச் சமூகத்தில் நன்கறியப்பட்ட சமூக சேவையாளர்கள். இவர்கள் பெருமாள் கோயில் அறங்காவலர்களாக சேனா செய்ததுடன் இந்த இதர சமூகங்களுடனும் ஐக்கியத்தைப் பேணி வந்தனர். சீனிவாசக மாஸ்ரர் பெருமாள் கோயில் ஆதீன மகாசபையின் தலைவராக, செயலாளராக, அறங்காவலர் சபைத் தலைவராக, செயலாளராக பல்லாண்டுகள் பணியாற்றியவர்.

பல்வேறு பொது அமைப்புக்களில் பொறுப்புள்ள பதவிகளில் அவர் பணியாற்றிய போதும் எத்தகைய குற்றச்சாட்டுக்களுக்கும் பழிகளுக்கும் உள்ளாகாமல் தான் சார்ந்த சமூகத்துக்கு நற்பெயர் தேடித் தந்தவர். மற்றைய அறங்காவலர்களும் மதிப்புக்குரியவர்களாக விளங்கினர். கற்றவர்கள், தொழில் வருமானமும் சொத்து வருமானமும் பெற்றவர்கள் இவர்கள்.


இவையெல்லாம் 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலைமை. 1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆதீன மகா சபையிலும் அறங்காவலர் சபையிலும் நிர்வாகிகளாகப் பதவியேற்றவர்களில் பெரும்பாலானவர்கள் "சேணியச் செட்டிகள் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்" என்ற ஒரே தகுதியைக் கொண்டவர்களாகவே இருக்கின்றனர். இவர்களுக்குச் சொத்து வருமானமும் தொழில் வருமானமும் இல்லையென்றே சொல்லலாம்.

1947 ஆம் ஆண்டுகளில் ஆதீன மகாசபைக் கூட்டம் வெளி மண்டபத்தில் நடைபெறும்போது மண்டபம் நிறைந்து மண்டபத்துக்கு வெளியேயும் சிலர் நின்றும் இருந்தும் கூட்டத்தில் கலந்து கொண்டதை நான் பார்த்திருக்கிறேன். இப்பொழுது மகா சபையில் ஐம்பதுபேர் இருப்பாளர்களா? என்பது சந்தேகமே. வெளி மண்டபத்தில் இப்படி ஒரு கூட்டம் நடைபெற்றபோது ஒரு சம்பவம் நடந்தது. 1947 ஆம் ஆண்டு சுதந்திர இலங்கையின் முதல் பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் பிரசாரம் நடந்த காலம். தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், டி.எஸ்.சேனநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்த்து வேட்பாளர்களை நிறுத்தி தீவிரமாகப் பிரசாரம் செய்த சமயம்.

---

சோபனா

# இருப்பிடத்தை தக்கவையுங்கள்



ஓர் இனத்தின் இருப்பிடத்தைத் தக்க வைப்பதற்கு குறித்த இனத்தின் மக்கள் தொகையே பலமான ஓர் காரணியாக உள்ளது. மக்கள் தொகை குறைவடையும் போது இனத்தின் இருப்பிடமும் தானாகவே மறைந்து விடும்.

இலங்கையில் பெரும்பான்மை இனமாக சிங்கள இனம் கருதப்பட்டாலும் வகை தொகையாக அதிகளவு தமிழர் வாழும் பிரதேசம் வடமாகாணமாகும். இந்த நிலையில் கடந்த வருடம் குடிசன மதிப்பீட்டு அறிக்கையின் படி வடமாகாணத்தில் சனத்தொகை பெருமளவு வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் தமிழர்களின் எண்ணிக்கையும் தானாகவே குறைவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் பெரும்பான்மை இனத்துக்கு அடுத்த படியாக இருந்த தமிழர் இனம் தற்போது மூன்றாம் நிலைக்கு சென்று கொண்டிருக்கிறது.

இவற்றைக் கொண்டு தமிழர்களின் இருப்பிடம் கொஞ்சம் கொஞ்சமாய் பறி போய்க் கொண்டிருப்பதை எம்மால் உணர முடியும்.

கடந்த காலங்களில் வடமாகாணத்தில் இடம்பெற்ற கொடூர போர் வகைதொகையாக வளர் இளம் சமுதாயத்தை அழிவடையச் செய்துள்ள நிலையில் இருக்கின்ற எமது இனப் பரம்பரையை உருப்படியாகப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழனிடமும் இருக்க வேண்டும். நாகரிக மாற்றம், பெண்கள் கல்வியில் கொண்ட ஈடுபாடு, அதன் காரணமாக சமுதாயத்தில் கிடைக்கப்பெறும் அங்கீகாரம், தொழில்வாய்ப்புக்கள் அனைத்தும் பெண்களை இயந்திரமயமாக்கிக் கொண்டுள்ள நிலையில், தற்காலப் பெண்கள் அதிகூடிய சந்ததி பெருக்கம் தொடர்பாகச் சிந்திக்கமாட்டார்கள்.

'' ஆசைக்கொன்று [illegible] கொன்று' என எமது முன்னோர்கள் எதேச்சையாகச் சொல்லி வைத்தவை தற்போது நடைமுறை ரீதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் இதன் காரணமாக எதிர் காலத்தில் கிடைக்கப்போகும் இன அழிப்பின் அத்திபாரம் இது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

வாழ்க்கைச் செலவீனம் , குடும்ப எண்ணிக்கைக்கு முட்டுக்கட்டையாக இருப்பதால் அளவோடு குடுமட்டபம், அன்றாட சீவியம் எனும் போக்கில் தமது வாழ்நாள்களை கடத்தத் தொடங்கியுள்ளார்கள். [illegible] சமுதாயத்தின் இன்றைய போக்கு இனத்தின் வம்சாவழியைக் குறைவடையச் செய்வதுடன் இனத்தின் இருப்பிடமும் பின் நோக்கிச் செல்கிறது.

எனவே சந்ததிப் பெருக்கம் தொடர்பில் ஒவ்வொரு குடும்பத்தவர்களும் அக்கறை கொள்ள வேண்டும். ஆரம்ப காலங்களில் பன்னிரண்டு , பதினான்கு என பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாய்மாரும் எமது பிரதேசத்தில் இல்லாமல் இல்லை. அவர்களின் வழித் தேன்றல்களே இன்றைய சமுதாயமாக தலை நிமிர்ந்து நிற்கின்றனர்.

திருமணத்தின் போது எமது முன்னோர்கள் வாழ்த்துக் கூறும் போது '' பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ வேண்டும்'' என்றே வாழ்தி வந்தார்கள் . அதன் பின் நோக்கம் எமது இனத்தின் அடையாளத்தை தக்க வைப்பதற்கான ஓர் உந்து சக்தி என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.

பெண்கள் தற்போது கல்வியில் நாட்டம், தொழில் திறமை போன்ற காரணங்களால் வயது அதிகரித்த பின்னர் திருமணம் செய்து கொள்கிறார்கள். இதன் காரணமாக அதிகமானவர்கள் மருத்துவ ரீதியாக குழந்தை பெற்றுக் கொள்ளும் பாக்கியம் அற்றவர்களாகவும் , இதனை விட குழந்தை கொள்வதை வருடக்கணக்கில் தள்ளிப் போட்டு விட்டு சமுதாயப் போக்கில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்தத்தால் எமது இனத்தில் பாதிக்கு மேற்பட்டவர்களை தொலைத்து விட்டோம்.

இதனை வடை வடமாகாணத்தில் அதிகமான தமிழர்கள் புலம் பெயர்ந்து வேற்று நாடுகளில் வாழ்ந்து கொண்டிருப்பதையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

திருமணம், கல்வி, தொழில் என புலம்பெயர்ந்து வாழும் எமது இனம் சார்ந்தவர்கள் தம்மை வாக்காளராகப் பதிவு செய்யாமல் வேற்று நாடே தஞ்சம் என இருப்பதனால் குடிசன மதிப்பீட்டு அறிக்கையில் இவர்கள் ஏற்றுக் கொள்ளப்படாதவர்களாக விலக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே தற்போது குடியிருக்கும் எம்மினம் சார்ந்தவர்கள் மக்கள் தொகையை அதிகரிப்புச் செய்யமுடியும்.

இது தொடர்பாக தற்காலப் பெண்களுக்கு அறிவூட்டல் செய்யப்பட வேண்டும் . நகரம், கிராமம் என தற்போது வாழ்க்கைச் செலவுக்கு ஏற்றாற் போல் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள நினைக்கும் பெண்கள் குடும்பம் அல்லாது இனத்தின் இருப்பிடத்துக்கு தாம் பக்கபலம் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமன் கையால் மடிவதை விரும்பிய



# மாரீசன்

இலக்கியக் காட்சி
141

கோதாவரி நதிக்கரையில் அமைந்தது பஞ்சவடி என்னும் சோலை. வனவாசம் சென்ற இராம இலக்குமணர், சீதையுடன் தங்குவதற்கு ஏற்ற இடமெனக் காட்டியவர் அகத்திய முனிவர்.

இந்தியாவுடன் இலங்கை இணைந்திருந்த அந்தக்காலத்தில்,

இலங்காபுரியில் வாழ்ந்த அரக்கர் முதலியோர், பஞ்சவடி வனப் பகுதியிலும் உலாவித் திரிவது வழக்கம்.

ஒரு நாள், இராவணனுடைய தங்கை சூர்ப்பனகை, அந்தப் பக்கம் வந்து இம் மூவரையும் காண்கிறாள்.

வெய்யது ஓர் காரணம் உண்மை மேயினாள்,
வைகலும் தமியள் அவ் வனத்து வைகுவாள்,
நொய்தின் இவ் உலகுஎலாம் நுழையும் நோன்மையாள்,
எய்தினள், இராகவன் இருந்த சூழல்வாய்.

என்கிறார் கம்பர்.

இராமனை அணுகிய சூர்ப்பனகை ''சடை முடி தரித்து, அம்பு வில்லுடன் மனைவியோடு நிற்கும் நீ யார்? '' என்று கேட்கிறாள். இராமன், தான் யார் என்பதையும் அங்கு வந்த நோக்கம் என்ன என்பதனையும் கூறிய பின், '' நீ யார் என்று அவளைக் கேட்கிறான்.

நான் இராவணனுடைய தங்கை; இராவணன் மிகுந்த வல்லமை படைத்தவன்; நானும் யாருக்கும் கட்டுப்படாதவள்; எதையும் செய்வேன்; இந்தப் பெண்ணையும் உன் தம்பியையும் விட்டு விடு; உன் மேல் எனக்குக் காதல் பிறந்துவிட்டது என்று சொல்கிறாள்.

இராமனுக்கு இவையெல்லாம் பிடிக்காவிட்டாலும், எதுவும் பேசாமல், ' தம்பியிடம் பேசிப்பார் ' என்கிறான்.

'தம்பியிடம் இவள் எண்ணம் பலிக்காது' என்பது இராமனுக்குத் தெரியுந்தானே!

' வா, இந்த வனத்திலே உலாவித்திரிவோம்' என இலக்குமணனிடம் கேட்டதும், அவன் அவளை இகழ்ச்சியாகப் பேசுகிறான்.

இதனால் குழப்பமடைந்த சூர்ப்பனகை, சீதையிடம் தனது கோபத்தைக் காட்டத் திரும்பினாள். இது பொறுக்காத இலக்குமணன், அவளது மூக்கை அறுத்துத் துரத்தி விட்டான்.

உரன் நெரிந்து விழ, எனை உதைத்து, உருட்டி, மூக்கு அரிந்த

நரன் இருந்து தோள் பார்க்க நான் கிடந்து புலம்புவதோ? கரன் இருந்த வனம் அன்றோ? இவை படவும் கடவேனோ?

அரன் இருந்த மலை எடுத்த அண்ணாவோ! அண்ணாவோ! என, மூக்கு அறுபட்ட சூர்ப்பனகை புலம்புவதாகக் கம்பர் காட்டுகின்றார்.

அவமானப்பட்ட சூர்ப்பனகை, அண்ணன் இராவணனிடம் சென்று சீதையின் அழகு பற்றிக் கூறி, இராவணனுக்கு சீதையிடம் ஆசை வரச் சொல்லுகிறாள். சீதையை உன்னிடம் சேர்க்க முயன்ற வேளையில், அந்த மனிதப்பூச்சிகள் என்னை வெட்டி அனுப்பினார்கள் என்கிறாள்.

உடனே, இராவணன் கரன், தூஷணன் முதலியோரை அனுப்புகிறான். இராமன், தனியே நின்று போராடி அந்த இருவரையும் அவர்களுடன் வந்த படையினரையும் அழிக்கிறான். சீதையை இலக்குமணன் காவல் காத்து நிற்கிறான். இவர்களோடு சென்ற அகம்பனன் என்னும் அரக்கன் தப்பி ஓடி கர, தூஷணர் இறந்த கதையைக் கூறுகின்றான். இதனால் வெகுண்டெழுந்தான் இராவணன். '' யார் அது, யமனா? அக்னியா? விஷ்ணுவா? - எல்லோரையும் கொல்லுகிறேன் பார் '' என்று சீறுகிறான்.

இங்கே, கர தூஷணரைக் கொன்றுவிட்ட பின், தேவர்கள் பூமாரி செய்து இராமனை வாழ்த்திப் போகின்றனர். அந்த நேரம் சீதையும் இலக்குமணனும் வந்து அண்ணல் இராமனை கட்டித் தழுவுகின்றனர். இதனைக் கம்பர்,

விண்ணின் நீங்கிய வெய்யவர் மேனியில்
புண்ணின் நீரும் பொடிகளும் போய் உக,
அண்ணல் வீரனைத் தம்பியும் அன்னமும்
கண்ணின் நீரினில் பாதம் கழுவுவார்.

என நயம்படப் பாடியிருப்பதைக் காண்கிறோம்.

இஃது இவ்வாறாக, மூக்கு அறுபட்டு ஓடிய சூர்ப்பனகை இராவணனுக்கு இராமனைக் காட்டுகிறாள். இராமனை, மனிதனாகவே அரக்கர் பார்க்கின்றனர்.

இராமன் தன்னை மனிதனாகவே (சத்ரியன்) என்பவன்; தான் நாராயணன் என்பதை அறியான்; ஆனால் நாராயணன், தான் இராமன் என்பதை அறிவான் - இதனை நாம் நினைவில் கொள்ளல் வேண்டும். அத்துடன், இராவணன் தான் பெற்ற வரத்தில், ''தேவர்களால் தனக்கு அழிவு வரக்கூடாது'' எனக் கேட்டான்; ''மானிடரால் வரக் கூடாது'' என்று கேட்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அணைவதற்கு முன்னர் சுவாலையாக எரியும் விளக்குப்போல, மிகுந்த கவர்ச்சியுடன் சிம்மாசனத்தில் இராவணன் இருந்தவேளை மூக்கறுபட்ட சூர்ப்பனகை சபைக்கு வந்திருந்தாள்.

''தேரும் யானையும் இல்லாமல் ஒரு மனிதப் பூச்சி, உன்னால் அனுப்பப்பட்ட வீரர்களையெல்லாம் கொன்று போட, நீ ஏமாந்து இருக்கிறாய்; உனக்கு இனி மதிப்பு ஏது? உனக்காகத் தான்; நான் சீதையைக் கொண்டு வர முயற்சித்தேன்; இந்தக் கதி பெற்றேன்; இந்தப் பழியைப் போக்க, நீ உடனே புறப்படு! '' என்கிறாள் சூர்ப்பனகை.

ஆக, சீதையே இராமனை அடைவதற்குத் தடையாக இருக்கிறாள். அவளைப் பழிவாங்க வேண்டும் என்பதில் முனைப்பாக இருக்கிறாள் சூர்ப்பனகை! அவளுக்கு மூக்கறுபட்ட வேதனை பெரியது அல்ல; அதைச் சாட்டாக வைத்து அண்ணனுக்குக் கோபத்தை உண்டாக்க முயல்கிறாள் தங்கை! காம வயப்பட்ட இராவணனும் அதற்கு ஒத்துழைப்புத் தருகிறான் என்பதை நாம் உணர வேண்டும்.

உடனே இராவணன் மாரீசனிடம் போய் '' உன்னைச் சரணடைந்தேன். நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்' என மன்றாடினான்.

'' இராமன் நாட்டை விட்டு வந்து, இங்கே சீதையுடன் உல்லாச வாழ்க்கை செய்கிறான்; சூர்ப்பனகையின் மூக்கை அறுத்தான்; எனது வீரரைக் கொன்றான். அதனால் எப்படியும் சீதையைக் கவர்ந்து வர முடிவு செய்துவிட்டேன். நீதான் உதவி செய்யவேண்டும் என்கிறான். அப்பொழுது மாரீசன் இராவணனுக்குச் சொல்லுகிறான்:-

இராட்சத மன்னா ! நீ சொல்வதைக் கேட்க எனக்கு மிகுந்த துக்கம் உண்டாகிறது; நீ விரும்பாத போது யோசனை சொல்வதிலும் பலன் இல்லை; யோசனை சொல்ல யாரும் முன் வரவும் மாட்டார்கள். இருந்தாலும்,

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக் கீழ்த் தங்கும் உலகு. (குறள் 389)

என வள்ளுவர் இறைமாட்சியில் சொன்ன வழியில் நின்று சொல்லுகிறேன் எனத் தொடருகின்றான்.

ஆசை வார்த்தை சொல்லி உன்னை ஆபத்தில் மாட்டி விட நான் விரும்பவில்லை; இராமனைப் பற்றிச் சொன்னவர்கள் உண்மையைச் சொல்லவில்லை; அவர்கள் பேச்சை கேட்க வேண்டாம்; இராமன் மகாவீரன்; உத்தமன். அவனது கோபத்தைச் சம்பாதித்து,

''உன் குலமும் இலங்காபுரியும் அழிந்து போக வழி தேடாதே. சீதை உன்னை நாசம் செய்ய அவதரித்தாளோ தெரியவில்லை''

இராமனை, அவனது தந்தை, அவன் செய்த குற்றத்துக்காக அனுப்பவில்லை. தசரதன் கைகேயிக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற (தந்தை தாய் வாக்கிய பரிபாலனம் செய்ய) இராமன் தானாகவே வனம் வந்தான். சீதையுடன் சிற்றின்பத்துக்காக இராச்சியம், இராசபோகம் எல்லாந்துறந்து தண்டகாரண்யத்துக்கு வர வேண்டுமா? அறநெறிதவறாதஇந்திரன்போன்றதேவன்அவன்!

ஜனகன் மகள் சீதையை நீ தீண்ட முடியுமா? எரிந்து போவாய்! இராமபாணங்களுக்கு இரையாகாதே. பூரணமாக ஆராயமால் ஒரு செயலுக்கு இறங்காதே! அரக்கர் கோமானே! நான் சொல்வதைச் சிந்தித்துப்பார்!

நான் முன்பு, விசுவாமித்திரனுடைய வேள்வியைச் சிதைக்கப்போனேன் அல்லவா? அந்த நாளில் சிறுவனாக இருந்த இராமன் முனிவருடன் வந்திருந்தான். சிறுவனது வீரம் முனிவருக்கு அப்போதே தெரிந்திருந்தது! அந்தப் பாலராமன், தன் வில்லை வளைத்துச் செலுத்திய பாணம், என்னைத் தூக்கிச் சமுத்திரக் கரையில் கொண்டு போய்ச் சேர்த்தது! நான் வெகு நேரம் மயங்கிக்கிடந்தேன்.

ஆகவே இராமனது கோபத்தைக் கிளறினால் அரக்கர் குலம் பூண்டோடு அழியும்! இப்போதே அழியும் இலங்கை என் அகக் கண்ணில் தெரிகிறது என்கிறான் மாரீசன். மேலும் தொடர்கிறான். இப்போதுள்ள நூற்றுக்கணக்கான மனைவிமார் போதாதா? வலிந்து இயமனை அழைக்காதே! எல்லாம் உன் நன்மைக்காகச் சொல்கிறேன் என முடிக்கிறான்.

ஆயினும் என்ன? இவ்வளவும் புறக்குடத்தில் வார்த்த நீராகி விட்டது. மருந்து வேண்டாம் என்று நோயாளி மறுத்தால் யார் என்னசெய்யலாம்? "நீசொல்வது சரியல்ல, இதனை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன் '' என மன்னன் கூறிவிடுகிறான்.

அமைச்சரிடம் அரசன் யோசனை கேட்டால் லாப நட்டத்தைச் சொல்லலாமே தவிர புத்திமதி சொல்ல முயலக்கூடாது. இந்த மானிடனோடு யுத்தம் செய்வது எனது முக்கிய நோக்கமல்ல; இவனது மனைவியை அவமானப்படுத்த வேண்டும் என்பதுவே எனது நோக்கம்; அதனைச் செய்வதற்காக நான் கேட்கும் உதவியைச் செய்ய மாயமானாக அவ்விடம் நீ உலாவ வேண்டும்; சீதை ஆசைப்பட்டு உன்னைப் பிடிக்க இராமனை அல்லது இலக்குமணனை அனுப்புவாள்; இருவரும் இல்லாத விதமாக்க நீ நடந்து கொள்; அந்த வாய்ப்பைப் பயன்படுத்திச் சீதையை கவர்ந்து செல்வேன். இதைச் செய்துவிட்டு நீ எங்கேயாவது போகலாம். இல்லையேல் இப்பொழுதே இவ்விடத்திலேயே உன்னை வதஞ்செய்து விடுவேன் '' என்கிறான்.

'' மறுத்தனை எனப்பெறினும் நின்னை வடிவாளால்
ஒறுத்து மனம் உற்றது முடிப்பேன்; ஒழிகல்லேன்;
வெறுப்பன கிளத்தலும் இத் தொழிலை விட்டு, என்
குறிப்பின் வழிநிற்றி, உயிர் கொண்டு உழலின்'' என்றான்
(கம்பர்)

'' காமத்தால் தூண்டப்பட்டு மாள்வது இவன் விதி. இவனால் கொல்லப்பட்டு என் உயிர் போவதை விடவும், இராமனாலே (பகைவனால்) கொல்லப்படுவது குற்றமில்லை'' என எண்ணிய மாரீசன், இராவணா! உன் யோசனைப் படி நடந்து கொள்கிறேன்; என் உயிர் போவது உறுதி; அதன் பின் உன் உயிர் போவதும் நிச்சயம்; இலங்கை அழிவதும் உறுதி. உன்னால் மாள்வதை விட, பகைவனால் மடிவது சிறந்தது வா, தண்டகாரண்யம் போவோம் எனப் புறப்படுகிறான் மாரீசன். இப்பொழுது, இராவணன் மகிழ்ந்து, மாரீசனைத் தழுவி, ' பழைய மாரீசனைக் கண்டேன்' என்கிறான்.

திட்டமிட்ட வண்ணம் இராவணனும் மாரீசனும் பஞ்சவடிக்குச் செல்கின்றனர். மாரீசன் சீதை முதலியோர் கண்ணில் படும்படி உலாவி, அடிக்கடி தன் உருவை மாற்றி, மான் போல் துள்ளித் திரிகிறான். அந்த மானைப் பார்த்த மாத்திரத்திலே அது மாயமான், மாரீசன் தான் என்பதை அறிந்து கொள்கிறான் இலக்குமணன். ஆனாலும் சீதை விட்டபாடில்லை. அவளது வேண்டுகோளை நிறைவேற்றுமுகமாக இராமன் மானைத் தொடர்ந்து அம்பும் வில்லுமாகப் போகிறான்.

கூனியின் தூண்டுதலினால் கைகேயி, இராமனை வனத்துக்கு அனுப்புகிறாள்; சீதையின் வேண்டுதலால் வனத்திலிருந்த இராமன் இலங்காபுரிக்குப் போகிறான். கூனிக்குச் செய்த குறும்பு இராமனை வனஞ்செல்லவும், சீதை செய்த ஏவல், இராமனை மிகுதித் தூரத்தைக் கடக்கவும் வைத்து, ' அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய தவமும் பலிக்க' இராவணனைக் கொல்லுகின்ற இராமாவதாரத்தின் நோக்கம் நிறைவேறுகின்றமை இங்கே விதியாகி நிற்பது காணலாம்!

இராமன் மாயமானோடு வனத்தில் நெடுந்தூரம் சென்றும் பிடிக்க முடியவில்லை. பொறுமை இழந்த இராமன் அம்பை விடுகிறான்; மாரீசன் விழுகிறான். அப்போதும் மாரீசன் தன் மாய வித்தையைக் காட்ட, ' இலக்குமணா! சீதையே! ஐயோ ! ' என அவலக் குரல் எழுப்பி விட்டு உயிர் விடுகிறான்.

எப்படியாவது சீதைக்குக் காப்பாக இலக்குமணன் இருக்கிறான் தானே என்ற நம்பிக்கையோடு, திரும்பி வருகிறான் இராமன்.

வெய்யவன் தன் உருவோடு வீழ்தலும்,
செய்யது அன்றெனச் செப்பிய தம்பியை
ஐயன் வல்லன்! என் ஆருயிர் வல்லன், நான்
உய்ய வந்தவன் வல்லன் ! என்று எண்ணினான். (கம்பர்)

ஆனால், பஞ்சவடியில் இருந்த சீதை, இராமனுக்கு ஏதோ அவலம் நடந்துவிட்டது என நம்பி, இலக்குமணனை ஏவியதுமன்றித் தகாத வார்த்தைகளையும் கூறுகின்றாள்.

இராமனது வீரத்தைத் தெரிந்த தம்பி, சீதையின் காவலில் உறுதியாக நிற்கவும், ' இராமனது மரணத்தை எதிர்பார்த்து, என்னை அடைய இருக்கிறாயா என்று சீதை ஏசினால், எவர் மனதும் புண்படுந்தானே!

தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு (குறள் 129)


தேவ, அசுர, மனித சாதிகளில் யார் எதிர்த்தாலும் அவரைக் கொல்லவல்ல வீரம் படைத்தவன் உன் புருஷன் என்றும் பொறுமையாகச் சொல்லிப் பார்க்கிறான் சீதை இன்னும் ஏசுகிறாள். போகிறாயா? இல்லையா? என்று கதறி அழுகிறாள். உடனே இலக்குமணன், ஜானகி! "அண்ணன் ஆணையை மீறி, இதோ போகிறேன்" என்று கூறித் திரும்பிப் பார்த்துப் பார்த்து விரைந்து போகிறான். இலக்குமணன் தன்னைத் தேடி வருவது கண்டதும் இராமனது மனம் ஏங்கியது. இருவரும் வேகமாகப் பஞ்சவடிக்கு வந்து சேர்ந்தார்கள்; சீதையில்லாக் குடிசை தான் இருந்தது; சீதை எங்கே? தேடத் தொடங்குகிறார்கள்?



மட்டுவில் நா.நல்லதம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாட்சி



அரசாட்சி நடக்குதையா-இங்கு
'அரச' ஆட்சி நடக்குதையா...'
அரச மர நிழலிலெல்லாம்
புத்தர் வந்து காட்சியளிக்கும்-புண்ணிய
அரசாட்சி நடக்குதையா...
'அரச' மரம் எங்கிருக்கோ-அங்கிருக்கும்
அனைவரையும் (கடவுளரையும்) விரட்டிவிட்டு
புத்தபிரான் அருளோங்கும்
அரச ஆட்சி நடக்குதையா..
தமிழ் மக்களுக்குக் காவலில்லை
அரசடி புத்தருக்கு காவலில் எல்லையில்லை
'அரச' மரமும் அரச சொத்துதானோ?
இதைப்பற்றிப் பேச வழி ஏது? பேசினால்
எம் கதி ஏது?

சகி, மானிப்பாய்



# நாயினும் கேடாய் வாழலாமா?

ஐயோ இது கொடுமையென
அன்னையர்கள் புலம்ப
பொய்யோ இது மெய்யோ வென
பூவையர்கள் புலம்ப
கையோ தலை வைத்து மிகு
காரிகைகள் கதற
தையலர்கள் கேட்டு நொந்து
தவித்து மிகப் புலம்ப

வையகமோ இஃதறிந்து
வருந்தி எமை நோக்க
பையவே பத்து அகவை
பாவையினை இழுத்து
கையாதனால் வாய்பொத்தி
கற்பைச் சூறை ஆடும்
கயமை தனை இங்கு தினம்
காணுகிறோம் அன்றோ


தூய தமிழ்ப் பண்பாடு
துலங்கிடும் இந் நாட்டில்
பேயொத்த பிசாசுகளோ
பேரழிவு செய்ய
நாய் வாழும் நாடாக
நம்நாடு மாறின்
நாமிங்கு தமிழரென
நவின்றிடுதல் முறையோ?

மெய்யாக மேதனியில்
மேன்மையுற்ற சாதி
வையமிகு வாழ்ந்த நெறி
வளம்பெற்ற நாடு
தாய்க்குலத்தை தெய்வமென
தான்மதிக்கும் நாடு
செய்ய தமிழ்ப் புலவோர்
சேர்ந்து மிக போற்ற

மை விழியாள் மாதரெலாம்
மகிழ்ந்திருந்த நாடு
தாயவளாம் சிதையவள்
தவமிருந்த நாடு
வாயாராக் கம்பனவன்
வாழ்த்திய நல்நாடு
பேயுறையும் காடாக
பேரிழந்து போனால்

யாருரைப்பர் தமிழர் என
யாரெம்மை மதிப்பர்.

விகடகவி





# அயல் வீட்டு உண்ணிகள்

சூழ்ந்திருக்கும் உறவுகள்
சூழ்ச்சிகள் நிறைந்தகாய்
பகடையை சகுனிகளாய் உருட்ட
பாஞ்சாலியாய் நான்

தாயெல்லாம் பேய்களாய்
மாறிவிட மானத்தை
மதிக்கும் தமிழன் நான்
மாற்றுடை இன்றி

ஒட்டி நின்று ஒட்டுக்கேட்கும்
அயல்வீட்டு ஒட்டுண்ணிகளும்
அடுத்த நாட்டு உண்ணிகளும்
கூட்டுச் சேர்ந்து ஆட்டம் போட

வீணைக் கொடியுடையான் இராவணன்
வில்லிழந்து நின்றது போல்
மானமிழந்து நிற்கிறேன்
சுற்றிவரக் கேலிகள் கண்டும்

அவற்றை அழிக்க
அரைநொடி போதும் எனக்கு
இருப்பினும் உன் கை கட்டப்படுகிறது
மரியாதை என்னும் கைவிலங்கால்

கெ.மலரவன்
வியாபாரிமூலை.

# முழுமதியான முதல் ஆசான்

அன்னை மடிதன்னில்
துள்ளி விளையாடி
பிஞ்சுப் பாலகனாய்
பள்ளி நான் செல்கையிலே
மெல்லவாய் எனை அணைத்து
செல்லமாய் கதைகள் பல
செப்பி நின்றவள்
கைகள் பிடித்து
கனிவாயே எழுதவும்
கற்றுத் தந்து
காலை முதல் மாலை வரை
என்கூடவே சேர்ந்திருந்து
கல்வியைப் புகட்டியவள்
சின்னச் சண்டைகளை
சிறுவர் நாம் போட
எட்டவே இருந்து
அதை ரசித்து
தண்டனைகள் தராமலேயே
நல்வழிப்படுத்தியவள்
அன்னையாய் மாறி
அன்பைச் சொரிந்தவள்
தன்னையே உருக்கி
தாயும் ஆனவள்
இன்னும் அவள் வாழ்கிறாள்
எந்தன் மனந்தன்னில்
என்றுமே வாழ்வாள்
எழில்மிகு புன்னகையுடனேயே

ஆஷா, யாழ்ப்பாணம்



# மனிதா....


நேற்றிருந்த சொந்தம்
இன்றில்லை
இன்றிருக்கும் உறவு
நாளை இல்லை
நாளை வரும் பந்தம்
நிலைக்குமா மனிதா! நிலைக்குமா?

கள்ளக் காதலிகளுடன் பலர் காதலியுடன்
சில பேர் மட்டும் தான்
பக்கத்து வீட்டை
முகம் பார்க்கா- முகம் பல
மேல் நாட்டு வாசியை
மேலாடை இன்றியும்
இணையத்தில் பார்த்து கதைக்குமாம்
சிரிக்குமாம்

தன் நாட்டு அரசு
அரசியல் தெரியா - பல பேர்
அண்டை நாட்டு பிரச்சினைகளை
பிரசங்கம் வைப்பர்
திருப்பிக் கேட்பார்
இல்லாததால் என்னமோ? தெரியா?

தன் நாட்டுப் பிரச்சினை
கேட்டால் கேட்கப்பட்டால்
காணமல் போகிடுவேன் என்கிறாய்-ஏன்?
நீ இப்போது தெரிகிறாய்
என்ற நினைப்பா-உனக்கு
அதிகமாய் கதைப்பவரை-மட்டுமே
இவ்வுலகு விரும்புமாயின்
அமைதியாய் இருப்பவர்கள்-என்ன
முட்டாள்கள் தான் என்பதா?

கடல் என்பது
அலைகள் மோதும்
ஆர்ப்பரிப்புகள்-மட்டுமல்ல
அணுவளவும் அசையா நிசப்தமும்
ஆழ்கடலினுள் உண்டு-என்பதை
மறந்து விடாதே
மனிதா! மானிடப் பண்புகளை....



மலரவன்
தேசியக் கல்வியியற் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் என்னும் பெரும்சக்தி

எந்தவொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள் என்று கூறும் அதேநேரம் எந்தவொரு ஆணினதும் தோல்விக்குப் பின்னாலும் ஒரு பெண் நிச்சயம் ஒழிந்து கொண்டுதான் இருப்பாள் என்பதுவும் உண்மை. யதார்த்தமாக ஒரு சமுதாயத்தின் உதயமும் அஸ்தமனமும் ஒரு பெண்ணின் ஆற்றல் சக்தியின் தன்மையிலேயே தங்கியுள்ளது. ஏன் தெரியுமா? ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டால் கேட்கப்படும் சமூகத்தின் அநீதியான கேள்விகளுக்கும் இழைக்கப்படும் அநியாயங்களும் தர்க்க ரீதியான கருத்துக்களை நிலைநாட்டக் கூடியதான பதிலுரைகள் பெண்களின் முடிவுகளாக பிரசவிக்கின்றன. ஆத்திரங்களை அடக்கி அமைதி நிலை கொண்டு ஆழ்மனதின் சிந்தனை வெளிப்பாடான செயற்பாடுகளை அவர்கள் வெளிக்காட்டுகின்றார்கள். சமூகத்தில்எழும் பிரச்சினைகள் பின் தொடர்ந்து வருகின்ற போது அதனை மீறி எழுந்து அடிக்காமல் அது செல்வதற்கான பாதையினின்றும் விலகி இருப்பவர்கள் பெண்கள். விலை கொடுக்காமல் வீணே வருகின்ற பிரச்சினைகளை முகம்கொடுத்து முடியுமானவரை புரியவைக்கப் பார்ப்பவர்கள் பெண்கள். முடியாதவரை உணர்த்தி வைக்கவோ, நியாயப்படுத்தவோ, விளக்கம் கூறவோ, விளங்கப்படுத்தவோ அவர்கள் ஒருபோதும் முனைவதில்லை . மாறாக தாமே முடங்கிப் போய்விடுகிறார்கள். இதனால் ஆற்றல் வாய்ந்த பெண்ணினது அமைதி நிலை கொண்ட சிந்தனையின் சக்தியாகும் .

பெண்கள் விட்டுக் கொடுக்கும் தாராள மனப்பாங்கை உடையவர்களாயினும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப சாதிக்கப் பிறந்தவர்களும் அவர்களே. பார்ப்பதற்கு பவ்வியமாக இருந்தாலும் கூட அவர்களது உணர்வுகளும் உணர்ச்சிகளும் ஏது சரி ஏது பிழை என்று எடைபோட்டு அறியக்கூடிய ஆற்றல் வாய்ந்தவை. அந்த ஆற்றலில் எதை சமூகத்தில் நிலை நாட்ட வேண்டும் என்று ஒரு பெண் நினைக்கிறாளோ அதனை அந்த விநாடியே அவள் சாதிக்கத் தவறுவதில்லை . இன்னும் ஒரு பெண்ணின் ஆற்றல் வாய்ந்த சக்திக்கு பின்புலத்தில் மறைந்திருப்பது மனம் என்று சொல்லப்படுகின்ற மாபெரும் மனிதவலு. யாராலும் எந்த நேரத்திலும் பகுத்தறிந்து கொள்ள முடியாது போகின்ற மனம். அதிலும் பெண்களின் மனம் என்பது வேறுபட்ட சிந்தனையின் வித்தியாசமான கோணங்களில் வெவ்வேறு விதமான வடிவங்களில் விஸ்வரூபம் எடுக்கக்கூடியது. இத்தகைய மனம் நிலை தடுமாற்றமற்ற நிலைக்கு எடுத்துச் செல்லக்கூடிய ஆற்றலும் அறிவுநிலையும் பெண்களுக்கு சற்று அதிகமாகவே உள்ளது. பெண்கள் தன்னம்பிக்கை அடிப்படையிலும் சமூக நம்பிக்கையின் அடிப்படையிலும் சமூகத்தில் வாழ்பவர்கள். அப்படிப்பட்டவர்கள் தெய்வீக நம்பிக்கையின் அடிப்படையில் சமூக விருத்திக்கும் உறுதுணையாக இருந்து வருகின்றார்கள்.

மொத்தத்தில் மென்மையான உள்ளம் படைத்தவர்கள் பெண்கள். இரக்கம் ,அடக்கம், விட்டுக்கொடுப்பு, சகிப்புத் தன்மை, தாராள மனப்பான்மை, அமைதி, அந்தரங்கம், அன்பு, நேர்மை, எதையும் தாங்கும் சக்தி, ஏகோபித்த கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் ஆற்றல், சிந்தித்து செயற்படும் சிந்தனை, சிந்திக்க வைக்கும் சீரிய செயற்பாடுகள் , பண்பு, பணிவு, பகுத்தறிவு கூடவே பரந்த மனப்பான்மை, பாரபட்சமற்ற சுய மதிப்பீடு இவையெல்லாம் ஒன்று சேர்ந்த ஓர் சக்தி ஒரு பெண் என்றால் அது மிகையாகாது.





எம்.சுகந்தினி,
அச்சுவேலி.

# மகிழ்வின் சின்னம் பெண்....

ஒரு குடும்பத்தின் தலைவனுக்கு அடுத்த படியாக குடும்பப் பொறுப்புக்களைக் கொண்டவளாக , குடும்பத்தின் தலைவி விளங்குகின்றாள். அவள் தன்னுடைய குடும்பத்தை கலகலப்பாக வைத்திருப்பதற்கு பல வழிகளிலும் முயற்சிப்பவளாகக் காணப்படுகின்றாள்.

அதற்கு அவள் ஒரு உண்மை மனச்சாட்சியோடு ஒப்புக் கொண்டு,அங்கீகாரங்களை ஏற்றுக்கொண்டு வாழ்வதே காரணமாகும். இவ்வாறாக அவ் அங்கீகாரத்திற்காக ஏங்குகின்றவர்களால் தான் கலகலப்பாக இருக்க முடியும்.

பெண்ணினுடைய வாழ்க்கைப் பருவத்தை எடுத்துக் கொண்டால் அவளுடைய 25 வயதில் இளமையும், காதலும் கலகலப்பைத் தருகின்றது. 65 வயதில் பிரிவும், பாசமும் 85 வயதில் இன்னும் எம்மோடு இருக்கிறாள் என்பதும் குடும்பத்திற்கு கலகலப்பை ஊட்டுவதாக அமைகின்றது. பண்டிகைக் காலங்களில் கூட, பெண்கள் இல்லாத பண்டிகை ஆள் நடமாட்டமில்லாத ஒரு நிகழ்வாகவே அமைகின்றது.

ஒரு குடும்பப் பெண்ணை எடுத்துக் கொண்டால் வீட்டில் இருப்பவர்களுக்கு என்ன பிடிக்கும் என்ன பிடிக்காது என்பதை அறிந்து, சமைத்துக் கொடுப்பதில் தான் சந்தோஷம் அடைபவளாகவும், சந்தோஷத்தைக் கொடுப்பவளாகவும் அவள் விளங்குகிறாள். அத்தோடு அவ்வுணவில் இரசத்தை எடுத்துக் கொண்டால், இரசத்தில் பெருங் காயத்தோடு பெருந்தன்மையும் கலந்து கொடுப்பவளாக அவள் தன்மை உணர்த்தப் படுகிறது.

தலை நிறைய மல்லிகைப் பூ வைத்து, அழகான பட்டுப் புடவை கட்டி, சரசரக்க கை நிறைய வளையல் ஒலிக்க,காற்கொலுசு ஒலிக்க, பெண் திருமண வீட்டில் கூட கலகலப்பை வழங்குகின்றவளாகவும் காணப்படுகிறாள்.

"ஆலம் விழுதுகள் போல் உறவுகள் ஆயிரம் இருந்தும் என்ன வேர் என நீயிருந்தாய்? அதில் நான் விழுந்து விடாமல் இருந்தேன்" இதில் வேர் தான் பெண்கள். அவ் ஆலமரமே குடும்பமாகத் திகழ,அதனை நிலை நிறுத்தியும், சந்தோஷமாக வைத்திருப்பவளாகத் திகழ்பவளாகவும், குடும்ப குத்து விளக்காகவும் பெண்ணே விளங்குகிறாள் .



ம.அ. மரிய ஜெனிற்றா,
சாவகச்சேரி

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .




பெண்ணே,
உன்னை இச்சமுதாயம்
கோழை என்று சொன்ன பின்பும்
உறங்கிக் கொண்டிருக்கிறாயே .
புதுமைகளால் மாறுபட்ட
இத்தேசத்தில் இன்னும்
புத்தெழுச்சி பெறாமல்
அடுப்பங்கரையில் என்ன செய்கிறாய்?
பாரதி உனக்காக எழுதினானே
அவற்றை புறந்தள்ளிவிட்டு
அழுது கொண்டிருக்கிறாயே
உறங்குவதை விட்டு விழித்திடு
உன்மனதை திடப்படுத்து.
உரிமைக்காக போராடு
உயர்ந்திடுவாய் உலகினிலே.

ப.ஷஜீபனா,
கொடிகாமம்.



## தாய்மை

தாய்மை பொதிந்த
தத்துவப் புத்தகம்
தார்மீக பூமியின்
தத்தெடுத்த வித்தகம்

வாய்மை தந்த
வாழ்வின் பொக்கிஷம்
வரலாற்றில் அவள்தான்
வரம்பில்லா நித்தியம்
உயிர்ப்பும் மெய்ப்பும்
உலகிற்கு ஈந்த உத்தமி.
தன்னலங் கருதா
தார்ப்பரியம் ஈன்ற
அகிலத்தின் அகராதி
அன்னையெனும்
அகல்விளக்கு
அவளே எம்வாழ்வின்
அணையா குலவிளக்கு.


க. நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**வி.துர்க்கசியா,**
தரம்- 6, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.




**செ.ஜோதிகா,**
தரம்- 7, யாழ்.சன்மார்க்க ம.வி.



**செ.ஜோதிகா,**
தரம்- 7,
யாழ்.சன்மார்க்க ம.வி.




**வி.சஜீகரன்,**
யாழ்.மத்திய கல்லூரி.



**தி.மேரி துஷிக்கா டயஸ்,**
தரம்- 5 'பி',
மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி.

# நானும் ஒரு ஜீவன்



அன்று ராதாவின் பிறந்த நாள். எல்லோரும் மிக்க மகிழ்ச்சியாக இருந்தனர். வண்ண வண்ண விளக்குகள் அங்குமிங்கும் தொங்கின. பலநிற வர்ணங்களில் பளபளக்கும் பலூன்கள் கட்டப்பட்டிருந்தன. விழாவுக்கு வந்த மக்கள் பல வர்ண உடைகள், அலங்காரங்களை உடுத்தியிருந்தனர்.

ராதா மிக்க மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள். எல்லோரும் கலகலப்பாக இருந்த வேளை ஒரு மூலையில் ஒதுக்குப் புறத்தில் ஒரு உருவம் படுத்திருந்தது. அவள்தான் செல்வி.

அங்கிருந்தவர்கள் யாரும் அவளை கவனிக்கவே இல்லை. அவள் மிகவும் ஏழ்மையானவள். சொல்லப் போனால் ராதாவின் தந்தையின் அக்காவுடைய மகள். அவளுடைய தாயும் தகப்பனும் வன்னிப் போரில் இறந்து விட்டனர். உண்மையாகவே அவள் ஒரு அநாதை. அவளது உறவினர்கள் தான் அவளை ராதாவுடைய தகப்பனின் வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டார்கள்.

ராதாவுடைய குடும்பம் அவளை ஒரு வேண்டாத விருந்தாளியாக வரவேற்றனர். அந்த வேண்டாத விருந்தாளி தங்குவதற்கு ஒரு ஒட்டடை விழுந்த தூசு படிந்த சிறிய அறை வழங்கப்பட்டது. குடிப்பதற்கு தண்ணீர் என்ற பெயரில் கால்வாய் நீரும் கிடைத்தது. அவளுக்கு அந்த வீடே நரகமாகியது. யாரும் அவளை அன்பாக நடத்தியதும் இல்லை.

இப்படியொருநாள் தான்....... அவளது அறையை விட்டு வெளியே வந்து பார்த்தாள். அங்கே அவர்களது வெளி முற்றத்தில் ஒரு மாம்பழம் விழுந்து கிடந்தது. பலநாள்கள் காட்டில் கடுந்தவம் புரிந்தவளுக்கு அருந்தவ முயற்சியில் கிடைத்த அதிசயப்பழம் போல் இருந்தது அது. உடனே அதை எடுக்கப்போனாள். ஒரு கரம் அவளைத்தடுத்து நிறுத்தியது. நிமிர்ந்து பார்த்தாள்.

அங்கே.... இரணியனைக் கொன்ற நரசிம்மன் போல் ஆவேசத்துடனும் கோபத்துடனும் ராதா நின்று கொண்டு இருந்தாள்.

செல்வியை ஒரு அறை அறைந்தாள். கீழே விழுந்த செல்வி கன்னத்தை பிடித்துக்கொண்டு எழுந்து சென்றாள்.

அவளுக்கு அங்கு இருக்கவே பிடிக்கவில்லை. ஏனெனில் அந்த மாம்பழம் தூரத்திலிருந்து மிகவும் கஷ்ரப்பட்டு விழப் பண்ணியவள் ராதா தான். அதுதான் அவளுக்கு இவ்வளவு கோபம்.

இன்று... ராதாவின் பிறந்த நாள்.


செல்வி எழுந்து சென்று அநாதை மடத்தில் சேர்வதற்காக மூடை முடிச்சுகளை கட்டிக்கொண்டு யாரிடமும் சொல்லாமல் அந்த இரவு வேளையிலும் வெளியே புறப்பட்டாள்.

ஒரு சிறுவர் அநாதை மடத்தில் சேர்ந்து மிகவும் கஷ்ரப்பட்டுப் படித்து வைத்தியரானாள். காலம் போகப்போக அவளுக்கு செல்வமும் அதிகரித்தது. ஆனால் செருக்கு என்ற குணம் அவளை எட்டிக் கூடப் பார்க்கவில்லை. அவள் தன்னிடமுள்ள பணத்தைக் கொண்டு ஒரு அன்புச் சிறார்களை பராமரிப்பதற்கான இல்லத்தைக் கட்டினாள்.

ஒருநாள் ஒரு ஏழைப்பெண் ஒருத்தி அவளிடம் வேலைகேட்டுவந்தாள். செல்வி அவளை உற்றுப் பார்த்தாள்.

அங்கே... ராதா... செல்வி அவளை விசாரித்தாள். அப்போதுதான் தெரிய வந்தது. "ராதாவின் தாயும் தகப்பனும் கடும் நோய் ஏற்பட்டு பரமனடி சேர்ந்து விட்டார்களென்றும், அவர்களது செல்வத்தை எல்லாம் உறவினர்கள் சூறையாடி விட்டனர் என்றும். ராதா குனிந்த தலை நிமிராது அழுதாள். செல்வி அவளை அணைத்து அன்புடன் பராமரித்தாள். தன்னுடைய செல்வாக்கைக் கொண்டு ராதாவின் செல்வங்களை மீட்டுத் தந்தாள். அவளுக்கு வேலையும் தந்தாள். இருவரும் சேர்ந்து சிறுவர்களைப் பராமரித்து காலம் கழித்து வந்தனர்.

## சிந்தனைத்துளிகள்



வணங்கத்தக்கவர்கள்-தாயும் தந்தையும்
வந்தால் போகாதது- புகழும் பழியும்
நம்முடன் வருவது- இளமையும் முதுமையும்
போனால் வராதது- மானமும் உயிரும்
அழிவைத்தருவது- பொறாமையும் கோபமும்
மிகப்பெரிய நோய்- பேராசை
ஆபத்தை விளைவிப்பது- அதிக பேச்சு
மிகப்பெரிய வெகுமதி- மன்னிப்பு

**க.கஜிரான்,**
மன்.சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி

## எல்லையற்ற கல்வி....



எல்லையற்ற கல்வி
விதையாய் விதைத்த
முன்பள்ளிப்பருவத்தில்
செடியாய் வளர்ந்த
பள்ளி நினைவுகள்
கொடியாய் மிதந்த
உயர்தர வகுப்புகள்
சோதனை புரியும் பரீட்சைகள்
சாதனை படைக்கும் விருதுகள்
மரணம் வரை எல்லையில்லை கல்விக்கு
வயது எல்லை இல்லை சாதனைக்கு
நம்பிக்கை என்ற விதை வேரூன்ற
முயற்சி என்ற கொடி தழைத்தோங்கி
கல்வி நீரூற்றாக மாறி வரும்
எல்லைகளைத் தாண்டும்

**உதயகுமார் லஜீனா**
வட்டு. இந்து மத்திய கல்லூரி

## விடை தெரியுமா? 169

### உங்களுக்கும் பரிசில்கள்

1. இலங்கையின் பறவைகள் சரணாலயம் எது?
2. உலக சமாதான தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
3. மிகப்பெரிய ஜனநாயக நாடு எது?
4. இலங்கையின் முதல் பிரதமர் யார்?
5. இயற்கை ஒளி முதல் எது?

### விடைகள் 167

1. ஜூலை 11
2. C.W.W.கன்னங்கரா
3. நைல்நதி
4. முல்லைத்தீவு
5. இங்கிலாந்து

### வெற்றி பெற்றோர் விவரம் (168)

★ ச.ரோகினி, தரம்- 8, காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி
★ இ.சிந்துஜா, தரம்- 9, மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை
★ க.கோகுலன், தரம்- 7, சன்மார்க்க மகா வித்தியாலயம்
★ கெ.றஜித்தா, தரம்- 8, மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை.
★ எஸ்.ரகுராம், தரம்- 6, யாழ். இந்துக்கல்லூரி
★ க.அனோஜன், தரம்- 7, நெளுக்குளம் கலைமகள் ம.வி.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் **"சிறுவர்கதிர்"**, உதயன், 361, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 29.07.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிப்பேரசு வைரமுத்து

# இரு பூதங்களால் விழுங்கப்படும் உலகம்

**கவிப்பேரரசு வைரமுத்துவின் மூன்றாம் உலகப் போர் நாவலின் முன்னுரை இது**



மூன்றாம் உலகப் போர் என்று ஒன்று மூளுமா? மூண்டால் அது ஆயுதங்களை முன்னிறுத்தி நிகழுமா? நிகழாது என்றே கருதப்படுகிறது. நிகழ்ந்தால் அது அறிவுடைமை ஆகாது என்றே தோன்றுகிறது. ஏனெனில், அப்படி நிகழும் ஓர் அகில உலக ஆயுதப் போரில் வெற்றி கொண்டவன் முதல் பலியாவான். தோல்வி கண்டவன் இரண்டாம் பலியாவான். அதனால் மூன்றாம் உலகப் போர் மூளாது என்றே அறிவுலகம் நம்புகிறது.

ஆனாலும் மனிதகுல நகர்வுக்குப் போர் அவசியம் என்றே மானிடவியல் கருதுகிறது. போர்களே தேசங்களை உண்டாக்கின; இனக்குழுச் சமுதாயங்களை இணைத்தன; கலாசார உறவுகளை நிகழ்த்தின; கத்திமுனையில் நாகரிகங்களைக் கற்பித்தன; உதிரிப்பூ மனிதர்களை மாலை கட்டின. அதனால்தான் மனிதர்கள் போர்களை விரும்பாவிட்டாலும் போர்கள் மனிதர்களை விரும்ப நிகழ்ந்திருக்கின்றன.

இப்போதும் ஒரு போர் தொடங்கி நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது தன் வடிவத்தை மாற்றிக் கொண்டு. இது முகத்துக்கு முகம் பார்த்து மோதாத போர்; ஆயுதங்களை ஒளித்துக் கொண்டு நிகழ்த்தும் போர்; மண்ணுக்கும் விண்ணுக்குமான போர்; மனிதனுக்கும் இயற்கைக்குமான போர்; இது மனிதகுலம் சந்தித்திராத மோசமான முகமூடிப் போர்; புவி வெப்பமாதல் - உலகமயமாதல் என்ற இரண்டு சக்திகளும் வேளாண்மைக்கு எதிராகத் தொடுத்திருக்கும் விஞ்ஞானப் போர். இந்தப் போரில் இயற்கையை எதிர்த்து மனிதன் வென்றாலும் மனிதனை எதிர்த்து இயற்கை வென்றாலும் தோற்கப் போவதென்னவோ மனிதன்தான்.

நாடோடிக் கலாசாரத்திலிருந்து எது மனிதனை மீட்டெடுத்ததோ - எது மனிதனுக்கு இருத்தல் நாகரிகம் கற்பித்ததோ - அது - அந்த வேளாண்மை தொடங்கிப் பத்தாயிரம் ஆண்டுகள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. வேளாண்மைக் கலாசாரம் வந்த பிறகுதான் உண்ணல் - உடுத்தல் - இருத்தல் என்ற உயிர்த்தேவைகள் ஒழுங்குற்றன.

விவசாயம்தான் நரமாமிசத்திலிருந்து மனிதனை நாகரிகத்துக்கு அழைத்து வந்தது. உணவுப் பழக்கத்தில் விலங்குகளே ஆதிமனிதர்களின் ஆசான்கள். விலங்கு தின்ற எதையும் மனிதன் தின்றான். பழங்கள், கிழங்குகள், தானியங்கள், இலை தழைகள், விலங்கின் தசைகள் என்பன கிட்டாதபோது பிணங்கள் மனிதர்களின் பெருவிருந்தாயின.

ஒரு பிணம் மட்டும் உண்ணக் கிடைத்து உண்போர் எண்ணிக்கை அதிகமானவிடத்து ஓட்டப்பந்தயத்தில் எவன் வென்றானோ அவனே பிணத்தின் பெரும்பங்கு தின்றான் என்று காட்டுகின்றன கல்லோவியங்கள். வேளாண்மை தோற்று உணவு அரிதாகுமிடத்து மீண்டும் நரமாமிசம் என்ற அநாகரிகம் மனித குலத்தை ஆட்கொள்ளலாம்; அது நிகழாது என்று மறுக்க முடியாது.

இரண்டாம் உலகப் போரில் ஸ்டாலின்கிராடில் சிறைப்பிடிக்கப்பட்ட ஒரு லட்சம் ஜெர்மானியர்கள் சைபீரியாவின் போர்க்கைதி முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். 872 நாள்களுக்குப் பிறகு பறவைகளையும் எலிகளையும் வீட்டு விலங்குகளையும் தின்று தீர்த்ததும் சக கைதிகளின் பிணங்களை நோக்கி அவர்களின் பெரும்பசி நீண்டது. போர் முகாமில் 5,000 பிணங்களைக் காணவில்லை - பின்னர் அவை எலும்புக் கூடுகளாய்க் கண்டறியப்பட்டன. எனவே, பசியின் உச்சம் சக மனிதனையும் உணவாகப் பார்க்குமே தவிர, உயிராகப் பார்க்காது. அந்த அச்சம் இப்போது பீடித்திருக்கிறது அறிவுலகத்தை.

கி.பி.2050-இல் 900 கோடியாய் இருக்குமாம் இந்த பூமிப் பரப்பின் மக்கள்தொகை. ஆனால், மக்கள் பெருக்கத்துக்கு எதிர்மறையாக இறங்கிக் கொண்டேயிருக்கிறது உலக உணவு உற்பத்தி. 2000-ஆம் ஆண்டில் தொடங்கி எட்டாண்டுகளில் 24 விழுக்காடு குறைந்திருக்கிறது உலகத்தின் கோதுமை இருப்பு; 39 விழுக்காடு இறங்கியிருக்கிறது அரிசி இருப்பு.

புவி வெப்பமாதல் என்ற பூதம் தலைவழியாகவும் உலகமயமாதல் என்ற பூதம் கால்வழியாகவும் ஒரே நேரத்தில் விழுங்கிக் கொண்டே வருகின்றன விவசாயியை. எனக்குத் தெரியும் அந்த வலி. இந்திய தேசப் படத்தில் இடம்பெறாத ஒரு கிராமத்தில் பிறந்து, 17 வயது வரை கபாலம் பிளக்கும் வெயிலிலும் காலைச் சுடும் புழுதியிலும் கலப்பை பிடித்து உழுத எனக்கு விவசாய வெளிகளில் தண்ணீரோடு பாயும் கண்ணீரும் ரத்தமும் நன்றாகவே புரியும்.

இந்தப் படைப்பை விவசாயி மகனாக இல்லாத ஒருவன் ஜீவனுள்ளதாக எப்படிச் செய்ய முடியும்? மூன்றாண்டுகள் ஆராய்ந்தேன்; பத்து மாதங்கள் எழுதினேன். எங்கள் மண்ணின் மக்கள் ஊடாக உலகத் துயரத்தைப் பதிவு செய்தேன்.

மண்ணில் முளைத்த மனிதர்கள் - உணர்ச்சியில் ஊறிய மொழி - சத்தியத்தில் நிகழும் சம்பவங்கள் - அனுமதிக்கப்பட்ட எல்லைக் கோட்டுக்குள் நிகழும் கற்பனை - நான் நடந்து பழகிய பூகோளம் - எல்லோரும் அறிந்த ஆனால் எழுதப்படாத எளியவர்களின் சரித்திரம் இவற்றின் கூட்டுத் தொகுப்புதான் மூன்றாம் உலகப் போர்.

இந்தப் படைப்பு உள்ளூர் மனிதர்களின் நாவினால் பேசப்படும் உலகக்குரல்; விழ வேண்டிய செவிகளில் விழுந்தாக வேண்டும். வாசிப்பு - ரசிப்பு என்ற எல்லைகளைத் தாண்டி, தீர்வுகளையே பரிசாகக் கேட்கிறது இந்தப் படைப்பு.

இயற்கையாலும் செயற்கையாலும் கூடிவரும் புவிவெப்பம் உலக விவசாயத்தின் மீது நிகழ்த்தியிருக்கும் தாக்குதல் அளப்பரியது; ஆராய்ச்சியில் கண்ட செய்திகள் அதிர வைக்கின்றன.

மத்திய ஆசியாவின் கிர்கிஸ்தான் நதிகள் குறைந்து வருகின்றன; சில நேரங்களில் வறண்டே விடுகின்றன. கடந்த பத்தாண்டுகளாக மத்திய ஆசியாவின் பனிமலைகள் உருகவில்லை அல்லது உருகுவதற்குப் பனிப்பாறைகள் இல்லை. இப்போது நிலவும் 3.5 டிகிரி செல்சியஸ் வெப்பம் 2100-இல் 8.4 டிகிரி செல்சியஸாக உயரக்கூடும். உயர்ந்தால் - வித்துகள் விதைக்க முடியாது மத்திய ஆசியாவில்.

தென்னாபிரிக்காவின் செனகலில் அதிகரித்து வரும் வெப்பத்தால் திடீர் திடீரென்று தீப்பிடிக்கிறது. கடும் காற்று தீயின் அழல்களை அள்ளி வந்து விளைநிலங்களில் வீச, லட்சக்கணக்கான ஏக்கர் தானியங்கள் சாம்பலாகும் சம்பவங்கள் தொடர்கின்றன.

ரஷியாவின் அனுமானிக்க முடியாத வானிலையால் தடுமாறிப் போன விவசாயிகள் தங்கள் கோதுமை விவசாயத்துக்காகப் பருவம் மாறுகிறார்கள்; பருவம் ஏமாறுகிறார்கள்.

அமெரிக்காவின் கொலம்பியாவில் மலையேறிய வெப்பம் காலங்காலமாய்த் தழைத்திருந்த கோப்பித்தோட்டத்தைக் கருக்கிவிட்டது. மாற்றுப் பயிராக இட்ட தக்காளியும் வெந்துவிட்டது வெப்பத்தால்.

ஆஸ்திரேலியா 1000 ஆண்டுகள் அறியாத வறட்சியை 2006-இல் சந்தித்தபோது பார்லியும் கோதுமையும் காய்ந்து கருகிவிட்டன. மீண்டும் பழைய உச்சத்தை பார்லி எட்டவே இல்லை.

இப்படி ஐந்து கண்டங்களிலும் கண்டத்தைச் சந்தித்து அந்திமத்திலிருக்கிறது ஆதி தொழிலான விவசாயம்.

உலகில் அதிக அரிசி ஏற்றுமதி செய்யும் வியட்நாம் நாட்டின் மக்கான் டெல்டா புவி வெப்பமாதலின் உடன் விளைவால் அடிக்கடி கடல் நீரில் மூழ்கிப் போகிறது. மழைநீரில் மூழ்கினால் 17 நாள்கள் தாக்குப் பிடிக்கும் நெற்பயிர்கள் கடல் நீரில் மூழ்கினால் உடனே அழுகிப் போகின்றன.

அதே புவிவெப்பமாதல்தான் மீன்வள நாடுகளின் கரையோரக் கண்ணீருக்கும் காரணமாகிறது. மீன்வளம் மிக்க 33 கடலோர நாடுகள் புவிவெப்பத்தால் தங்கள் பவளப்பாறைகளை இழந்துவிட்டன. அதனால் மீன்கள் இடம் மாறிவிட்டன அல்லது இறந்துவிட்டன.

ஆபிரிக்காவின் மாளாவி - குனியா - உகாண்டா; ஆசியாவின் பங்களாதேஷ் - கம்போடியா - பாகிஸ்தான்; தென் அமெரிக்காவின் பெரு - கொலம்பியா ஆகிய நாடுகளின் கரையோர மீன் வளம் குறைந்துகொண்டே போகிறது.

பூமி - வானம் என்ற இரு வழிகளிலும் தான் தாக்கப்படுவது அறியாத விவசாயி, விளையும் என்ற நம்பிக்கைக்கும் விளையாது என்ற எதார்த்தத்திற்கும் மத்தியில் கலப்பை கட்டி உழுகிறான் அல்லது அழுகிறான். விலங்குகளைப் போல உழைக்கிறவனும் தன் விலங்குகளுக்கும் சேர்த்து உழைப்பவனும் அவனேதான்.

இந்தப் படைப்புக்காக நான் இயங்கிய காலம் நான் விரும்பப் பாரம் சுமந்த காலம். உழைக்கும் மக்களுக்கான எழுத்து வேள்வி இது.


எங்கள் மக்களின் பொருளாதாரம் சிறிது; வாழ்வு பெரிது. இருத்தல் குறித்த மதிப்பாளுமை பெரிதினும் பெரிது. அவர்தம் வட்டார வழக்கில் இழையோடும் சங்கீதம் இனிதோ இனிது.

கருத்தமாயி - சிட்டம்மா தம்பதிகள் எல்லா சமூகங்களிலும் எல்லா ஊர்களிலும் இப்போதும் வாழ்கிறார்கள்.

சின்னப்பாண்டி வாழும் திரிசங்கு சொர்க்கத்தில்தான் எல்லா ஊர் இளைஞர்களும் இருக்கிறார்கள்.

நம் எல்லோருக்குள்ளும் முத்துமணியின் பல முகங்களுள் ஒரு முகம் இல்லாமலில்லை.

எமிலி - இஷிமுரா இருவரும் இந்தப் படைப்பின் அகிலத்தன்மை கருதி நான் படைத்துக்கொண்ட பாத்திரங்கள். அவர்தம் வரவு இந்தப் படைப்புக்கு மற்றுமொரு பரிமாணம்.



மற்றபடி அந்தக் கல்லும் முள்ளும் கரடும் குன்றும் - செடியும் கொடியும் மரமும் நதியும் - மகிழ்வும் துயரும் உயர்வும் இழிவும் - ஜனனம் மரணம் சம்பவம் பலவும் நான் உற்ற உணர்வு; பெற்ற வாழ்வு; கற்ற கல்வி; பட்ட காயம்.

எனவே இந்தப் படைப்பில் புண்ணில் ஒழுகும் ரத்தமும் கண்ணில் வழியும் கண்ணீரும் இரவல் உணர்ச்சியல்ல - பெரிதும் என்னுணர்ச்சி. என்னைப் பெருமைசெய்யும் சில படைப்புகளைப் போன்றதல்ல இது; மண்ணைப் பெருமை செய்யும் படைப்பு; மானுடத்துக்கான திடக் கண்ணீர்.

இந்தப் படைப்பின் உள்ளடக்கம் பேசப்பட வேண்டும். விவசாயத்தின் வீழ்ச்சி குறித்தும் மீட்சி குறித்தும் ஐ.நாவில் உலக நாடுகள் விவாதிக்க வேண்டும்.

✱ விவசாயிகள் ஒரு தேசத்தின் முதுகுடிமக்களாய் அறிவிக்கப்பட வேண்டும்.

✱ அரசு ஊழியர்களுக்கிணையான ஊதியப் பாதுகாப்பை விவசாயிகள் பெற வேண்டும்.

✱ விற்கப்படக்கூடாது விளைநிலங்கள். விற்கப்பட்டால் அரசாங்கம் அவற்றை விலைக்கு வாங்கி வேளாண்மை தொடர வேண்டும்.

✱ உடல் மட்டுமே மூலதனம் என்ற கற்காலக் கலாசாரத்திலிருந்து விவசாயி மீட்டெடுக்கப்பட வேண்டும்.

✱ வரப்புகள் அழிக்கப்பட்ட கூட்டுப்பண்ணைகளில் பாட்டாளிகள் பங்குதாரர்களாக வேண்டும்.

✱ தண்ணீரும் மின்சாரமும் உபரியாய் உண்டாக்கப்பட வேண்டும்.

✱ நவீனத் தொழில்நுட்பத்திற்கு விவசாயம் தாவ வேண்டும்.

✱ விவசாயி கற்றவனாக வேண்டும் அல்லது கற்றவன் விவசாயியாக வேண்டும்.

✱ புவிவெப்பமாதலைக் குறைக்கும் பெரும் பணிக்கு வளர்ந்த நாடுகள் வலக்கரம் நீட்ட வேண்டும்.

✱ பூமிப்பரப்பின் 33 விழுக்காடு வனப்பகுதிகளாய் வளர்க்கப்பட வேண்டும்.

✱ உலகெங்கும் உணவுகள் மாறும்; உண்ணுதல் மாறாது; எல்லோருக்கும் உணவு வேண்டும்.

✱ உலகெங்கும் இல்லங்கள் மாறும்; இருத்தல் மாறாது; எல்லோருக்கும் வீடுகள் வேண்டும்.

✱ உலகெங்கும் உடைகள் மாறும்; உடுத்தல் மாறாது; எல்லோருக்கும் ஆடைகள் வேண்டும்.

இந்த மூன்றுக்கும் மூலமாய் விளங்கும் வேளாண்மையைக் காப்பது உலகக் கடமை. அந்த உலகக் கடமையின் தமிழ்ப் பங்குதான் இந்த மூன்றாம் உலகப் போர். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 224

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | ■ | 10 | | | |
| 11 | | | 12 | | | ■ | |
| | ■ | 13 | | | ■ | 14 | ■ |
| ■ | 15 | | | ■ | 16 | | 17 |
| 18 | | | ■ | 19 | | ■ | |
| 20 | | ■ | | | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1.கோயிலில் வழங்கப்படுவது
4.அரைவாசி
6.பர்வதம்
7.ஒரு பூமரம்
8. பெண்கள்
10. வயல் எல்லையில் அமைப்பது
11. வறுமை
13. சிறந்தது
15. வேகமாக ஓடக் கூடிய சிறிய விலங்கு
16. வெகுமதி
18. அன்னம்
19. சேர்
20. அம்பு எய்வது இதனால்
21. வருவாயாகக் கிட்டுவது

### மேலிருந்து கீழ்

1. மிகச் சிறப்பு என்பதைக் குறிக்கும்
2.திறமையான பண்பு
3. சிரசு
4. நீர்நிலைக்கு மேலால் இரண்டு இடங்களை இணைப்பது
5. இந்திய மாநிலம் ஒன்று
7. உலோக ஆயுதங்களை கூர்மைப்படுத்துவது இதனால்
9. நில்
10. கடவுளிடம் வேண்டிப் பெறுவது
12. தைரியம்/வெற்றி
14. பெரிய நீர்த்தேக்கம்
15. வியாபாரத்துக்கான மூலதனம்
16. வலிமை
17. தொன்மையான எழுத்துக்கள் இதன் மீதுதான் வரையப்பட்டன.
18. திறப்பு
19. உயிரின் ஆரம்பம்

* வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

* ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 222 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) காமுகன் (4) முதுகு (7) தகடு (8) தலைவிதி (9) கடுக்கன் (11) காடை (12) வம்பு (14) காய்ச்சல் (16) தரி (17) சகலமும் (19) மருகன் (21) வன் (22) துள்ளி (23) என்பும்

### மேலிருந்து கீழ்

(1) காதகன் (2) முகடு (3) கடுக்காய் (4) முலை (5) துவிதம் (6) குதி (8) தன் (10) கடை (12) வல்லவன் (13) புடம் (14) காரிருள் (15) சக (16) தமது (18) முன்பு (20) களி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ் சாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 224**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 01.08.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.224இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 05.08.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 222 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**ப.நாகேஸ்வரி,**
'நிதா கோகுலம்', கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

**2 ஆம் பரிசு**
**து.கிருஷ்ணானந்தலிங்கம்,**
இல.16/9, பொலிஸ் நிலைய வீதி, சாவகச்சேரி.

**3 ஆம் பரிசு**
**கே.இராஜகோபால்,**
அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

**4 ஆம் பரிசு**
**செல்வன்.பா.யதீசன்,**
தரம்-7, யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
**சு. சிறிஸ்கந்தராசா,**
குச்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

**பாராட்டுப் பெறுவோர்**

**செல்வி.சி.சாம்பகி,**
டிப்போ அருகு ஒழுங்கை, பருத்தித்துறை.

**தி.செல்வராணி,**
இல.121/B, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

**எஸ்.ஜெயராஜா,**
'தெய்வநிழல்' உடுவில் தெற்கு, சுன்னாகம்.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபாலமூலம் அனுப்பிவைக்கப்படும்.*

# வழிகாட்டுகிறது இந்து மதம்

இந்து சமயம்-இறைவனாலேயே தோற்றம் பெற்றது. மனித நாகரிகம் தோற்றம் பெற்ற இந்திய தீபகற்பத்தில் பலர் இறை தேடலுக்குள் ஈர்க்கப்பட்டார்கள். இறை தேடலுக்கூடாக இறை வெளிப்படுத்தப்பட்டவர்கள் ரிஷிகள் எனப்பட்டனர். அத்தகைய இறை வெளிப்படுத்தல்களால் தொகுக்கப்பட்டவையே உபநிடதங்களும், வேதங்களுமாகும். இந்த உபநிடதங்கள் வேதங்களை அடியொற்றித் தோற்றம் பெற்ற ஆச்சார வாழ்க்கைமுறை இந்து சமயம் எனப் பெயர் பெற்றது.

இந்து சமயம் காலத்தால் அநாதியானது - வரலாற்றுக் காலங்களுக்கு முற்பட்டிருந்தே இறை வெளிப்படுத்தல்கள் ரிஷிகளின் ஊடாக அறிவிக்கப்பட்டதால் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்திலிருந்து மனிதரால் இந்து சமயம் உருவாக்கப்படவில்லை. எனவே இது காலத்தால் முந்தியதாகக் காணப்படுகின்றது.

இந்து சமயத்தின் தர்மம்- இறை நீதியே- இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட வாழ்வுக்கான நீதியையே இந்து சமயம் தனது தர்மமாக, அறமாகக் கொண்டுள்ளது. இறை நீதியே எந்தக் காலத்துக்கும் ஏற்புடையதாய், அனைத்து மக்களும் கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான மறையாகவும் விளங்குகின்றது. இதனாலேயே எந்தக் காலத்துக்கும் பொதுவாக தொன்று தொட்டு வருவது என்ற கருத்துப்படி இது 'சனாதன தர்மம்' என அழைக்கப்படுகின்றது.

இந்து சமயம்-இறை அவதாரங்களால் காக்கப்பட்டு வழிநடத்தப்படுகின்றது. இந்து சமயத்தின் மிக முக்கிய அம்சமாக அமைவது இறை அவதாரங்களாகும். காலாதி காலமாக இந்து சமயத்தில் ஏற்படும் இந்த அவதாரத் தொடர் நிகழ்வுகள், இந்து சமய மக்களை இறை பாதையில் வழிநடத்துகின்றன. அத்துடன் இறை பக்தர்களாகிய ஞானிகள், யோகிகளை வழி நடத்தி உத்வேகம் அழிக்கின்றது. இதனால் மக்கள் இறை பயணத்தின் நேரிய பாதையில் வாழ்வை அமைத்துக் கொள்ள முடிகின்றது. இந்த இறைபாதையில் மக்கள் பயணிப்பதால் உலக, ஆன்மீக வாழ்வுக்கு இறை அனுகூலங்கள் கிடைக்கப் பெறுகின்றன. இறை வாக்குக்கு அமைய தற்காலத்திலும் தொடரும் இறை அவதாரங்கள் இந்து சமயத்தின் உயிர்தன்மையைப் பேணி வருகின்றன.

இந்து சமயத்தில்- இறைமக்கள் இறை வழிகாட்டல்களையும், இறை உந்துதலையும் பல மக்கள் பெறுகின்றனர். இதற்கூடாகத் தமது வாழ்வைப் பயணித்து இறைமக்கள் (ஞானிகள், முக்தர்கள்) ஆகின்றனர். மனிதத் தன்மையின் உன்னத நிலையை இவர்கள் அடைகின்றனர். இறைவனை அடைந்தவர்களாகிய இவர்கள் தமது பிறவியின் உச்ச நிலையை அடைந்து விடுகின்றனர். இந்து சமயம் இறை அவதாரங்களால் உயிர்தன்மையுடன் வழிநடத்தப்படுவதால் சாதாரண மக்கள் சரியான வழி நிலையைக் கைக்கொண்டு இறைமக்களாகும் (முத்தியடைந்தோர்) சந்தர்ப்பம் பெறுகின்றனர். இதுவே இந்து சமயத்தில் வாழ்வதால் ஏற்படும் முக்கிய.பயனுள்ள அனுகூலமாகும்.

உலகியல் வாழ்வை செம்மை படுத்துகின்றது - இறைவனை அடைதலுக்கான மார்க்கத்துடன், மக்களின் உலகியல் வாழ்வுக்கும் வழிகாட்டுகின்றது சனாதன தர்மம் எமது உலகியல் வாழ்க்கைப் பாதையைத் தெளிவுபடுத்தித் தந்துள்ளது. இறை நீதியாகிய சனாதன தர்மத்தை வாழ்வு ரீதியாகக் கொள்ளும் இந்து சமய மக்கள் இறை அருள் பெற்று அமைதியான ஆனந்த வாழ்வு கிடைக்கப்பெறுகின்றனர். பாவம் நீங்கிய வாழ்வு கைவரப் பெறுகின்றது.

நவீன அறிவியலுக்கு வழிகாட்டுகின்றது - பிரபஞ்சம் சார்ந்த இறை ஞானங்களும், இந்து சமயத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. காலாதி காலமாகப் பிரபஞ்ச உண்மையைக் கண்டறிந்த வரலாற்றில் இந்து சமயம் முன்னணி பெற்று நின்று வருவதற்கு இதுவே காரணமாகும். இந்து சமய இறை வெளிப்படுதல்களை இன்றைய விஞ்ஞான உலகு உறுதிப்படுத்தி வருகின்றது. மேலும் தமது பிரபஞ்ச அறிவு விருத்திக்கு வேத உபநிடதங்களில் தேடுதல் நிகழ்த்துகின்றது. நடராஜ வடிவத்தின் உண்மை விளக்கத்தை அணு விஞ்ஞானிகள் கண்டுணர்ந்து, தமது ஆராய்ச்சிகளை அதையொட்டி நடத்துகின்றனர். விஞ்ஞானம் தேடும் பிரபஞ்சத்தின் மூலவடிவத்துக்கு இந்து சமயத்தின் 'பிரமம், 'சிவம்' என்பன வழிகாட்டி நிற்கின்றன.

காலங்கடந்த, எல்லையற்ற பிரபஞ்ச ரகசியம் - அண்டசராசர பிரபஞ்சத்தின் இருப்பு நிலை அறிவுக்கும் வேத உபநிடதம் வழிகாட்டுகின்றது. சார்பு வேக கோட்பாடுகளும், அதையும் தாண்டிய ஒளிபற்றிய விஞ்ஞான தேடல்களும் வேத உபநிடதங்களுக்குள் நிகழ்கின்றன.

இறை வெளிப்படுத்தல்களால் கட்டமைத்துச் செயற்படும் இந்து சமயம் விஞ்ஞான பூர்வமான காரண காரியங்களுக்கு வழிகாட்டி தனிமனித வாழ்வையும், உலகியல் தேடலையும் நெறிப்படுத்திச் செல்கின்றது.


மருத்துவர் இ.சிவசங்கர், இந்து மகாசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ பாண்டியம்மா

# காக்கப்பட வேண்டிய கருக்கள்





பெண்கள் "தாய்மை" எனும் உயர்ந்த நிலையை அடையும்போது குடும்பத்தால் மட்டுமல்லாது , சமூகத்தாலும் ஒரு படி உயர்வானவளாகவே கருதப்படுவாள். அந்தளவுக்குத் தாய்மையின் மகத்துவம் போற்றப்படுகிறது.

கர்ப்பத்தின் பின் பெண்ணானவள் இன்னொரு ஜென்மம் எடுக்கிறாள் என்பதே தாய்மையின் புனிதத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

ஓர் உயிரின் பரிணாமமாக தனது குழந்தையைப் பெற்றெடுத்த பெண் உடல்ரீதியாக வேதனைப்பட்டாலும், தனது வயிற்றில் சுமந்த கரு குழந்தை வடிவில் வெளிவந்து தன்னைப் பார்த்துச் சிரிக்கும் போது அவளது வேதனைகள் யாவும் பஞ்சாய்ப் பறந்து விடும்.

இறைவன் படைத்த அற்புதப் படைப்புகளில் ''தாய்மை'' என்பதே பெண்களின் உயர்வைப் பறைசாற்றுவதாக உள்ளது. ஒவ்வொரு உயிரினதும் படைப்புகளில் தாய்மை என்பதே ஆரம்பமான ஒன்றாக உள்ளது.

இத்தகைய அரும்பெரும் படைப்பை உலகுக்கு தந்து கொண்டிருக்கும் தாயானவள்

வைத்தியசாலையில் பிரசவத்தின்போது இறப்பதும், பிரசவத்தின் போது குழந்தை இறப்பதும் என கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். இந்த நிலையில் இடம்பெறும் இத்தகைய மரணங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பெண் கர்ப்பமுற்ற பின்னர் மருத்துவ ரீதியாக அவளுக்கு தகுந்த ஆலோசனைகளும் உரிய சிகிச்சை முறைகளும் வழங்கப்படவேண்டியது மருத்துவத்துறையின் கடமை.

சாதாரண மனிதனை விட கர்ப்பகாலத்தில் பெண்கள் இன்னொரு உயிரையும் வயிற்றில் சுமப்பதால் அவளுக்கான மருத்துவத்தேவை இரட்டிப்பானதாகவே இருக்கும்.

**ஓர் உயிரின் பரிணாமமாக தனது குழந்தையைப் பெற்றெடுத்த பெண் உடல் ரீதியாக வேதனைப்பட்டாலும், தனது வயிற்றில் சுமந்த கரு குழந்தை வடிவில் வெளிவந்து தனைப் பார்த்துச் சிரிக்கும் போது அவளது வேதனைகள் யாவும் பஞ்சாய்ப் பறந்து விடும்.**

இந்த நிலையில் கர்ப்பகாலத்தில் பெண்களின் தாய் சேய் நலன் தொடர்பில் உரிய சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான ஆலோசனைகளும் உரிய காலத்தில் வழங்கப்பட வேண்டியது அவசியம்.

பிரசவத்துக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்படும் தாய்மார்கள் அதிக இரத்தப் போக்குக் காரணமாக உயிரிழந்து விடும் சம்பவங்கள் தற்போது அதிகரித்தே வருகின்றன. இதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மருத்துவர்களின் கடமையல்லவா?

பிரசவ வலியில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் இன்னொரு உயிருடன் வீடு வருவாள் என எதிர்பார்த்த குடும்பத்தாருக்கு ஒரு சில மருத்துவர்களின் அசமந்தப் போக்கான செயற்பாடு வேதனை தரக் கூடியதாக அமைந்து விடுகின்றன.

கர்ப்பகாலத்தில் ஒவ்வொரு மாதமும் குடும்ப நல மாதுகள் தத்தமது பிரிவுகளில் சிகிச்சைகளை வழங்கிவரும் நிலையில் கர்ப்பிணிப் பெண்களில் உடல் ரீதியாக எற்படும் மாற்றங்கள் , அறிகுறிகள் தொடர்பாக கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும்.

இதுவே அவர்களுக்கான பணியாகவும் உள்ளது. தாம் இனம் காணமுடியாத மாற்றங்களை வைத்தியரிடம் சென்று அறிந்து கொள்ளுமாறு வழி காட்டவேண்டும்.

கர்ப்ப காலத்தில் குறித்த பெண் தான் மட்டுமல்லாது இன்னொரு உயிருடன் இருக்கும் போது தனது உடலில் ஏற்படும் மாற்றங்களை மருத்துவர் ஒருவர் கூறும் போதே அவளால் உணர முடியும். இது படித்த அல்லது பாமர பெண்கள் என அனைவருக்கும் பொருந்தக்கூடிய ஒன்றே.

பெண்களின் கர்ப்பகாலத்தில் உரிய சிகிச்சை முறைகளைக் கையாண்டு பிரசவத்தின் பின் தாயையும் , குழந்தையும் நலமாக ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு வைத்தியர்களிடமே உள்ளது.

ஆரம்ப காலங்களில் பெண்கள் வீடுகளில் குழந்தைகளைப் பெற்று இன்றும் ஆரோக்கியமானவர்களாக இருக்கிறார்கள். இந்தநிலையில் மருத்துவத் துறையில் சாதனைகள் படைக்கப்பட்டு மருத்துவம் வளர்ச்சியடைந்து வருகின்ற நிலையில் தாய், சேய் இறப்புகள் அதிகரித்து வருவது வேதனைதரக்கூடிய ஒன்றாகவே உள்ளது.

தனியார் மருத்துவமனைகளை விட அரச வைத்தியசாலைகள் மீது பொதுமக்கள் நம்பிக்கை வைத்துள்ள நிலையில், தொடர்ச்சியாக இடம்பெறும் இத்தகைய சம்பவங்களால் அரச வைத்திய சாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கத் தயக்கம் காட்டவேண்டிய நிலையையே மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் .

பிரசவத்தின்போது இரு உயிர்கள் உயிருக்காகப் போராடும் நிலையில் அவர்களைக் காக்க வேண்டிய உச்சக்கட்ட செயற்பாடு அவசியம். துறைசார் நிபுணர்களால் மட்டுமே இது முடியும்.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்த வரையில் மருத்துவத் துறைக்குப் போதியளவு ஆளணி இல்லாத நிலைமையும் காணப்படுகிறது. இதுவேதனைதரும் ஒருவிடயமாகும்.

உள்நாட்டில் மருத்துவத் துறையை பூர்த்திசெய்வோர் சொந்த மண்ணில் கடமையாற்றாது வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுகின்றனர். இதனால் பெத்த மண் வேதனையடைகிறது.

---

■ அருவி

# அப்பா வருவாரா?



கைதுகள், காணாமல் போதல்கள், போரின்போது காணாமல் போதல்கள், கண்ணுக்கு முன்னே அழைத்துச் செல்லப்படுதல் என காணாமல் போனவர்கள் பற்றி இடைக்கிடை குரல்கள் ஒலிக்கும். பின் அவை ஓய்ந்து இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும். அவர்களது நம்பிக்கையில் விழுந்த பலவீனம் போலவே, அந்தக்குரல்களிலும் இப்போது வயோதிபத்தின் பலவீனத்தைதான் காணமுடிகின்றது.

அவர்கள் இப்போது, தங்கள் தொண்டைத் தண்ணி வற்ற வற்ற, கத்திக் கத்தியே களைத்துப் போனார்கள். ஆனால் அவர்களின் குரல்களையோ, உணர்வுகளையோ மதித்தவர்கள் தான் யார்? அவர்களின் கேள்விகளுக்கு பதில் சொன்னவர்கள்தான் யார்....? காலங்கள்தான் கடந்து போனதே தவிர விடை தெரியாது இன்னும் 'காணாமல் போனவர்களின் பெற்றோர்' என்ற முத்திரையோடு மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த ஜீவன்கள் ஒருபுறமிருக்க, இப்போது எழுந்திருக்கிறது புதிய குரல்கள்.

'அப்பா வருவாரா....?

பதில் சொல்லத்தெரியாது தவிக்கும் தாய்மார்கள் கண்ணீரைப் பதிலாக்கிக் கொள்கிறார்கள். எத்தனை நாளைக்குத்தான் பிள்ளைகளிடம் உண்மையை மறைக்க முடியும். 'அப்பா வருவார், வருவார்' என்று பிள்ளைகள்தான் எத்தனை காலத்துக்கு நம்பப் போகிறார்கள்.

இன்றைய குழந்தைகளின், பிள்ளைகளின் அறிவுத்திறன் என்பது வித்தியாசமானது. எல்லாவற்றையுமே கூர்ந்து அவதானிக்கும் நுண்ணறிவு அவர்களிடம் மேலோங்கிக் காணப்படுகிறது. அதனால் அவர்கள் எல்லாவற்றையுமே துருவித் துருவிக் கேட்பார்கள்.

பாடசாலைகளில் பொதுவாகவே பிள்ளைகள் ஒன்று சேரும்போது ''நான் இண்டைக்கு அப்பாவோட தான் வந்தனான்' இந்தமுறை எங்கட கோயில் திருவிழாவுக்கு அப்பாவும் நானும் ஒரே மாதிரி வேட்டி கட்டிக் கொண்டுதான் போனனாங்கள்''

''ஸ்கூல் லீவுக்கு அப்பாவோட ஆறுக்குப் போகப்போறன்...''

பேச்சுவழக்கில் இப்படியான நிறையக் கதைகள் நாளாந்தம் பிள்ளைகளுக்குள்ளே பரிமாறப்படும். எல்லாவற்றையும் கேட்டுக் கிரகித்துக் கொள்ளும் பிள்ளை, வீட்டுக்கு வந்து கேட்கும் முதல்கேள்வி,

'அம்மா, அப்பா வருவாரா......?

'எங்கட கிளாசில விதுசனுக்கு மட்டும்தான் இப்ப அப்பா செத்துப் போயிற்றார்; மிச்ச எல்லாருக்குமே அப்பா இருக்கு, இரண்டு பேற்ற அப்பா வெளிநாட்டில..... ஆனா..... என்ர அப்பா மட்டும் எப்பதான் வரப்போறார்... எங்கதான் இருக்கிறார்.... சொல்லுங்கம்மா... ப்பிளீஸ்......

இப்படி நாளாந்தம் கேள்விக் கணைகளைத் தொடுக்கும் பிள்ளைகளின் மனசின் வலியை, உளவியல் ரீதியாக அவர்கள் எதிர்கொள்ளும் தாக்கத்தை உணரப் போகிறவர்கள்தான் யார்......?

அண்மையில் ஒரு பாடசாலை ஒன்றின் பரிசளிப்பு விழாவுக்கு நான் சென்றிருந்தேன். எனக்கருகில் ஒரு 35 வயது மதிக்கத்தக்க ஒரு தாய் அமர்ந்திருந்தார். நெற்றியிலே குங்குமப் பொட்டு, கழுத்திலே தாலி, என இலட்சணமாய் இலட்சுமிகரமாய்த் தெரிந்தார் அவர். அவரது கதையிலிருந்து அவரது இரண்டு பிள்ளைகள் இங்கு படிப்பதையும், அவர்கள் பரிசில்கள் பெற இருப்பதையும் நான் புரிந்து கொண்டேன்.

''மூத்த மகனுக்கு 10 வயசு; இந்த வருடம் 'கொலசிப் எழுதப் போறான். நல்ல கெட்டிக்காரன். மகள் இப்பதான் மூன்றாம் வகுப்புப் படிக்கிறா; அவளும் நல்லாப் படிப்பாள்....'' என்ற அந்தப் பெண் இடையே ஒரு பெருமூச்சை உதிர்த்தாள். அவளுக்கும் அந்தப் பெருமூச்சுக்கும் சம்பந்தமே இல்லாதது போல் எனக்குத் தெரிந்தது. இந்தப் பெண்ணுக்குள்ளும் சோகம் இருக்குமா..? என்று எண்ணத் தோன்றியது எனக்கு,

'மகள் பிறந்ததே அவருக்குத் தெரியாது..... மகனுக்கு அப்பாவ நல்லாத் தெரியும்.... அவனுக்கு அப்பவே எல்லாத்துக்கும் அப்பா தான் வேணும்...'' அவர் நிறுத்திக் கொள்ள.....

''அப்பா.... எந்த நாட்டில இருக்கிறார்...'' நானும் என் பங்குக்கு கதை கேட்டேன் ''அவர் வெளிநாட்டில இல்ல... 'கிட்டத்தட்ட எட்டு வருடமாகுது இரவுபோல மகன் சாப்பிடேல்லை எண்டு நான் சோறு ஊட்ட அவர்தான் நிலாவைக்காட்டி அவனைச்சாப்பிட வைச்சுக்கொண்டு இருந்தவர். அப்பதான் திடீரென்று ஒரு வெள்ள வான் வந்து நிண்டிச்சு. அதில இருந்து ஒரு நாலுபேர் இறங்கி வந்திச்சினம். உடுப்புக்கூட மாற்றவிடாம, இப்ப திரும்பி வந்திடலாம் ஒருக்கா தங்களோட வந்துவிட்டு போகும்படி ஒற்றைக் காலில நின்றார்கள்.

நான் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினன். ஆனால் எந்தப் பயனும் இருக்கவில்லை. கடைசியா பிள்ளையை என்னிட்டத் தரேக்க ஒரேயொரு வார்த்தை மட்டும்தான் பேசினார். ''என்னபாடு பட்டாலும் பிள்ளையைப் படிப்பிச்சுவிடு'..... அண்டைக்குப் போனவர்தான் இன்று வரை அவர் திரும்பி வரவே இல்லை.

எத்தினை கடிதங்கள், எத்தினை ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் எல்லாத்துக்கும் போய்ப்போய் நான் களைச்சுப்போயிற்றன்...''

''நான் பிள்ளைகளுக்கு எதையுமே மறைக்கேல்ல, அப்பாவ இவைதான் கூட்டிப் போனவ.... அப்பாவ இன்னும் விடேல்ல என்ற உண்மையைச் சொல்லிப் போட்டன். ஆனா அதுவே பெரும் ஆபத்தில வந்திடுமோ எண்டு பயமா இருக்கு.''

அண்டைக்கு என்ர மகனும் மகளுமாச் சேர்ந்து ரோட்டால ஆமிக்காரன் போக, கல்லால தூக்கி எறிஞ்சு போட்டினம்.....எறிஞ்சதும் பத்தாம 'அப்பாவக் கொண்டு வந்து தாங்கடா' எண்டு அவங்களுக்கு பேச்சும் நடக்குது. அவங்களுக்கு என்ன விளங்கிச்சுதோ தெரியேல்ல. கோபமா முறைச்சுக் கொண்டு நிண்டார்கள். பிறகு நான் ஓடிப் போய் நாய்க்குத்தான் கல்லெறிஞ்சவை; அது உங்களுக்கு பட்டிட்டுது எண்டு சமாளிக்க வேண்டி இருந்திச்சு.....'' கதை சொன்னபோது அவரது முகத்தில் சோகத்தின் ரேகைகள் இளையோடிக் காணப்பட்டன.

இது இந்தத் தாய்க்கு மட்டும் உள்ள பிரச்சினையல்ல... எங்கள் மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல தாய்மார்கள் இன்று எதிர்நோக்கிக்கொண்டு இருக்கின்ற பிரச்சினை.

தந்தையரின் வரவுக்காய் ஆவலோடு காத்திருக்கும் இந்தப் பிஞ்சுகளுக்கு கிடைக்கப்போவது தான் என்ன....?

அவர்கள் எப்போதுமே குழந்தைகளாக இருக்கப்போவதில்லை. சின்ன வயதிலிருந்தே அப்பா இல்லாமல் வளரும் அவர்களின் வலியும், சோதனையும் அவர்களுக்குள் கொழுந்து விட்டெரியும் அப்பா பற்றிய ஆசைகள், கனவுகள், ஏக்கங்கள் இவை எல்லாம் சேர்ந்து என்ன நடக்கப்போகின்றது என்ற அச்சமே பல தாய்மார்களின் கவலையாக இருக்கிறது.

இந்தக் குஞ்சுகளின் தவிப்பைப் புரிந்து, அவர்களின் தந்தையர்களை அவர்களோடு சேர்த்து விட, அல்லது உண்மை நிலைகளை சொல்லிட யாருளரோ பராபரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையாற்றல் கொண்ட நடிகர் நாடகப்பேரொளி ச.இராசதுரை

■வயாவிளான் தவமைந்தன்

சுருதி, லயம் பிசகாமல் நுட்பமான இசைவளம் கொண்ட பாடல்களைப் பாடி, தெள்ளு தமிழ் வசனங்களைப் பேசி, பாத்திரத்துக்கு ஏற்ப வேடம் புனைந்து நடிக்கும் நாடகங்களை இசைநாடகம் என்று அழைக்கின்றோம். புராண, இதிகாச வரலாறுகளே இசைநாடகத்தின் கருப்பொருள்களாக அமைந்து விடுவதால் பொதுமக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குப் பெற்ற கலைவடிவமாக இந்த ஆற்றுகை புகழ்பெற்றுள்ளது.


தமிழ் சினிமாவின் தோற்றத்துக்கு முன்னைய காலத்தில் ஆலயங்களிலும் பொதுக் கலை விழாக்களிலும் தமிழர்களின் உயர் இரசனைக்குரிய கலைவடிவமாக இசைநாடகங்கள் விளங்கியதைக் கடந்த கால வரலாறுகளின் ஊடாக அறிய முடிகின்றது. இதனால் இசைநாடகக் கலைஞர்களும் சமூகத்தில் நன்மதிப்புப் பெற்றவர்களாகப் போற்றப்பட்டனர்.

இவ்வாறான இசைநாடகக் கலையை உயிராக நேசித்து அக்கலையை வளர்த்தெடுத்த பெருங் கலைஞராகவும் எல்லா விதமான இசைநாடகங்களிலும் கதா பாத்திரமேற்றுப் பலநூற்றுக் கணக்கான மேடைகள் கண்ட அனுபவம் கொண்ட மூத்த நடிகராகவும் ஏராளமான ஆற்றுகைத் திறன் கொண்ட கலைஞர்களை உருவாக்கிய ஆசானாகவும் கடந்த பல தசாப்தங்களாக நாடகப் பணியாற்றி வருபவர் நடிப்பிசைச் சக்கரவர்த்தி ச.இராசதுரை.

மறைந்த சந்திரசேகரம் - நாகமுத்து தம்பதியரின் மகனாக 12.04.1916இல் மாதனையில் இவர் பிறந்தார். மாதனை மெ.த.க.பாடசாலையில் கல்வி கற்றார். தனது கிராமத்தில் நடைபெற்று வந்த காத்தவராயன் கூத்து, இசைநாடகம் போன்ற கலை நிகழ்வுகளால் கவரப்பட்டுத் தனது சிறு வயதில் இருந்தே இசையிலும் நாடகத்திலும் ஈடுபட்டு வந்தார். இவரது தந்தையார் சிறந்த நாடகக் கலைஞராக இருந்தமையால் தடைகள் ஏதுமின்றி உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் கலைத் துறையில் ஈடுபட்டு வந்தார்.

சுருதி, லயம் சற்றும் பிசகாமல் இனிமையுடனும் உணர்வுடனும் பாடல்களைப் பாடும் திறன் கொண்டிருந்த இவர் 1942இல் தமிழகம் சென்று மகாலிங்கம், மதுரை சோமு போன்றோரிடம் குரலிசையைக் கற்றார். இக்காலத்தில் தமிழகத்தின் ஆலயங்களிலும் இசைக் கச்சேரிகளை நிகழ்த்தியதுடன் ஈழத்திலும் இசையரங்குகளைச் சிறப்புடன் வழங்கி வந்தார்.

கனதியான குரல் வளமும் நுட்பமான இசையறிவும் கொண்டிருந்த இவர் இலங்கை வானொலியில் இசைக் கச்சேரிகளை நிகழ்த்தி வந்ததுடன் ஈழத்தின் பல பாகங்களிலும் தனது இசை ஆற்றுகைகளை மக்கள் இரசிக்கும் வண்ணம் வழங்கி வந்தார். திறன் கொண்ட இசையாளர் எனப் பெயர் பெற்று வந்த போதும் 1932 ஆம் ஆண்டிலிருந்து இசைநாடகத் துறையிலேயே அதிகமாக ஈடுபடத் தொடங்கினார்.



சாதனைக் கலைஞரைச்
சந்திப்போம் சிந்திப்போம்
53

யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னணிக் கலைக் கிராமங்களுள் ஒன்றான மாதனையில் இளைஞர்களும் கலை ஆர்வலர்களும் ஒன்றிணைந்து 1962இல் மாதனைக் கலாமன்றத்தை உருவாக்கிய போது அதன் செயற்பாடுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். இந்தக் கலாமன்றத்தின் தயாரிப்பில் மேடையேற்றப்பட்ட ஏராளமான இசை நாடகங்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்துப் புகழ் பெற்றதுடன் புதிது புதிதாக இசைநாடகங்களை மேடையேற்றுவதிலும் ஆர்வத்துடன் செயற்பட்டு வந்தார்.

மாதனைக் கலாமன்றத்தின் பிரமாண்டமான தயாரிப்பாக அக்காலத்தில் நாநூறு தடவைகளுக்கும் மேல் மேடையேறிய அரிச்சந்திர மயான காண்டத்தில் அரிச்சந்திரனாக நடித்துப் புகழ் பெற்ற இவர் தவத்திரு சங்கரதாசு சுவாமிகளின் அனைத்து விதமான நாடகங்களையும் நடிக்கும் பேராற்றல் கொண்டவராகவும் அவற்றை இளையோருக்குப் பயிற்றுவிக்கும் நற்பண்பு கொண்ட பொறுமை மிக்கவராகவும் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வந்துள்ளார்.

தோடி, பைரவி, காம்போதி, அடானா, பேகட, முகாரி போன்ற நுட்பமான இராகங்களை அவற்றின் பண்பு கெடாமல் பாடவல்ல இவர் இசைநாடகத்தின் தனித்தன்மையை நிலைநிறுத்திய நடிகராகவும் இத்துறையில் சாதனை படைத்த பெரும் கலைஞர்களான மாதனை மகாலிங்கம், நா.நவரத்தினம், ந.சிவசுப்பிரமணியம், நா.கணபதிப்பிள்ளை (சின்னமணி) போன்றோரின் ஆசான்களுள் ஒருவராகவும் திகழ்கிறார்.

ஒலிவாங்கி இல்லாத அந்தக் காலத்தில் நான் இசைநாடகங்களில் நடித்திருக்கிறேன். நாடகத்தைப் பார்க்க வந்திருக்கும் அனைவருக்கும் பாடல்களும் வசனங்களும் கேட்க வேண்டும் என்பதற்காக நான்கரைக் கட்டை சுருதியிலேயே அனைவரும் பாடி நடிப்போம். உச்ச சுருதியில் பாட முடியாதவர்களை அக்காலத்தில் நாடகங்களில் எவரும் சேர்த்துக் கொள்வதில்லை.

நாடக ஒத்திகைகளும் மாதக் கணக்கில் தான் நடைபெறும். இதனால் நாடகம் மேடையேறும் செய்தியானது எமது ஊரையும் தாண்டி அயல் கிராமங்களுக்கும் சென்று விடும். இதன் காரணத்தால் பெருந்திரளான மக்கள் கூட்டம் நாடக மேடையேற்றத்தின் போது மேடையின் முன்னே திரண்டு விடும். கணீரென்ற குரலெடுத்துப் பாடியவாறு மேடையில் தோன்றும் போது கடைசி வரிசையில் இருக்கும் இரசிகன் ஒருவன் எழுந்து நின்று வன்ஸ் மோர் கேட்ட அந்தக் காலத்தை எப்படி மறக்க முடியும்.

சுருதி, லயக் கட்டுப்பாட்டுடன் பாடி நடிக்கக் கூடியவர்களே இசைநாடகத்துறையில் அந்தக் காலத்தில் ஈடுபட்டதால் பாமரர், படித்தவர் என அனைத்து நிலையினரும் எமது நாடகங்களுக்கு மதிப்புக் கொடுத்தனர். பாடசாலைகளின் வளர்ச்சி நிதிக்காக எமது இசைநாடகங்கள் மேடையேற்றப்பட்ட வரலாறுகளும் நிறையவே உண்டு.

ஆனால் தற்காலத்தில் இசைநாடகக் கலையானது வளர்ச்சியற்றுக் காணப்படுகின்றமையும் இசையின் தராதரம் கவனிக்கப்படாமல் நடிகர்களைத் தெரிவு செய்வதும் ஒத்திகைகளே இல்லாமல் நாடகங்களை மேடையேற்றுவதும் கவலை தருவனவாகவே உள்ளன. இசைச் செழுமையும் நடிப்பிற்கான வரன்முறைகளும் கொண்ட இசைநாடகங்களை மக்கள் விரும்பும் வண்ணம் மேடையேற்றத் தற்காலத்து இளையோரும் முதுகலைஞர்களும் முன்வர வேண்டும் என்கிறார் இந்தப் பெருங் கலைஞர்.

தொண்ணூற்றாறு வயதிலும் தனது எண்பது ஆண்டுகாலக் கலைத்துறை நினைவுகளைப் பசுமையுடன் பகிர்ந்தளித்து இப்பொழுதும் நடிப்பேன் என்னும் நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் வாழ்ந்து வரும் இக்கலைஞர் பாழடைந்த குடிசையொன்றில் தனிமையில் தனது முதுமையைக் கழித்து வருகின்றமை பெரும் வேதனைக்குரியதே.

---

# மூட்டுவாத நோவுக்குச் சிறந்தது நொச்சி

நலம் தரும் தெய்வீக மூலிகைகள்

**நொச்சி**
**வேறுபெயர்:-** நிர்க்குண்டி, சிந்துவாரம்
**தாவரவியற்பெயர்-** Vitex negundo
(விற்றெக்ஸ் நிகண்டோ)
**குடும்பம்-** Verbenaceae (வேபினேசியே)
**சிங்களப் பெயர்:-** நிக்க
**சமஸ்கிருதப் பெயர்-** நிர்குண்டி

நொச்சியில் கருநொச்சி, வெண்ணொச்சி, நீர்நொச்சி, பொன்னொச்சி என்ற பேதங்களுண்டு. நீர் நொச்சி [காட்டு நொச்சி] பொதுவாகக் குளக் கரைகள், நீர்நிலைகளை அடுத்துக் காணப்படும். கருநொச்சி சிறு செடி. தனி இலைகள். தண்டும், இலைகளும் கருமையாக இருக்கும்.

நொச்சி சிறு மரவகுப்புக்குரியது. நன்கு கிளைத்த தண்டு அங்கையுருவான கூட்டிலைகள். சிற்றிலைகள் முட்டையுருவானவை நுனி கூர்மையானது.

**நாள்பட்ட மூட்டு வாத நோவுக்கு**

கருநொச்சியிலைகளையும் இளந்தளிர்களையும் துவைத்து சிறிது சூடு காட்டி மூட்டுக்கு வைத்துக் கட்டிவர வலி தணிவடையும்.

**கால் எரிவுக்கு**

வெண்ணொச்சியிலையை ஒரு துணியில் பொட்டலமாகக் கட்டி சூடு காட்டி ஒத்தடம் கொடுத்துவர மாறும். வெண்ணொச்சியிலையை நீர்விட்டரைத்து அந்த நீரால் குளிப்பதுடன் அவிந்த இலைகளால் உடம்பு, கால்களைத் தேய்த்துக் குளித்து வரவும் மாறும்.



**மூட்டுவாத வீக்கங்களுக்கு**

வெண்ணொச்சியிலையை ஒரு மண்சட்டியிலிட்டு இலைகளைச் சூடாக்கி மூட்டுவாத வீக்கங்களுக்கு கட்டிவர வீக்கம் வற்றும். வேதனையும் குறையும்.

**பீனிசத்துக்கு**

வெண்ணொச்சியிலையை நீர்விட்டவித்து வேது பிடிப்பதால் பீனிசம், மூக்கடைப்பு என்பன மாறும்.

**தலைவலிக்கு**

நொச்சித்துளிர், வேர்க் கொம்பு, சமன் எடுத்து அரைத்து நெற்றியில் பற்றுப்போட தலை வலி தணிவடையும். நொச்சியிலையைத் தலையணையாக வைத்துப் படுத்தாலும் தாங்க முடியாத தலைவலி தணியும்.

**ஆசனக்கடுப்புக்கு**

நொச்சிக் கொழுந்து, வேர்க்கொம்புத்தூள் இரண்டையும் சேர்த்தரைத்து சீனி, பசு நெய்யில் குழைத்துச் சாப்பிட்டு வர நீங்கும்.



Dr.சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

## 22.07.2012 முதல் 28.07.2012 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- பாதகமான விடயங்கள் கூட சாதகமாகும். முக்கிய பணிகள், அரசு சம்பந்தப்பட்ட பணிகள் போன்றவற்றை சற்று நிதானத்துடன் மேற்கொள்ளுதல் நல்லது. செலவுகள் கூடுதலாகவே இருக்கும். கடன்கள் குறையும். புதிய கடன் முயற்சிகள் வெற்றி பெறும். தொழில், சொத்து சம்பந்தப்பட்ட வகையில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்வீர்கள். குழப்பம், சோர்வுகள் ஏற்பட்டு விலகும்.பெரியவர்களது ஆலோசனையும், தக்க சமயத்தில் உறவினர்களது ஒத்துழைப்பும் கிடைக்கும். தொழில் வகையில் வளர்ச்சிக்கான வழி கிடைக்கப்பெறுவீர்கள்.தொழிலாளர்களுக்கு, பொறுப்புணர்ந்து செயற்படுதல் நல்லது. கலைஞர்களுக்கு, விட்டுப் போன வாய்ப்புகளும் மீண்டும் கிடைக்கப்பெறுவீர்கள்.

**இடபம்**- மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். பல பணிகளையும் எளிதாகச் செய்து முடிக்கலாம். வில்லங்க விவகாரங்களில் அமைதியாகச் செயற்படுவதன் மூலம், நட்டங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். மற்றவர்களுக்காக, ஏதாவது சுபகாரிய விஷயமாக, அலைச்சல் அல்லது பண உதவிகள் செய்ய வேண்டியது வரும். அயலில் உள்ளவர்களால் அன்பும், ஆதரவும் கிடைக்கும். பெற்றோர் வகையில் எந்த குறையும் இருக்காது. சகோதர வகையில் ஆதரவு இருக்கும். கூட்டுத் தொழிலில் புதிய முயற்சியை யோசித்துச் செய்யவும். கலைஞர்களுக்கு சக கலைஞர்களின் மத்தியில் மதிப்பு மரியாதை கூட பெறுவீர்கள்.

**மிதுனம்** - தன்னம்பிக்கை அதிகரிக்கும். ஒரு பக்கம் வருமானத்தை கூடுதலாக்க முயற்சிகள், மற்றொரு பக்கம் செலவுகளைக் குறைக்க என்னவழி என்று சிந்தித்துச் செயற்படுவீர்கள். புதிய தொடர்புகளில் கூடுதல் கவனம் தேவை. குழந்தைகள் வகையில் உயர்வு இருக்கும். எதிர்ப்பு, போட்டிகள் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும். தொழில் வகையில், புதிய முயற்சிகள் வெற்றியடையும். தொழிலதிபர்களுக்கு அதிகப்படியான முதலீடும் அதற்கேற்ற லாபமும் உண்டு. உத்தியோகத்தர்களுக்கு, எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**கடகம்**- தொழில் துறையில், மறைமுக இடையூறுகள் நீங்கும். எதிர்பார்த்த பணவரவுகள் தாமதப்பட்டபோதும், செலவுகளை மேற்கொள்ளுவதில் சிரமம் இருக்காது. குடும்பத்தில் இல்லறத் துணையின் செயற்பாடுகள் யோசிக்க வைத்தபோதும் கோபத்தையோ, வெறுப்பையோ வெளிப்படுத்த முடியாத சூழ்நிலையே. உறவினர்களால் போதிய உதவியும், பக்கபலமும் ஏற்படும். சுயதொழில் அல்லது தனிப்பட்ட வியாபாரம் இவற்றை சிலர் துவங்கக் கூடும். பெற்றோர், சகோதர வகையினரால் செலவுகள் இருந்தாலும் அனுசரணையாக இருப்பர்.

**சிங்கம்** -உத்தியோகத்தில் விரும்பிய மாற்றங்களைச் செய்து கொள்ள முடியும். இருப்பினும், சில வகையில் கவலைகள் தவிர்க்க முடியாத தாக இருக்கும். உடல்நிலையில் பூரண நலம் பெறுவீர்கள். உடன் பிறப்புகளிடம் இருந்து வந்த சச்சரவுகள், கருத்து வேறுபாடு தீர்ந்து ஒற்றுமையாவார்கள். சிந்தனைகள், ஆலோசனைகள், தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். செய்தொழில், வியாபாரம் சீராகவே இருக்கும். கூட்டுத் தொழில் முயற்சியில் இருந்து வந்த தடை, தாமதம் நீங்கி அதில் வெற்றி காண்பீர்கள். உத்தியோகத் துறையில் சங்கடங்கள் நிகழாது.

**கன்னி**- நீங்கள் சம்பந்தமில்லாமல், சில விவகாரங்களால் சிரமப்பட நேரிடலாம். இருப்பினும் நிதானமான செயற்பாடு தொந்தரவுகளைத் தவிர்க்கும். நிதி நிர்வாகத்தில் சிற்சில மாற்றங்களை ஏற்படுத்துவீர்கள். பணியாளர்களின் ஒத்துழைப்பும், உற்பத்தியும் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு மனநிறைவான சூழ்நிலை ஏற்படும். மாற்றங்கள் பற்றிய சிந்தனை அதிகமாகும். சில சந்திப்புகளை பயனுள்ளதாக்கிக் கொள்வீர்கள். அலைச்சல் அதிகமாகும். சில காரியங்களை முடிக்க முடியாமல் விரக்தி ஏற்படும். உற்சாகம் அதிகரிக்கும். பணவரவு ஏற்படும். கடினம் என்று எண்ணிய காரியம் எளிதாகும்.

**துலாம்**- உங்களின் தவறுகளை வெளிப்படுத்தாமல் கொண்டு செல்லும். திட்டம் போட்டபடி நடக்கவில்லை என்றால், அது நன்மைக்கே என்று எண்ணிக் கொள்ளவும். புதிய தொழில் மற்றும் வியாபாரம் இவற்றை சிலர் ஆரம்பிக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில் கவனமாக நடந்து கொள்ள வேண்டியிருக்கும். உறவினர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். உத்தியோகத்தர்களுக்கு, மேலதிகாரிகளின் அன்பும், ஆதரவும் உங்களுக்கு நல்ல முறையில் கைகொடுப்பதாக இருக்கும்.

**விருச்சிகம்**-எதிர்பாராத மாற்றம், அலைச்சல், புதிய அறிமுகங்கள் என்று இருக்கும். பல்வேறு பிரச்சினைகளுக்கு இனிமையான முடிவு ஏற்படும். எதிர்பார்க்கும் இடத்திலிருந்து, நல்ல செய்திகள் கிடைக்கும். பண வரவுகள் சேமிப்புக்கு இல்லாவிட்டாலும் முக்கியமான காரிய செலவுகளுக்கு கிடைத்து வரும். வெளியாரின் உதவி சமயத்தில் கிடைக்கும். உற்றார், உறவினர் உங்கள் மீது குற்றம் சாட்டிக் கொண்டே இருப்பார்கள். பெற்றோர் வகையில் ஆலோசனைகள் கிடைக்கும். அன்னியர்களால் சிற்சில நன்மைகளை அடைவீர்கள். புதிய தொழில் முயற்சிகள் கொஞ்சம் பலன் கொடுக்கும். உத்தியோகத்தர்களுக்கு, சுமாரான வாரம். நீண்ட நாள் குறைகள் தீரும்.

**தனுசு** - முக்கிய அவசரப்பட்ட, உணர்ச்சிவசப்பட்ட முடிவுகளை தவிர்த்துக் கொள்ளுங்கள். முயற்சிகளை நல்லபடி செய்து வெற்றி காணலாம். பணவரவுகள் தேவைக்கு மேல் கிடைக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். பெற்றோரால் மருத்துவச் செலவுகள் இருக்கும். சகோதர வகையில் சச்சரவுகள், கருத்து வேறுபாடுகள் இருக்கும். தொழிலதிபர்களுக்கு எதிலும் விழிப்புடன் செயற்படுவது நலம். வியாபாரிகளுக்கு ஏற்ற, இறக்கமாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு நன்மைகள் கூடுதலாகும்.எதிர்ப்புகள் விலகும். திட்டமிட்ட பணிகள் கூடுதல் வெற்றி தரும்.


**மகரம்**-நிதானமான நடவடிக்கைகளால், எல்லா விவகாரங்களையும் எளிதாக முடிப்பீர்கள். கடன் தொல்லை கொடுக்காது. வழக்கு விவகாரங்களில் இப்போது வெற்றிகள் கிடைக்கும். குழந்தைகள் வழியில் கவனம் செலுத்தப்பட வேண்டும். எதிர்ப்புகள் ஏற்படும். ஸ்திர சொத்துக்களைப் பராமரிப்பதற்கான செலவுகள் கூடுதலாக இருக்கும். உத்தியோகத்துறையில் சங்கடங்கள் ஏற்படலாம். வெளிதேச முயற்சிகளும், கூட்டுத் தொழில் முயற்சிகளும் இப்போதைக்கு வேண்டாம்.உத்திராடத்தில் பிறந்தவர்களுக்கு, வேகத்தை விட விவேகம் வெற்றிக்கு உறுதுணையாக நிற்கும்.

**கும்பம்** - பல்வேறான சிந்தனைகள், திட்டங்கள் என உங்கள் மனதில் உலாவரும். இருப்பினும் எல்லாம் உங்கள் மனதளவிலே இருக்கும். தைரியமாக எடுக்கும், எந்த முடிவும் அற்புதமான பலனைத் தரும். தெய்வ வழிபாடுகளால் சிறப்பு ஏற்படும். பெற்றோர் வகையில் சிறிதளவாகச் செலவும், அலைச்சலும் இருக்கும். சகோதர வகையில் ஆதரவு குறைந்து அவர்களால் சச்சரவுகள் ஏற்படும். குடும்ப வகையில் சந்தோஷக் குறைவும், சங்கடங்கள் அதிகரித்துக் காணப்படுவதால், எதற்கும் விட்டுக் கொடுத்துப்போக வேண்டும். வேலைவாய்ப்புகள் உண்டாகும். பூர்வீகசொத்துக்கள் கிடைக்க நேரிடலாம்.

**மீனம்**-வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும். மேற்படிப்புக்காகவோ அல்லது வேறு விடயமாகவோ வெளிநாடு செல்ல முயற்சித்தால், அந்த முயற்சி வெற்றியடையும். வெற்றியும், பணலாபமும் இருக்கும். முக்கியமாக பெண்கள் மூலம் சில உதவிகளை நீங்கள் பெறக்கூடும். திடீர் பணவரவுகள் உங்களை உற்சாகப்படுத்தும். தொழில் துறையில் முன்னேற்றம் காண்பீர்கள். பெற்றோர் வகையில் இருந்து வந்த துன்பங்கள் தீர்ந்து, மகிழ்ச்சி ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு எடுத்துக் கொண்ட பணிகளில் பொறுப்புடன் செயல்படுங்கள்.பூரட்டாதியில் பிறந்தவர்களுக்கு, கடன்கள் குறையும்.

# ஒளிவட்டங்களை இழக்கும் விம்பங்கள்

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)



அந்தத் தூபத்துக்குள் தன்னை மறந்த அஜித் அடுத்த படத்தில் வன்முறை இன்னும் அதிகமாக இருந்தால் வசூலும், விசிலும் அதிகமாகும் என்று தன்னுடைய சூத்திரத்தின் அடிப்படையில் கணிப்பிட்டிருந்தார்.

அதன் விளைவுதான் ‘பில்லா 2’. ஏற்கனவே 80 களில் ரஜினிகாந் நடித்த பில்லாவின் மறுபதிப்பாக அஜித்குமார் 2008ஆம் ஆண்டு பில்லா என்ற படத்தில் நடித்திருந்தார். அது வணிக ரீதியில் வெற்றியைக் குவித்திருந்தது. எனவே அதன் அடுத்த பாகத்தை, பில்லா என்பவன் எவ்வாறு உருவானான்? என்பதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கினார்கள். எந்தவொரு படத்திலும் இல்லாத அளவுக்கு யதார்த்தத்தைத் தூக்கி குப்பைத் தொட்டியில் கடாசிவிட்டு,லீற்றர் கணக்கில் குருதியை மட்டுமே படம் முழுதும் நிரப்பியிருக்கிறார்.

படத்தில் பில்லாவும், அவனது நண்பனும் தவிர்ந்த எல்லோரும் பில்லாவாலோ அல்லது எதிராளிகளாலோ கொல்லப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் எப்போது கொல்லப்படுவார்கள் என்பது மட்டுமே ரகசியம்

“யார் சுட்டாலும் துப்பாக்கி சுடும்” என்று ஒரு வணிகரீதியான படத்தில் வருகின்ற வசனத்தைக் கூட பில்லா பொருட்படுத்தவில்லை. இங்கே பில்லாவின் துப்பாக்கி மட்டுமே சுடுகிறது. உயிர்களைப் பறிக்கிறது. மற்றவர்களது துப்பாக்கிகள் மாங்காய்களை மட்டுமே வீழ்த்துகின்றன. எப்போதுமே எவராலுமே வெல்லப்பட முடியாத பில்லா, இந்தியாவில் கத்திக்குத்து வாங்கிய மறுகணமே ரஷ்யாவில் உள்ள எதிரியின் ஆயுதத் தொழிற்சாலைக்குள் புகுந்து அவர்களை வதம் செய்யும் அதிசயம் முதல்முறையாக இந்தப்படத்தில் நிகழ்ந்திருக்கிறது.

படம் ஆரம்பித்தது முதல் இறுதி வரை பார்வையாளன் தனது காதுகளில் லீற்றர் கணக்கில் சுற்றப்படும் பூவை தாங்கித்தான் ஆக வேண்டும். ஆனாலும் அந்த ரசிகன் வெளியே வந்து எட்டி உதைக்கும்போது தன்னுடைய வணிகக் கோட்டை சரிந்து போவதை அஜித் என்ற விம்பம் உணர்ந்திருக்கும். இதுபோலவே இன்னமும் வன்முறையை நம்பியிருக்கும் நடிக விம்பங்களுக்கு பில்லா ஒரு படம் மட்டுமல்ல; பாடம். ★

# சம்பூர்; சாம்பலின் பூமியா?

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

காற்றுடன் கூடிய மழை பெய்தாலோ, சூறாவளி போன்ற பேரனர்த்தம் ஏற்பட்டாலோ இவர்களின் நிலை மிகவும் பரிதாபம். கிழக்கின் உதயம் திட்டத்தின் கீழ் அபிவிருத்திகளை மேற்கொண்டு, மக்களுக்குரிய அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொடுத்துள்ளோம் என்று சர்வதேசத்துக்கு தம்பட்டம் அடிக்கும் அரசு, சம்பூர் மக்களின் பிரச்சினைகளில் பாராமுகமாகவே செயற்பட்டு வருகின்றது. அவர்களுக்கு துன்பத்தை ஏற்படுத்துகிறதே தவிர, எந்தவொரு சாதகமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

எனவே சம்பூர் மக்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நோக்காது அவர்களும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் அவர்களும் இத்திருநாட்டின் குழந்தைகள் என நினைத்து அவர்களையும் சொந்த இடத்தில் குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பட்டினியால் வாடும் மக்களை பிச்சை எடுக்கும் நிலைக்குக் கொண்டு செல்லாது, அவர்கள் தங்களது வாழ்க்கையை மூன்று நேரம் அல்லது இரண்டு நேரமாவது உணவு உண்டு அவர்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தி அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவர்களின் ஜீவனோபாயத்துக்கு வழியேற்படுத்திக் கொடுத்து ஆறு வருட இருள் சூழ்ந்த முகாம் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து சம்பூர் மக்களின் வாழ்க்கைக்கு அரசு வசந்தத்தை ஏற்படுத்திக் கொடுக்குமா? உலர் உணவு நிவாரணத்தை வழங்க வேண்டும். ஆறு வருட அகதி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து, தமது வாழ்வில் ஒளி வீச அரசு நடவடிக்கை எடுக்குமா? என்பதே சம்பூர் மக்களின் இன்றைய ஏக்கம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஆனதி

# வெறுமை சூழ்ந்து கொண்டது

**17**

**இறுதி நாள்களும் எனது பயணமும்**

யாரும் எதுவும் சொல்லவில்லை. அறிந்தவர்கள் தெரிந்தவர்களை கண்டபோதும்கூட புன்னகைக்கத் தோன்றவில்லை. ஆளாளுக்கு அமைதியாக இருந்தார்கள். எல்லோரும் தத்தமது குடும்பங்களையோ அல்லது உறவுகளையோ அல்லது உறவுகளைப் போன்றவர்களையோ எல்லோரையும் இழந்துவிட்டு தனியே கிடக்கிறோமே என்ற தனிமை உணர்வால் எல்லோரது முகங்களும் இருண்டுகிடந்தன.

அடுத்த நிமிடம் என்ன நடக்கும் என்பது எவருக்கும் தெரியாது. ஆண்களும் பெண்களுமாய் ஒரே இடத்தில் எத்தனை நேரம்தான் குந்திக் கொண்டிருப்பது. ஆளையாள் முகத்தைப் பார்த்து அருண்டு போவதைவிட அவ்விடத்தைவிட்டு எழுந்துசென்றுவிட விரும்பினேன். யாரையும் எதுவும் கேட்காமல் எழுந்து வெட்டைவெளியில் தன்னந்தனியே நடந்துசென்றன எனது கால்கள்.

பதிவு நடக்கின்ற இடத்தருகே சென்று ஒரு கேடர் தூணில் சாய்ந்துகொண்டு நின்றேன். எவ்வளவு நேரந்தான் அப்படியே நிற்கமுடியும்? என் இடுப்பளவுக்கு உயர்ந்திருந்த அந்த மேடையில் ஏறுவது எனக்கு கடினமாக இருந்ததால் மிகநீண்டநேரத்திற்கு அவ்விடத்திலேயே நின்றேன்.

வெளியே வெய்யில் அகோரமாய் எரித்துக் கொண்டிருந்தது. அந்த வெய்யிலை பார்க்க கண்கள் கூசின. அந்த உயரமான மேடையில் வரிசை வரிசையாக பதிவதற்காக இருந்த முன்னைநாள் போராளிகள் அனைவரும் ஊத்தையாய் தெரிந்தார்கள். அத்தனை பேரிலும் அப்பியிருந்த ஊத்தையைப்போலவே வெறுமையும் வேதனையும் விரக்தியும்கூட அப்பித்தான் கிடந்தன.

ஆளையாள் பார்த்தாலும் எதுவும் பேசாமல் மிகநீண்ட அமைதி காத்தார்கள். சிலர்தான் தெரிந்தவர்களைப் பார்த்து மெதுவாய் சிரித்தபடி தலையசைத்தார்கள். அந்தச் சிரிப்பிலும் சோகம்தான் வழிந்தது. அடுத்த நிமிடத்தைப் பற்றித் தெரியாத குழப்பத்தில் அனைவரும் மனசுக்குள் கலவரப்பட்டதால் முகங்களில் இறுக்கம் தெரிந்தது.

உயரமாக அமைந்திருந்த அந்தக் கட்டடத்தின் நிழல்படிந்த வெளியில் நாலைந்து பேர் அமர்ந்திருந்தார்கள். அதில் ஒரு தெருப்பிச்சைக்காரனைப்போல இருந்தவனை என் கண்கள் கண்டவுடன் மனது பொங்கிக்கொண்டு வந்தது. குமுறிக் கொண்டு கிளம்பிய அழுகையை என்னால் அடக்க முடியவில்லை.

நான் போராட்ட காலங்களில் மிகவும் மதித்து நடந்த அண்ணன் ஒருவன் தன் பொய்க்காலை நீட்டிக்கொண்டு ஊத்தை உடையோடு கட்டாந்தரையில் இருந்தான். அவன் அப்படி இருக்க வேண்டியவனல்ல. எத்தனையோ பேரின் உயிர்களைக் காப்பாற்றிய மருத்துவன். அவனும் என்னை கண்டதும் தலையை நிலத்திற்குக் குனிந்துகொண்டான். வழியும் விழிகளோடும் வெடிக்கும் இதயங்களோடும் அடிக்கடி நாங்கள் பார்த்துக் கொண்டோம்.

இப்போது ஏதாவது கதைக்காவிட்டால் அவனிடம் இனி எப்போதுமே கதைக்க முடியாமல் போய்விடவும் வாய்ப்பிருக்கிறது. அதனால் அவனெதிரில் சென்று அமர்ந்தேன். கட்டுப்படுத்த இயலாத கண்ணீர் என் கண்களிலிருந்து தாரை தாரையாக வழிந்தது. என் மதிப்பிற்கும் அன்பிற்குமுரித்தான அண்ணனோ எதுவும் சொல்லாமல் அமைதி காத்தான்.

எனக்கு ஏதாவது சொல்லுங்கண்ணா. என்னால எதையுமே தாங்கிக்கொள்ள முடியேல்ல. இனி என்ன நடக்குமோ தெரியேல்ல. என்ன நடந்தாலும் சகித்துக்கொள்ளணுமா? அல்லது சாகணுமா? என்னண்ணா செய்யணும்? என்றழுதேன்.

நானாகப் புலம்பி, நானாக அழுது, நானாக ஓயும்வரைக்கும் காத்திருந்த அவர் தன்னிடமிருந்த காலையுணவுக்காக வந்த கடலைப் பொதியொன்றை என்னிடம் நீட்டினார்.

சாப்பிடுங்க தங்கச்சி என்ற அவரது வார்த்தையை நம்பமுடியாதவளாய் அவரை நிமிர்ந்து பார்த்தேன்.

தண்ணி வேணுமா? ம் குடியுங்க தங்கச்சி என்றபடி தன்னருகிலிருந்த குறைப் போத்தில் தண்ணீரையும் என்னெதிரே வைத்தார். நான் மீண்டும் ஒருமுறை அழுது ஓய்ந்தேன்.

இனி அழுது பிரயோசனமில்லம்மா. பாப்பம். இங்கயும் சிலர் மனுசங்களா தெரியிறாங்கள். அதால சமாளிக்கலாம் போலதான் இருக்கு. என்னய கூட்டிக் கொண்டுபோய் கதைச்சாங்கள். எதுக்காக நீ இயக்கத்துக்கு போனநீ எண்டு கேட்டாங்கள். நான் எதுக்காக போனனோ அதே காரணத்தைத்தான் சொன்னன். என்ர ஒன்பது பத்து வயசில என்ர கண்ணுக்குமுன்னால நடந்த படுகொலைகளைச் சொன்னன். நான் அதில இருந்து தப்புறதுக்காகவும் அப்படியான படுகொலைகளை விரும்பாமலும்தான் போனனான். அரசுதான் என்னை ஆயுதம் தூக்கவைச்சது அதுவும் பதினொரு வயசில. என்ர கதையைச் சொன்னன். விளக்கத்தை அவன் ஏற்றுக்கொண்டான். உண்மையில ஏற்றுக்கொண்டானா அல்லது ஏற்றுக்கொண்ட மாதிரி நடிச்சானா தெரியேல்ல. ஆனா என்ர பக்கம் இருந்த நியாயத்தைச் சொன்னன். இப்பவும் சொல்றன் எப்பவும் அதைத்தான் சொல்லுவன். என்றவர் என்னைக் கூர்மையாகப் பார்த்தார்.

சாப்பிடாமல் எத்தின நாளைக்கு கிடக்கமுடியும்? சாப்பிடாமல் கிடந்தால் நிதானமா சிந்திக்கவும் முடியாது. அதால சாப்பிடுறது கட்டாயம் என்றதை மறந்திடாதிங்க என்று அறிவுறுத்தினார் அண்ணன்.

கண்களைத் துடைத்துக்கொண்டு கிளம்பிய என்னிடம், யாரும் என்ன கதைச்சிங்கள் எண்டு கேட்டால் வீட்டாக்களை காணேல்ல அதான் விசாரிச்சன் எண்டு சொல்லுங்க என்று முணுமுணுத்தார். சரி என்று தலையாட்டிவிட்டு அண்ணன் தந்த கடலையை மட்டும் எடுத்துக்கொண்டு மீண்டும் மேடையருகிலேயே வந்து நின்றுகொண்டேன்.

நீண்டநேரம் அழுத காரணமாக எனக்கு தலைச்சுற்றியது. அப்படியே மேடையில் சாய்ந்துகொண்டு கொஞ்ச நேரத்தை சமாளித்துவிட்டு பின்னால் சென்றேன். மேடைக்கு அப்புறமாக அடுத்த பதிவுக்குத் தயாராக இருந்தவர்களில் ஏற்கெனவே தெரிந்தவள் ஒருத்தி ஓடிவந்து என் கையைப் பிடித்து தன்னுடன் அழைத்துச்சென்றாள்.

அவள் சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்குமுன்பு போராட்டத்தில் இரண்டாண்டுகள் இருந்தவள். எனினும் கடைசி நாள்களில் அவள் வீட்டிலேயே வாழ்ந்தவள் என்பதால் இங்கே பதிவுக்காக வந்திருக்கத் தேவையில்லை என்று எண்ணிக் கொண்டேன். அவள் என்னைத் தனது பையை வைத்திருந்த நிழலான இடத்துக்கு அழைத்துச்சென்று இருக்கச் சொன்னாள்.

நான் எதுவுமே பேசாமல் நிலத்தில் படுத்துவிட்டேன். என்னைப்போல பலர் அங்கே நிலத்தில் சுருண்டு கிடந்தார்கள். அதனால் யாரும் அதற்காக தண்டிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் கண்களை மூடிக்கொண்டேன்.

காலையில் அறிவிப்புச் செய்து உறவுகளிடமிருந்து எங்களைத் தனியே வடித்தெடுத்த அறிவிப்பாளன் அங்கு அடிக்கடி வந்துபோனான். அவனது பார்வையிலிருந்த நடையில் திடம் அதிகமிருந்தது. அதனை விட முகத்தில் கோபம் கொப்பளிப்பதும் தெரிந்தது. அவன் யார்? யார்? என்று உள்மனது கேட்ட கேள்விக்கு நான் யாரிடமும் கேட்காமலேயே பதில்கள் கிடைத்தன.

அவன் சில ஆண்டுகள் புலனாய்வுத் துறையில் இருந்தவனாம். படையினரால் உள்ளே அனுப்பப்பட்டு போராட்டத்துக்குள் நுழைந்த உளவாளியாம். போராட்டத்துக்கு எதிரான உவாளியாக உள்ளே வந்தாலும்கூட அந்தப் போராட்டம் தோற்றுப் போனதை அவனால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லையாம். அதனால் அவன் போராளிகளில் கோபமாய் நடந்துகொள்கிறானாம்.

உச்சி வெய்யில் கிறுகிறுக்க வைக்க நிலத்தில் சுருண்டுவிட்டேன். அன்றைய பொழுது எங்களின் பெயர்களைப் பதிவு செய்யாமலேயே விட்டுவிட்டு போய்விட்டது. அதனால் அன்றைய இரவும் அங்கேயே கிடக்கவேண்டியவர்களானோம். பதிந்தவர்களில் கொஞ்சப்பேரை வந்த பேருந்துகள் ஏற்றிச்சென்றுவிட்டன. இதே பேருந்துகள் நாளைக்கும் வரும் என்று பேசிக்கொண்டார்கள்.

இரவான பின்பு தெரிந்தவர்களைப் பிடித்துக்கொண்டு மலசலகூடத்துக்கும் கிணற்றடிக்கும் சென்றுவந்தேன். நன்றாக முகம் கழுவிக்கொண்டு வந்தாலும் குளித்தே தீரவேண்டும் போன்றிருந்த உணர்வால் நடுச்சாமத்தில் எழுந்து குளிக்கப்போனவர்களுடன் கிணற்றடிக்குச் சென்றேன். அச்சமாய் இருந்தாலும் ஆங்காங்கு நின்ற அனைவருமே எங்களது போராளிகள்தான் என்ற தெம்புடன் சென்றோம். கிணற்றடிக்கு அப்பாலிருந்த வேலிப்பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த காவல் படையினன் சத்தமிட்டான்.


யாரு? கிணத்தில யாரு?

நாங்கதான் தண்ணி அள்ளுறம்

என்ன தண்ணி? உடன போங்க. போங்க. போங்க. என்று கர்ச்சித்தான்.

போறம் சேர் என்று சத்தமாக பதில் சொல்லிவிட்டு நிழலாக இருந்த இடத்தில் நின்று தண்ணீரை அள்ளி மேலில் ஊற்றிக்கொண்டோம். நாலைந்துபேர் நிற்கின்ற துணிவில் மாறிமாறி தண்ணீரை அள்ளி ஊற்றி உடலை கழுவிக்கொண்டு ஓட்டமும் நடையுமாய் வந்துசேர்ந்தோம். விடிந்துவிட்டால் குளிக்க முடியாது.

அத்தனை நேரமும் கிணற்றடி அமளிப்படும். ஏனெனில் அத்தனையாயிரம் பேரும் [illegible] ஒரேயொரு கிணற்றைத் தான் பயன்படுத்த வேண்டியிருந்தது. ஆண்களுக்கு ஒரு பக்கம் பெண்களுக்கு ஒரு பக்கம் என்று இடம் பிடித்துக்கொண்டார்கள். ஆளாளுக்கு போத்தில்களை கட்டி தண்ணீரை அள்ளி முகங்களைக் கழுவிக் கொண்டாலும் உடுத்த உடையோடே குளித்தவர்களால் கிணற்றடி அமளிதுமளிப்பட்டுக்கொண்டிருக்கும்.



ஆளையாள் மாறிமாறி திட்டிக் கொண்டும் ஏசிக்கொண்டும் கெஞ்சிக்கொண்டும் இருக்கும் அந்தக்கிணற்றடியில் நீண்டநேரம் நிற்கமுடியாது. அவ்வளவு சத்தமும் சந்தடியுமாக இருக்கும். அதனால் அந்த படையினன் ஓயாமல் சத்தமிட்டுக்கொண்டேயிருந்தாலும் எங்களைப் போன்ற பெண்கள் மறைப்பில் தண்ணீரை அள்ளிவைத்து குளித்துக்கொண்டேதான் இருந்தார்கள்.

ஆளுக்காள் தண்ணீரை அள்ளிக்கொடுப்பதன்மூலம் அவனது பார்வையில் அகப்படாமல் தப்பிக்கொண்டாலும் குளிக்கும் தண்ணீர் சத்தம் கேட்டால் அவன் பயங்கரமாய் சத்தமிடுவான்.

அன்றைய நாள்களில் உதவி நிறுவனங்கள் பலவும் எங்களுக்கான பொருள் உதவிகளைத் தாராளமாகச் செய்தன. உணவும் குடிதண்ணீரும் தாராளமாகக் கிடைத்தன. ஆனால் எங்களது மனங்களுக்கத் தேவையான ஆறுதல் அங்கே மருந்துக்கும் கிடைக்கவில்லை. அந்தத் தேவையை மட்டும் யாரும் புரிந்துகொண்டவர்களாய் தெரியவில்லை. ஆளாளுக்கு பதிந்துவிட்டு வந்து படுக்கையில் முடங்கிகொண்டார்கள்.

வவுனியாவின் எல்லாப் பாடசாலைகளும் தடுப்புமுகாம்களாக நிறைந்துவிட்டதால் இனிமேல் அழைத்துப்போக இடமில்லையாம். எங்களுக்கென இடம் ஒதுக்கும்வரைக்கும் ஓமந்தையிலேயே இருக்கட்டுமாம் என்று கட்டளை கிடைத்தது.

அதே கட்டளை மூன்று நாள்கள் எங்களை அதே இடத்தில் கட்டிவைத்திருந்தது.


உணவும் நீரும் வழங்கப்பட்ட கைதிகளான நாங்கள் எங்களுக்கான பேருந்துகள் வரும்வரைக்கும் அடுத்த நகர்தலுக்காக காத்திருக்க வேண்டியவர்களானோம். அந்தக் காத்திருப்பு எதிர்காலம் பற்றிய அச்சத்தையும், நிரந்தரமின்மையையும், நம்பிக்கையீனத்தையும், பாதுகாப்பின்மையையும், விலைமதிப்பற்றவர்களாகிவிட்ட வெறுமையையும், அவமானத்தையும் தாராளமாக ஏற்படுத்தியது.

அந்த வெறுமை சோர்ந்துவிழவைக்க கண்களை மூடிக்கொண்டு தரையில் சரிந்துவிட்டோம். அந்த உறக்கம் மிகநீண்ட உறக்கமாய் இலகுவில் விழித்தெழ முடியாத உறக்கமாய் எங்களை ஆட்கொண்டது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவும் சிறப்பான ஆரம்பம்



இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆட்ட முடிவின் போது ஆட்டம் இரு அணிகளுக்கும் சமநிலையான வாய்ப்புக்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

3 இலக்குகளை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாவது நாள் ஆட்டத்தை நேற்றுமுன்தினம் தொடர்ந்த இங்கிலாந்து அணி 385 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. இரண்டாம் நாளின் ஆரம்பத்திலேயே அலஸ்ரெயர் குக்கை இழந்த இங்கிலாந்து அணி அதன் பின்னர் தொடர்ச்சியாக இலக்குகளை இழந்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக அலஸ்ரெயர் குக் 115 ஓட்டங்களையும், ஜொனதன் ரொட் 71 ஓட்டங்களையும், மட் பிரயர் 60 ஓட்டங்களையும், கெவின் பீற்றர்சன் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மோர்னி மோக்கல் 72 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், ஜக்ஸ் கலிஸ் 38 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஸ்ரெய்ன் 99 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், பிலாந்தர், இம்ரான் தஹிர் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

அதன் பின்னர் தனது முதலாவது இனிங்ஸை ஆட ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் இரண்டாம்நாள் முடிவில் ஒரு இலக்கை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முதலாவது இலக்கை அணி ஓர் ஓட்டத்தைப் பெற்றிருந்த போதே இழந்த போதிலும் கிரேம் ஸ்மித்தும், ஹசிம் அம்லாவும் சிறப்பாக ஆடினர்.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஹசிம் அம்லா ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும், கிரேம் ஸ்மித் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அண்டர்சன் ஒரு இலக்கை வீழ்த்தினார். (5)

# பங்களாதேஷ் திரில் வெற்றி

ஐரோப்பாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணிக்கும், அயர்லாந்து அணிக்கும் இடையிலான இரண்டாவது 'ரி-20' சர்வதேச ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி ஓர் ஓட்டத்தால் வெற்றிபெற்றுள்ளது.

பெல்பாஸ்ட்டில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 பந்து பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. சிறப்பான ஆரம்பம் கிடைக்கப் பெறாத போதிலும், அந்த அணியின் மத்தியவரிசை வீரர்கள் சிறப்பாக ஆடினர்.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக நசீர் ஹொசைன் 33 பந்துகளில் 50 ஓட்டங்களையும், மொஹமட் அஷ்ரபுல் 46 பந்துகளில் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மக் சொரென்சென் 2 இலக்குகளையும், ட்ரென்ட் ஜோன்சன், அலெக்ஸ் கியூசக், கெவின் ஓ பிரையன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

147 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 20 பந்து பரிமாற்றங்களில் 145 ஓட்டங்களை மாத்திரம் பெற்று ஓர் ஓட்டத்தால் தோல்வியடைந்தது. ஓரளவு சிறந்த ஆரம்பத்தைப் பெற்றுக் கொண்ட அவ்வணி, இறுதி நேரத்தில் தங்கள் வாய்ப்புக்களை இழந்தது.

துடுப்பாட்டத்தில் அயர்லாந்து அணி சார்பாக எட் ஜொய்ஸ் 44 பந்துகளில் 41 ஓட்டங்களையும், கரி வில்சன் 27 பந்துகளில் 37 ஓட்டங்களையும், போல் ஸ்ரேர்லிங் 20 பந்துகளில் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சன்னி 18 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், மஹமதுல்லா 28 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், அப்துர் ரஷாக் 30 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக நசீர் ஹொசைன் தெரிவானதோடு 3 ஆட்டங்கள் கொண்ட தொடரை பங்களாதேஷ் அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. (5)

# இளைய வீரர்களின் வாய்ப்பை வீணடிக்கக் கூடாது



இளைய வேகப்பந்து வீச்சாளர்களுக்கு அவர்களை நிரூபிப்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். அதே வாய்ப்புக்கள் பெற்றுக் கொண்டுள்ள அனுபவ பந்து வீச்சாளர்கள் அவர்களுடைய வாய்ப்புக்களை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் என்று பாகிஸ்தானின் முன்னாள் அணித்தலைவரும், முன்னாள் பயிற்றுவிப்பாளரும், தற்போதைய நேர்முக வர்ணனையாளருமான வக்கார் யுனிஸ் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் போதுமானளவு வேகப்பந்து வீச்சுத் திறமை காணப்படுவதாகத் தெரிவித்த வக்கார் யுனிஸ், தங்களை நிரூபிப்பதற்கான வாய்ப்புக்கள் அவர்களுக்கு வழங்கப்படாமல் போகக்கூடாது எனத் தெரிவித்தார். அத்தோடு எல்லா இளைய வீரர்களுக்கும் போதிய வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தர்.

இலங்கை போன்ற பலமான துடுப்பாட்ட வரிசைக்கெதிராக இளைய வேகப்பந்து வீச்சாளரான ஜுனைட் கான் சிறப்பாகப் பந்துவீசியமை மிகுந்த சிறப்பான ஒன்று எனத் தெரிவித்த அவர், உமர் குல், மொஹமட் சமி போன்ற அனுபவ வேகப்பந்து வீச்சாளர்கள் இலங்கையில் சிறப்பாகச் செயற்படாத போதிலும் ஜுனைட் கான் சிறப்பாகப் பந்துவீசியமைக்கான காரணம் அவர் சரியான இடங்களில் பந்து வீசியமையாகும் எனத் தெரிவித்தார். ஜுனைட் கான் மிகச்சிறந்த திறமையுள்ள வீரர் எனத் தெரிவித்த வக்கார் யுனிஸ், அவர் சரியாகப் பராமரிக்கப்பட்டால் மிகச்சிறந்த வீரராக வலம் வருவார் எனத் தெரிவித்தார்.

இளைய வீரர்களுக்கு ஊக்கத்தை வழங்கிய வக்கார் யுனிஸ், மொஹமட் சமி போன்ற வீரர்களுக்கு எச்சரிக்கையையும் வழங்கினார். ஏராளமான இளைய வேகப்பந்து வீச்சாளர்கள் வாய்ப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கும்போது சமி போன்றவர்களுக்குத் தொடர்ச்சியான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (5)

# ஒலிம்பிக்குக்காக ரக்ஸியும் ஹோட்டலாக மாற்றம்



பிரிட்டனில் ஒலிம்பிக் போட்டியை காண வரும் மக்களுக்காக, சாரதியொருவர் தனது 'ரக்ஸியை' 'ஹோட்டலாக' மாற்றியுள்ளார். பிரிட்டன் தலைநகர் லண்டனில் ஜூலை 27 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 12 ஆம் திகதி வரை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ளன.

இந்த விளையாட்டுப் போட்டிகள் நடக்கும் பகுதியில் 'ரக்ஸிகளுக்கு' அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால், தங்களுக்கு போதிய சவாரி கிடைக்காது, என்று 'ரக்ஸி' சாரதிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர். ஆனால், டேவிட் வீக்ஸ் என்ற 'ரக்ஸி' சாரதி, ஒலிம்பிக்போட்டியை காணவரும் ரசிகர்கள் 'ஹோட்டலில்' தங்குவதற்கு அறையில்லாமல் தவித்தால் தனது 'ரக்ஸி'யில் படுத்துறங்க வழி செய்துள்ளார். இதற்காகபோர்வைகளும், ஒரு ஆள் படுக்கக்கூடிய அளவுக்கு சிறிய கட்டிலையும் ஏற்பாடு செய்துள்ளார். இதற்காக ஒரு நாளைக்கு ரூ. 4,500 வசூலிக்க முடிவு செய்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்காலம் பாதுகாப்பாக உள்ளது

பாகிஸ்தான் அணியின் டெஸ்ட் எதிர்காலம் பாதுகாப்பாக உள்ளதாக பாகிஸ்தான் அணியின் டெஸ்ட், ஒரு நாள் சர்வதேச தொடருக்கான அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் தெரிவித்தார். இலங்கைக்கெதிரான டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் 1-0 என்ற கணக்கில் தோல்வியுற்ற போதிலும் இளைய வீரர்களின் எழுச்சியில் நம்பிக்கை தெரிவதாக அவர் தெரிவித்தார்.

ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரிலும், டெஸ்ட் தொடரிலும் தோல்வியடைந்தமை வருத்தம் தருவதாகத் தெரிவித்த மிஸ்பா உல் ஹக், ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரைத் தாங்கள் வெற்றிகொண்டிருக்கலாம் எனவும், எனினும் இறுதி 2 ஆட்டங்களிலும் பாகிஸ்தானின் களத்தடுப்பு மோசமாக அமைந்ததாகத் தெரிவித்தார்.

டெஸ்ட் தோல்வியும் கவலை தரக்கூடியது எனத் தெரிவித்த மிஸ்பா உல் ஹக், ஆனால் இளைய வீரர்களாக அஷார் அலி, அசத் சபீக், ஜுனைட் கான் போன்றோரின் திறமை வெளிப்பாடுகள் உற்சாகமளிப்பதாகவும், பாகிஸ்தானின் டெஸ்ட் எதிர்காலம் பாதுகாப்பாகக் காணப்படுவதை உணர்த்துவதாகவும் தெரிவித்தார். கடினமான சூழ்நிலைகளில் இந்த இளைய வீரர்கள் பாகிஸ்தானுக்காகப் பிரகாசித்துள்ளார்கள் எனத் தெரிவித்த அவர், பல்லேகல ஆட்டத்தில், காயமடைந்த விரலுடன் அட்னன் அக்மல் துடுப்பெடுத்தாடியமை மிகுந்த சிறப்பான ஒன்று எனத் தெரிவித்தார்.

அஷார் அலி ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் சிறப்பாக ஆடியதுடன், டெஸ்ட் தொடரில் 2 சதங்களைக் குவித்தார், அசத் சபீக் 3 ஆவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி அழுத்தத் திற்குள்ளாகியிருந்த போது சதமொன்றைப் பெற்றிருந்ததோடு, ஜுனைட் கான் 3 ஆட்டங்களில் 14 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார். இதில் 2 ஆவது, 3 ஆவது ஆட்டங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட 5 இலக்குகள் பெறுமதிகளும் உள் ளடக்கம். (5)



# ஒலிம்பிக் சுடர்

ஒலிம்பிக் போட்டியில் மிக முக்கியமானது உலகம் முழுவதும் சுற்றிவரும் ஒலிம்பிக் சுடர் விளக்கு ஆகும். 2012 ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக் போட்டி லண்டனில் நடைபெற உள்ளது. இந்த ஒலிம்பிக் போட்டிக்கான சுடர் விளக்கு கடந்த ஆண்டு யூன் 8 ஆம் திகதி அறிமுகம் செய்யப்பட்டது.

- மரியாதை, திறமை, நட்புணர்வு என்ற ஒலிம்பிக் கோட்பாட்டை குறிக்கும் வகையில் இந்த விளக்கு 3 பக்கங்கள் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- தங்க நிறத்தில் ஜொலிக்கும் இந்த விளக்கின் உயரம் 800 மி.மீற்றர்., எடை 800 கிராம்.
- ஒலிம்பிக் சுடர் ஒட்டத்தில் 8000 பேர் இந்த விளக்கை ஏந்திச் செல்வதால், இதில் 8000 துளைகள் இருக்கும் வகையில் வடிவமைத்துள்ளனர்.
- இதனால் விளக்கின் உட்புறத்தை தெளிவாகப் பார்க்க முடிவதுடன், சுடரின் வெப்பம் ஏந்திச் செல்பவரின் கைகளை பாதிக்காமல் குளிர்ச்சியாக வைத்திருக்கவும் உதவுகிறது.
- இங்கிலாந்தை சேர்ந்த பிரபல வடிவமைப்பாளர்கள் எட்வர்ட் பார்பர், ஜே. ஆஸ்ஜர்பி இணைந்து இதை உருவாக்கியுள்ளனர்.
- இங்கிலாந்து முழுவதும் 8,000 மைல் தூரத்துக்கு சுடர் ஒட்டம் நடைபெறுகிறது. (5)

# இலங்கையின் 'ரி-20' அணி அறிவிப்பு

செப்ரெம்பரில் நடைபெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடருக்கான இலங்கையின் தற்காலிக அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 30 பேர் கொண்ட தற்காலிக அணியே அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள 30 பேர் கொண்ட அணியில் எதிர்பார்க்கப்பட்ட அனேகமான வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள அணியில் அஜந்த மெண்டிஸ், பர்வீஸ் மஹரூப், ஜெஹான் முபாரக், திலின கண்டம்பி, பிரசன்ன ஜெயவர்தன, உபுல் தரங்க ஆகியோர் நீண்ட காலத்திற்குப் பின்னர் இலங்கையின் 'ரி-20' அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்த இந்தியாவிற்கான மட்டுப்படுத்தப் பட்ட பந்து பரிமாற்றத் தொடரில் சேர்க்கப்படாமல் விடப்பட்டிருந்த டில்ஹார பெர்ணான்டோவிற்கு இந்த அணிக்குள் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அறிவிக்கப்பட்டுள்ள அணி:

மஹேல ஜெயவர்தன, திலகரட்ண டில்ஷான், குமார் சங்ககார, டினேஷ் சந்திமால், அன்ஜலோ மத்தியூஸ், லஹிரு திரிமன்ன, நுவான் குலசேகர, திஸ்ஸர பெரேரா, கௌஷால் லொக்கு ஆராய்ச்சி, சச்சித்திர சேனநாயக்க, லசித் மலிங்க, சாமர கப்புக்கெதர, உபுல் தரங்க, இசுரு உதான, ரங்கன ஹேரத், ஜீவன் மெண்டிஸ், ஷமிண்ட எரங்க, அஜந்த மெண்டிஸ், சுராஜ் ரந்தீவ், தம்மிக்க பிரசாத், குஷால் ஜனித், ஜெஹான் முபாரக், பர்வீஸ் மஹரூப், திலின கண்டம்பி, சாமர சில்வா, டில்ருவான் பெரேரா, கோசல குலசேகர, பிரசன்ன ஜெயவர்தன, நுவான் பிரதீப், அகில தன்தெனிய. [5]



# ஒலிம்பிக் குழுத் தலைவர் கடத்தல்

லிபியா ஒலிம்பிக் குழுத் தலைவர் அகமது நாபில் அல்-டகர் அல்-ஆலம், துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டார்.

லண்டன் ஒலிம்பிக்கில் பங்கேற்கும் லிபிய குழுத் தலைவராக அகமது நாபில் அல்-டகர் அல்-ஆலம் உள்ளார். இவர், லிபிய தலைநகர் திரிபோலியின் மத்திய பகுதியில் காரில் வந்து கொண்டிருந்த போது, அடையாளம் தெரியாத நபரால், துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டார். இவர் குறித்து இதுவரை எவ்வித தகவலும் வரவில்லை.

லிபியாவில் முன்னாள் அதிபர் முகமது கடாபி கொல்லப்பட்ட பின்னர், உள்நாட்டு போர் முடிவுக்கு வந்தது. இருப்பினும், 12 இற்கும் மேற்பட்ட கலகக் கும்பல்கள், மத்திய ஆட்சியாளர்களின் வேண்டுகோளை புறக்கணித்து, தனிப்பட்ட முறையில் செயல்பட்டு வருகின்றன. இதில், எதாவது ஒரு கும்பல் கடத்தியிருக்கலாம் எனத் தெரிகிறது.

சர்வதேச ஒலிம்பிக் குழுத் தலைவர் ஜாக்ஸ் ரோகி கூறுகையில், லிபியாவில் இருந்து ஐந்து பேர் லண்டன் ஒலிம்பிக்கில் பங்கேற்கின்றனர். இந்த நிலையில், நடந்த சம்பவம் வருத்தம் தருகிறது. அல்-ஆலம் நல்ல முறையில் மீண்டு வருவார் என்று நம்புகிறேன். இந்த விடயத்தில் எங்களால் முடிந்தள வுக்கு உதவி செய்யத் தயாராக உள்ளோம்- என்றார். [5]

# ஆவலை இழந்தேன் ஓய்வை நாடினேன்

சர்வதேசப் போட்டியில் பங்குபற்றுவதற்காக தீராத ஆவலைத் தான் இழந்ததாகவும், அதன் காரணமாக ஓய்வுபெறும் தனது முடிவு இலகுவானதாக அமைந்த தாகவும் கடந்த வாரம் ஓய்வு பெற்ற ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பிரட் லீ தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா சார்பாக விளையாடிய ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் அதிக இலக்குகளைக் கைப்பற்றியவர் என்ற பெருமையை கிளெய்ன் மக்ராத்துடன் பகிர்ந்து கொண்டுள்ள பிரட் லீ, டெஸ்ட் போட்டியிலும் 310 இலக்குகளைக் கைப்பற்றியுள் ளார். உலகின் வேகமான பந்துவீச்சாளர்களில் ஒருவராகக் கருதப்படும் பிரட் லீ, அடிக்கடி காயங் களுக்கு உட்பட்டதன் காரணமாக குறைவான போட்டிகளிலேயே பங்குபற்ற முடிந்திருந்தது.

அணியைப் பொறுத்தவரை ஒருவர் 100 சதவீதம் விளையாடுவதற்குரிய அர்ப்பணிப்புடன் காணப்பட வேண்டும் எனத் தெரிவித்த அவர், அந்த அர்ப்பணிப்பு உடல் ரீதியிலானதாகவும், மனரீதியிலானதாகவும் இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். அடுத்த சில மாதங்கள் பற்றி சிந்திக்கும்போது அந்த ஆவல், அர்ப்பணிப்புத் தன்னிடம் காணப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

இங்கிலாந்துக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொண்டிருந்த ஆஸ்திரேலிய அணியில் இடம்பெற்றி ருந்த பிரட் லீ, 4 ஆவது ஆட்டத்தில் பந்துவீசிக் கொண்டிருக்கும் போது காயமடைந்து ஆட்டத்திலிருந்து விலக வேண்டி ஏற்பட்டது. அதன் பின்னர் 5 ஆவது ஆட்டத்தில் பங்குபற்றியிருக்காத அவர், கடந்த 13 ஆம் திகதி சர்வதேசப் தொடரிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்திருந்தார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஞாயிறு காரம்**

# சிறைப்படுகொலை வெறியாட்டத்தில் இன்னும் ஓர் ஆடி மாதம்



சந்திரசேகர ஆஷாத்

நாளை ஜூலை மாதம் 23 ஆம் நாள்.

1983 ஆம் ஆண்டில் இன்றையைப் போன்ற ஒரு நாளில் வடபகுதி எங்கும் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்து தமிழ் இளைஞர்களை வேட்டையாடியும் கைது செய்தும் சித்திரவதைகளை மேற்கொண்டும் தமிழ் இளம் பெண்களை பாலியல் வக்கிரகங்களுக்கு உட்படுத்தியும் வெறியாட்டம் போட்டு வந்த இராணுவத்தினரைக் கட்டுப்படுத்தும் முகமாக திருநெல்வேலியில் வைத்து படையினரின் தொடரணி மீது விடுதலைப் புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது. அந்தத்தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்டனர்.

1977 இல் ஆட்சிப்பீடமேறிய சில நாள்களிலேயே போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் எனச் சவால் விட்டு ஒருபெரும் இன அழிப்புக் கலவரத்துக்கு தார்மிகத் தலைமையேற்று வழிநடத்தி குருதி குடித்தும் தாக மடங்காத முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, 13 இராணுவத்தினரின் இறப்பைச் சரியாகப் பயன்படுத்தத் திட்டமிட்டார். போரில் இறக்கும் படையினரின் சடலங்களை வீடுகளுக்கு அனுப்புவதே வழமை. ஆனால் 13 படையினரின் சடலங்களையும் கொழும்பு கனத்தை மயானத்தில் எரிக்க முடிவெடுக்கப்படுகிறது. தொலை தூரக் கிராமங்களிலிருந்து படையினரின் உறவினர்களும் ஊரவர்களும் கொழும்புக்குக் கொண்டு வரப்படுகின்றனர். நாட்டின் பல பாகங்களிலுமுள்ள காடையர்களும் கொழும்பில் குவிக்கப்படுகின்றனர். பெற்றோல் கொள்கலன்களும் கைக்குண்டுகளும் வாள்கள் இரும்புக் கம்பிகளும் தயார் நிலையில் வைக்கப்படுகின்றன.

பிரேதங்கள் எரிந்து முடியுமுன்பே பொறள்ளவில் உள்ள தமிழ்க் கடைகளும் வீடுகளும் எரியத் தொடங்குகின்றன. தமிழர் என்று காணப்படும் அனைவரும் வெட்டியும் அடித்தும் எரித்தும் கொல்லப்படுகின்றனர். கொழும்பு வீடுகள் தமிழர் இரத்தத்தில் செந்நிற நதிகளாகின்றன. கழிவு வாய்க்கால்களில் தமிழரின் தலைகள், கைகள், கால்கள் மிதந்து போகின்றன. கொழும்பில் ஆரம்பித்த இந்தக் கொலை வெறியாட்டம் தென்னிலங்கை முழுவதும் பரவி தமிழரை விரட்டி விரட்டிக் கொன்று குவிக்கிறது.

அதேவேளையில் கொழும்பு வெலிக்கடைச் சிறைக்கு ஏற்கனவே நன்கு திட்டமிடப்பட்ட கொலை வெறியாட்டம் அரங்கேற்றப்படுகிறது. குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உட்பட 34 கைதிகள் அடித்தும் வெட்டியும் கோரமான முறையில் சிங்களக் கைதிகளால் சிறைக்காவலரின் உதவியுடன் கொல்லப்படுகின்றனர். தனக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட போது, தான் இறந்த பின்பு தனது கண்களை ஒரு தமிழனுக்குக் கொடுக்க வேண்டும் எனவும் தான் அதன் மூலம் மலரப்போகும் தமிழீழத்தைப் பார்க்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்ட குட்டிமணியின் கண்கள் தோண்டி சிறைச்சாலை புத்தர் சிலையின் முன் வீசப்படுகிறது. அவர்களின் ஆணுறுப்புகள் வெட்டியெறியப்படுகின்றன. இறந்த உடல்கள்கூட சிதைத்துச் சின்னாபின்னமாக்கப்படுகின்றன. கொலைவெறியாட்டம் அத்துடன் நிற்கவில்லை. 27 ஆம் நாள் மீண்டும் 22 தமிழ் கைதிகள் கோரமாகக் கொல்லப்படுகின்றனர்.

பூட்டிய இரும்புக் கதவுகளுக்குப் பின்னால் அரசின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த கைதிகள் மீது சிங்களக் கைதிகளாலும் சிறைக் காவலர்களாலும் நடத்தப்பட்ட பெருங்கொலை வெறியாட்டம் உலக அரங்கில் இலங்கை அரசின் அநாகரிக இன அழிப்பு நோக்கத்தை அம்பலப்படுத்துகிறது. ஆனால் அன்றும் சரி, இன்றும் சரி அதற்காக இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசியல் வாதிகளோ அல்லது அதிகார பீடங்களோ மனம் வருந்தவுமில்லை. மன்னிப்புக் கேட்கவுமில்லை. ஆனால் அதேவிதமான அதிலும் மோசமான இனஅழிப்பு நடவடிக்கைகளைப் பெருமையுடன் தொடர்ந்து வருகின்றனர். தங்கள் குரூரமான அசிங்கமான இனப் படுகொலை முகங்களை அழகானவை எனச் சாதித்து வருகின்றனர்.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்கு எவ்விதத்திலும் குறைவுபடாத விதத்தில் 2012 ஜூலை மாதத்திலும் பூட்டிய சிறைக்கதவுகளின் பின்னால் தமிழ்க் கைதிகள் மீதான ஓர் இனப் படுகொலைத் தாண்டவத்தை அரங்கேற்றி தாமே உலகின் உயர்ந்த மனிதாபிமான விரோதிகள் என உலகின் முன் பிரகடனம் செய்துள்ளனர் இலங்கைச் சிறை அதிகாரிகள்.

வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளில் இருவர் எவ்வித காரணமும் இன்றி வேறு சிறைக்கு மாற்றப்பட்டதை அடுத்து அங்குள்ள 30 தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினர். அதையடுத்து மூன்று சிறைச்சாலை அதிகாரிகளைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர் எனச் சிறை நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டது. அதில் எவ்வளவுதூரம் உண்மை உண்டு என்பது சந்தேகமே. ஏனெனில் அங்கு என்ன நடக்கிறது என்பதை சிறைச்சாலை அதிகாரிகள் சொல்வதிலிருந்துதான் அறிய வேண்டும். உள்ளே நடப்பவற்றை அறிய வேறு எந்த வழியும் இல்லை.

இந்த நிலையில் கடந்த ஜூன் 29 ஆம் திகதி பணயக் கைதிகளை மீட்பது என்ற போர்வையில் சிறை அதிகாரிகளும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து கைதிகள் மேல் மிருகத்தனமான தாக்குதலை நடத்தி அவர்களை அனுராதபுரம் சிறைக்குக் கொண்டு சென்றனர். பின்பு அவர்கள் மஹர சிறைக்கு மாற்றப்பட்டனர் என்று தகவல்கள் வெளிவந்தன.

தாக்குதலுக்கு உட்பட்ட நிமலரூபன் என்ற கைதி ராகம வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போது இறந்திருந்தார். இன்னுமொரு கைதி டிலக்சன் இன்னமும் கோமா நிலையில் உள்ளார். நிமலரூபனின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படவில்லை. கோமா நிலையில் உள்ள கைதியையும் பார்வையிடப் பிறர் அனுமதிக்கப்படவில்லை. ஏனைய கைதிகளும் படுகாயங்களுடன் மஹர சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அதாவது 1983 ஆடியில் அரங்கேற்றப்பட்ட ஒரு சிறைச்சாலை இனப்படுகொலை 2012 ஜூன் கடைசியில் தொடக்கப்பட்டு ஜூலையில் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மரணதண்டனை விதிக்கப்பட்டுத் தூக்கிலிட்டுக் கொல்லப்படும் கைதிகளை உறவினரிடம் ஒப்படைப்பதில்லை. சிறை மயானத்திலேயே புதைப்பதுண்டு. இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலம் தொட்டு இப்படி ஒரு மரபு உண்டு. ஆனால் தற்சமயம் உள்ள ஆட்சியாளர்களோ எந்தவொரு தண்டனையும் எந்தவொரு நீதிமன்றத்தாலும் விதிக்கப்படாதவர்களைத் தமது விருப்பப்படி கொன்றுவிட்டு சிறை மயானத்திலேயே புதைக்கும் புதிய ஜனநாயக வழியைக் கைக்கொள்ள முயற்சிக்கின்றது. அதாவது தமிழர்களின் உயிர்கள் பறிக்கப்படும்போது சட்டம், நீதி, மரபு என அனைத்துமே புறமொதுக்கப்படுகின்றன. மனித உரிமை மீறல் நிர்வாணமாக நின்று கைகொட்டிச் சிரிக்கிறது. 1983 இல் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த சிறைச்சாலை இனப்படுகொலை மரபு 2012 ஜூலையில்தான் மீண்டும் பின்பற்றப்படுகிறது என்று சொல்லிவிட முடியாது. இடையில்கூட இம்மரபு மறக்கப்படாமல் பின்பற்றப்பட்டு வருகிறது.

மறக்கப்படமுடியாத சிறைப்படுகொலைகளில் 'பிந்துனுவெவ' இளைஞர் புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற படுகொலைகளும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்தவர்கள் அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பல இளைஞர்கள் விசாரணை என்ற பேரில் கொடிய சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டும் பின் அவர்கள் மீது வழக்குகள் தொடுக்க எவ்வித ஆதாரமுமற்ற நிலையில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்வதற்காக பிந்துனுவெவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

ஒருநாள் இரவு அந்த முகாமுக்குள் கத்தி, பொல்லு, துப்பாக்கி போன்ற ஆயுதங்களுடன் புகுந்த சிங்களக் காடையர்கள் சிறைச்சாலை அதிகாரிகளுடன் இணைந்து பெரும் கொலை வெறித் தாண்டவம் நடத்தினர். அந்த வெறியாட்டத்தில் 24 இளைஞர்கள் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் பல இளைஞர்கள் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

மனித உரிமை நிறுவனங்களின் தொடர்ச்சியான கண்டனங்களை அடுத்து சிலர் கைது செய்து விசாரிக்கப்பட்டு அவர்கள் மேல் வழக்குத் தொடுக்கப்பட்டது. இதில் ஒரு ஆசிரியர் உட்பட மூவருக்கு நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தது.

ஆனால் மேன்முறையீட்டில் இவர்கள் குற்றமற்றவர்கள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இன்றுவரை சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் எவரும் கைது செய்யப்படவுமில்லை தண்டிக்கப்படவுமில்லை. அக்கோவைகள் அப்படியே கிடப்பில் போடப்பட்டுவிட்டன.

இவைமட்டுமல்ல, உயர்ந்த மதில்களையும் பெரும் இரும்புக் கதவுகளையும் கொண்ட சமூகத்திலிருந்து முற்றாகவே பிரிக்கப்பட்ட இலங்கைச் சிறைக் கூடங்களில் தமிழ்க் கைதிகளுக்கு எதிராக நடத்தப்படும் கொடுமைகளில் வெளிவந்தவை ஏராளம். வெளிவராதவை இன்னும் அதிகமாக இருக்கலாம்.

வெலிக்கடை, மகஸீன், களுத்துறை, பூசா, அனுராதபுரம், வவுனியா, மட்டக்களப்பு போன்ற சிறைக் கூடங்களில் தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டிக்கவோ அல்லது தம்மை நியாயபூர்வமாக நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரிக்கும்படியோ அல்லது தம்மை விடுவிக்கும்படியோ கோரி உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்துவதுண்டு. அதற்கு எவ்வித நியாயபூர்வமான நடவடிக்கையும் எடுக்காமல் விடுவதும் பல நாள் கழிந்த பின்பு அவர்களை அடித்து நொருக்கி மருத்துவமனையில் போட்டுவிட்டு அவர்களிடம் கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டதாகச் செய்தி வெளியிடுவது சிறைச்சாலைகளின் வழமையான நிகழ்ச்சி நிரலாகும்.

ஒரு சிறைச்சாலைக்கு ஒரு கைதி இரண்டு விதங்களில் அனுப்பப்படுகின்றான். ஒன்று விசாரணை முடியும்வரை அவன் நீதிமன்றத்தின் பொறுப்பில் உள்ள விளக்கமறியல் கைதி. மற்றது ஒருவன் குற்றம் காணப்பட்டு குறிப்பிட்ட தண்டனை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டு சிறைச்சாலைக்கு அனுப்பப்படும் தண்டனைக் கைதி.

ஒரு விளக்கமறியல் கைதியை அடிப்பதோ கொல்வதோ, நீதிமன்றத்தின் பொறுப்பில் இருக்கும் ஒருவர் மீது கை வைத்து நீதிமன்ற அதிகாரத்தை உதாசீனம் செய்வதாகும். தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதிக்கு நீதிமன்றத் தண்டனையை விட வேறு தண்டனை வழங்க சிறைச்சாலைக்கு அதிகாரம் இல்லை.

எனவே கைதிகள் சிறைச்சாலையில் கொல்லப்படுகின்றார்கள், அடித்து நொருக்கப்படுகிறார்கள் என்றால் அங்கு நீதிமன்றம் உதாசீனம் செய்யப்படுகிறது. அப்படியான நிலையில் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக ஏன் சிறைச்சாலை அதிகாரிகள் மேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற கேள்வியும் எழுகிறது.

இப்படியான நடவடிக்கைகள் இயல்பாகவே ஜனநாயகம் இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட செய்தியை பிரகடனம் செய்கின்றனவல்லவா?

இயற்கையாக வருடமொரு முறைதான் ஆடிமாதம் வரும். இலங்கைச் சிறைச்சாலைகளில் தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்படும் விடயத்தில் ஆடிகள் அடிக்கடி வருகின்றன. இன அழிப்பு மேலோங்கி நிற்கும் வரை இன்னும் இன்னும் வரும். நீதியும் சட்டமும் நீண்ட துயிலில் ஆழ்ந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினி நோக்கிய பயணம்

சு.வெங்கி

ஒரு நாட்டின் நிர்வாகச் சீர்கேடுகளைக் கண்டித்தும், ஆட்சியாளரை சர்வாதிகாரி என்று குற்றம்சாட்டியும் மக்கள் போராட்டத்தில் ஈடுபடும்போது அந்த நாட்டின் நிலை குறித்து அனைவரும் கவலையடைவது இயல்பு.

அந்த நாட்டின் அரசு குறித்தும், ஆட்சி செய்பவர்கள் குறித்தும் பிற நாட்டு மக்களிடையே அதிருப்தி உருவாவதும் தவிர்க்க முடியாததே. அதேநேரத்தில் சாப்பாட்டுக்கு வழியில்லை என்று கூறி அரசுக்கு எதிராக மக்கள் போராட்டக் களத்தில் குதிப்பது மிகுந்த வேதனைக்குரியது. அவ்வாறு போராடும் மக்களை ஒடுக்க அரசு, ஆயுதத்தைக் கையில் எடுப்பது கொடூரத்தின் உச்சம்.

இப்போது அத்தகைய கொடூரத்துக்கு உள்ளாகியிருப்பவர்கள் சூடான் மக்கள். வட ஆபிரிக்க நாடான சூடானில் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் பணவீக்கம் உயர்ந்து வருகிறது.

அடிப்படைத் தேவையான சாப்பாட்டுக்கே வழியில்லாதபோது என்னதான் செய்வது? அரசுக்கு எதிராக முதலில் போராட்டத்தில் குதித்தார்கள் தலைநகர் கார்ட்டூமில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள். போராட்டத்தை ஒடுக்க பொலிஸாரைக் களமிறக்கியது அரசு. தடியடி, கண்ணீர் புகைக் குண்டு வீச்சு, ரப்பர் குண்டுகளால் துப்பாக்கிச்சூடு ஆகியவை போராட்டம் தொடங்கிய சில நிமிடங்களிலேயே மாணவர்களைச் சிதறி ஓடச் செய்தன. எனினும் போராட்டம் ஓயவில்லை, அடுத்த சில நாள்களிலேயே பொதுமக்கள் அணி, அணியாகக் களமிறங்கத் தொடங்கினர்.

தலைநகரில் தொடங்கிய போராட்டம் பிற பகுதிகளுக்கும் பரவத் தொடங்கியது. போராட்டக்காரர்களுடன் எதிர்க்கட்சிகளும் கைகோர்க்க மெல்ல மெல்லச் சூடாகி வருகிறது சூடான்.

உணவுக்காகப் போராடும் மக்களை அடித்து ஒடுக்க வேண்டாம் என்று சூடான் அதிபர் ஓமர் அல்-பஷீரிடம் ஐ.நா. கேட்டுக் கொண்டாலும், இராணுவப் புரட்சியின் வழிவந்த அதிபரின் முரட்டுக் காதுகளில் அவை ஏறவில்லை.

1989ஆம் ஆண்டு முதல் ஓமர் அல்-பஷீர் ஆட்சி செய்கிறார். அரபு நாடுகளில் ஏற்பட்டுள்ள புரட்சித் தீ சூடானிலும் பரவியுள்ளது என்று வெளியாகும் செய்திகள் முற்றிலும் ஏற்கக்கூடியதல்ல.

எகிப்து, லிபியா உள்ளிட்ட நாடுகளில் ஏற்பட்டது ஆட்சியாளர்களின் எதேச்சாதிகாரத்துக்கு எதிரான புரட்சி. ஆட்சியாளர் மாற்றம் ஒன்று மட்டுமே அதற்குத் தீர்வு எனக் கூறப்பட்டது. அதுவும் நடந்தேறி விட்டது.



"சர்வதேச அமைப்புகளின் உதவியுடன் பஞ்சத்தில் இருந்து மெதுவாகக் கொஞ்சம் விடுபட்டது சூடான். பல்வேறு இனக் குழுக்களிடையே மோதல், ஆயுதக் கடத்தல் போன்ற பிரச்சினைகள் அங்கு சாதாரணம். தென்சூடானுடனான மோதலும்கூட அண்மையில்தான் முடிவுக்கு வந்தது. அவை ஒருபுறம் இருந்தாலும், சமீப ஆண்டுகளில் சாதாரண மக்கள் தங்கள் வாழ்க்கையை அமைதியான வழியில் ஓட்டிக் கொண்டுதான் இருந்தார்கள்.

ஆனால் சூடானில் ஒலிப்பது பசி கொண்ட மக்களின் கூக்குரல். பல ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நிகழ்ந்து வந்த சூடானில், 1990ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சம் மிகக்கொடூரமானது. 1994இல் வெளியான, பசியில் துவண்டு சாகும் நிலையில் இருக்கும் சிறுமியைச் சாப்பிடக் காத்திருக்கும் பணம் தின்னி கழுகின் புகைப்படம் சூடான் பஞ்சத்தின் கொடூரத்தை உலக மக்களுக்கு அப்பட்டமாக எடுத்துக் காட்டியது.

அதன் பின்னர் சர்வதேச அமைப்புகளின் உதவியுடன் பஞ்சத்தில் இருந்து மெதுவாகக் கொஞ்சம் விடுபட்டது சூடான். பல்வேறு இனக் குழுக்களிடையே மோதல், ஆயுதக் கடத்தல் போன்ற பிரச்சினைகள் அங்கு சாதாரணம். தென்சூடானுடனான மோதலும்கூட அண்மையில்தான் முடிவுக்கு வந்தது. அவை ஒருபுறம் இருந்தாலும், சமீப ஆண்டுகளில் சாதாரண மக்கள் தங்கள் வாழ்க்கையை அமைதியான வழியில் ஓட்டிக் கொண்டுதான் இருந்தார்கள்.

கடந்த ஆண்டில், வேகமாக வளரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளில் 17ஆவது இடத்தைப் பிடித்திருந்தது சூடான். ஆனால் இப்போது அங்கு ஏன் இந்தத் தலைகீழ் மாற்றம் என்று பார்த்தால், முதலில் வந்துநிற்பது தென்சூடான்.

ஓராண்டுக்கு முன்பு சூடானில் இருந்து பிரிந்து தனியாக உருவான நாடு அது. எண்ணெய் வளத்தையே பெரிதும் நம்பியிருந்த ஒன்றுபட்ட சூடானில் இருந்து, தென்சூடான் பிரிந்தபோது எண்ணெய் வளம்மிக்க பகுதிகளில் 80 சதவீதம் தென்சூடானுக்குச் சென்றுவிட்டது. அப்படியிருந்தும் தென்சூடானும் சுபிட்சமாக இல்லை என்பது வேறு விஷயம்.

தென்சூடான் பிரிந்த பிறகுதான், சூடானுக்குப் பிரச்சினை தொடங்கியது. பொருளாதாரத்தைத் தூக்கிப்பிடித்திருந்த எண்ணெய் ஏற்றுமதி குறைந்ததால், வருவாய் குறைந்து நாட்டின் நிதிநிலை மோசமாகத் தொடங்கியது. ஏற்கெனவே உள்நாட்டில் உணவு உற்பத்தி போதுமான அளவு இல்லாத நிலையில், இறக்குமதி செய்தே தேவையைச் சமாளித்து வந்தது.

எண்ணெயை ஏற்றுமதி செய்யாவிட்டாலும், தென்சூடானில் இருந்து சூடான் வழியாகப் பிற நாடுகளுக்குக் குழாய்கள் மூலம் பெட்ரோலியப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன. இதன் மூலம் ஓரளவுக்கு சூடான் அரசுக்கு நிதி கிடைத்து வந்தது. ஆனால் இப்போது சூடான் வழியாக எண்ணெய் வழங்குவதை தென்சூடான் குறைத்துக் கொண்டது. இதனால் அரசுக்கு பெருமளவில் வருமானம் தடைப்பட்டது. இதனால் விலைவாசி உயர்ந்து மக்கள் தலையில் சுமை ஏறியது.

இதுவரை தனது கட்டுப்பாட்டில் இருந்த இயற்கை வளத்தின் பெரும் பகுதியை எடுத்துக் கொண்டுதான் தென்சூடான் தனிக்குடித்தனம் போகிறது என்பது சூடானின் ஆட்சியாளர்கள் அறிந்ததுதான். அதனால் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் பிரச்சினைகளை முன்னெச்சரிக்கையுடன் யோசித்து நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் இப்போது நிலைமை கையை மீறிச் செல்லும் நிலையில் ஆட்சியைக் காப்பாற்றப் போராடும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் ஆட்சியாளர்கள். மக்களை ஒடுக்கி அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்ள முயற்சிக்கின்றனர்.

அதேநேரத்தில் அரசுக்கு எதிரான மக்களின் கோபத்தை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றன எதிர்க்கட்சிகள். இப்பிரச்சினையில் தலையிட்டு சூடானில் மிச்சமிருக்கும் எண்ணெய் வளங்களையும் தாங்கள் உறிஞ்சிக் கொள்ளலாமா என்று யோசிக்கத் தொடங்கிவிட்டன உலக வல்லரசுகள்.

சோமாலியா, எத்தியோப்பியா, ஜிபூட்டி என ஆபிரிக்காவில் கடுமையான பஞ்சத்தில் அடிபட்ட நாடுகளின் வரிசையில் மீண்டும் சேர இருக்கிறது சூடான்.

இத்தனைக்கும் ஏற்கெனவே உணவுப் பஞ்சத்தில் அடிபட்டு மீண்டு வந்துள்ள நாடு சூடான். எலும்பும் தோலுமான உடம்பு, பெருத்த தலை, வெறித்த கண்களுடன் கையில் பாத்திரத்துடன் சூடான் குழந்தைகள் செய்தித்தாள்களில் மீண்டும் வர இருப்பதைக் காண மனதை தைரியப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்.

# நெல்லியடியில் புலிக்கொடி

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பாதுகாப்புக்கோ இறையாண்மைக்கோ குந்தகம் ஏற்படுத்தக்கூடிய வகையில் யாராவது செயற்பட்டால் அவரைக் கைது செய்ய பொலிஸாருக்கு உரிமை உள்ளது. ஆனால் நெல்லியடியில் அது நடைபெறவில்லை. அப்படியானால் புலிக் கொடியால் நாட்டின் இறையாண்மைக்குப் பாதகம் ஏதுமில்லை என்று பொலிஸார் கருதி விட்டார்கள் அல்லது அவர்களுக்கு அப்படி உத்தரவிடப்பட்டுள்ளது என்பதே அர்த்தமாகும்.

நாவாந்துறையில் வீட்டுக்குள் நுழைந்த மர்மநபரைத் துரத்திச் சென்ற இளைஞர்கள் ஆத்திரமடைந்து இராணுவத்தினரோடு முரண்பட்டபோது அந்த ஊரே ஓர் இரவோடு சிதைத்து சின்னாபின்னமாக்கப்பட்டது. இவ்வாறு இருக்கையில் போராட்டங்களின்போது புலிக்கொடி ஏந்துபவர்களால் மட்டும் எப்படித் தப்பிச் செல்ல முடிந்தது? அவர்கள் மட்டும் எப்படித் தவறவிடப்பட்டார்கள்? அவர்கள் ஏன் நடுவீதியிலே போட்டு நசுக்கப்படவில்லை?

ஏனெனில் அதற்கெனக் காரணம் இருந்தது. உதயனுக்குக் கிடைத்த தகவல்களின்படி, இராணுவப் புலனாய்வாளர்களால் தற்போது பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள முன்னாள் புலிகள் இருவரே நெல்லியடியில் புலிக் கொடியை ஏந்தியவர்கள். அவர்களுக்கு இடைஞ்சல் ஏதும் ஏற்படாமல், பொலிஸாரால் தடைகள், இடைஞ்சல்கள் வராமல் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த வேறு இருவரும் கூடவே அனுப்பப்பட்டிருந்தனர்.

பருத்தித்துறையில் இருந்து இவர்கள் புறப்படுவதற்கு முன்னர், நெல்லியடியில் எது நடந்தாலும் உடனடி நடவடிக்கையில் இறங்க வேண்டாம், மேலிடத்தைக் கேட்டுச் செய்யவும் என்ற உத்தரவு அங்கிருந்த பொலிஸாருக்கு வழங்கப்பட்டிருந்தது.

புலிக் கொடியைக் காட்டிவிட்டுத் திரும்பிவிட வேண்டும் என்பது மட்டுமே முன்னாள் புலிகளுக்கு இடப்பட்டிருந்த முக்கிய கட்டளை. வேறு எந்த அசம்பாவிதங்களிலும் சிக்கல்களிலும் மாட்டிக் கொள்ளக் கூடாது என்பதும் அவர்களுக்கு மிகத் தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருந்தது.

நெல்லியடியில் இருந்து புறப்பட்ட அவர்கள் கொடிகாமம் வீதி வழியாகச் சென்று மறைந்தனர்.

எது எப்படியானாலும் புலிகள் இன விடுதலைக்காகப் போராடினார்கள். அவர்களது போராட்டம் திட்டமிட்டு துரோகிகளாலும், சர்வதேச வல்லரசுகளாலும் நசுக்கப்பட்ட நிலையில் அவர்களின் சின்னங்கள் ஒரு கருப்பொருளாகவே வெளிவருகின்றன. புலிக்கொடி ஏந்தினால் பிரச்சினை ஏற்படுத்தலாம் என்பது புலனாய்வாளர்களின் நோக்கமாக இருக்கலாம். அது வீரத்தின் கொடி என்பது தமிழ் மக்களின் உரிமை சார்ந்த நிலைப்பாடு. அவ் [illegible] தமிழ் மக்கள் [illegible] புலனாய்வாளர்கள் உணரும் வரைக்கும் புலிக்கொடி ஏந்தும் படலம் தொடரும்.

# சடலங்களும் சாட்சி சொல்லும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வளவும் நடந்த பின்னரும் நிமலரூபனின் மரணம் மாரடைப்புக் காரணமாகவே நிகழ்ந்ததாக அரசு சத்தியம் செய்கிறது. அத்தோடு சில பல காரணங்களைக் கூறி நிமலரூபனின் சடலத்தை மகர பகுதியிலேயே அடக்கம் செய்யவும் எத்தனித்தது. நிமலரூபனின் உடலம் வேண்டத்தகாத விளைவுகளை ஏற்படுத்தலாம் என்றும் அதனால் வன்முறைகள் கூட நிகழும் என்றும் கூறியே சடலத்தை பெற்றோரிடம் ஒப்படைக்க அரச தரப்பு மறுத்து வந்தது.

ஆனால் உண்மையில் நிமலரூபன் சிறைச்சாலையில் நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதலாலேயே கொல்லப்பட்டார் என்பதற்கு அவரது சடலம் நிராகரிக்கப்பட முடியாத சாட்சியமாக மாறிவிடும் என்ற பயத்திலேயே இவ்விதம் அரசு செயற்படுகிறது என்று நிமலரூபனின் உறவினர்கள் சொல்கின்றனர்.

நீண்ட இழுபறிக்குப் பின்னர் நிமலரூபனின் உடலத்தை அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கும் படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நிமலரூபனின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்பவர்கள் அவனது சாவுக்கான உண்மைக்காரணத்தை தம் கண்களால் கண்டறிய முடியும். ஆனாலும் அதற்கு நீதி கேட்கவோ அவனுக்கு மீள் உயிர் கொடுக்கவோ அவர்களால் முடியப் போவதில்லை. எனினும் நிமலரூபனின் சடலம் தன் மீதும் சக கைதிகள் மீதும் நிகழ்த்தப்பட்ட கொடூரமான வேட்டையாடலை அவனது சாவு வீட்டுக்கு வரும் எல்லோருக்கும் சாட்சியாக சொல்லிக் கொண்டே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவராயன்கட்டு மக்களுக்கு சொந்தக் காணி கிடைக்குமா?

பா.துவாரகன்





பூநகரிப் பிரதேசத்திற்கு உட்பட்ட சின்னப்பல்லவராயன் கட்டு ஒரு விவசாயக் கிராமம். 52 குடும்பங்கள் இங்கு வாழ்கின்றன. ஆனால் ஒருவருக்குக்கூட இங்கு சொந்தக் காணிகள் இல்லை. சொந்தக் காணி இல்லை என்பதால் அவர்களுக்கு வீட்டுத் திட்டமோ வேறு நிரந்த உதவிகளோ வழங்கப்படுவதுமில்லை.

தமக்கு குடியிருப்புக் காணிகளை வழங்குமாறு அரசியல்வாதிகள் முதல் அதிகாரிகள் வரை பலதடவைகள் இவர்கள் முறையிட்டுள்ளனர். ஆனால் அவர்களுக்கு இன்று வரை எதுவித விமோசனமும் கிடைக்கவில்லை.

இவர்கள் இப்போது குடியிருப்பது வயற்காணிகள் என்பதால் ஒவ்வொரு வருடமும் மழை காலங்களில் இவர்கள் தற்காலிக இடம்பெயர்வுகளைச் சந்திக்க வேண்டியது கட்டாயம்.

இந்தக் குடும்பங்கள் இந்தப் பகுதியில் 1990இல் குடியேறின. காடு வெட்டித் துப்புரவாக்கி களனியாக்கிய இவர்கள் தமக்கென ஒரு நிரந்தர நிலத் துண்டை உருவாக்கிக் கொள்ளும் கனவுடன் உழைத்தனர். ஆனால் அவர்கள் அதற்குக் கொடுத்து வைக்கவில்லை. 1996களில் அந்தப் பகுதியில் இவர்கள் குடியிருந்த காணிகளை விட்டு விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டார்கள்.

''1990இல் ஒன்றரை ஏக்கர் நிலத்தை காடுவெட்டி துப்புரவு செய்து நாங்கள் இங்கு குடிவந்தனாங்கள். 1996 இல் புலியள் எங்கள எழும்பச் சொல்லிப் போட்டினம். வேற இடத்தில எங்களுக்குக் காணி தறதா அவையள் சொல்லிச்சினம். அதுவரைக்கும் தற்காலிகமாக இந்த இடத்தில் இருக்கச் சொல்லிச்சினம். நாங்களும் நம்பி வாழ்ந்தம். ஆனால் எங்களுக்கு வேற காணி கிடைக்கவேயில்லை. சண்டை முடிஞ்சுதுதானே இனியாவது காணி கிடைக்கும் என்று பார்த்தால் இப்ப அதுவும் இல்லாமல் போட்டுது'' என்கிறார் கணவனைப் போருக்குப் பலி கொடுத்த பெண் ஒருவர்.

தன்னுடைய பிள்ளைகளுடன் இந்தத் தாய் வாழ்ந்துவரும் கொட்டகை மனிதர் வாழும் தரமற்றது. ''நாங்கள் மீளக்குடியமர வரேக்க தொண்டு நிறுவனம் ஒன்று இந்தக் குடிசைக்கான பொருள்களைத் தந்தவை. இப்ப அதுவும் இடிஞ்சு விழுகிற நிலையில இருக்குது. எங்களுக்கு வீட்டுத் திட்டம் ஒன்றும் தாரதில்லை. கேட்டால் நிரந்தரக் காணி இல்லை என்று சொல்லுகினம். அப்ப, காணியையாவது நிரந்தரமாத் தாங்கோவன் என்றால் அதுவும் தருகினம் இல்லை'' என்று அந்தத் தாய் அங்கலாய்க்கிறார்.

எதுவித உதவியும் இல்லாத நிலையில் வாழ்வாதாரத்துக்கும் வழியில்லாத நிலையில் எப்படி வாழ்வது? என்பதுதான் அவர் எழுப்பும் கேள்வி. ''நல்ல ஒரு மேட்டுக் காணியாக இருந்தால் ஏதோ பயிர், கொடிகளை செய்து அல்லது ஆடு, மாடு, கோழி வளர்த்து செலவுக்கு ஒரு வருமானத்தைத் தேடலாம். இந்தக் காணிக்குக்கூட உறுதி இல்லை. அதால வீட்டுத் திட்டமும் இல்லை. இந்த வயற் காணிகளில் குடியிருக்க ஏலாது'' என்கிறார் அந்தத் தாய்.

தாங்கள் ஆரம்பத்தில் காடு வெட்டித் துப்புரவு செய்த காணிகளைத் தமக்கே தந்தால் நல்லது என்பதுதான் அவரது கருத்து. அதாவது புலிகளால் பெறப்பட்டு பின்னர் தென்னந் தோப்பாக்கப்பட்ட தமது காணிகளை இராணுவம் தம்வசம் ஒப்படைத்தால் தாங்கள் ஓரளவுக்காவது பிழைத்துப் போகலாம் என்கிறார் அவர்.

1990களில் மேற்படி தென்னந் தோட்டக் காணிப் பகுதியில் தாமும் குடியிருந்தார் என்றும் அதில் தோட்டம் செய்து வாழ்ந்தார் என்றும் சொல்கிறார் இரத்தினம் பாலசிங்கம். ''நாட்டுச் சூழலால இடம்பெயர்ந்தம். திரும்பி வரேக்க எங்கட காணி கிடைக்கும் என்று நினைச்சம் ஆனா நடக்கேல்லை'' என்கிறார் அவர் விரக்தியுடன். ''எங்களுக்குத் தெரிஞ்ச தொழிலே தோட்டச் செய்கை தான். இப்ப வேறு இடங்களில் குத்தகைக்குக் காணி எடுத்துதான் தோட்டம் செய்ய வேண்டியிருக்கு. அதுவும் ஒருபோகம் கிடைக்கும். ஒரு போகம் கிடைக்காது. அதால காசுக் கஷ்டம் பெரிசாத்தான் கிடக்கு'' என்கிறார் அவர்.

இப்படி அந்த 52 குடும்பங்களுக்கும் ஒவ்வொரு சோகக் கதைகள் இருக்கின்றன. தமக்கு மேற்படி சின்னப் பல்லவராயன் கட்டு தென்னந்தோட்டக்காணியில் தலா அரை ஏக்கராவது நிலம் வழங்க வேண்டும் என்துபதான் அவர்களது ஒரே கோரிக்கை.

ஆனால், இராணுவமோ அந்தக் காணியை விடமாட்டோம் என்று அடாத்துப் பண்ணிக் கொண்டு நின்றது. புலிகள் வைத்திருந்தது எல்லாம் எங்களுக்குச் சொந்தம் என்று இராணுவம் சட்டநியாயம் பேசுகிறது. மக்களின் பிரச்சினைகள் பற்றியோ அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் பற்றியோ அதற்கு அக்கறை இல்லை.

ஆனால், அவற்றைப் பற்றி அக்கறைப்படவேண்டிய - இந்த மக்களுக்கு உதவ வேண்டிய - அரச அதிகாரிகளும் இராணுவத்துடன் சேர்ந்து கொண்டு அந்தக் காணியை இராணுவத்துக்கே தாரை வார்க்க அதிகாரிகள் உதவுகிறார்கள் என்பது மக்களின் குற்றச்சாட்டாக இருக்கிறது.

குடியிருப்புக்கு உகந்த நிலையில் காணப்படும் சுமார் மூன்று ஏக்கர் சின்னப் பல்லவராயன் கட்டு காணியை இலங்கை இராணுவத்தின் 66 ஆவது படைப்பிரிவே இப்போது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இந்தக் காணியைத் தமது முழுமையான பயன்பாட்டுக்கு வழங்குமாறு அது பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது ஒருபுறம் இருக்க, பூநகரி வாடியடியில் உள்ள இரண்டு குளங்கள் மற்றும் பழைய மருத்துவமனைக் காணி இரண்டு ஏக்கர் அதனைச் சூழவுள்ள பொதுமக்களின் காணிகள் என்பனவும் ஆக்கிரமிக்கப்பட்டு 66 ஆவது படைப்பிரிவின் படைமுகாமாக இப்போதுள்ளன. இந்த முகாமை அங்கு நிரந்தரமாக்குவதற்கு படைத்தரப்பு திட்டமிட்டு வருவதாகத் தெரிகிறது.

66 ஆவது படைப்பிரிவின் படைத்தலைமையகமாகக் [illegible] வாடியடி பகுதியில் அமைந்துள்ள [illegible] மருத்துவ மனையின் இரண்டு ஏக்கர் காணி, வாடியடியில் உள்ள பதின்னான்கு பேருக்கு சொந்தமான சுமார் 46 ஏக்கர் நெற்செய்கைக் காணி மற்றும் வாடியடிக்குளம், ஆபாணப் பாப்பான் குளம் ஆகியனவும் இராணுவத்தினரின் பயன்பாட்டிலேயே இப்போது இருந்து வருகின்றன.

**சின்னப்பல்லவராயன் கட்டில் வசிக்கும் 52 குடும்பங்களுக்கும் ஒவ்வொரு சோகக் கதைகள் இருக்கின்றன. தமக்கு மேற்படி சின்னப் பல்லவராயன் கட்டு தென்னந்தோட்டக்காணியில் தலா அரை ஏக்கராவது நிலம் வழங்க வேண்டும் என்பதுதான் அவர்களது ஒரே கோரிக்கை.**

**ஆனால், இராணுவமோ அந்தக் காணியை விடமாட்டேன் என்று அடாத்துப் பண்ணிக் கொண்டு நின்றது.**

இவ்வாறு பூநகரி பிரதேசத்தின் நன்னீர்த் தேவையையும் விவசாய (நெல்) உற்பத்திக்கு நீரை வழங்கும் இரு குளங்களையும் வயற்காணிகளையும் இதைவிட பழைய கோட்டை, பொது விளையாட்டு மைதானம் என்பவற்றையும் தம்வசப்படுத்தி வைத்திருக்கும் படையினர் சின்னப்பல்லவராயன் கட்டு மக்களின் காணிகளையும் கையகப்படுத்த முயற்சிக்கின்றனர். அவற்றைத் தமக்கு சட்டரீதியாக வழங்குமாறும் அரச அதிகாரிகளிடம் வற்புறுத்தி வருகின்றனர்.

பொதுமக்களின் காணிகளை அவர்கள் திரும்பப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய அரச அதிகாரிகளோ இந்த விடயத்தில் காணிகளை இராணுவத்திற்கு வழங்கவே முயற்சி செய்து வருகின்றனர் என்ற கருத்துக்கள் பல்வேறு முனைகளிலும் இருந்து கிளம்புகின்றன.

இராணுவத்தினர் விடயத்தில் அதிகாரிகள் மக்களுக்காகக் குரல் கொடுப்பதில்லை என்ற பொதுக் காரணத்தாலேயே இந்த அச்சம் எழுந்துள்ளது தெரிகிறது.

சின்னப்பல்லவராயன்கட்டு மக்களின் பிரச்சினை கடந்த 11ஆம் திகதி பூநகரி பிரதேச காணிப்பயன்பாட்டுக் குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதில் அந்தக் காணிகளை இராணுவத்துக்கு வழங்குவது பற்றி வாதப் பிரதிவாதங்களும் இடம்பெற்றுள்ளன.

இதில், குறித்த 52 குடும்பங்களுக்கும் தலா ஒரு ஏக்கர் வீதம் காணிகளை வழங்கி விட்டு மீதமிருந்தால் அதனை இராணுவத்துக்கு வழங்கலாம் என்று யோசனை முன்வைக்கப்பட்டது. இதற்குச் சாதகமான சூழலே அங்கு நிலவியது.

அதன் பின்னர் கடந்த 17ஆம் திகதி மீண்டும் காணிப்பயன்பாட்டுக் குழுவின் கூட்டம் நடைபெற இருந்தது. கூட்டம் 10 மணிக்கு நடைபெறும் என்று கூறியபோதும் பன்னிரண்டு மணி வரை ஆரம்பமாகவில்லை.

அதன் பின்னர் அங்கு காத்திருந்த மக்களிடம் பேசிய பூநகரி பிரதேச செயலர், காணிகளை வழங்க இராணுவம் மறுக்கிறது என்றும் அதனால் மக்களுக்குக் காணிகள் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றும் தெரிவித்திருந்தார்.

இது மக்கள் மத்தியில் மேலும் சந்தேகங்களைக் கிளப்பி விட்டுள்ளது. அதிகாரிகள் இராணுவத்துக்குச் சார்பாகவே நடக்கிறார்கள் என்று அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

இருப்பினும் ''சின்னப்பல்லவராயன்கட்டுக் காணிகளில் ஒரு பகுதியை அந்தப் பகுதி மக்களுக்குப் பிரித்துக் கொடுப்பது குறித்து ஆராயப்படும்'' என்று பூநகரி பிரதேச செயலர் எஸ்.ஆர்.வசந்தகுமார் தெரிவித்தார்.

இராணுவம் அந்தக் காணிகளைக் கையகப்படுத்த முயற்சிப்பதை அவர் உறுதிப்படுத்தினார்.

''பழைய வைத்தியசாலைக் காணி இரண்டு ஏக்கர் இருக்கிறது. மருத்துவமனை வேறு இடத்தில் அமைவதால் சுகாதாரத் திணைக்களம் ஆட்சேபனை தெரிவிக்காவிட்டால் இராணுவம் அதைப் பெற்றுக் கொள்ளும். ஏனைய காணிகளை சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் அரசு சுவீகரித்துக் கொண்டு அவற்றுக்கு இழப்பீட்டை வழங்கும். எப்படி இருப்பினும் பிரதேச காணி பயன்பாட்டுக் குழு இந்த விடயம் தொடர்பாக ஆராயும். அதில் எடுக்கப்படும் முடிவுகள் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டு அனுமதிக்கப்படும். பின்னர் மாவட்ட காணிப் பயன்பாட்டுக் குழுவால் அவை ஆராயப்பட்டே இறுதி முடிவு எடுக்கப்படும்'' என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரின் மிரட்டலால் ஆத்திரத்தில் நீதித்துறை

■ எஸ்.ஆர்.



கடந்த வியாழனன்று வடக்கு நீதித்துறை மொத்தமும் கிளர்ந்து எழுந்து போராட்டத்தில் குதித்தது. மறுநாள் வெள்ளிக் கிழமை மொத்த இலங்கையின் நீதித்துறையும் இந்தப் போராட் டத்தில் இணைந்தது. அத்துடன் அது அமைச்சர் ரிஷாத் பதியு தீனுக்கு எதிரான போராட்டமாக வும் பரிணாமம் பெற்றது.

மன்னார் நீதிமன்றத்தின் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் கல்லெறிந்து தாக்குதல் நடத்திய தைத் தொடர்ந்தே நீதித்துறை யினர் எதிர்ப்புப் போராட்டத்தில் குதித்தனர். தொடர்ந்து மன்னார் நீதி பதி ஏ.யூட்சனை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தொலைபேசியில் மிரட் டினார் என்ற தகவலும் பரவ அது இலங்கை முழுவதும் நீதித்துறை யைச் சீற்றங் கொள்ள வைத்தது.

**பிரச்சினை ஆரம்பம்**

மன்னார் உப்புக்குளம் கோந் தைப்பட்டி மீன்பிடி இறங்குதுறை யில் இரண்டு மீன்பிடிக் கிராம மக்களுக்கிடையில் ஏற்பட்ட சர்ச் சையே இவை எல்லாவற்றுக்கு மான மூல காரணம்.

மன்னார் தீவின் பழமை வாய்ந்த கோட்டைக்கு அருகே கோந்தைப் பிட்டி மீன்பிடித் துறை உள்ளது. கடந்த பல வருடங்களாக உப்புக் குளம் கோந்தைப்பட்டி மீன்பிடி இறங்குதுறை என்றே இது அழைக் கப்பட்டு வருகின்றது.

போர் தீவிரம் பெற்றிருந்த போது இடம் பெயர்ந்த விடத்தல் தீவு பகுதி மக்கள் மன்னார் தோட்ட வெளியில் குடியமர்ந்தனர். தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாது இருந்த இந்த மக்கள் அங்கு ஜோசப்வாஸ் நகர் எனும் கிராமத்தை உருவாக்கினர்.

தொழில்வாய்ப்பற்றிருந்த ஜோசப்வாஸ் நகர் மீனவர்கள் கோந்தைப்பிட்டி துறையில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட மனிதா பிமான அடிப்படையில் அனு மதிக்கப்பட்டனர்.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக மன்னார் ஜோசப்வாஸ் நகர் மீனவர்கள் கோந்தை பட்டி இறங்கு துறையில் இருந்தே தொழில் செய்து வருகின்றனர். 60 கண்ணாடியிழைப்படகுகள் மற்றும்100 வள்ளங்கள் ஆகிய வற்றைப் பயன்படுத்தி ஜோசப் வாஸ் நகர் தொழிலாளர்கள் 250 பேர் இங்கு மீன்பிடியில் ஈடு பட்டு வந்தனர்.

உப்புக்குளம் மீனவர்கள் முஸ் லிம் மதத்தையும் ஜோசப்வாஸ் நகர மக்கள் கிறிஸ்தவத்தையும் பின்பற்றி வருகின்றனர். கடந்த பல வருடங்களில் இவர்களி டையே பிரச்சினைகள் வேறுபாடு கள் வந்ததில்லை. அவ்வப்போது வரும் சிறு பிரச்சினைகள் உடனடி யாகவே தீர்க்கப்பட்டுவிடும்.

இந்த நிலையில், அண்மையில் மன்னார் ஆயர் தொடர்பில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களைத் தொடர்ந்து கோந்தைப்பிட்டி துறையில் தொழில் செய்துவரும் உப்புக்குளம் மற்றும் ஜோசப் வாஸ் நகர மீனவர்களிடையே பிரச்சினைகளை ஏற்படுத்த திட்ட மிட்ட செயல்கள் அரங்கேறுவ தாக மன்னாரில் உள்ள தொண்டு அமைப்பு ஒன்றின் அவதானி ஒருவர் தெரிவித்தார்.

**அரசியல் வாதிகளின் தூண்டுதல்**

''அரசியல்வாதிகளே இந்த இரு பகுதியினருக்கும் இடையி லான தற்போதைய பிரச்சினைக் குக் காரணம். தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் பிரிவி னையை ஏற்படுத்தி அதில் அரசியல் குளிர்காய அவர்கள் முயற்சி செய்து வருகின்றனர்'' என்று அவர் கூறினார்.

மன்னார் ஆயர் தொடர்பில் நாடாளுமன்றத்தில் அமைச்சர் ரிஷாத் கடுமையாக விமர்சித்ததைக் கண்டித்து மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம் காரசாரமான அறிக்கைகளை வெளியிட்டிருந்தது. இதனைத் தொடர்ந்தே ஜோசப்வாஸ் நகர தமிழ் மக்கள் பல்வேறு நெருக்கு வாரங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்ததாக சமூக ஆர்வலர்கள் பலரும் சுட்டிக் காட்டுகிறார்கள்.



இந்தப் பிரச்சினைக்குப் பின் னர் மன்னார் கோந்தைப்பட்டி யில் கடல் தொழிலில் ஈடுபட்டு வந்த ஜோசப்வாஸ் நகர மீனவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை உப்புக்குளம் மக்களால் வலியுறுத்தப்படலாயிற்று.

கடந்த சில மாதங்களாக இதற் கான முயற்சிகள் தீவிரப்படுத்தப் பட்டன. மன்னார் ஜோசப்வாஸ் நகர் மீனவர்களை உப்புக்குளம் கோந்தைப்பிட்டி மீன்பிடி இறங்கு துறையில் இருந்து வெளியேற்ற உப்புக்குளம் பள்ளிவாசல் நிர் வாகத்தினர், உப்புக்குளம் மீன் பிடி சங்கத்தினர், அரசியல் பிர முகர்கள் ஆகியோர் தொடர்ந்து முயற்சித்தனர்.

ஒரு கட்டத்தில் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு இந்த நடவடிக்கையில் முன்னேறும் நிலைக்கு உப்புக்குளம் மக்கள் சென்றனர். கடந்த 13ஆம் திகதி மதியம் உப்புக்குளம் கோந்தைப் பட்டி மீன்பிடி இறங்குதுறைமுகப் பகுதிக்கு சென்ற உப்புக்குளம் கிராம மக்கள் அங்கிருந்த ஜோசப் வாஸ் நகர மீனவர்களின் வாடி களை அகற்ற முற்பட்டனர்.

இந்த முயற்சியில் சுமார் 8 மீன்பிடி வாடிகள்வரை சேதமாக் கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த நிலையில் அந்த இடத்திற்கு வந்த இராணு வத்தினரும், பொலிஸாரும் நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். பாதிக்கப் பட்ட ஜோசப்வாஸ் நகர மீனவர் கள் மன்னார் பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்தனர்.

**வழக்கு விசாரணையும் நீதிமன்றத் தீர்ப்பும்**

16ஆம் திகதி (திங்கட் கிழமை) மன்னார் நீதிமன்றத்தில் இப்பிரச்சினை தொடர்பிலான வழக்கு விசாரணைக்கு எடுக்கப் பட்டது. வாடிகளைச் சேதப்படுத் தியவர்களைக் கைது செய்யு மாறு நீதிபதி உத்தரவிட்டார். அத்துடன் ஜோசப்வாஸ் நகர மீனவர்களுக்கு மாற்று இடம் வழங்கப்படும் வரை அவர்கள் தொடர்ந்து கோந்தைப்பிட்டித் துறையில் இருந்து தொழில் செய்யவும் மன்னார் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இந்தத் தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்த மன்னார் உப்புக்குளம் மக்கள், கடந்த புதன்கிழமை காலை மன்னார் நீதிமன்றத்தின் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர். ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைந்து செல்லும்படி பொலி ஸார் உத்தரவிட்டனர். அதையும் மீறி அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தபோது தடியடி நடத்தி கண்ணீர்ப்புகைக் குண்டுகளை யும் பொலிஸார் வீசினர்.

**நீதிமன்று மீது கல்வீச்சு**

இந்தக் களேபரத்துக்கு இடை யில் போராட்டக்காரர்களுக்கு இடையில் இருந்து பறந்த கற்கள் நீதிமன்றத்தின் கண்ணாடிகளைப் பதம் பார்த்தன. சில கற்கள் நீதிமன்றப் பணியாளர்களின் அருகில் போய் விழுந்தன.

இலங்கையின் நீதித்துறை கொதித்தெழுவதற்கான அடிப்ப டைக் காரணம் இவ்வாறு நீதிமன் றத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட் டமைதான் என்று வெளிப் படையாகக் கூறப்படுகின்றது.

ஆனால், அதையும்விட அதிர்ச்சி கரமான விடயங்கள் இந்த விவ காரத்தின் பின்னணியில் உள்ளன.

உப்புக்குளம் மக்களின் போராட் டம் நடப்பதற்கு முன்னதாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மன்னார் நீதிபதியைத் தொலை பேசியில் தொடர்பு கொண்டு, "நீ! கொடுத்த உத்தரவு பிழை. அதை உடனடியாக மாற்றவேண்டும். அப்படி இல்லாவிட்டால் மன் னார் பற்றி எரியும்'' என்று ஒருமையில் விளித்துப் பேசினார் என்று கூறப்படுகின்றது. சட்டத் தரணிகள் பலர் இதனை 'உதய னி'டம் தெரிவித்தனர்.

மறுநாள் உப்புக்குளம் மக்கள் போராட்டம் நடத்திக் கொண்டி ருந்த போது, மீண்டும் மன்னார் நீதிபதியைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அமைச்சர் ரிஷாத், "பார்த்தீர்களா! நான் சென் னது மாதிரியே மன்னார் பற்றி எரிகிறது" எனவும் கூறியுள்ளாராம்.

கடந்த வியாழக்கிழமை சட் டத்தரணி அன்ரன் புனிதநாயகம் நீதிமன்ற வளாகத்தில் பிரசன்ன மாகியிருந்த ஊடகவியலாளர் களிடம் இந்தத் தகவல்களை உறுதிப்படுத்தியிருந்தார்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மன்னார் மாவட்ட நீதிபதியை தொலைபேசி ஊடாக எச்சரித் திருப்பதோடு தான் சொன்னவாறு தற்போது மன்னாரில் நடக்கின் றது பார் என தரக்குறைவான வார்த்தைகளால் தெரிவித்தி ருக்கிறார் என்று சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் ஊடகங் களிடம் தெரிவித்தார்.

ஆனால் இந்தக் குற்றச்சாட் டுக்களை அமைச்சர் ரிஷாத் மறுக்கிறார். குறித்த தகவல் தொடர்பில் அமைச்சருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, எந்தவொரு கட்டத்திலும் தான் நீதிபதியை தொடர்பு கொண்டு பேசவும் இல்லை அச்சுறுத்தல் விடுக்கவும் இல்லை என்றார்.

ஆனால், அமைச்சரால் தான் மிரட்டப்பட்டமை தொடர்பாக மன்னார் நீதிபதி பிரதம நீதியரசரிடம் முறையிட்டுள்ளார் என்று 'உதயன்' அறிந்தது. பிரதம நீதியரசர் இந்த விடயத்தை நீதி அமைச்சர் ரஊப் ஹக்கீமினதும் ஜனாதிபதியினதும் கவனத்துக் குக் கொண்டு சென்றதை அடுத்து, இது குறித்து விசா ரணை நடத்தி தனக்கு அறிக்கை தருமாறு ஜனாதிபதி பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

எனினும் ''மன்னாரில் தற்போது நடைபெற்று வரும் விடயங்களை பார்க்கும்போது, அங்கு இனவாதமும் மத வாதமும் தலைவிரித்து ஆடு கிறது. இவ்வகையான செயல் பாடுகளை முஸ்லிம் மக்களை மன்னாரிலிருந்து துரத்துவதற்கு செய்யப்படும் சதியாகவே நான் பார்க்கிறேன்'' என்று அமைச்சர் ரிஷாத் பதியுதீன் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அவர் அப்படிக் கூறுகின்ற போதும் இலங்கை முழுவதும் நீதித்துறை அமைச்சர் ரிஷாத்தின் நடவடிக்கை குறித்துக் கொதித் துப் போயுள்ளது.

**ஹக்கீமின் கண்டனம்**

மன்னார் நீதிபதி அச்சுறுத் தப்பட்டமைக்கு நீதி அமைச்சர் ஹக்கீமும் கண்டனம் தெரிவித் துள்ளார். சம்பவத்தைத் தான் வன்மையாக கண்டிக்கிறார் என்று நீதி அமைச்சர் ரஊப் ஹக் கீம் தெரிவித்துள்ளார். "சம்பவம் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தினேன். அத்துடன் சட்டத் தரணிகள் சங்கத்தின் தலைவரு டன் சேர்ந்து நேரடியாக மன் னாருக்குச் சென்று சட்டத்தரணி களுடன் பேச்சு நடத்தவிருந் தேன். அதற்கிடையில் அவர்கள் போராட்டத்தில் குதித்து விட்ட தால் அது முடியாமல் போய்விட்டது. விரைவில் இது தொடர்பில் உரிய விசாரணை களை நடத்தி, சுமுகமான நிலையை உருவாக்க வேண்டும்'' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

மன்னார் நீதிபதியை மிரட்டி யதற்காக அமைச்சர் ரிஷாத் பதியுதீனை உடனடியாகப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று ஜனாதிபதியிடம் வலியுறுத்தி இருக்கிறது ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் அமைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







| கால எல்லை | மாதாந்தம் | | வருடாந்தம் | | முதிர்ச்சியில் | |
|---|---|---|---|---|---|---|
| மாதம் | வட்டி வீதம் | வ.வி.வீ | வட்டி வீதம் | வ.வி.வீ | வட்டி வீதம் | வ.வி.வீ |
| 1 | 15.75% | 16.94% | | | 15.75% | 16.94% |
| 3 | 15.85% | 17.05% | | | 16.00% | 16.99% |
| 6 | 16.00% | 17.23% | | | 16.25% | 16.91% |
| **12** | **16.25%** | **17.52%** | **16.50%** | **16.50%** | **16.50%** | **16.50%** |
| 24 | 16.50% | 17.81% | 16.75% | 16.75% | 17.00% | 15.76% |
| 36 | 16.75% | 18.10% | 17.00% | 17.00% | 17.25% | 14.91% |
| 48 | 17.00% | 18.39% | 17.25% | 17.25% | 17.35% | 14.08% |
| 60 | 17.25% | 18.68% | 17.35% | 17.35% | 17.50% | 13.40% |

சிரேஷ்ட பிரஜைகளுக்கு (55 வயதிற்கு மேல்) 1% மேலதிக வட்டி

கொமர்ஷல் லீசிங் அண்ட் பினான்ஸ் லிமிட்டெட் பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிட்டெட்டிடமிருந்து A-(lka) தரச்சான்றிதழையும், 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் அனுமதியையும் பெற்றுள்ளது. கூட்டிணைக்கப்பட்ட திகதி 22/04/1988

மேலதிக விபரங்களைப் பெற உங்களுக்கு சமீபமாகவுள்ள எமது காரியாலயத்திற்கு வாருங்கள்
அல்லது அழையுங்கள் - (011) 3 526526, (011) 4 526526, 0773-093093, 0777-558576

இல: 68,பௌத்தாலோக மாவத்தை, பம்பலப்பிட்டி.
கொழும்பு - 04. பெக்ஸ் (011) 4526517, வெப் : www.clc.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக சலுகைகள் வழங்கும்
நிலையான வைப்பு
அதிக நம்பிக்கை
அதிக சலுகைகள்
அதிக பாதுகாப்பு
16.5% நிலையான வைப்பு
17.5% சிரேஷ்ட பிரஜை நிலையான வைப்பு
லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)
லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
இல. 100/1 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய.
தொலைபேசி: 5880880, தொலைநகல்: 2865602
ஈ-மெயில்: lofin@lankaorix.com
இணையத்தளம்: www.lankaorix.com
துரித அழைப்பு
0773815602

# புகையிலை வருடாந்தம் 6 மில். பேரைக் கொல்கின்றது !



புகையிலைப் பயன்பாடு இறப்பதற்கான முன்னணிக் காரணங்களில் ஒன்றாகும். உலகெங்கிலும் புகையிலை வருடாந்தம் 6 மில்லியன் மக்களைக் கொல்கின்றது.

600,000 இற்கும் அதிகமானோர் புகைத்தலுக்கு அடிமையாக உள்ளனர். அந்தந்த நாடுகள் புகையிலைப் பயன்பாட்டைத் தடுக்காவிட்டால் இறப்பு வீதம் 2030இல் 8 மில்லியன் அதிகரித்துவிடும். இவற்றில் 80 வீதமானோர் வளரும் மற்றும் வளர்ச்சியடையாத நாடுகளிலேயே வசிக்கின்றார்கள் என்று இலங்கையின் பேராசிரியர் கார்லோ பொன்சேகா தெரிவிக்கின்றார்.

சர்வதேச அறக்கட்டளையில் உள்ள முதலாவது ஆசிய நாடாக இலங்கை உள்ளதெனலாம். எனினும் ஏனைய நாடுகளைவிடவும் 4 வருடம் பின்தங்கிய நிலையில் இலங்கை உள்ளது.


உலகெங்கிலும் இந்தக் கைத்தொழில் கட்டுப்பாடு சுகாதாரக் கொள்கைகளினால் தலையிடப்பட்டு வருகின்றது. இதைச் சுகாதாரப் பிரிவினர் அனுமதிக்கக்கூடாது என்றார் பேராசிரியர்.



உடனடி அழைப்பு:
மேல் மாகாணம்
மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள்
தென் மாகாணம்
மத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள்
வடமத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் வட மாகாணங்கள்
கிழக்கு மாகாணம்
வட மாகாணம்
TVS Lanka (Pvt) Ltd.
GENUINE
நாடளாவிய இணையற்ற சேவையும் உதிரிப்பாக விற்பனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டை சாப்பிட்டால் மார்பகப் புற்றுநோய் வராது



தினசரி ஒரு முட்டை சாப்பிடுபவர்களுக்கு மார்பகப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகள் குறைவதாக சமீபத்திய ஆய்வு ஒன்றில் தெரிவிக்கின்றது.

முட்டையானது அதிக சத்து நிறைந்த உணவு. இதற்கு அதிகம் செலவு செய்யத் தேவையில்லை. தினசரி இரண்டு முட்டை சாப்பிட்டால் மருத்துவரிடம் செல்லத் தேவையில்லை என்று பல்வேறு ஆய்வுகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் பெண்களுக்கு மகிழ்ச்சிகரமான தகவல் ஒன்றும் தற்போது கண்டறியப்பட்டுள்ளது. தினம் ஒரு முட்டை சாப்பிட்டால் மார்பக புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகள் 24 சதவீதம் குறையும் என ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பெண்களை அச்சுறுத்தும் நோய்களில் முக்கியமானவை மார்பகப்புற்றுநோய், கருப்பை வாய் புற்றுநோய். முட்டை சாப்பிடுபவர்களுக்கு மார்பகப்புற்றுநோய் பற்றிய அச்சமின்றி வாழலாம்.

அமெரிக்காவில் உள்ள கரோலினா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் இது தொடர்பாக 3 ஆயிரம் பெண்களிடம் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் முடிவில் இந்த தகவல் உறுதி செய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். இது குறித்து அவர் தெரிவித்ததாவது: நமது உடலில் உள்ள செல்கள் சரியாக வேலை செய்வதற்கு சோலைன் என்ற புரதம் தேவைப்படுகிறது.

ஒரு முட்டையில் 125.5 மில்லி கிராம் சோலைன் உள்ளது. ஆண்கள், பெண்கள், வயது என்ற வித்தியாசம் இல்லாமல் அனைவருக்குமே இந்த சோலைன் தேவைப்படுகிறது. முக்கியமாக பெண்களுக்கு தாய்மை அடையும் பருவத்தில் இது அதிகமாக தேவைப்படுகிறது.

ஒரு நாளைக்கு நமக்கு 455 மில்லி கிராம் சோலைன் தேவைப்படுவதாகவும் முட்டை, பால் ஆகியவற்றை உட்கொள்ளும் போது இவை உற்பத்தியாவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. உடலில் இந்த சோலைன் குறையும்போது, மார்பக புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாகிறது. முட்டை உட்கொள்ளும்போது சோலைன் சுரப்பதால் மார்பக புற்றுநோய் வருவது தடுக்கப்படுகிறது.




## எளிய மருத்துவ குறிப்புகள்

முட்டைக்கோஸ், முள்ளங்கி, கோவா, பாகற்காய், வல்லாரைக் கீரை, கரட், எலுமிச்சை பழம் முதலியன இரத்தத்தைச் சுத்தப்படுத்தும்.

கருவாடு, அதிக உப்பு ஊறுகாய், அப்பளம் போன்றவற்றை தவிர்ப்பது நல்லது.

காலையிலும், இரவிலும் அத்திப் பழத்துடன் பேரீச்சை சேர்த்து உண்டால் ஆண்களுக்கு உயிரணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். இரத்த அழுத்தத்தை சீராக வைக்க அத்திப்பழம் உதவுகிறது. உடம்பில் கெட்ட கொழுப்புகளை வெளியேற்றும்.

மூளை நரம்புகளை வலுப்படுத்தி ஞாபக சக்தியை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது வால்நட்

இரத்தத்தில் உள்ள கெட்ட கொழுப்பை குறைத்து இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும் கிரீன் டீ இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படுவதையும் தடுக்கிறது. இரத்தத்தில் சீனியின் அளவை கட்டுப்படுத்துகிறது. வாய் துர்நாற்றத்தைப் போக்குகிறது. பருக்கள் வராமலும் காக்கும். ஞாபக சக்தியைப் பெருக்கும்.

தோடம்பழம் தோல் நோயையும், உயர் இரத்த அழுத்தத்தையும் கட்டுப்படுத்தும்.

துளசி, தோல் நீக்கிய இஞ்சி சாப்பிட்டால் சளித்தொல்லை சரியாகும்.

வாழைப்பழம் சாப்பிட்டு வர பித்தம் குறையும்.

அப்பிள் நரம்புத் தளர்ச்சியை நீக்கும்.

தக்காளி இரத்தத்தை விருத்தியாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைபேசியோடு தூங்கினால் நிம்மதியான உறக்கம் வராது



சிலர் எப்போது பார்த்தாலும் கைபேசியுடன்தான் இருப்பார்கள். அவர்களுக்கு சிறிது நேரம் கைபேசி இல்லை என்றால் எதையோ இழந்ததுபோல் மாறிவிடுவார்கள். உறங்கும் போது கூட கைபேசியில் பாட்டு கேட்டுக் கொண்டே, இருக்க வேண்டும்.

அப்பொழுதுதான் நிம்மதியாக தூக்கம் வரும், என்ற நினைப்பு அவர்களுக்கு. இந்த செயல் தவறானது என்று சமீபத்திய ஆய்வு ஒன்றில் கண்டறியப் பட்டுள்ளது.

கைபேசியில் இருந்து வெளியாகும் கதிர்வீச்சுகளுக்கும் மனிதர்களின் தூக்கத்துக்கும் தொடர்பு இருப்பதாக தெரிவித்துள்ளனர். இந்தக் கதிர்வீச்சுக்கள் மனிதர்களின் தூக்கத்தை பாதிப்பதோடு, மன அழுத்தத்திற்கும் உள்ளாக்குவதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

நாள் முழுவதும் உழைத்து களைத்த உடல் ஓய்வெடுப்பது தூக்கத்தின் போதுதான். ஆழ்ந்த, அமைதியான தூக்கம்தான் மனிதர்களை இளமையாக வைத்திருக்கிறது என்று ஆய்வின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

நிம்மதியான தூக்கத்திற்கு அவசியமானவை என்ன என்பது குறித்து நிபுணர்கள் கூறும் ஆலோசனைகள்.

மனதில் சலனமின்றி இருந்தால் பஞ்சு மெத்தைதான் வேண்டும் என்றில்லை. கட்டாந்தரையே போதும் நிம்மதியான தூக்கம் வரும்.

நாம் உபயோகிக்கும் படுக்கையும் நமது தூக்கத்தை தீர்மானிக்கிறது. எனவே அழகைப் பார்த்து வாங்குவதை விட அது நமது உடலுக்கு சௌகரியமானதா என்று பார்த்து வாங்க வேண்டும். அதேபோல படுக்கை வாங்கும் போது விலையை விட அதன் தரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

படுக்கையானது மேடு, பள்ளம் இல்லாத அளவுக்கு சமமாக, கெட்டியாக இருக்கவேண்டும். படுக்கை பழையதாகிவிட்டால் மேடு-பள்ளமாகி விடும். அதில் தூங்கினால் உடம்பு வலி, முதுகு வலி, கழுத்து வலி தோன்றும். அதனால் பழையதை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக வாங்கிக்கொள்ள வேண்டும்.

தலையையும், கழுத்தையும் தலையணை பாலம்போல் தாங்கவேண்டும். அப்படி தாங்கினால்தான் முதுகெலும்புக்கு செல்லும் ரத்த ஓட்டம் தங்கு தடையின்றி நடைபெறும். அப்போது தூக்கம் நன்றாக வரும். படுக்கை அறையில் இரும்பு பொருள்கள் இருப்பது நல்லதல்ல. மரம், களிமண் போன்றவைகளில் உருவான பொருள்கள் இருப்பது நல்லது. இரும்புக் கட்டில்கள் தூக்கத்திற்கு ஏற்றதல்ல

படுக்கை அறையில் பூசக் கூடிய பெயிண்டுகளும் தூக்கத்திற்குத் துணைபுரியும். இளம் பச்சை, இளம் நீலம், வெள்ளை, கிரீம் ஆகிய இளநிற பெயிண்டுகளை பயன்படுத்தினால் அது தூக்கத்திற்கு ஒத்துழைக்கும்.

படுக்கை அறையில் அதிக வெளிச்சம் இருக்கக்கூடாது. திடீர் வெளிச்சம்பட்டால் தூக்கம் கலையும். வீதி ஓரத்தில் வீடு இருப்பவர்கள் ஜன்னல் ஓரத்தில் திரைச்சீலைகளை கட்டி வாகன வெளிச்சத்தை தடுத்து, தூக்கத்திற்கு தொந்தரவு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண் டும்.

படுக்கை அறை யில் டி.வி, கணினி போன்ற இலத்திரணியல் பொருள்களை வைக்கக்கூடாது. தூங்கப் போகும் போது அவற்றின் இணைப்பைத் துண்டிக்க வேண்டும். துண்டிக்க மறந்து தூங்கிவிட்டால் கணினி, டி.வி போன்றவைகளில் இருந்து வெளியேறும் காந்த அலை கள் தூக்கத்தையும், ஆரோக்கியத்தையும் கெடுக்கும்.

செல்போனை தலையணை அருகில் வைத்து தூங்கக்கூடாது. 3, 4 அடி தூரத்துக்குத் தள்ளி வைக்கவேண்டும். அருகில் வைத்தோம் என்றால் போனில் இருந்து வரும் கதிர்கள் தூக்கத்தை பாதிக்கும்.




வாழ்க்கையில் அனைத்து விடங்களையும் தேடிப்பார்க்கும் நான், பஜாஜ் மோட்டார் சைக்கிளொன்றை கொள்வனவு செய்தது, அதன் புதிய வடிவத்திற்கேற்ப சிறந்த செயற்பாட்டையும் கொண்டிருப்பதனாலேயே ஆகும்.



...நான் எனது பஜாஜ் மோட்டார் சைக்கிளுக்கு அசல் பஜாஜ் உதிரிப்பாகங்களை மாத்திரமே பொருத்தியது, தரமான உற்பத்தியொன்றை, அதே தரத்துடன் பேணி, அதிக நாட்கள் நீடித்துழைக்க வேண்டும் என்பதற்கேயாகும்.

அசல் உற்பத்தியின் அசல் பெறுமதியை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

உங்களின் பஜாஜ் மோட்டார் சைக்கிளுக்கு
பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களை
மாத்திரே பொருத்திக் கொள்ளுங்கள்

பஜாஜ் அசல் உதிரிப்பாகங்கள் பொறுப்புடனும் நம்பிக்கையுடனும்...

tradlanka

நாடு பூராகவும் உள்ள எமது அங்கீகரிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள் விற்பனை முகவர்களிடமிருந்தும் நிறுவனத்தின் விற்பனை மத்திய நிலையத்திலிருந்தும் பெற்றுக் கொள்ள முடியும்.

விலை: ரூபா 5/- இலிருந்து
மேற்குறிப்பிடப்பட்ட விலை முன்னறிவிப்பின்றி மாறுபடலாம்.

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு 02. தொலைபேசி 011 4700600


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Banker
Bank of the Year 2010
SRI LANKA

The Banker
Bank of the Year 2009
SRI LANKA

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank

**ENRICHED WITH TRADITION**
**EMBRACING TECHNOLOGY**

Entering the Banking arena quarter of a century ago, we have innovated banking methods and invented new standards, to form new dimensions to the banking industry in Sri Lanka.

Constantly searching for the next breakthrough in the industry, we pride ourselves in taking greater strides in technological innovations, harnessing the best talent in the country.

The rapid expansion of our delivery channels has continued to create challenging opportunities for self-motivated individuals with a passion for excellence and success.

**TRAINEE STAFF ASSISTANTS**
**Northern Region**

**The Persons**

Dynamic and self motivated young individuals who are willing to perform in a challenging and rewarding environment.

**Requirements**

- Age – Below 23 years as at 11.08.2012
- Three passes in GCE (A/L) examination for main three subjects (in one sitting) excluding General English
- Minimum of 5 Credits in the GCE (O/L) examination, including Mathematics and English, in one and the same sitting. A Credit Pass for English obtained at a subsequent sitting will also be considered for eligibility

**The ideal candidates should also possess the following competencies;**

- Literacy in IT
- Proficiency in English and Tamil languages
- Exceptional interpersonal skills and ability to work in a team environment

**Training**

- The period of training will be 2 years, during which an allowance will be paid
- On completion of the training period, successful candidates will be considered for appointment as Junior Executives, subject to availability of positions

**Attractive remuneration packages along with a modern and conducive work environment await the right candidates.**

Curriculum Vitae should be forwarded **through post to the address given below** or submitted to the **closest Branch (Northern Region)** stating qualifications and citing contact details of two non-related referees within five (05) days.

Please state "Trainee Staff Assistant – Northern Region" on the top left corner of the envelope.


***Selection will be strictly on merit. Any form of canvassing will be a definite disqualification.***

**While we value every application, for practical reasons we can only communicate with short-listed applicants.**

Manager
Human Resource Management
**Sampath Bank PLC**
No. 110, Sir James Peiris Mawatha
Colombo 02.

Sampath Bank PLC - Company No. PQ 144 Sampath Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka

# மாம்பழத் தோல் உடல் நிறையை குறைக்கும்



உங்களது நிறையைக் குறைக்கவும் மெலிந்து அழகாகத் தோற்றமளிக்கவும் ஒரு மாங்காயை முழுமையாகச் சாப்பிடுங்கள். வழமையாக நீங்கள் அதன் தோலையும் அகற்றிவிடுவீர்கள். ஆனால் தற்போது அதனைச் சேர்த்துச் சாப்பிடுவது சிறந்ததென ஆய்வு தெரிவிக்கின்றது.

மனிதனில் கொழுப்புக் கலங்களை மாம்பழத் தோல் அழிக்கும் தன்மை கொண்டது. இதனால் நாங்கள் இவற்றையும் சேர்த்துச் சாப்பிட்டால் எமது உடலில் கொழுப்புக் கரையுமென்கின்றனர் ஆய்வாளர்கள்.

மாம்பழத்தில் பல சிறந்த சத்துக்கள் உள்ளன. ஆனால் இவற்றிலும் ஏனைய பழங்களிலும் காணப்படும் பல சிக்கலான இயற்கைச் சேர்வைகள் பற்றியும் நாங்கள் அறிந்துகொள்ளவேண்டியுள்ளது.

இந்தக் கண்டுபிடிப்பானது ஆஸ்திரேலிய ஆய்வாளர்களால் இந்த வாரத்தில் வெளியிடப்பட்டுள்ள நிறையைக் குறைப்பதற்கான இரண்டாவது ஆய்வாகும்.

வடமேற்குப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்லூரியால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஆய்வில் ஒருவரின் நிறையைக் குறைப்பதைக் காட்டிலும் நிறையைக் கூட்டுவதை எவ்வாறு தடுப்பது என்பது பற்றியே ஆராயப்பட்டது.

இந்த ஆய்வை 204 பேரில் 3 கிழமைகள் செய்துபார்த்தனர். இதில் பங்குபற்றிய 40 வீதமானோர் அளவுக்கதிகமான நிறையைக் கொண்டவர்களாக இருக்கவில்லை.

இவ்வாறானவர்களில் பழங்கள், மரக்கறிகள் உட்கொள்தல் மற்றும் உடற்பயிற்சியை எடுத்தல் போன்றவற்றை அதிகரித்து கொழுப்பு மற்றும் ஓய்வுநேரங்களைக் குறைத்தனர். பின்னர், கொழுப்பைக் குறைத்து உடற்பயிற்சியை அதிகரித்து, கொழுப்பை அதிகரித்து எனப் பல செயற்பாடுகளைச் செய்துபார்த்தனர்.


இதன் பின்னர் அவர்களது முன்னேற்றங்களையும் எண்ணங்களையும் பதியும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஆய்வு முடிந்தபோது 6 இல் 5 பேர் தமது உடலில் மாற்றங்கள் இருப்பதைக் கண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



e Sampath ரெமிட்டன்ஸ் பணப் பரிசுகள்

# ரமழான் காலத்தில் சம்பத் வங்கி மூலம் பணம் பெற்று கைநிறைய பரிசுகளை வென்றிடுங்கள்!

ஜூலை 17ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 19 ஆம் திகதி வரை உங்களுக்கு வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பணத்தினை எந்தவொரு சம்பத் பிரதிநிதி மூலமும் சம்பத் வங்கிக்கு பெற்றுக்கொடுத்து கை நிறைய பரிசுகளை வென்றிடுங்கள்.

- இறுதி சீட்டிழுப்பில் ஒரு மில்லியன் ரூபா
  500,000 ரூபா வெற்றியாளர் மற்றும் 100,000 ரூபா வெற்றியாளர்கள் 5
  2012 ஜூலை 17 முதல் ஆகஸ்ட் 19 வரையான கொடுக்கல் வாங்கல் செல்லுபடியாகும்
- தினமும் 15,000 ரூபா வீதம் 02 வெற்றியாளர்கள்
  2012 ஆகஸ்ட் 1 முதல் 18 வரையான தினமும் செய்யும் கொடுக்கல் வாங்கல் செல்லுபடியாகும்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 0773 933 833

வெற்றியாளர்களுக்கான முதல் குலுக்கல் ஓகஸ்ட் 9 ஆம் திகதி மற்றும் இறுதிக்குலுக்கல் ஓகஸ்ட் 21 ஆம் திகதி நடைபெறும்

e Sampath remittance service
රෙමිටන්ස් සේවාව ரெமிட்டன்ஸ் சேவை
அக்கரையின் அன்பு உடனேயே இக்கரைக்கு

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.sampath.lk

සම්පත් බැංකුව சம்பத் வங்கி SampathBank


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியங்கள் மூலம் பெரும் செல்வந்தனான 9 வயதுச் சிறுவன்




பிரிட்டனைச் சேர்ந்த 9 வயதான சிறுவன் ஒருவன் தான் வரைந்த ஓவியங்கள் மூலம் செல்வந்தனாகியுள்ளான். பிரிட்டனின் நோர்போகை சேர்ந்த கெய்ரோன் வில்லியம்ஸன் என்ற இந்தச் சிறுவனின் 24 ஓவியங்கள் அண்மையில் சுமார் 2.5 லட்சம் ஸ்ரேலிங் பவுண்களுக்கு விற்பனையாகியுள்ளன. இயற்கைக் காட்சிகளை சித்தரிக்கும் ஓவியங்கள் 15 நிமிடத்தில் தொலைபேசி மற்றும் இணையத்தளங்களுக்கூடாக விற்பனையாகியுள்ளது.

மேற்படி சிறுவன் கடந்த 2008 ஆம் ஆண்டு தனது குடும்பத்துடன் மேற்கொண்ட சுற்றுலாவின்போது ஓவியங்களை வரைவதற்கு ஆரம்பித்தான்.


இந்தச் சிறுவனின் புகைப்படங்கள் பல்லாயிரக்கணக்கான பவுண்களுக்கு விற்பனையாகியதைத் தொடர்ந்து இந்தச் சிறுவன் சர்வதேச ஓவியராக விளங்குகிறான். அவன் ஒரு சில நிமிடங்களில் வரையும் ஓவியங்கள் கூட 6,000 அல்லது 7,000 ஸ்ரேலிங் பவுண்களுக்கு விற்பனையாகின்றன.

எனினும் இந்தச் சிறுவன் சம்பாதித்த பணத்தை அவன் 18 வயதை அடையும் வரை சுதந்திரமாகச் செலவிட அனுமதிக்கப்போவதில்லை என அவனின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# அமர்ந்திருப்பதை குறைத்தால் ஆயுள் அதிகரிக்கும்



அதிக நேரம் ஆசனத்தில் அமர்ந்திருந்து தொழில் புரிவதானது எமது ஆயுள் குறைவடைவதற்குக் காரணமாக அமைவதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

வளர்ந்தவர்கள் ஒரு நாளில் அதிகபட்சமாக 3 மணித்தியாலங்கள் மாத்திரம் அமர்ந்திருந்தால் அவர்கள் மேலதிகமாக இரண்டு வருடங்கள் வாழ முடியும் என ஆய்வாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

தொலைக்காட்சி பார்ப்பதும் இதேபோன்ற விளைவை ஏற்படுத்துவதாக ஆய்வாளர்களின் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

தொலைக்காட்சி பார்ப்பதைத் தினமும் இரண்டு மணித்தியாலங்களாக மட்டுப்படுத்துபவர்கள் ஏறத்தாழ ஒன்றரை வருடங்கள் மேலதிகமாக வாழமுடியுமென விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

உடல் உழைப்பு குறைந்த வாழ்க்கை முறையானது அதிக உடற் பருமன், உடற்திடமின்மை ஆகியவற்றுக்குக் காரணம் என நிபுணர்கள் நீண்டகாலமாக தெரிவித்து வந்துள்ளனர்.

இந்த விடயம் இதய நோய்கள், சர்க்கரை நோய் மற்றும் புற்றுநோய் என்பவற்றுடனும் தொடர்புள்ளதாகக் கருதப்படுகிறது.

மேற்படி புதிய தகவல்கள் அதிகமான நேரத்தைத் தமது இருக்கையிலே செலவிடும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கு மிகுந்த கரிசனைக்குரியதாகும்.

தமது அலுவலர்களை சந்திப்பதற்கு லிப்டுக்குப் பதிலாக படிக்கட்டுகளை பயன்படுத்தும் சிறிய நடவடிக்கைகள்கூட இதயத்தை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதற்கு உதவுகின்றன என்பதற்கு ஆதாரம் உள்ளது.

ஆசனத்தில் அமர்ந்திருக்கும் நேரத்தைக் குறைப்பதற்காக, தொலைபேசி உரையாடல்களை மேற்கொள்ளும்போது எழுந்து நிற்குமாறு மருத்துவ நிபுணரான டாக்டர் டேம் சாலி டேவிஸ், கடந்த வருடம் ஊழியர்களை அறிவுறுத்தியிருந்தார்.

18-90 வயதுக்கு இடைப்பட்ட 167,000 நபர்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பிலான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் எத்தனை மணித்தியாலங்கள் அமர்ந்திருப்பதிலும் தொலைக்காட்சி பார்ப்பதிலும் செலவிடுகின்றனர் என்பதும் எவ்வளவு காலம் வாழ்கின்றனர் என்பதும் ஒப்பிடப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

வளர்ந்தவர்கள் அதிகமான நேரம் அமர்ந்திருப்பது அமெரிக்காவில் 27 வீதமான மரணங்களுக்கு உள்ளாவதென லூசியானா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மேற்படி ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

அதேபோன்று 19 வீதமான மரணங்களுக்கு அளவுக்கதிமாக தொலைக்காட்சி பார்ப்பது காரணம் என கண்டறியப்பட்டது.

அமர்ந்திருக்கும் நேரத்தை குறைத்துக்கொள்ள வேண்டும் என பிரித்தானிய அதிகாரிகள் ஏற்கெனவே அறிவுறுத்தியுள்ளதாகப் பிரித்தானிய இதயநோயியல் துறை அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

எமது இதயத்தை ஆரோக்கியமாக, தொடர்ச்சியாக வைத்துக்கொள்ள வேண்டும். உள்ளூர் கடைகளுக்கு வாகனங்களில் செல்லாமல் நடந்து செல்லுதல், தொலைக்காட்சியை அதிகநேரம் பார்வையிடாமல் விளையாட்டுகளில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகள் உடலை சுறுசுறுப்புடன் இயக்குவதற்கான வழிமுறைகளாகக் காணப்படுகின்றன.

எவ்வாறெனினும், தொடர்ந்து அமர்ந்திருப்பது ஆயுள்காலத்தை குறைக்கிறது என்பது இன்னும் நிரூபிக்கப்படவில்லை என வேறு நிபுணர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் டேவிட் ஸ்பீகல்ஹால்டர் கருத்துத் தெரிவிக்கையில், இந்த ஆய்வு மக்கள் தொடர்பானது. கதிரையிலிருந்து எழுந்திருப்பதன் விளைவுகளை அது விளக்கவில்லை. எதிர்காலச் சந்ததியினரை பொறுத்தவரை சற்று அதிகமாக நகர்ந்தால் அவர்கள் சராசரியானவர்களைவிட நீண்ட ஆயுளுடன் வாழலாம். ஆனால் இப்போது எம்மில் பெரும்பாலானோர் தினமும் 3 மணித்தியாலங்களுக்கு குறைவாகவே அமர்ந்திருக்கிறோம் என அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HIGHEST INTEREST RATE
FOR 18th Months FIXED DEPOSITS

18 மாத நிலையான வைப்புக்கு
அதிகூடிய வட்டி வீதம்

18.5%

AER 17.74%

சிரேஸ்ட பிரஜைகளுக்கு (55 வயதிற்கு மேற்பட்டவர்கள்)

CALL 077 22 68 723

**கிளைகள்**
யாழ்ப்பாணம், நுகேகொட, நீர்கொழும்பு, கொள்ளுப்பிட்டி, இரத்தினபுரி, திருகோணமலை, வவுனியா

**அடகு நிலையங்கள்**
அளுத்கம, மட்டக்களப்பு, சிலாபம், கம்பஹா, ஹற்றன், ஜா-எல, கண்டி, றாகம, செட்டித்தெரு, வத்தளை

*Conditions Apply

SWARNAMAHAL FINANCIAL SERVICES PLC
சுவர்ணமஹால் பினான்ஸியல் சேர்விஸஸ் பீஎல்சீ.
No. 338, Hospital Road, Jaffna. Tele/Fax : 0212 220 245
E-mail: info@sfs.lk | Web: www.sfs.lk

SFS

Registered by the Monetary Board of the Central Bank of Sri Lanka under the Finance Companies Act No. 78 of 1988.


# குழந்தைகளுக்கு சளி, காய்ச்சலா வெற்றிலைச் சாறு கொடுங்கள்!

குழந்தைகளுக்குச் சளி காய்ச்சல் என்றாலே பெற்றோர்கள் பதறி அடித்துக் கொண்டு மருத்துவரிடம் ஓடுகின்றனர். ஆனால் வீட்டில் பெரியவர்கள் இருந்தால் எதற்கும் பதற்றப்படத் தேவையில்லை சின்ன சின்ன கை வைத்தியங்களைச் செய்து குழந்தைகளுக்கு முதலுதவி சிகிச்சை செய்வார்கள். அப்புறம் மெதுவாக மருத்துவரிடம் அழைத்துச் செல்லலாம். சிறு குழந்தைகளின் சளியைப் போக்குவதில் வெற்றிலை மிக முக்கிய பங்காற்றுகிறது. மூலிகை குணம் நிறைந்த வெற்றிலை குழந்தைகளின் நோயை போக்குவது குறித்து அனுபவம் வாய்ந்த பாட்டி சொல்வதைக் கேளுங்கள்.

### மூச்சுத்திணறல் குணமாகும்

குழந்தைகளுக்கு சளி அதிகமானால் இருமலும் மூச்சுத் திணறலும் ஏற்படும். அவர்களுக்கு வெற்றிலை சிறந்த நிவாரணம் அளிக்கிறது. வெற்றிலையை லேசாக மெழுகுவர்த்தி நெருப்பில் வாட்டி அதனுள் ஐந்து துளசி இலையை வைத்துக் கசக்கிப் பிழிந்து சாறு எடுத்து 10 மாத குழந்தைக்கு 10 துளிகள் காலை, மாலை கொடுக்க சளி, இருமல் குணமாகும். அனலில் வாட்டிய வெற்றிலையை மார்பிலும் பற்றாகப் போட சளி குறையும். வெற்றிலையை கடுகு எண்ணெயில் போட்டு லேசாக சூடு செய்து மார்பில் வைத்துக் கட்டிவர மூச்சுத் திணறல் மற்றும் இருமல் குணமடையும்.

### நுரையீரல் நோய்கள்

குழந்தைகளுக்கு வரும் காய்ச்சல், ஜன்னிக்கு, வெற்றிலைச் சாற்றில் கஸ்தூரி, கோரோசனை, சஞ்சீவி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை அரைத்து தேனுடன் கொடுக்க குணமாகும். சளி, இருமல், மாந்தம், இழுப்பும் குணமாகும்.

நுரையீரல் சம்பந்தமான நோய்கள் இருந்தால் வெற்றிலைச்சாறும், இஞ்சிச் சாறும் சம அளவு கலந்து அருந்தி வர நன்மை ஏற்படும். வெற்றிலையை அரைத்து கீழ்வாத வலிகளுக்கும், விதைப்பையில் ஏற்படும் வலி, வீக்கம் முதலியவைகளுக்கு வைத்துக் கட்ட நல்ல பலன் தரும்.

### மலச்சிக்கல் நோய் குணமாக

சிறுவர்களுக்கு அஜீரணத்தைப் போக்கி பசியைத் தூண்ட வெற்றிலையோடு மிளகு சேர்த்து கஷாயம் செய்து கொடுத்து வரலாம். குழந்தைகளுக்கு மலச்சிக்கல் ஏற்பட்டால் வெற்றிலைக் காம்பை ஆமணக்கு எண்ணையில் தோய்த்து ஆசன வாயில் செலுத்த உடனடியாக மலம் கழியும்.

கம்மாறு வெற்றிலைச் சாறு 15 மி.லி. அளவு வெந்நீரில் கலந்து கொடுக்க வயிற்று உப்புசம், மந்தம், ஜன்னி, சீதளரோகம், தலைவலி, வயிற்று வலி குணமாகும்.

### குரல் வளம் கிடைக்கும்

வெற்றிலைச் சாறு சிறுநீரைப் பெருக்குவதற்கும் பயன்படுகிறது. வெற்றிலைச்சாற்றுடன் நீர் கலந்த பாலையும், தேவையான அளவு கலந்து பருகிவர சிறு நீர் நன்கு போகும். வெற்றிலையின் வேரை சிறுதளவு எடுத்து வாயிலிட்டு மென்று வர குரல் வளம் உண்டாகும். எனவே இசைக் கலைஞர்கள் இதனை அதிகம் பயன்படுத்துகிறார்கள்.




உங்களுடைய சொந்தக்காணியில் நாம் வீட்டைக் கட்டித்தருவோம் அல்லது எமது வீடமைப்புத் திட்டத்திலிருந்தும் தெரிவு செய்யலாம்.

வீடு மட்டுமல்லாது வர்த்தக கட்டிடமும் நிர்மாணித்துக் கொடுக்கப்படும்



1. அங்கீகாரம் பெற்ற பொறியியலாளர்கள் மற்றும் அங்கீகாரம் பெற்ற கட்டட நிர்மாணத்துறை கலைஞர்கள் ஆகியோரின் முழுமையான மேற்பார்வையின்கீழ் SLS தரச்சான்றிதழைப் பெற்ற மூலப்பொருட்களைக்கொண்டு கட்டப்படும் உங்கள் இல்லத்திற்கு 10 வருட உத்தரவாதம்.
2. உங்களுடைய காணி இருக்கும் இடத்திற்கே நேரடியாக வருகை தந்து உங்களுக்கு பொருத்தமான, விருப்பமான வகையில் வீட்டை கட்டுவதற்கான வீட்டு வடிவமைப்பை வழங்குதல்.
3. குறைந்த வட்டிவீதத்தில் வங்கிக்கடனை பெறுவதற்கான வசதிகளை வழங்குதல்.
4. நாடுபூராவும் அதிக எண்ணிக்கையிலான வீட்டுத் திட்டங்களைக் கொண்டுள்ள முன்னணி நிறுவனமாக அமைந்திருத்தல்.
5. இலங்கைககு வருகை தராமலேயே வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள்.



Winner of ஏஷியன் மாஸ்மீடியா விருது
Winner of ஷ்ரமபிமானி விருது
Winner of ஸ்வர்ண லங்கா விருது

RanHomes
Web : www.ranhomes.com

யாழ்ப்பாண கிளை :
இல-841,
ஆஸ்பத்திரி வீதி,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
Tel: 0773936769, 0773763122, 0777328645
E-mail: shashi@ranhomes.com

Head Office
Ranasinghe Homes (Pvt) Ltd.
No. 9/2A, Perera Mawatha, Ja-Ela
Tel : 011 2247471 Fax: 0094-114-831787
E-mail : info@ranhomes.com
Web : www.ranhomes.com

Nugegoda Branch Office
No: 221/1
Highlevel Road
Tel: 0772518592
011 2853300
E-mail : nuwan@ranhomes.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முதன்மையான வர்த்தகப் பெயர் தேடுவது நீங்களாக இருக்கலாம்

நாட்டின் வலிமை மிக்க வர்த்தகப் பெயர் என்ற வகையில் இலங்கை மக்களின் இதயங்களில் அழியாத இடத்தைப் பிடித்துள்ள சிங்கர் ஸ்ரீலங்கா, உலகப் புகழ்பெற்ற சம்சுங், ஹித்தாச்சி, பிலிப்ஸ், வேர்ல்பூல் மற்றும் கென்வூட் உள்ளிட்ட 30க்கு மேற்பட்ட சர்வதேச வர்த்தகப் பெயர்களிலான தரமுயர்ந்த வீட்டுப் பாவனைச் சாதனங்களை வழங்கும் பிரபல நிறுவனமாக விளங்குகின்றது. முதலாவது தையல் மெஷின் 1851ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டதில் இருந்து இன்று வரை நம்பிக்கையான தரச்சிறப்பின் பாரம்பரியத்தைத் தனது உற்பத்தித் தொழிற்சாலையில் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லும் சிங்கர் நிறுவனம், கடந்த 160 ஆண்டுகளுக்கும் மேலாக வர்த்தக உலகில் முன்னணி வகிக்கிறது.

சிங்கர் தரச்சிறப்பின் அடுத்த தலைமுறையில் இணைந்துகொள்பவர் நீங்களா?

7 பிரதேச சேவை நிலையங்களையும் 100க்கு மேற்பட்ட சேவை முகவர் நிலையங்களையும் உள்ளடக்கிய பரந்த வலையமைப்பின் மூலம் அதியுன்னத விற்பனைக்குப் பிற்பட்ட பராமரிப்புச் சேவையை வழங்கிவரும் சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனம் இந்த வலையமைப்பை மேலும் வலுப்படுத்துவதற்காக திறமைஉள்ள தொழில்நுட்ப ஊழியர்களைத் தேடுகின்றது.

## ஆரம்பநிலை தொழில்நுட்பவியலாளர்கள் (யாழ்ப்பாணம்)

- க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி
- மின்சார மற்றும் இலத்திரனியல் துறைகளில் தகைமை
- NAITA அல்லது அது போன்ற நிலையத்தின் தொழில் தேர்ச்சிச் சான்றிதழ்
- கணனிப் பாவனை அறிவு

## ஆரம்பநிலை அல்லது பகுதிநேர தையல் மெஷின் திருத்துநர்கள் (யாழ்ப்பாணம்)

- வயது 22 - 27
- சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம்
- க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் சித்தி
- தொழில் அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.

மனிதவள முகாமையாளர்
***சிங்கர் ஸ்ரீலங்கா பி.எல்.சி.***
80, நவம் மாவத்தை,
கொழும்பு 02.
nadikas@singersl.com

SINGER
Trusted Excellence


# இரத்தச் சோகையை போக்கும் இரும்புச்சத்து உணவுகள்

உடலின் சக்திக்கு இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை சரியான அளவில் இருக்கவேண்டும். இரத்தத்தின் சிவப்பணுக்களுக்குள் இருக்கும் ஒரு புரதம் தான் ஹீமோகுளோபன். இது தான் இரத்தத்தில் ஆக்ஸிஜனைக் கடத்துகிறது. இவை குறைவாக இருந்தால் அனிமீயா எனப்படும் இரத்தச்சோகை நோய் ஏற்படும். இதனால் உடல் சோர்வடையும், முகம் வெளிறிப்போய்விடும்.

### கீரைகள்

இரத்தச்சோகையால் பாதிக்கப்பட்டவர்கள் இரும்பு சத்துள்ள கீரைகளை முருங்கைக் கீரை, அரைக் கீரை, ஆரைக்கீரை, புதினா, கொத்த மல்லி, கறிவேப்பிலை, அகத்திக் கீரை, பொன்னாங் கண்ணி கீரை போன்ற கீரைகளையும் அடிக்கடி உணவில் சேர்த்துக்கொள்ளவேண்டும். இதன் மூலம் இரத்தத்தில் ஹீமோகுளோபன் எண்ணிக்கை அதிகரிக்கும்.

### பழங்கள், தானியங்கள்

இரத்தச் சோகையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு திராட்சை, பேரீட்சை, உலர்ந்த திராட்சை, பப்பாளி, அத்திப் பழம், மாம்பழம், பலாப்பழம், சப்போட்டா, அப்பிள், நெல்லிக்கனி போன்ற பழங்கள்ளையும் தினமும், கொடுத்து வருவது நல்லது. இதனூல் இரத்தத்தில் சிவப்பணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இதனால் இரத்தம் விருத்தி அடைந்து இரத்த சோகை நீங்கும். மேலும் முளை கட்டிய பச்சை பயறு, முந்திரி பருப்பு, உளுத் தங்களி, பாதாம் பிஸ்தா பருப்பு போன்றவை அதிகம் உணவில் சேர்த்து வருவது நல்லது. காய்கறி சாலட்டுகள் அடிக்கடி கொடுப்பது நல்லது.


# Royal Medical Centre

## றோயல் மெடிகல் சென்ரர்

454, Hospital Road, Jaffna
(யாழ்.போதனா வைத்தியசாலை, பழைய OPD எதிரில்)

- **கண் சத்திர சிகிச்சை நிபுணர்**
  வெள்ளி மாலை 1.00 மணிக்கு
- **பொது சத்திர சிகிச்சை நிபுணர்**
  திங்கள்- வெள்ளி மாலை 4.00 மணிக்கு
  சனி, விடுமுறை தினங்களில் நண்பகல் 12 மணிக்கு
- **குழந்தை வைத்திய நிபுணர்**
  திங்கள்- வெள்ளி மாலை 4.00 மணிக்கு
  சனி, விடுமுறை தினங்களில் நண்பகல் 12 மணிக்கு
- **பொது வைத்திய நிபுணர்**
  திங்கள் - வெள்ளி மாலை 4.00 மணிக்கு
  சனி, விடுமுறை தினங்களில் நண்பகல் 12 மணிக்கு

- **பல் கிளினிக்** - Dental Clinic
  பல் பிடுங்குதல், பல் அடைத்தல், பல் சுத்தம் செய்தல், பல் கட்டுதல் (நிரந்தரம் Bridge, தற்காலிகம் Denture), பல் கிளிப்போடுதல் மற்றும் பல் சம்பந்தமான ஆலோசனைகளும் சிகிச்சையும் பல் வைத்திய நிபுணரினால் வழங்கப்படுகிறது.
  சேவை நேரம் :-
  திங்கள்- வெள்ளி ➞ காலை 9.30 - மாலை 5.00 மணிவரை
  சனி மற்றும் விடுமுறை தினங்களில் காலை 9.30 - 2.00 மணிவரை
- **தோல் கிளினிக்** - Skin Clinic
  திங்கள்- வெள்ளி மாலை 4.00 மணி
  சனி, விடுமுறை தினங்களில் நண்பகல் 12.00 மணி
- **மருத்துவ ஆய்வு கூடம்** - Blood, Urine test - ECG
  சகலவிதமான இரத்தம், சலம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.
  **பாமசி** - Pharmacy - அனைத்து வகையான மருந்து பால்மா வகைகள் பெற்றுக் கொள்ள முடியும்.

**வெளிநோயாளர் பிரிவு** - OPD
**தினமும் மாலை 5.00 மணிமுதல் - 7.00 மணிவரை**

(20635)

தொலைபேசி மூலம் பதிவுகள் செய்து கொள்ளலாம்
மேலதிக விபரங்களுக்கு 021 320[illegible]



உ
ஐயனார் துணை

## அனலைதீவு நயினாகுளம் குழாவடியுறை அருள்மிகு பூர்ணா புஷ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திர ஆலய



வருடாந்த மகோற்சவ பெருவிழா 2012

**23.07.2012 திங்கள் பகல் 12.00 மணி துவாஜாரோகணம் (கொடியேற்றம்)**
**28.07.2012 சனி இரவு கைலாசவாகனம்**
**29.07.2012 ஞாயிறு மாலை வேட்டைத் திருவிழா**
**30.07.2012 திங்கள் இரவு சப்பைரத உற்சவம் (சப்பறத்திருவிழா)**
**31.07.2012 செவ்வாய் 10.00 மணிக்கு தேர்த்திருவிழா**
**01.08.2012 புதன் காலை 9.00 மணிக்கு தீர்த்தத் திருவிழா**
**02.08.2012 வியாழன் இரவு திருக்கல்யாண உற்சவம்**
**03.08.2012 வெள்ளி வைரவர் பொங்கல்**

நிதியுதவி வழங்கவிரும்பும் அடியார்கள் ஆலய பரிபாலன சபையினருடன் தொடர்பு கொள்ளவும்
(தினமும் காலை 8.30 மணிக்கு விசேட பூசை சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது)

*11 தினங்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்*
*"அனைவரும் வருக ஐயன் அருள் பெறுக"*

ஆலய பரிபாலன சபையினர்,
ஐயனார் ஆலயம்,
அனலைதீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org